# பக்தியின் மொழி தமிழ்

## வெள்ளி நற்சிந்தனை

கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்

திரு. சு. விஜயானந்தகுமார்

அதிபர்

யா/ கரணவாய் பொன்னம்பல

வித்தியாலயம்

14-10-2011

ம. சண்முகநாதன்

# பக்தியின் மொழி தமிழ்

## வெள்ளி நற்சிந்தனை

ஆசிரியர்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

2010

தலைப்பு : பக்தியின் மொழி தமிழ்

ஆசிரியர் : கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

உரிமை : பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பதிப்பு : முதற்பதிப்பு 14.10. 2011

வெளியீடு : கோகுலம் வெளியீடு - 03

அச்சிட்டோர் : கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல.424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**Title** : Bakthiyin Mozhi Tamil

**Author** : Dr.Manonmani Sanmugadas

**Copy Right** : Prof.A.Sanmugadas

**Edition** : First Edition 14.10.2011

**Published by** : Kokulam Publication - 3

**Page** :165

**Printed by** : Harikanan Printers,
No.424, K.K.S. Road, Jaffna.

Price : 400/-

ISBN : 978-955-98925-3-3

# பொருளடக்கம்


1) ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர் 01
2) கொட்டமே கமழும் குழலாளொடு கூடினாய் 02
3) நீலத்தால் கரிய மிடற்றார் 03
4) அரிச்சுற்ற வினையாலடர் 04
5) ஓர் உடம்பு இருவர் ஆகி 05
6) பார்த்திருந்தடியனேனான் பரவுவன் 06
7) சித்தத்தெழுந்த செழுங் கமலத்தன்ன சேவடிகள் 07
8) ஒன்றியிருந்து நினைமின்களும் தமக் கூனமில்லை 08
9) கற்றானைக் கங்கைவார் சடையான்றன்னை 09
10) துன்பமில்லை துயரில்லை 10
11) எரியாயரியாய் நில நீரொடு தீ 11
12) துள்ளுமான் மறியங்கை யிலேந்தி 12
13) மருந்துவாள வருய்ய நஞ்சுண்டு 13
14) எங்கேனும் மிருந்துன்னடியே னுனை நினைந்தால் 14
15) நித்தலுந் நியமஞ் செய் நீர் மலர் தூவி 15
16) நன்றுநாடொறும் நம் வினை போயறும் 16
17) கண்காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும் 17
18) பாடுவார் பசி தீர்ப்பாய் பரவு வார் பிணிகளைவாய் 18
19) பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய் 19
20) நலியுங் குற்றமும் நம்முடல் நோய் வினை 20
21) செந்நெலங் கழனிப் பழனத்தயலே 21
22) பண்ணினேர் மொழி மங்கைமார் 22
23) பொய்யா நாவதனாற் புகழ்வார் 23

24) அன்புறு சிந்தைய ராகியடியவர் 24
25) கொண்டல் சேர் கோபுரம் கோலமார் மாளிகை 25
26) கோங்கன்ன குவிமுலையாள் கொழும் பணைத் தோட்கொடியிடை 26
27) தோடுலா மலர்கள் தூவித் தொழுது எழும் மார்க்கண்டேயன் 27
28) கட்டலர்த்த மலர்தூவிக் கைதொழுமின் 28
29) மண்ணோடு நீர் அனல் காலோடு ஆகாயம் மதிஇரவி 29
30) உண்டாய் நஞ்சை உமையோர் பங்கா 30
31) நாதன் நம்மை ஆள்வான் 31
32) ஆலைசேர் தண்கழனி 32
33) மங்கை ஓர் கூறு உகந்த மழுவாளன் 33
34) கடிகொள் கூவிள மத்தம் வைத்தவன் 34
35) நல்குரவு இன்பம் நலங்கள் அவையாகி 35
36) வண்டு வாழும் குழல் மங்கையோர் கூறுகந்தார் மதி 36
37) கண்ணுதலானும் வெண்ணீற்றினானும் கழலார்க்கவே 37
38) விண்ணவர் தொழுதெழ வெங்குரு மேவிய 38
39) வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும் 39
40) பத்திமையாற் பணிந்தடியேன் தன்னை 40
41) பறையின் ஓசையும் பாடலின் ஓசையும் 41
42) வையகமுற்று மாமழை மறந்து 42
43) கண்டமும் கறுத்திட்ட பிரானை 43
44) மின்னுமாமேகங்கள் பொழிந்திழிந்தருவி 44
45) மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பது இல்லை 45
46) மத்தயானை ஏறிய மன்னர் சூழ வருவீர்காள் 46
47) கூசம் நீக்கி குற்றம் நீக்கிச் செற்ற மன நீக்கி 47
48) பொய்யாத வாய்மையால் பொடிபூசிப் போற்றிசைத்துப் பூசை செய்து 48
49) கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்க காதிலோர் வெண்குழையோடு 49
50) மெய்யனை மெய்யினின்று உணர்வானை 50
51) அருந்தவத்தோர் தொழுதேத்தும் அம்மான் தன்னை 51

52) ஆலமிடற்று அணியா அடக்கினானை 52
53) அரவினோடு ஆமையும் பூண்டு 53
54) குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும் 54
55) நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன் 55
56) வெள்ளை நீறணி மேனி யவர்க் கெல்லாம் 56
57) கழியுளாரெனவும் கடனுளாரெனவும் காட்டுளார் நாட்டுளாரெனவும் 57
58) வண்டாடும் பூங்குழலாள் பாகன் 58
59) இன்று நன்று நாளை நன்றென்று நின்ற விச்சையால் 59
60) மெய்யின் மாசினர் மேனி விரிதுவர் ஆடையர் 60
61) செற்றரக்கன் வலியைத் திருமெல்விரலா லடர்த்து 61
62) வன்னி வாளரவு மத்தமதியமுமாறுஞ் சூடி 62
63) நீறு அடைந்த மேனியின் கண் நேரிழையாள் ஒருபால் 63
64) விரை கமழு மலர்க்கொன்றைத் தாரான் கண்டாய் 64
65) தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று 65
66) என்னிலாரு மெனக் கினியாரில்லை 66
67) செவிகளார்விப்பன சிந்தையுட் சேர்வன 67
68) பதியுஞ் சுற்றமும் பெற்ற மக்களும் அண்டை யாரவர்பெண்டிரும் 68
69) சொன்மாலை பயில்கின்ற குயிலினங்கள் சொல்லீரே 69
70) கண்ட கங்காள் முண்டகங்காள் கைதைகாள் நெய்தல் காள் 70
71) மனைக் காஞ்சி இளங்குருகே மறந்தாயோ 71
72) புதியை யாயினியை யாம்பூந்தென்றால் புறங்காடு 72
73) பொங்கோத மால் கடலிற் புறம்புறம் போய் இரைதேரும் 73
74) நீரவன் றீயினோடு நிழலவனெழிலதாய 74
75) நீரோடு கூவிளமும் நிலாமதியும் வெள்ளெருக்கு நிறைந்த கொன்றை 75
76) வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு நெறி காட்டு விகிர்தனாகி 76
77) கோடல் கோங்கங் குளிர்கூவிள மாலை 77
78) மானும் மரையினமும் மயிலினமுங் கலந்தெங்கும் 78
79) மலைச் சாரலும் பொழிற்சாரலும் புறமே வருமினங்கள் 79

80) மன்னிப் புனங்காவல் மடமொழியாள் புனங்காக்க 80
81) மையார் தடங்கண்ணாண் மடமொழியாள் புனங்காக்க 81
82) ஆனைக்குலம் இரிந்தோடித் தன்பிடி சூழலில் திரிய 82
83) மாற்றுக் களிறு அடைந்தாயென்று மதவேழங்கையெடுத்து 83
84) அப்போது வந்து உண்டீர்களுக்கு அழையாது முன்னிருந்தேன் 84
85) திரிபுரம் நீறாக்கிய செல்வன் 85
86) ஏனத்திரள் கிளைக்க எரி போல மணி சிதற 86
87) மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடி 87
88) பிறை இளம் கண்ணியினானைப் பெய்வளை யாளொடும் பாடி 88
89) தன்மதிக் கண்ணியினானைத் தையல் நல்லாளொடும் பாடி 89
90) கடி மதிக் கண்ணியினானை காரிகை யாளொடும் பாடி 90
91) போழிளங் கண்ணியினாளைப் பூந்துகிலாளொடும் பாடி 91
92) எரிப் பிறைக் கண்ணியினானை யேந்திழை யாளொடும் பாடி 92
93) ஏடுமதிக்கண்ணியானையே ந்திழை யாளொடும் பாடி 93
94) விரும்பு மதிக் கண்ணியானை மெல்லியலாளொடும் பாடி 94
95) முற்பிறைக் கண்ணியினானை மொய் குழலாளொடும் பாடி 95
96) திங்கள் மதிக்கண்ணி யானைத் தேமொழியாளொடும் பாடி 96
97) வளர்மதிக் கண்ணியினானை வார் குழலாளொடும் பாடி 97
98) பரவும் பரிசொன்று அறியேன் 98
99) எங்கே போவேன் ஆயிடினும் அங்கே வந்தென் மனந்தீராய் 99
100) மருவிப் பிரியமாட்டேன் நான் வழி நின்று ஒழிந்தேன் ஒழிகிலேன் 100
101) அழகா நின்று பணி செய்வார் பெற்ற பயன் ஒன்று அறிகிலேன் 101
102) பிழைத்த பிழையொன்று அறியேன் நான் பிழையைத் தீரப்பணியாயே 102
103) பூவும் நீரும் பலியுஞ்சுமந்து புகலூரையே 103
104) திருந்துமாகளிற்று இள மருப்பொடு 104
105) ஏலமார் இலவமொடு இனமலர்த்தொகுதி எங்கும் நுந்தி 105
106) பொன்னும் மணியும் கொழித்து எறி புனற்கரைகள் 106
107) பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து 107

108) பண்டே நின் அடியேன் அடியாரடிகட்கெல்லாம் 108
109) கண்ணாய்ஏழுலகுங் கருத்தாய அருத்தமுமாய் 109
110) வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடை 110
111) கூடுமாலை நண்பகற் கூடி வல்ல தொண்டர்கள் 111
112) எத்தாயர் எத் தந்தை எச் சுற்றத்தார் 112
113) துன்பம் இன்றித் துயர் இன்றி 113
114) ஊனாகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி 114
115) வானத்து உயர் தண்மதிதோய் சடைமேல் மத்த மலர் சூடி 115
116) செந்தமிழ்த்திறம் வல்லிரோ செங்கண் அரவம் உன்கையிலாடவே 116
117) நிரைகழல் அரவம் சிலம்பொலியலம்பும் நிமலர் நீறணி திருமேனி 117
118) கடிதென வந்த கரிதனை யுரித்து அவ்வுரி மேனிமேற் போர்ப்பர் 118
119) பனித்திளம் திங்கள் பந்தலை நாகம் படர்சடை 119
120) பழித்திளங் கங்கை சடையிடை வைத்து 120
121) தாயினும் நல்ல தலைவர் என்று அடியார் 121
122) பரிந்து நன் மனத்தால் வழிபடும் மாணி 122
123) விருதுகுன்றமா மேருவில் நாணரவா 123
124) பாடல் வீணையர் பலபல சரிதையர் 124
125) பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர் 125
126) பொடிகொள் மேனியர் புலி அதள் அரையினர் 126
127) நல்லராற்றவும் ஞானம் நன்குடையர் 127
128) பேழைவார்சடைப் பெருந்திரு மகள்தனை 128
129) தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு முட்டாதிறைஞ்சேன் 129
130) பரந்து பல்லாய் மலரிட்டு முட்டாதடியே யிறைஞ்சி 130
131) நாடகத்தா லுன்னடியார்போல் நடித்து 131
132) வருந்துவன் நின் மலர்ப்பாதமவை காண்பான் 132
133) ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன் 133
134) சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறை 134
135) அங்கம் மொழி அன்னாரவர் அமரர் தொழுதேத்த 135

136) கரிய கறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணான் 136
137) அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித்தருளி 137
138) வெய்யவினை யாயஅடி யார்மேலொழித் தருளி 138
139) ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி 139
140) அட்டனழ காகவரை தன்மேலர வார்த்து 140
141) மூவரென இருவரென முக்கணுடை மூர்த்தி 141
142) சொற்றுணை வேதியன் சோதி வானவன் 142
143) பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை 143
144) விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல் 144
145) வெந்த நீறருங் கலம் விரதிகட் கெலாம் 145
146) இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும் 146
147) சாதலும் பிறத்தலும் தவிர்த் தென்னை வகுத்து 147
148) மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன் 148
149) திருத்தினை நகருறை சேந்தனப்பனென் 149
150) மழைக் கரும்பும் மலர்க் கொன்றையினானை 150
151) குண்டலங்குழை திகழ்காதனே 151
152) வரும் பெரும் வல்வினை யென்றிருந்தெண்ணி 152
153) மடையில் வாளை பாய மாதரார் 153
154) நிழலார் சோலை நீல வண்டினம் 154

# என்னுரை

மனித வாழ்வியல் நடைமுறைகள் காலத்திற்குக் காலம் சீர்கெட்டதை வரலாற்றுக்குறிப்புகளும் பண்பாட்டுப் பதிவுகளும் உணர்த்தி நிற்கின்றன. குறிப்பாகத் தமிழர் வாழ்வியலிற் பிற பண்பாட்டின் செல்வாக்கால் மாற்றங்களும் விரைவாக ஏற்பட்டுள்ளன. இடப்பெயர்வும், புலப்பெயர்வும் மக்களின் வாழ்வியல் வரையறைகளைத் தளர்த்தியுள்ளன. இதனால் பண்பாட்டு நடைமுறைகளும் கைவிடப்படும் நிலை ஏற்பட்டது. குழந்தைமை, இளமை, முதுமையென்ற மனித உடல், உள வளர்ச்சி நிலைகள் கருத்திழந்தன. வன்முறையும், வக்கிரமும், பொறாமையும், போட்டியும் சமூகத்திலே மக்களிடையே ஆழமாக வேரூன்றலாயின.

இத்தகைய சீர்கேடு தோன்றியபோது சமயகுரவர்கள் மக்களை ஆற்றுப்படுத்தப் பணிசெய்தனர். ஏறக்குறை 1600 ஆண்டுக்கு முன்னர் அவர் தன் ஆற்றியபணி இன்றைய காலகட்டத்திற்கும் ஏற்றதாக உள்ளது. சிறப்பாக அவர்கள் பாடிய பாடல்கள் இன்றைய சமூகத்திற்கும் வழிகாட்டுவனவாக உள்ளன. மக்களின் மனக்கவலையை மாற்றும் மருந்தாகப் பாடற்பொருள் அமைந்துள்ளது. அப்பாடல்களைப் படிப்பதால் பயன் உண்டாகும். எனவே அப்பாடல்களைக் காலத்துக்கு ஏற்ற வகையில் விளக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. அப்பர், மணிவாசகர், சுந்தரர், சம்பந்தர் என்ற வரிசையிலே பாடல்களைப் படிக்கலாம். இறையன்பைத் தேடி நீண்ட காலம் வாழ்ந்தவர் அப்பர். 81 வயது வரை வாழ்ந்தார். மணிவாசகர் 32 வயது வரை வாழ்ந்தவர். சுந்தரர் 18 வயதில் முத்திப்பேறு பெற்றார். சம்பந்தர் 16 வயதில் முத்தி பெற்றார். எனவே நீண்ட காலம் வாழ்ந்த அனுபவம் அப்பருக்கிருந்தது. அது மட்டுமன்றி முதுமைக்கால வாழ்வை முறைமையாக வாழக் கற்றுத் தந்தவரும் அவரே. தனக்கு வந்த துன்பங்களையும், அவலங்களையும் வெல்வதற்கு இறைவனையே வழிபட்டு முத்தி பெற்றவர். இளமையும், முதுமையும் இணைந்து இறைபணி செய்யும் ஒரு புதிய வாழ்வியல் நெறியை நாயன்மார் எமக்காகத் தமது பாடல்களிலே பதிவு செய்து வைத்துள்ளனர்.

அவர்கள் காட்டிய புதிய வாழ்வியல் நெறியையே நாமும் பின்பற்ற வேண்டும். எனவே பாடல்களிலே பதிவு செய்யப்பட்ட பக்தி வாழ்வியல் பற்றிய சிறுகுறிப்புகளை வரைய வேண்டும் என்ற எனது எண்ணத்தின் வெளிப்பாடே இச்சிறு குறிப்பு விளக்கத்தின் தோற்றமாகும். அடியார்களின் சிந்தையும், செயலும் ஒன்றிணைந்திருந்தன. செந்தமிழ் ஆற்றல் அதற்குத் துணை நின்றது. பண்ணோடு பாடல்கள் எழுந்தன. காலத்தால் அவை மறைந்து போகாமல் எம் கரங்களிலே இன்று நூலாகத் திகழ்கின்றன. என் உணர்வில் ஒன்றிய பாடல்களை எல்லோரிடமும் எடுத்துக் கூறவேண்டும் என்ற ஆவலும் எனக்கேற்பட்டது. நாளிதழ் வலம்புரி எனக்குக் களம் தந்தது.

அதனால் எல்லோரும் படிக்கக்கூடிய சிறிய கட்டுரை விளக்கமாக வெள்ளி நற்சிந்தனை என்னும் பகுதியில் "பக்தியின் மொழி தமிழ்' எனத் தலைப்பிட்ட சிறு கட்டுரைகள் இன்று நூல் வடிவம் பெற்றுள்ளன.

கட்டுரைகள் வெள்ளிதோறும் பிரசுரம் செய்யப்பட்டபோது என் பக்திக்கனலும் மூளாத்தீப்போல உள்ளேயே கனன்றது. மூன்று ஆண்டுகளாக நின்று செயற்பட்டது. இந்த நூலைப் படிப்பவரும் அத்தகைய அனுபவத்தைப் பெறுவார்களென நம்புகின்றேன். இளந்தலைமுறையினரின் வழிபாட்டுத் தேடலில் இந்நூலும் சிறு துரும்பாக நின்றுதவும்.

நூலாக்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கியவர் பலர். அவர்களின் காலம் அறிந்த பணிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நூலை அழகுற அச்சிட்ட கரிகணன் பிறிண்டேர்ஸ் இற்கு என் மனங்கனிந்த நன்றி. எல்லாவற்றிற்கும் மேலாக இந்நூல் வெளிவரத் தோன்றாத் துணையாய் என்னோடிருக்கும் இறைவன் கருணைக்குத் தலைவணங்கி இச்சிறுநூலை அவன் திருவடிகளில் வைக்கின்றேன்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

# எழில் உரை

பதிப்பிற்குரிய கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் 'பக்தியின் மொழி தமிழ்' என்ற நூலுக்கு எழிலுரை வழங்குவதிற் பெருமகிழ்வு அடைகின்றேன். கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகின் தகைசான்ற எழுத்தாளர். அவரின் எழுத்துப்பணி; ஆக்க இலக்கியம், திறனாய்வு, சமயம், கலாசாரம், பண்பாடு, ஆற்றுகை, மொழிபெயர்ப்பு எனப் பல்பரிமாணங்களில் விரிந்துள்ளது.

எடுத்த விடயத்தை ஆணித்தரமாகவும், விளக்கமாகவும், துணிவோடும் எழுதும் ஆற்றல் அவரின் ஆழ்ந்தகன்ற அறிவுப் புலத்திற்கான சான்றாதாரமாகும். வலம்புரி நாளிதழில் 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையான நூற்று ஐம்பத்து நான்கு வெள்ளிக்கிழமைகளில் தொடராக அவர் எழுதிய "பக்தியின் மொழி தமிழ்' என்ற தொகுப்பு நூலுருப் பெறுவது கண்டு வலம்புரிக் குடும்பம் உவகையடைகின்றது.

வாசகர்களைப் பெரிதும் ஈர்த்த 'பக்தியின் மொழி தமிழ்' என்ற பகுதி தமிழ் கற்கும் உயர்தர மாணவர்களின் பாடவிதானத்திற்கும் பெரிதும் உதவியது. இத்தகைய சிறப்பிற்குரிய ஆக்கம் தனித்து நாளிதழின் வரவாக மட்டும் நின்றுவிடாமல், நூலுருப் பெறுவது அதன் பெறுமானத்தை, எதிர்காலச் சந்ததியும் கற்றுணர்ந்து தமிழ்மொழியின் சுவையுணர வழிவகுப்பதாகும்.

அவ்வகையில் 'பக்தியின் மொழி தமிழ்' என்ற இந்நூல் எங்கும் வியாபகம் பெற்று அதன் கனதியை அனைவரும் கற்றுணர இறைவன் துணைநாடி, கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் பணியைப் போற்றுகின்றோம்.

**நல்லையா விஜயசுந்தரம்,**
*பிரதம ஆசிரியர்,*
*வலம்புரி நாளிதழ்.*

# வெள்ளி நற்சிந்தனை
## பக்தியின் மொழி தமிழ்

## ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்

மனித வாழ்க்கை என்பது மற்றவர்களை மகிழ்விப்பது. ஒருவன் தன்னுடைய தன்னலத்தால் தாளாத துன்பத்தையே தேடிக் கொள்கின்றான். அத்துன்பங்களிலிருந்து தன்னை அவன் விடுவித்துக் கொள்வதற்கு ஒரு வழியுண்டு. அந்த வழியைக் காட்டிச் சென்றவர்களே நாயன்மார்களாகும். அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு அநுபவங்களைப் பண்நிறைந்த பாடல்களாகப் பாடிவைத்துள்ளனர். அதற்கென அவர்கள் பயன்படுத்திய மொழி தமிழ்மொழியின் தனிச்சிறப்பை எல்லோரும் அறிய வைத்தது.

உள்ளத்து உணர்வைப் புலப்படுத்த ஏற்ற சொற்களைத் தெரிந்தெடுத்துச் சொல் மாலையாக்கித் தாம் வழிபட்ட தெய்வங்களுக்குச் சாற்றி மகிழ்ந்தனர். அந்த மகிழ்ச்சியால் ஏற்பட்ட பரவசத்தை மற்றவரும் உணரச் செய்தனர். உ ள்ளத்திலே பக்தி உணர்வலையை எழுப்பினர். பக்தியின் மொழியாகத் தமிழையே தேர்ந்துஎடுத்தனர்.

வடமொழியால் நடைபெற்ற வழிபாடு பொதுமக்களைப் பக்தி நிலைக்கு ஆளாக்கவில்லை. ஆனால், புலமைச்சிறப்பற்ற பொதுமக்கள், உள்ளத்திலே தமிழ் மொழியிலே இறைவனைப் பாடும்போது பக்திக்கனல் பற்றிக்கொண்டது. இறை உருவத்தை மொழியூடாகக் காட்சிப்படுத்திக் காட்டியபோது இசையலையும் இணைந்து பாடலாகக் காதிலே பாய்ந்தது. கற்பனை வளம் சேர உள்ளத்திலே அந்த இறை உருவை நிலை நிறுத்தும் பயிற்சியும் கைகூடிற்று.

சோழ நாட்டிலே உள்ள திருத்தலத்தை மனத்தால் வழிபட ஒரு வாய்ப்புத் தருகிறார் திருஞானசம்பந்தர். அவர் இறை உருவை நேரிற்கண்டு, பக்திப்பரவசமாகப் பாடிய பாடல் தில்லையில் உறையும் சிவனை நம் மனக்கண்ணிலே காணத் துணையாக நிற்கிறது.

நறுநெய், பால், தயிர் சொரிந்த கோலத்தில் தில்லைச் சிற்றம்பலத்தில் சிவன் காட்சி தருகிறான். அந்தணர்கள் நெருங்கி வாழுமிடத்திலே சிவன் நாடிவந்து உறைகிறான். அவனுடைய சிறப்பான அணிகலனைப் பாடல் குறிப்பிட்டுள்ளது. நறிய கொன்றை மலரை அவன் விருப்பத்தோடு எப்போதும் அணிந்திருக்கிறான். சிவன் அதன்பால் மிக்க விருப்பமுடையவனென்பதைச் சம்பந்தர் 'நயந்தவனே' என்ற சொல்லாற் சுட்டியுள்ளார். ஏனைய அணிகலன்கள் இருப்பினும் சிவனுக்குக் கொன்றை மலர் சிறப்பாக அழகு தருகிறது. சடாமுடியிலே கதிர்வெண் திங்களையும் சூடியிருப்பினும் கொன்றையை நயத்துடன் அணிந்திருப்பது தோற்றத்திற்கு மேலும் புதிய பொலிவைத் தந்துள்ளது. அத்தோற்றத்தைக் கண்டு பரவசமடைந்த திருஞானசம்பந்தர் பண்ணுடன் பாடுகிறார்! சிவன் கோல அழகு எமது மனக்கண்ணில் வந்து நிறைகிறது.

**"ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பலம்**
**நாடினாய் இடமாக நறுங்கொன்றை நயந்தவனே**
**பாடினாய் மறையொடு பல்கீதமும் பல்சடைப் பனிகால் கதிர் வெண்திங்கள்**
**சூடினாய் அருளாய் சுருங்க எமது தொல்வினையே"**

## வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

# கொட்டமே கமழும் குழலாளொடு கூடினாய்

இறைவனைப் பற்றிப் பல ஐயங்கள் இன்று தோன்றி யுள்ளன. உண்மையில் இறைவன் இருக்கிறானா? - என்று கேட்பவரும் உளர். அவர்களை இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று இறையருளைக் காட்டி "இவன்தான் எம்க்கெல்லாம் இறைவன்" என்று கூறலாம். ஆனா லதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமே! எனவே உள்ளத்தில் எழும் கேள்விகளை இறைவனிடம் நேரடியாகவே கேட்கலா மெனச் சம்பந்தர் கூறுகிறார்.

இறைவனின் கோலத்தைப் பார்த்தவுடன் தன் உள்ளத்தி லும் கேள்விகள் எழுந்ததைக் குறிப்பிடுகிறார். மூலிகை மணம் கமழும் சுருண்ட கூந்தலையுடைய பார்வதியைப் பக்கலிலே சிவன் வைத்திருக்கும் காட்சி சம்பந்தர் கண்ணிற்பட்டது. எருதில் ஏறிவரும் கோலம் தெரிந்தது. மேலும் இறைவனுடைய திருக் கோலத்தை உற்றுப் பார்க்கிறார். முன் நெற்றியிற் கட்டப்பட்டி ருந்த பட்டம் தெரிகிறது. வாயினால் இசை பாடுகின்றவருடன் தில்லையிலே நடனமாடும் இறைவன் கோல அழகு சம்பந்தர் உள்ளத்தைக் கவர்கிறது. "நல்லவர்கள் வாழுமிடம் தில்லை. அங்கு விருப்புடன் நீ உறைகின்றாய். எதற்காக இத்தகைய கோலங்களை யெல்லாம் மேற்கொண்டாய்?" இதுவே அவருடைய ஐயம்!

சம்பந்தர் தில்லைப் பதிகத்திலே ஒரு பாடலில் இத்தகைய கேள்விகளை எழுப்பியுள்ளார். அவருடைய இளமையுணர்வுதான் இதற்குக் காரணம் எனலாம். அழகிய கோலத்தைக் கண்டவுடன் அது பற்றி ஆராயும் இளமையின் இயல்பு அவருடைய பாடலில் துல்லியமாகத் தோற்றுகிறது. பெற்றோரின் வளர்ப்பு நிலையில் வழிபாட்டு நடைமுறைகளைப் பயின்றிருந்த சம்பந்தருக்கு இளமைக் காலத்தில் அது பற்றியறிய வேண்டும் எனத் தோன்று கிறது. தான் கற்ற தமிழ்மொழியின் ஆற்றலால் இறைவனின் தோற்றத்தைக் காட்சிப்படுத்திக் காட்டுகிறார்.

தில்லைக் கோயிலில் நடமாடும் கோலத்தில் காட்சி தருகின்ற இறைவனைக் கண்டு மனம் பரவசமடையச் சம்பந்தர் கேள்விகளை நேரடியாகவே கேட்கிறார். அவர் பயன்படுத்திய சொற்கள் உள்ளத்து உணர்வு நிலைகளைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

புனைவாய், நவில்வாய் என இரு சொற்களைச் சீராகப் பயன்படுத்தியுள்ளார். முன் நெற்றியில் அணியும் நெற்றிப் பட்டம் அழகுக் கோலத்தை மேலும் மிளிரச்செய்வது. எனவே, அதனை ஒப்பனையாக ஏற்ற நிலையில் அணிந்திருப்பதையே சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் நடமாடும் காட்சியுடன் கால்கள் ஒலிப்பதை யும் கேட்ட சம்பந்தர் 'நவில்வாய்' எனக் குறிப்பிடுகிறார். கால் களை மாற்றியாடுகையில் ஏற்படும் ஒலி சம்பந்தரைப் பெரிதும் கவர்ந்தது. இறைவன் கோலத்தைக் கண்டு பத்திப்பரவசமாகப் பாடிய பாடல் தமிழ் மொழியின் வளத்தையும், ஆற்றலையும் பறைசாற்றி நிற்கிறது.

"கொட்டமே கமழும் குழலாளொடு கூடினாய் எருதேறினாய் நுதற்
பட்டமே புனைவாய் இசைபாடுவ பாரிடமா
நட்டமே நவில்வாய் மறையோர் தில்லைநல்லவர் பிரியாத சிற்றம்பலம்
இட்டமாவுறைவாய் இவை மேவிய தென்னை கொலோ"

## நீலத்தால் கரிய மிடற்றார்

நாம் காணுகின்ற காட்சிகள் எம் உள்ளத்தைக் கவரும்போது அவற்றைப்பற்றி அறிய ஆவல் உண்டாகின்றது. இவ்விடபத்தில் குழந்தைகள் முனைப்புடன் செயற்படுவர். கேள்விக் கணைகளைத் தொடுப்பார்கள். இன்றைய குழந்தைகளின் தேடல் வேறுபட்டது. எல்லாவற்றையும் துருவிப் பார்க்குந் தன்மையது. வழிபாட்டு நிலையில் பல விடயங்களைத் தெளிவாக அறிய முற்படுகின்றனர். அவர்களுக்குரிய தெளிவைப் பெற்றோரும் ஆசிரியர்களும் வழங்கவேண்டும்.

குழந்தை ஓர் உருவத்தைப் பார்த்துவிட்டால் அந்த உருவம் பற்றிய தெளிவை உடனடியாகப் பெறவிரும்புகிறது. சிறப்பாக நாம் வழிபடும் இறையுருவங்களைப் பற்றிப் பல கேள்விகளைக் கேட்கின்றது. வளர்ந்தவர்களும் இறைவன் கோல அழகினை வணங்கும்போது சில விளக்கங்களைப் பெறவிரும்பும் நிலையும் தற்போது தோன்றியுள்ளது.

ஞானக்குழந்தை சம்பந்தருடைய தேவாரம் ஒன்றில் இப்பண்புநிலை பதிவு செய்யப்பட்டுள்ளது. தில்லையிலே திரு நடனம் செய்யும் கோலத்தைக் கூர்மையாகப் பார்க்கும் நிலை பாடலாகியுள்ளது. சிவனுடைய நீல நிறத்தால் கரியதாகத் தோன்றும் மிடறு, நெற்றியிலே அமைந்த கண், கையிலே பற்றிய சூலம், மேனியிலே பூசிய நீறு, வார்சடை என்பன பார்ப்பவரைப் பரவசம் கொள்ளச் செய்கின்றன. சிவனை வந்து பலர் கைதொழுது வணங்குகின்றனர். அவ்வாறு தொழுது ஏத்தும் காட்சி கோயிலின் சிறப்பை உணர்த்துகிறது. காலிலே கழல் அணிந்த இறைவனைச் சம்பந்தர் கேள்வி கேட்கிறார், என்ன காரணம்? எல்லோரும் உன்னை வந்து வணங்குகிறார்களே? எதற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும் என எண்ணும் மனித உள்ளத்தைச் சம்பந்தர் பாடலிலே காட்டுகிறார்.

இறைவனின் தோற்றத்தை எல்லோரும் காண அவர் ஆக்கிய சொல்மாலை; தமிழ் மணங்கமழ இன்றும் நிலைத்துள்ளது. சிவனுடைய மிடறு காரைக்கால் அம்மையாருக்கு இருளின் நிறமாகத் தோற்றமளித்தது. நாவுக்கரசர் நீலமாமணி கண்டத்தார்' எனச் சிவன் தோற்றத்தைப் பாடியுள்ளார். எனவே, சிவன் நீலகண்டன் என்பதை நாமறிய முடிகிறது. ஆனால், இன்று சிவனின் திருக்கோலத்தினை வரையும் ஓவியர் சிலர் சிவனது உடல் முழுவதற்கும் நீலவர்ணந் தீட்டிவிடுகின்றனர். "கண்டம் மட்டும் கறுப்பாக இருப்பது ஏன் என்ற சம்பந்தருடைய கேள்வி தேவையான ஒன்றே. "நீல மேனியமணர்கள்" எனச் சமணர்களை நீலநிறமேனியராகக் கண்ட சம்பந்தருக்குச் சிவனின் தோற்றம் அற்புதமாயிருந்தது. எனவே, அத்தோற்றத்தைக் காலத்தால் அழியாத கோலமாகத் தமிழால் வரைந்து வைத்துள்ளார். எமது மனக்குழப்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

"நீலத்தால் கரிய மிடற்றார் நல்ல நெற்றி மேலுற்ற கண் ணினார் பற்று
சூலத்தார் கடலைப்பொடி நீறணிவார் சடையார்
சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம் சேர்தலாற் கழற்சேவடி கைதொழக்
கோலத்தாய் அருளாய் உன காரணங் கூறுதுமே"

# வெள்ளி நற்சிந்தனை
## பக்தியின் மொழி தமிழ்

## அரிச்சுற்ற வினையாலடர்

கோயில் வழிபாடு மக்கள் மனத்தைப் பல்வேறு வழிகளில் பண்படுத்தும். துன்பங்களை எதிர்கொள்ளவேண்டி நேரிடும் போது இறைவனைப் பற்றிய சிந்தனை மூலமே அமைதியடையலாம். மனித வாழ்க்கையில் நீண்ட காலமாகத் துன்பங்களை அனுபவிக்கும் போது வழிபாடுதான் மகிழ்வுதரும். உள்ளத்தை வாட்டும் நினைவுகளை எல்லாம் இறைவனிடம் கூறுவதன்மூலம் ஆறுதல் பெறலாம். எமது குறைகளைச் சிலவேளைகளில் எம்மைச் சார்ந்தவர்களிடம் கூறமுடியாமல் இருக்கும். ஆனால் கோவிலுக்குச் சென்று இறைவனிடம் எல்லாவற்றையும் சொல்லி மனச்சுமையைக் குறைத்துக்கொள்ளலாம். எமக்கு உகந்தவழியும் இதுவே.

இத்தகைய ஆற்றுப்படுத்தலை நாவுக்கரசர் தமது பாடல்கள் மூலமாகச் செய்துள்ளார். 81 வயதுவரை வாழ்ந்த அப்பர்; வாழ்க்கையிற் பல இன்னல்களை எதிர்கொண்டவர். அதனால், தன் பட்டறிவைப் பயன்படுத்திப் பிறரது துன்பங்களையும் தீர்க்க முயன்றுள்ளார்.

நாம் செய்த தீவினைகளால் துன்பங்களை அனுபவிக்க நேரிடும். எம்மை அயலவர் எல்லோரும் எள்ளி நகையாடுவர். எமது மனம் எரியில் வீழ்ந்ததுபோல, துடிக்கும். இந்த அவல நிலைக்கு ஆளாகாமல் நாம் தப்பித்துக் கொள்வதற்கும் ஏற்றவழி ஒன்று உண்டு. அதை நாவுக்கரசர் செந்தமிழ்ப் பாடல் ஒன்றிலே விளக்கிக் கூறியுள்ளார்.

அல்லலும் அருவினையும் தொல்லை வல்வினையும் என எம்மைத் தொடரும் வினைகளைப் போக்க தில்லைச் சிற்றம்பலத்துள் உறையும் சிவனை வழிபடுவது நல்லது. மனிதன் பிறரைப்பற்றி சிரித்துப்பேசும் குணமுடையவன். அப்பர் தன்னுடைய வாழ்வில் அத்தகைய அனுபவத்தைப் பெற்றவர். சைவ வாழ்வியலிற் பல்வேறு துன்பங்களை அனுபவித்தபோது அதனின்றும் விடுபடச் சமண சமயத்தைச் சார்ந்து நின்றவர். பின்னர் மீண்டும் சைவ மசயத்தை நாடி வந்தவர். அப்பருடைய சமய மாற்றம் பலர் சிரித்துப் பேசுவதற்கு இடமளித்திருந்தது. அது அவருடைய மனத்தை பெரிதும் பாதித்திருந்தது. தன்னைப்போல பிறரும் துன்புறக்கூடாது என அப்பர் எண்ணினார். பிறருடைய பழிப்பிலிருந்து மீள்வதற்குக் கோயில் வழிபாடுதான் உறுதுணையானது. மனத்தை புண்படுத்தும் பிறருடைய பேச்சுக்களை 'சிரிச்சுற்று" பேசுதல் என அப்பர் குறிப்பிடுகிறார்.

வாழ்க்கையில் அவர் பெற்ற துன்பியல் அனுபவங்கள், அவருடைய தமிழ்ப்புலமையால் பாடல்களிலே ஆவணமாய் உள்ளன. அயலவர் குணவியல்பை ஒருவர் நன்கறிந்திருக்க வேண்டும். அவர்களுடைய பேச்சுக்கள் மனத்தைப் புண்படுத்தினால் அத்துன்பத்திலிருந்து எம்மைக் காத்துக்கொள்வதற்கு அப்பர் காட்டும் நன்னெறி பாடலிற் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"அரிச்சுற்ற வினையாலடர் புண்டு நீர்  
எரிச் சுற்றக் கிடந்தாரென்றயலவர்  
சிரிச்சுற்றுப் பல பேசப்படா முனந்  
திருச்சிற்றம்பலஞ் சென்றடைந்துய்ம் மினே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## ஓர் உடம்பு இருவர் ஆகி

அழகிய தோற்றம் உள்ளத்தைக் கவர்வது. அத்துடன் ஆடலும் இணையும்போது உள்ளம் பரவசம் அடையும். எமது உள்ளம் அழகிய ஆடலைக் காணவிழையும். எமது வழிபாட்டில் இறைவன் ஆடல் இணைந்திருப்பது சிறப்பு. அதிலும் ஆணும் பெண்ணுமாய் இணைந்த சிவனுடைய தோற்றம் அற்புதமானது. திருத்தல வழிபாடு செய்த நாவுக்கரசர் தில்லைச் சிற்றம்பலத்திலே ஆடுகின்ற சிவனுடைய தோற்றத்தைக் கண்டு வியந்து நிற்கிறார். அம்பலத்தில் ஆடுகின்ற சிவனின் திருக்கோலத்தைச் செந்தமிழால் புள்ளியிட்டுக் காட்டுகிறார்.

அவருக்குச் சிவனுடைய சென்னியிலே விளங்கும் நிலாவின் தோற்றம் பார்க்கும்தோறும் இனிமை தருகிறது. அதனை அவருடைய சொற்றொடர்கள் மிகத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இளநிலா, தனிநிலா, பனிநிலா, ஒளிநிலா, முகிழ்நிலா, மணிநிலா, விரிநிலா என்னுஞ் தொடர்களால் நிலவின் தன்மையை விளக்கியுள்ளார். இத்தொடர்களோடு "எறிக்குஞ்சென்னி" என நிலா சூடப்பட்டிருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டுகிறார். இறைவன் தலையில் வலப்பக்கத்திலே சூடியிருக்கும் மூன்றாம் பிறையின் அழகில் அப்பர் சொக்கிவிட்டார். அவருடைய கண்களாற் கண்ட காட்சி உணர்விலே கலந்துவிட்டதை அவர் பயன்படுத்திய சொற்கள் நன்கு உணர்த்துகின்றன.

சிவனுடைய சென்னியிலே பிறை சூடியிருப்பதை முதலில் செந்தமிழிற் பதிவு செய்தவர் காரைக்காலம்மையார், அவருடைய அற்புதத்திருவந்தாதியில்,

"பிறையும் புனலும் அரவும் சூடும் இறைவர்" எனக் குறிப்பிட்டுக்காட்டியுள்ளார். இத்தோற்றத்தை அப்பர் மனங் குளிர்ந்து பாடுகிறார். மூன்றாம் பிறையை 'இளநிலா' எனக் குறிப்பிடுகிறார். இறைவன் சென்னியில் தனித்துவமாகத் தோற்றுவதால் 'தனிநிலா' என்கிறார். குளிர்மையான தோற்றமுடைய நிலாவாகையால் 'பனிநிலா' என வர்ணித்துள்ளார். நிலவின் ஒளியால் கவரப்பட்டதை 'ஒளிநிலா' என்ற தொடராற் குறிப்பிடுகிறார். சென்னியில் தோற்றுவதுபோல விளங்கும் நிலாவாக இருப்பதால் 'முகிழ் நிலா' என்று சுட்டிக்காட்டுகிறார். நிலவின் ஒளிருந்தன்மையைக் கண்டு 'மணிநிலா' என வர்ணிக்கின்றார். நிலாவின் விரிவு கண்டு 'விரிநிலா' எனப்புகழ்கிறார். தில்லையில் ஆடும் சிவனின் சென்னியிற் சூடிய துண்டப்பிறை அப்பருடைய பக்திக்கண்களில் பல்வேறு அழகுக் கோலமாகத் தெரிகிறது.

நடனமாடும்போது பிறையும் பல்வேறு கோலம் காட்டுவது ஆடலின் சிறப்புக்கு அணி செய்கிறது. தன்னுடைய பக்திப் பரவசத்தைச் செந்தமிழிற் பாடியிருப்பது இன்றும் எம்மை வியக்க வைக்கின்றது. உள்ளத்தில் ஊற்றெடுக்கும் பக்தியைச் சொற்களால் இசைமாலையாக அப்பர் பாடுவதற்குத் தமிழ் கைகொடுத்துள்ளது.

"ஓர் உடம்பு இருவர் ஆகி ஒளிநிலா எறிக்கும் சென்னிப்
பாரிடம் பாணி செய்யப் பயின்ற எம் பரமமூர்த்தி
காரிடம் தில்லை தன்னுள் கருது சிற்றம்பலத்தே
பேரிடம் பெருக நின்று பிறங்கு எரி ஆடுமாறே"

## பார்த்திருந்தடியனேனான் பரவுவன்

மனிதனுடைய புலன்களை நெறிப்படுத்த வழிபாடு பெரிதும் உதவும். நம்முன்னோர்களின் வாழ்வியல் அநுபவம் இது. தறிகெடுகின்ற புலன்களை அடக்க ஒரு பயிற்சி தேவைப்பட்டது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து உறுப்புகளும் ஒன்றிணைந்து செயற்பாட்டினைச் செய்யும்போது அதில் ஒரு சீர்மை வந்துசேரும், தொடுதல், உரையாடுதல், காண்டல், முகர்தல், கேட்டல் என்னும் ஐம்புலன்களையும் ஒருங்கே சேர்த்துச் செயற்படுவது இறைவழிபாடாகும்.

மனிதர்களோடு தொடர்புகொள்ளும்போது ஐம்புலன் களையும் இணைப்பது எளிதன்று. ஆனால் இறைவனைப் பரவு கின்றபோது இது கைகூடும். உள்ளத்தை இறை உருவிலே பதித்து வழிபடுவதைவிடக் கோயிலிலே இறையுருவைப் பார்த்து வழிபடும் போது பரவசம் உண்டாகின்றது. 'பரவுதல்' என்பது இறைவனை வழிபடும்போது பாடி ஆடி வழிபடுவதாகும்.

தில்லைச்சிற்றம்பலத்திலே கூத்தாடுகின்ற இறைவனைக் கண்ட அப்பர் பெருமான்; இறைவனது கூத்தை மற்றவர்களும் கண்டு மகிழ வேண்டும் என்று எண்ணினார். தன் புலன்களைச் செயற்பட வைக்கப் பாடியாடி வழிபடவிரும்புகிறார்.

வாழ்க்கையில் இடையிலே திடீரென எம்மைத் தாக்கும் துன்பங்களிலிருந்து விடுபட அவர் காட்டும் வழி இதுவாகும். இறைவனை ஏத்திப்பாடும்போது வாயும், செவியும், தீயவழிச் செல்லாது நல்லவழியிலே செயற்படுகின்றன.

ஆடுகின்றபோது உடல் முழுவதும் இறைவன் உணர்வுடன் செயற்படுகின்றது. இறைவன் ஆடலைக் காணும் நாமும் அவனை ஏத்திப்பாட வேண்டும் என்ற அவா உண்டாகின்றது. உள்ளம் ஐம்புலன்களையும் இறைவன்பாற் செலுத்திப் பரவசப்படுகின்றது.

இந்த அநுபவத்தைப் பெற்ற அப்பர் அதனைச் சொற் சித்திரிப்பால் எல்லோரும் அநுபவிக்கவைக்கின்றார். அவர் பயன்படுத்துகின்ற சொற்களும், தொடர்களும் இதனைத் தெளிவா கப் புலப்படுத்துகின்றன. 'பரவுவன் பாடியாடி' என்ற தொடர்; பாடலும் ஆடலும் இணைந்த வழிபாட்டு நடைமுறையைக் குறிக்கின்றது. இசையும் ஆடலும் உள்ளத்தைத் தட்டியெழுப்பும். உணர்வுநிலைகளை அசைக்கும். சிறுவர் முதல் முதியவர்வரை இசைக்கு வசமாகி நிற்பர்.

ஆடல் கண்டு களிப்படைவர். இந்த மனித இயல்பை, இறைவன் திருநடனத்தைக் காணும்போது மேலும் நெறிப்படுத்த முயல்கிறார் அப்பர். கூத்து நடக்குமிடத்திற்குக் கூத்துக்காண விரும்புவோர் ஓடி வருவர்.

தில்லையிலே கூத்தாடும் இறைவனைக் காண்போர் தம்மை மறந்து அக்காட்சியின் பத்தியில் திளைத்து நிற்பர். ஆடவல்லான் அவர்களைத் திருக்கோயிலை நாடிவரச் செய்து திருவருள் செய்கின்றான்.

"பார்த்திருந்தடியனேனான் பரவுவன் பாடியாடி
மூர்த்தியே யென்ப னுன்னை மூவரின் முதல்வ னென்பன்
ஏத்துவாரிடர் கடீர்ப்பாய் தில்லைச் சிற்றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக் காண்பான் கூட நான் வந்தவாறே"

## சித்தத்தெழுந்த செழுங் கமலத்தன்ன சேவடிகள்

உள்ளத்தில் ஒன்றை நினைத்து வாழும் இயல்பு மனிதரிடம் உண்டு. சிலர் நினைவுகளை நெஞ்சிலே சுமப்பர். வாழ்க்கையில் எதிர்கொண்ட இன்பத்தையும், துன்பத்தையும் உள்ளத்திலே பதித்து வைக்கும்போது, அதனால் என்ன பயன் கிடைக்கும்? சிலவேளைகளில் துன்பப் பதிவுகள் வாழ்க்கையையே நரகமாக்கிவிடும். இறைவனை நினைந்து அவன் உருவை மனதிலே பதித்து வழிபடுவதனால் வாழ்க்கை நீரோடைபோல நிதானமாயிருக்கும்.

இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயிற் சூழலில் வாழுகின்றவர் இறை சிந்தனையோடு வாழ்வைக் கழிக்கும் அனுபவமுடையவர்கள். உள்ளத்திலே இறைவன் திருவடிகளைப் பதித்து வாழும் மனப்பக்குவம் அவர்களுக்குக் கைகூடும். செங்கமலம் போன்ற திருவடிகளைக் காணும் வாய்ப்புத் தில்லையிலே வாழும் அடியவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதனால் அத்திருவடிகளை மனத்துள் வைத்து வாழுகின்றனர். இது ஒரு செம்மையான வாழ்வியல்.

திருநாவுக்கரசர் தில்லைச்சிற்றம்பலத்திற்குச் சென்றபோது அங்கு வாழும் மக்களின் மகிழ்வான வாழ்வைக் காண்கிறார். பிற சமயம் தழுவிச் சைவ வாழ்வியலை மறந்து அல்லற்பட்ட அவருக்கு தில்லைச்சிவனின் தோற்றம் மட்டற்ற மகிழ்வைத் தருகிறது. சிவன் சூடியிருந்த மத்தமலரைப் பார்க்கிறார். வைத்த கண்களை மீளப் பெயர்க்கமுடியவில்லை. அதையே பார்த்துக்கொண்டு இருக்க வேண்டும் என்ற உணர்வின் வயப்படுகிறார்.

இந்த நிலை மனித வாழ்க்கையில் தொடர்பான சிலவற்றில் ஏற்படுவதை நாம் காணலாம். ஏதாவது ஒரு பொருளைக் கண்டுவிட்டால் அதிலிருந்து மீள முடியாமல் தவிப்பவர் உளர். அதனால் துன்பத்தையும் அடைவர். அவர்களை இறையுருவிலே ஈடுபடச் செய்யவேண்டும். கண்பார்வையைக் கண்டபடி அலையவிடாமல் இறையுருவிலே பதிக்கும்ப யிற்சி பயன் தருவது.

வாழ்க்கையில் ஏற்படும் ஊனத்தைப் போக்கவல்லது பக்தியே. பக்திசெய்து பிழைப்பதே நன்று. அதனால் பயனில்லாது உழைக்கும் ஆற்றல் கைகூடும். சித்தத்தைச் சிவன்பால் வைத்து மகிழ்வோடு இருந்த மெய்யடியார்கள் தாம் உணர்ந்த பக்தி நிலையைப் பல பாடல்களிலே புலப்படுத்தியுள்ளனர். உடலுறுப்புகள் எல்லாம் இறைவனை வழிபடவேண்டும் எனப் பயிற்றியவர்களில் அப்பர் தனித்துவமானவர். இறைவன் சூடியிருக்கும் மத்த மலரைப் பார்த்த தன்னுடைய கண்கள் இனிமேல் எதையும் காண விரும்பவில்லை எனக் குறிப்பிடுகிறார். கட்புலனை இறைவன்பாற் செலுத்தும் பக்திநிலை ஒரு தனித்துவமான பயிற்சி நிலையாகும். அதனைத் தமிழ்க் கவிதையில் தருகிறார்.

"சித்தத்தெழுந்த செழுங் கமலத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந்தன்னுள் விளங்கியதூ
மத்தமலர் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## ஒன்றியிருந்து நினைமின்களும் தமக் கூனமில்லை

மனம் ஒன்றிய வழிபாட்டின் அனுபவம் மிகவும் அற்புதமானது. நினைவில் தோன்றும் இறை உருவை நேரிற் கண்டால் ஏற்படும் பரவசத்தைப் பற்றிப் பாடுவது எளிதன்று. நமது முன்னோர்கள் சொன்ன இறைவன் பற்றிய புராணக்கதைகளைக் கேட்கும் போது அதனை ஐயுறும் தன்மையும் எம்மிடம் உண்டு. நாவுக்கரசர் இந்த ஐயத்தை நன்குணர்ந்தவர். அவர் சிதம்பரம் தலத்தினைத் தரிசிக்கச் சென்றபோது தனக்கு ஏற்பட்ட அநுபவத்தைச் செந்தமிழிலே பாடியுள்ளார்.

மனத்திலே ஒரு குறையுடன் வழிபாடு செய்யும்போது உடல் அதனைக் காட்டிக்கொடுத்துவிடும். நாவுக்கரசர் அவ்வாறு தான் இருந்ததைப் பாடியுள்ளார். திருச்சிற்றம்பலத்திலே நடனஞ் செய்யும் சிவனின் கோலத்தை விழுந்து வணங்கியபோது அவர் மனதில் தன்குறை தெரிகிறது. இரு கைகளையும் தலைமேல் வைத்து, இரண்டு கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்க வணங்குகிறார். திரு நடனம் செய்கின்ற சிவனின் திருநயனங்களிலிருந்து பொழியும் திருவருளால் அவர் மனக்குறை தீர்க்கிறது. சிவனின் ஆடுகின்ற தோற்றத்திலே ஒரு திருக்குறிப்புத் தோன்றுகிறது. அது அவரைப் பரவசத்தில் ஆழ்த்துகிறது.

மனம் ஒன்றி வழிபடுமபோது எம் மனக்குறை தீர்ந்துவிடுமென அப்பர் வழிசொல்லுகிறார். காலனைத் தனது காலால் உதைத்து மார்க்கண்டன் மனம் மகிழச் செய்த அற்புதத்தை நினைவுபடுத்துகிறார். மனத்திலே துன்பத்தின் நிழல்படும்போது அதை அகற்றும் ஆற்றலுடையது இறையருளே. "நீயே என் துன்பங்களை நீக்க வல்லவன்" என மனங்கசிந்து தொழுது வணங்கும்போது இறைவன் நாம் வேண்டும் உருவில் வந்து எமது துன்பத்தை நீக்குவான்.

நாவுக்கரசர் நாவில் செந்தமிழ்ச் சொற்கள் இணைந்து பக்தி உணர்வை நன்கு புலப்படுத்துகின்றன. 'ஒன்றியிருந்து நினைமின்கள்' என அவர் கூறும்போது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் சொல்லிவிடுகிறார். இறைவன் பார்வையில் 'என்று வந்தாய்?' என்னும் குறிப்பு இருந்ததைக் காண்கிறார். நீண்ட நாட்களாக அப்பரை எதிர்பார்த்திருந்த இறைவனாகக் காண்கிறார். தன்னைக் கண்டவுடன் இறைவன் தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றத்தை ஊன்றிக் கவனித்த அப்பரின் ஒன்றிய பக்தி தமிழிசைப் பாடலாய் உருவாகிற்று. மனம் நொந்து தனிமையில் வருந்திய நாவுக்கரசரை இறைவனின் திருக்குறிப்பு மெய்சிலிர்க்க வைக்கிறது. இப்படியும் அருள் நிலையா என வியக்க வைக்கின்றது. அந்த வியப்பும் மனத்தவிப்பும் பிறராலும் அறியப்படுவதற்குச் செந்தமிழ்தான் துணையாய் நிற்கிறது. அவரது பக்தியுணர்வைப் பாரெல்லாம் உணரவைக்கின்றது. அந்தச் சொல்மாலை அழகாய் நம்மையும் கவர்கிறது.

"ஒன்றியிருந்து நினைமின்களும் தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தானடி யவற்காய்ச்
சென்று தொழுமின் கடில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாயென்று மெம்பெருமான் றன் றிருக்குறிப்பே"

# கற்றானைக் கங்கைவார் சடையான்றன்னை

எமக்கு விருப்பமான பொருளைப் பற்றி நினைப்பதும் பேசுவதும் இன்பம் தரும். மனித நிலையில் இவ்வியல்பு பொதுவானது. தெய்வத்தைப் பற்றி நினைப்பதும், பேசுவதும் மனதைப் பண்படுத்தும். புலனடக்கம் இன்றேல் பல துன்பங்களை நாம் அனுபவிக்க நேரிடும். எனவே மனம் புலன்வழி செல்லா திருக்க நாம் பயிற்சியளிக்க வேண்டும். அது வழிபாட்டினால் எமக்குக் கிடைக்கும். வழிபாடு பற்றிய சிந்தனையை மக்களுக்கு ஏற்படுத்துவற்கு நம் முன்னோரது வழிபாட்டு முறைமைகளை நோக்க வேண்டும்.

மெய்யடியார்கள் பலர் தெய்வீக அநுபவம் பெற்றுப் பல பக்திப் பாடல்களைப் பாடியுள்ளனர். தெய்வ சிந்தனை மட்டுமே அவர்களிடம் இருந்தமையால் பாடல்களில் அவற்றைப் பதிவு செய்ய முனைந்தனர். நாவுக்கரசர் பாடல்களில் இத்தகைய சிந்தனையின் வெளிப்பாட்டைக் காணமுடிகின்றது. சிவன் மீது அவருக்கு இருந்த ஈடுபாடு "திருத்தாண்டகம்' என்ற செய்யுளமைப்பில் அழகு தமிழிற் பாடப்பட்டுள்ளது. தான் வழிபடச் செல்லும் தலங்களிலே உறையும் இறைவனைப் பற்றிப் பேசுவது அவருக்கு விருப்பமாயுள்ளது. இறைவன் தோற்றத்தை மீண்டும் மீண்டும் மனக்கண்ணாற் கண்டு மெய்மறந்து நிற்கிறார். பல்வேறு தலங்களில் தரிசித்த இறைஉருவைச் சொற்சித்திரமாக்கியுள்ளார்.

மண்ணுலகத்தோர் மட்டுமன்றி விண்ணுலகத்தோரும் எப்போதும் வணங்கும் சிவனைப் புகழ்ந்து நாவுக்கரசர் பாடும்போது செந்தமிழ் அவருடைய உள்ளத்து உணர்வினை வெளிப்படுத்துவதற்குச் சிறப்பாகத் துணைபுரிகின்றது 'பேசாத நாளெல்லாம் பிறவாநாளே' என அவர் குறிப்பிடுவது அவரது தெய்வம் பற்றிய சிந்தனையை நன்கு விளக்கி நிற்கின்றது. ஒருநாள் கழியும்போது அந்த நாள் பயனுள்ளதாகக் கழியவேண்டும். ஏனெனில், அடுத்துவரும் நாள் புதிய பிறவியெடுக்கும் உணர்வைத் தரவேண்டும். அப்படியாயின் இறைவனைப் பற்றிய சிந்தனை யோடு மனிதன் தன் வாழ்நாட்களைக் கழிக்கவேண்டும். உலகவயப்பட்ட சிந்தனைகளால் அலமருவோர்க்கு அதிலிருந்து விடுபட்டு மகிழ்வாய் வாழ்வைக் கழிக்க நாவுக்கரசர் கூறும் நல்வழி இதுவே. அதனால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என அவர் வியந்து கூறியுள்ளார். மகிழ்வான வாழ்க்கைக்கு வழிகூறும் பாடலை ஒருமுறை மனதிற் பதிவது நன்று.

"கற்றானைக் கங்கைவார் சடையான்றன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதினானை
அற்றாக்கு மலர்ந்தார்க்கு மருள் செய்வானை
யாரூரும் புகுவானை யறிந்தோமன்றே
மற்றாருந் தன்னொப் பாரில் லாதானை
வானவர்களெப்பொழுதும் வணங்கியேத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

### துன்பமில்லை துயரில்லை

மனிதனுடைய உணர்வு வேறுபாடுகளை விளக்குவதற்குத் தமிழ்மொழியில் ஏற்ற சொற்களுள்ளன. செம்மொழியான தமிழ்மொழிச் சொற்களின் பொருள் துலக்கமாக அதனைப் பயன்படுத்தியவர்கள் மெய்யடியார்களாவர். அவர்கள் பாடிய தேவாரத் திருப்பதிகங்களிற் சொற்களின் பயன்பாடு சிறந்த முறையில் விளக்கப்பட்டுள்ளது. இன்று நாம் சொற்களைப் பயன்படுத்தும்போது அவற்றின் தனித்துவமான பொருளை உணர்ந்து பயன்படுத்துவதில்லை. அதனால் வேறுபட்ட உணர்வு களைப் புலப்படுத்துவதில் எமக்குச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

தேவாரங்கள் அடியவர்களுடைய பக்தியுணர்வைப் பதிவு செய்துள்ளன. இறைவன்மீது கொண்ட அன்பினால் இறைவனைப் பற்றிப் பல பாடல்களை அவர்கள் பாடியுள்ளனர். தமது வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களைப் பாடலாகப்பாடும்போது தமது தமிழ்மொழியாற்றலையும் முழுமையாகப் பயன்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக 81 வயதுவரை வாழ்ந்த நாவுக்கரசர் பாடிய பாடல்களைக் கூறலாம். அவருடைய பாடல்கள் பன்னிரு திருமுறையில் 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுட் பல செய்யுள் வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தன் உள்ளத்து உணர்வுகளைப் பாடலாகப் பாடும்போது நாவுக்கரசர் பயன்படுத்திய சொற்கள், அவருடைய தமிழ்மொழிப் புலமையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. தன்னுடைய அனுபவங்களைப் பாடும் நாவுக்கரசர் வாழ்க்கையிற் பல துன்பங்களையும், துயரங்களையும் எதிர்கொண்டவர். இன்று துன்பம், துயரம் என்னும் இரு உணர்வு நிலைகளையும் நாம் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. ஆனால், நாவுக்கரசர் தன் வாழ்வியல் அனுபவத்தால் துன்பம், துயரம் என்ற இரு உணர்வு நிலைகளையும் தெளிவாக விளக்கிப்பாடியுள்ளார்.

'துன்பம்' என்பது நினைவு நிலையில் அனுபவிப்பது. ஒருவர் தனக்கு ஏற்பட்ட துன்பமான நிலையைத் தன்னளவில் நினைந்து துன்பப்படுவது, 'துயரம்' என்பது ஏதோ ஒரு செயற்பாட்டினால் ஏற்படும் நிலையாகும். செய்திநிலையில் துன்பம் நேரும். செயற்பாட்டு நிலையில் துயரம் ஏற்படும். சிலப்பதிகாரம் கண்ணகி, கோவலன் இறந்த செய்திகேட்டு வருந்துவதைத் 'துன்பமாலை' என்னும் பகுதியாக அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இறைவன் நமது துன்பத்தையும் துயரத்தையும் தீர்ப்பான் என்ற நம்பிக்கையை நாவுக்கரசர் பாடலிற் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல் தமிழ்மொழி ஆற்றலையும் எமக்குத்தருவது. பக்தியின் மொழியாகத் தமிழை உணர்வதற்கு ஒரு பாடலைத் தருகின்றோம்.

"துன்பமில்லை துயரில்லை யாமினி
நம்பனாகிய நன்மணி கண்டனார்
என்பொனாருறை வேட்கள நன்னகர்
இன்பன்சேவடி யேத்திரிருப்பதே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## எரியாயரியாய் நில நீரொடு தீ

சிறுவயதில் வழிபாட்டில் மனம் செலுத்துவதற்குத் தாயின் பயிற்றுதல் அவசியம். சமயகுரவர்களில் வயதில் மிகவும் இளையவர் சம்பந்தர். அவருடைய சிறுபிராயத்தில் ஏற்பட்ட தெய்வீக அனுபவம் தேவாரம் பாடச் செய்தது. தந்தை நீராடச் சென்றபோது தானும் கூடவருவேன் என அடம்பிடித்துச் சென்ற குழந்தை ஞானசம்பந்தன் குளத்து நீரில் தந்தை மூழ்கியபோது பயந்துவிட்டான். தந்தையைக் காணவில்லையே என்று அழுதான். அவனுடைய மனதில் தாய் பயிற்றிய நம்பிக்கை தோன்ற தோணிபுரத்துக் கோவிலின் கோபுரத்தைப் பார்த்து அம்மே அப்பா என்று அழைத்து அழுகிறான். அவனுடைய நம்பிக்கை வீண் போகவில்லை. இறைவனும், இறைவியும் அவனுக்குக் காட்சி கொடுத்தனர். இறைவியின் திருமுலைப்பாலையுண்டு ஞானம் பெற்றுத் தேவாரம் பாடுகிறான்.

குழந்தை நிலையில் ஞானசம்பந்தருக்கு இறைவன் தரிசனம் எளிதாகக் கிடைத்தது. எந்த ஆலயத்தை வழிபடச் சென்றாலும் தனக்குக் கிடைத்த தெய்விக அனுபவத்தைச் சம்பந்தர் நினைவு கூரத்தவறுவதில்லை. அவர் பாடிய தேவாரங்களில் இறைவனை முழுமையாக உணர்ந்தவராகக் காணப்படுகின்றார். பதினாறு வயதில் முத்தியடைந்த அவருடைய பாடல்களில் இளமையின் குதூலகத்தைவிடப் பக்தியின் பரவசமே மேலோங்கியுள்ளது. அவர் வளர்ந்த சூழல், இறைவழிபாடு பற்றிய செயற்பாடுகளைச் செய்ய வாய்ப்பளித்தது.

இயற்கையிலே இறைவனைக் காணும் பக்திநிலையை அவர் பாடல்கள் காட்டுகின்றன. பக்திநிலையிற் சிலர் இறைவனை எளிதாக உணர்வர். வேறு சிலர் அரிதாகவே உணர்வர். ஐம்பூதங் களாக நிற்கும் இறைவனைச் சம்பந்தர் எமக்கு உணர்த்த முற்படுகி றார். நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்னும் தோற்றநிலையில் இறைவனைக் கண்டு வழிபடும் மனப்பக்குவம் மனிதருக்கு வேண்டும். நிலைபெற்றிருக்கும் இவற்றைவிட ஒளியாய் நிற்கும் இறைவனையும் காட்டுகிறார். ஒளியை இறைவனின் உருவாகக் கண்டு வழிபடும் மரபு பண்டுதொட்டு நிலவிவருகின்றது. அதைச் சம்பந்தர் மீளவும் நினைவுபடுத்துகிறார்.

இறைவனுக்கு உருவம் ஒன்று காணாமல் இயற்கையையே இறை உருவாகச் சொற்களால் வரைந்து காட்டிய காரைக் காலம்மையாரின் பக்திநெறி நின்று சம்பந்தரும் சமயப்பணி செய்தவர். சமணம், பௌத்தம் போன்ற பிற சமயங்கள் மக்களிடையே செல்வாக்குச் செலுத்த முற்பட்டபோது சம்பந்தர் அதனைத் தடுக்கப் பணி செய்தார். தமிழ் நாட்டிலே சைவத்தை நிலைநாட்டச் செந்தமிழ்ப் பாசுரங்களை இசையோடு பாடி அனைவரையும் பக்தி வசப்படுத்தினார். திருக்கோயில்களை வணங்கும்போது அவர் பாடிய தேவாரம் எல்லோரையும் ஈர்த்தது.

"எரியாயரியாய் நில நீரொடு தீ
வளிகாயமென வெளி மன்னியதூ
ஒளியாயுனையே தொழுதுன்னுமவர்க்கு
அளியாய் கழிப்பாலை யமர்ந்தவனே"

## துள்ளுமான் மறியங்கை யிலேந்தி

இறைவனை நினைத்து வாழும் வாழ்க்கையே இன்பமான தென நம்முடைய முன்னோர்கள் கூறியுள்ளனர். பலரோடு கூடி வாழ்வு நடத்தும்போது தனிமனித விருப்புகளை நிறைவேற்ற முடியாது போகலாம். எனினும், பிறருக்காக வாழும் நிலை ஒன்றை ஏற்று வாழும் மனப்பக்குவத்தை நாம் ஏற்படுத்திக்கொண்டால், வாழ்க்கை வாழ்வதற்கே என உணர்ந்து கொள்ளலாம். இறையடி யார்களுடைய மனப்பக்குவம் இத்தகையதொரு செயற்பா டென்றே கூறலாம். சம்பந்தர் இந்நிலையை "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்று பாடியுள்ளார்.

இத்தகையதொரு மனப்பக்குவத்தைப் பெறுவதற்கு ஏற்ற நெறியே பக்தி நெறியாகும். இறைவன் ஒருவனே எமக்கு என்றும் துணையாக இருப்பான் என்ற நம்பிக்கையோடு செயலாற்றும் பயிற்சியே இந்நெறிகாட்டும் வாழ்வியலாகும். மெய்யடியார்கள் பலர் இந்நெறி நின்று, உலகவாழ்க்கையின் துன்பங்களைத் துரத்தி, மற்றவர்கள் வாழ்வு வளம்பெறப் பணிசெய்யும் பக்குவம் பெற்றனர். பெரியபுராணம் இத்தகைய மெய்யடியார்கள் வரலாற்றைத் தொகுத்து வைத்துள்ளது.

கோவில் வழிபாட்டுநெறியை மனத்தைப் பக்குவப்படுத் தும் பயிற்சிக்கு அடித்தளமாகக் கொள்ளலாம். கோயிலிற் பலருங் கூடித் தமது துன்பங்களையும், துயரங்களையும், அல்லல்களையும், இடர்களையும் தீர்க்கும்படி வேண்டுதல் செய்வர். இறைவன் கழலை ஏத்தினால் இடர்கெடும்; நண்ணி வணங்கினால் நலம் பெறலாம். வலம் வந்தால் செய்வினைமாயும். எனவே, இறை வனடிகளை அடைந்தால் உய்வடையலாம் என்ற உறுதிப்பாடும் தோன்றியது.

கோவிலுக்குச் சென்று வழிபடுவதற்கு வாய்ப்பில்லாத வர்கள் அங்குள்ள இறைவனை உள்ளத்திலே நினைந்துகொண்டி ருந்தாலே எல்லா வினைகளும் ஓடிவிடுமென இளம் அடியாராகிய ஞானசம்பந்தர் பாடியுள்ளார். கோவிலை வலம்வந்து பாடியாடி இறைவனை வழிபடவேண்டும் என்ற பக்திவாழ்வியலைக் காட்டிய சம்பந்தர் அத்தகைய வழிபாட்டைச் செய்ய முடியாதவர் களுக்கு நினைத்து வழிபட வழிசொல்கிறார். ஒருமுறை இறைவன் கோலத்தைக் கண்டு அதனை மனப்பதிவு செய்துவிட்டால்; பின்னர் உள்ளக்கோவிலில் இறைவனை வழிபடப் பயில வேண்டும். குறிப் பிட்ட கோவிலிலே எழுந்தருளியிருக்கும் இறைவன் கோலத்தை மனத்திரையிலே காணச்செந்தமிழ்ச் சொற்கள் கைகொடுக் கின்றன. ஞானசம்பந்தருடைய நினைத்து வழிபடும் பக்திநெறியைக் கீழ்வரும் பாடல் காட்டுகிறது.

"துள்ளுமான் மறி யங்கை யிலேந்தியூர்
கொள்வனாரிடு வெண்டலையிற் பலி
கள்வனாருறையுங் கழிப்பாலையை
உள்ளுவார் வினையாயின வோயுமே"

## மருந்துவாள வருய்ய நஞ்சுண்டு

ஒன்றையே நினைத்து வாழும் பக்குவமுடையோரும் இவ்வுலகில் உளர். இறைவனைப் பற்றியே எண்ணும் பக்திநெறி வயப்பட்டவரின் செயற்பாடுகள் சற்று வேறுபட்டவை. அவர்களு டைய பக்திப்பரவச நிலையில் எல்லாவற்றையுமே மறந்து இறைவ னோடு ஆழ்ந்துவிடும் இயல்புதான் தனித்துவமானது. இறைவனை யடைய வேண்டும் என்ற நினைப்பால் பாவனை செய்து அவனை யடைய முயலும் பக்தர்களும் உளர். இத்தகைய பக்திவயப்பட்ட பெண்ணொருத்தியின் செயற்பாடு எத்தகையது என்பதைத் திருநாவுக்கரசர் 'திருக்கழிப்பாலை' என்னும் திருத்தலத்தைப் பற்றிப் பாடும்போது குறிப்பிட்டுள்ளார்.

இறைவனுடைய வண்ணத்தையோ வடிவத்தையோ சென்று அவள் காணவில்லை. அவனைப்பற்றி எண்ணி அவனு டைய பெயர்களைச் சொல்லி ஏத்திவழிபடவும் இல்லை. செய்ய மேனியிலே, வெண்ணீறணிந்தவனுடைய நினைப்பிலே, தன்னை மறந்து நிற்கிறாள். வானவர்களைக் காப்பதற்காக நஞ்சை உகந்து உண்ட; திருக்கழிப்பாலையிலே உறைகின்ற பிரானுடைய திருவடி பற்றிய எண்ணத்தால் அவள் நெஞ்சம் நிறைந்து கிடக்கிறது. அத்தகைய பக்திப் பரவசத்தில் இருப்பவளை ஒன்றும் செய்ய முடியாது. இறைவனே அவளுடைய தன்மையை அறிந்தவன். அவளை நல்வழிப்படுத்துவான்.

பெண்களுடைய பக்திவசப்பட்ட நிலையைப் பலபாடல் களில் நாவுக்கரசர் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். இறைவனு டைய வேறுபட்ட திருக்கோலங்களையெல்லாம் மனத்திலே அவர்கள் வரைந்துவைத்துள்ளனர். செம்மொழித்தமிழில் அக் கோலங்களை அவர்கள் காணும் நிலையில் திருநாவுக்கரசர் எடுத் துரைக்கின்றார். கங்கையைச் சடையில் வைத்தவன் மலைமகள் நங்கையையும் உடன் வைத்திருப்பவன். திங்களையும் சூடி இருப்ப வன். கறைசேர்ந்த கண்டன். அனலேந்திய கையன். 'செய்ய மேனியன்' என இறைவன் தோற்றத்தைச் சிந்தையிற் பதித்து அவர்கள் வழிபடும் பாங்கு எல்லோரது உள்ளத்திலும் ஒரு கசிவை ஏற்படுத்துகின்றது. அதுவே பக்திநெறியின் ஊற்றாகும்.

இத்தகைய தன்னளவான வழிபாடு இளையவர்களை ஈர்க்கக்கூடியது. வண்ணச் சித்திரங்களின் வடிவில் திருக்கோயில் களிலும் மண்டபங்களிலும் இதனைத் தீட்டி வைப்பதால் மக்கள் மனதில் அழகுணர்வு தோன்றி அதன்வழியே கவனத்தை ஈர்க்கும். அது முடிவில் இறைவனோடு இணையவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். வழிபாடு ஆடலும் பாடலும் இணையும்போது பொது வழிபாடாக மாறிவிட்டது. தனிப்பட்ட வாழ்வியலில் இருந்து பொது வாழ்வியல் நெறியான பக்தி நெறியை ஊற்றெடுக்க வைத்தது.

"மருந்து வானருய்ய நஞ்சுண்டுகந்
திருந்த வன்கழிப் பாலையு ளெம்பிரான்
றிருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்து ரைக்கிலு மென்சொற் பழிக்குமே"

## எங்கேனும் மிருந்துன்னடியே னுனை நினைந்தால்

வாழ்க்கையின் மேடு பள்ளங்களைப் பற்றிய தெளிவைப் பெறப் புலன் அடக்கம் தேவை. புலன்களை அடக்குவதற்கு இறைவழிபாடே ஏற்றது. பல்வேறு செல்வங்களையும் பெற்றுப் பீடும் பெருமையுமாக வாழும்போது பலருக்குப் புலன் அடக்கம் கைகூடுவதில்லை. வழிபாட்டைச் செய்வதற்கு ஏற்றவாய்ப்புகள் இல்லாதவிடத்து என்ன செய்யலாம்? மனத்தை அலைபாய விடாமல் இறைவனைப் பற்றியே நினைத்திருந்தால் அவன் ஓடி வந்து அருள்புரிவான் என மெய்யடியாரான சுந்தரர் கூறுகிறார்.

இறைவனுடன் தோழமை நிலையில் அன்பு பூண்டு ஒழுகியவர் சுந்தரர். அரச வாழ்வு வாழ்ந்தவர். அதனால் அந்த வாழ்வையே எப்போதும் வேண்டி நின்றவர். அடியவரையே வழிபட்டு இறையருளைப் பெறலாம் என்னும் புதிய பக்திநெறியை உலகத்திற்கு எடுத்துரைத்தவர். அவர் பாடிய அடியார்களையே பின் வந்த சேக்கிழார் பெரிய புராணமாக, திருத்தொண்டர் புராணமாக விரித்துப் பக்தி இலக்கியமாகப் பாடினார். இறைவன் அருள் செய்யும் திறத்தைத் தனது தேவாரப் பதிகங்களிலே மிக உருக்கமாகப் பாடியுள்ளார்.

'எங்கேனும் இருந்து உன் அடியவன் உன்னை நினைத்தால் அங்கே வந்து அவன் குறையைத் தீர்ப்பவனே' எனக் கசிந்து பாடுகிறார். இது அவருடைய வாழ்வியலின் சொந்த அனுபவம். எனவே இதை எல்லோருக்கும் எடுத்துக்கூறி இறைவழிபாட்டில் ஈடுபாடுகொள்ளச் செய்கிறார். தனக்கு வறுமை வந்தபோதும், கண்ணை இழந்தபோதும் உடன் வந்து குறைதீர்த்த கேண்மை நிலையான இறைவன் அன்பு, உலகியல் வாழ்க்கையில் உற்ற துணையாக அமையும் என்பதை மக்களுக்குத் தன் பாடல்களிலே எடுத்துரைத்தார்.

மனிதனுடைய பிழைகளைப் பொறுப்பவன் இறைவன் என்ற உண்மையையும் சுந்தரர் தன்னுடைய பாடல்களிலே பதிவு செய்துள்ளார். நாம் செய்யும் தீவினையெல்லாம் ஒழித்து அருள் செய்யும் இறைவனைப் பொய்யாத நாவினால் புகழ்பவர் மனத்திலே குடிகொள்வான். மனத்து இருளை அகற்றும் நல்ல விளக்காய் நின்று ஒளிர்வான். அதனால் எமது உள்ளத்து இருள் விலகும், உண்மையான செயற்பாடுகள் விளக்கமாய்த் தெரியும். இதுவே சுந்தரர் காட்டும் பக்திநெறி. இறைவனை உள்ளத்திலே இருத்தி வழிபாடு செய்யும் மனப்பக்குவம் என்பது ஓர் உயர்ந்த அறிவு நிலையாகும். அதுவே பக்திநெறியின் இலக்குமாகும். செய்கின்ற வினைகளால் இந்நிலையை அடையமுடியாது என்று நாம் அவ நம்பிக்கைகொள்ளக்கூடாது என்பதே சுந்தரர் கூறும் செய்தியாகும். அதனை அவருடைய பாடல்கள் தெளிவாய்ப் புலப்படுத்துவதை நாவலர் கோனுரைத்த தமிழ் மாலையிற் காணலாம்.

"எங்கேனும் மிருந்துன்னடியே னுனை நினைந்தால்
அங்கே வந்தென்னொடு முடனாகி நின்றருளி
இங்கேயென் வினையறுத்திட் டெனையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## நித்தலுந் நியமஞ் செய் நீர் மலர் தூவி

அலைபாயும் மனத்தை ஒருநிலைப்படுத்திச் செயற்பட வைப்பதற்கு என்ன வழி என்ற தேடல் இன்று உலகெங்குமே நடைபெறுகின்றது. மக்களின் வாழ்வியல் நடைமுறைகள் மிக வேகமாகச் செயற்படுகின்றன. காலத்தின் கடப்பைவிட மனிதனின் வாழ்க்கைச் சகடம் துரிதமாக உருண்டுகொண்டு இருக்கிறது. இளமையும், முதுமையும் போட்டிபோட்டு வாழ்வியல் தடத்தில் விரைந்துகொண்டிருக்கின்றன. இதனால் மனித மனங்களில் அமைதியின்மையே தோன்றியுள்ளது. எனவே, மனித மனத்தை ஆற்றுப்படுத்த ஒரு சீர்மியச் செயற்பாடு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

உலகெங்கும் இத்தகைய தேடல் நடைபெறும் வேளையில் எமது முன்னோர்களின் அறிவூட்டல்களை ஒருமுறை நாம் எண்ணிப்பார்ப்பது நன்று. நாளாந்த வாழ்க்கையை நல்ல முறையிலே மனநிறைவுடன் பயன்பட வாழ்வதற்கு அவர்கள் காட்டிய வழிபாட்டு நெறி இன்றும் ஏற்றதாயுள்ளது. திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்யும்போது மன அமைதியும், நிறைவும் ஏற்படும் என்ற அனுபவத்தை அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

சமயகுரவர்களில் வயதில் மிக இளையவரான ஞானசம்பந்தர் காட்டும் வழி, காலத்திற்கு ஏற்புடையதாயுள்ளது. நாள் தோறும் திருக்கோவில் செல்வது என்ற நியமத்தை முதலில் ஏற்படுத்தவேண்டும். அவ்வாறு அங்குசென்று நீரும் மலரும் தூவி சித்தத்தை ஒரு நிலைப்படுத்தவேண்டும். அவர்கள் சிவனருள் பெறுவர். சம்பந்தர் தனது அனுபவத்தைப் பாடலிலே கூறியுள்ளார். கோயில் வழிபாடு வாழ்வைச் செம்மைப்படுத்தும் என்பதில் சம்பந்தருக்கு நல்ல நம்பிக்கையிருந்தது. கோயிலின் சூழல் மனித மனத்தைப் பரவசப்படுத்தும். வளமான நீர்வளம் நிறைந்த கோயில் ஒன்றைக் காட்டுகிறார். யானையின் கோடும், மயிற்பீலியும் வாரிக்கொணரும் தத்து நீர்ப்பொன்னியின் அழகுக்கோலம் அவரைக் கவர்ந்ததுபோலவே எல்லோரையும் கவரும் என எண்ணினார்.

'திருச்சாய்க்காடு' என்னும் திருத்தலம் இயற்கை எழிலுடன் மக்கள் மனங்கவரும் அழகிய வழிபாட்டுத் தலமாகும். பொன்னி நதியின் நீர் வளம் அங்கமைந்த சிவன் கோயிலின் சூழலை மேலும் குளிர்மையுறச் செய்துள்ளது. நாள்தோறும் அங்கு கால்கள் செல்ல; கைகள் மலர் பறிக்க; மனம் இறை சிந்தையில் ஈடுபட்டுப் பரவசம் அடையும். புறத்தே தாக்கிய உணர்வுகள் எல்லாம் ஒழியக் கோயிலின் கோல அழகில் மெய்மறந்து நிற்கும் மக்களைச் சம்பந்தர் அன்று காட்டினார். இன்றுவரையும் அது மனித மனங்களை வசப்படுத்தும். பாடலைப் படிப்போர் இதனை நன்குணர்வர்.

"நித்தலுந் நியமஞ் செய்துநீர் மலர்தூவிச்
சித்தமொன்ற வல்லார்க் கருளுஞ் சிவன்கோயில்
மத்தயானையின் கோடும் வண்பீலியும் வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரமேவு சாய்க்காடே"

## நன்றுநாடொறும் நம் வினை போயறும்

வாழ்க்கையென்பது ஒரு பெருஞ்சுமை என்ற உணர்வுடையோரை நாம் காணும் வேளையில் அவர்களைச் சார்ந்து சுமையைக் குறைக்க உதவுவது மனிதமாகும். துன்பத்தையே தொடர்ந்து அனுபவிப்பவரைக் காணும்போது அவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டும். துன்பம் ஒருவருக்கு இயற்கை நிலையாலும், செயற்கை நிலையாலும் ஏற்படக்கூடும். எமது வினைப்பயன் காரணமாகவே துன்பமும் இன்பமும் எமக்கு வருகின்றன என்ற கருத்தும் மக்களிடையே இன்று வலுப்பெற்றுள்ளது. ஆனால், நாள்தோறும் நாம் செய்யும் தொழிலும் வினையென்று அழைக்கப்பட்டது. செய்வினைப் பயனையே நாம் அனுபவிக்கிறோம் என்ற நினைவுடன் பலர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களைத் திருநாவுக்கரசர் ஆற்றுப்படுத்த எண்ணியுள்ளார்.

துன்பம் இல்லாத வாழ்க்கையை எதிர்பார்த்திருப்போருக்கு அவருடைய வழிகாட்டல் நல்லுதவி புரியும். நாள் தோறும் எம்மை வருத்தும் வினைகள் எம்மைவிட்டு அகன்றுவிடும். என்றும் இன்பமான வாழ்க்கையில் திளைத்திருக்கலாம். தன்னுடைய வாழ்வியலனுபவத்தையே எடுத்துச் சொல்கிறார். பெற்றோரால் பயிற்றப்பட்ட வழிபாட்டு நடைமுறைகளால் வாழ்க்கையில் தொடர்ந்துவந்த துன்பங்களைத் தடுக்கமுடியவில்லையே என்ற வேதனையால் பிறமத நெறிப்படுத் தலை அப்பர் நாடிச் சென்றார். ஆனால் அங்கும் உடல் நோயின், கொடுமை தீராமையால் பழைய வழிபாட்டை மீண்டும் தேடி வந்தார். சைவநெறியை உணர்ந்து கோவில் வழிபாடு தான் மனித வாழ்வில் மகிழ்ச்சியைத் தரவல்லது எனக்கண்டார். தாம் உணர்ந்ததை எல்லோருக்கும் அறியவைக்க அருமையான செந்தமிழ்ப் பாசுரங்களைப் பாடினார். அவருடைய பாடல் இறைவனை வழிபட வேண்டிய முறையைக் கூறுகிறது. பூரணமான ஒரு அடைக்கல நிலையில் இறைவனைத் தொழுது வழிபட வேண்டும்.

அப்பருடைய வழிபாட்டனுபவம் மக்கள் மனச்சுமையை அகற்றும் ஆற்றல் படைத்தது. 'திருவேட்களம்' என்னும் தலத்தில் உறையும் இறைவனை எமக்கு அறிமுகம் செய்து அவனை வழிபடுவதால் ஏற்படும் பயனையும் விளக்கியுள்ளார். அவர் கண்களில் இறைவனுடைய 'அடர்ந்த பொற்சடை' அழியாத கோலமாகவுள்ளது. 'துன்றுபொற்சடை' என அவர் இறைவன் சடையை வர்ணிப்பது அவர்பக்தி நிலையை நன்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது. 'தொழுதல்' என அவர் குறிப்பிடும் வழிபாட்டு முறை தனித்துவமானது. ஒருவர் முன்னிலையில் எம்மைத் தாழ்த்தி நிற்கும் நிலையே அது. இறைவனை எல்லையில்லாத பேராற்றலுடையவனாக எண்ணிப் பணிந்து வாழும் வாழ்க்கையே இன்பமான வாழ்க்கையாகும். இதனை அப்பர் பாடல் நயம்படவுரைத்துள்ளது.

> "நன்றுநாடொறும் நம் வினை போயறும்
> என்றும் இன்பந்தழைக்க இருக்கலாம்
> சென்று நீர் திருவேட் களத்துள்ளுறை
> துன்றுபொற் சடையானைத் தொழுமினே"

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

# கண்காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும்

உள்ளத்திலே ஒன்றை நினைப்பதற்கு உருவம் ஒன்று தேவை. இன்று விஞ்ஞான தொழில் நுட்பத்தினால் உருவத்தைப் பதிவுசெய்து பார்க்கக்கூடிய வாய்ப்பு உண்டு. ஆனால், இற்றைக்கு ஏறக்குறைய 1400 ஆண்டுகளுக்கு முன்னர் இத்தகைய வாய்ப்புகள் இல்லை. ஒரு காட்சியைச் சிற்பத்திலும், ஓவியத்திலும் மட்டுமே பதிவுசெய்ய முடியும். இத்தகைய காலகட்டத்தில் மொழிப் புலமைகொண்டு காட்சிகளைச் சொல்லிலே அமைத்துக்காட்டும் நிலை தோன்றியது. தான்பார்த்த அற்புதமான தோற்றங்களைச் சொற்சித்திரங்களாகப் பண்நிறைந்த பாடல்களாக நாயன்மார் பாடி வைத்துள்ளனர்.

அப்பாடல்களை இன்று படிக்கும்போதும் அது எம்மைப் புதியதொரு வாழ்வியலுக்கு அழைத்துச் செல்கின்றது. மனிதனின் உள்ளத்திலே ஒரு காட்சியைக் கற்பனையிலே காணக்கூடிய ஆற்றலைத் தோற்றுவிக்கிறது. நாம் பேசும் தமிழ் மொழி வெறுமனே தொடர்பாடல் நிலையிலே பயன்படும் மொழியன்று. அதற்கும் மேலாக எமது புலமையாற்றலை வெளிப்படுத்தும் நல்லதொரு ஊடகமாக இருக்கிறது என்பதை உணரவைப்பதாக வும் உள்ளது. இத்தகைய பயிற்சிக்கு முதலில் வழிகாட்டியவர் காரைக்காலம்மையார் ஆவார். அவரைப் பிற்பற்றியே சமயகுரவர் களும் ஆழ்வார்களும் தாம் வழிபடும் இறையின் உருவினைத் தேவாரங்களாகவும், திவ்வியப் பிரபந்தங்களாகவும் பாடினர்.

வயதிலே மிக இளையவரான திருஞானசம்பந்தர் தன்னை ஆட்கொண்ட இறைவனின் திருவுருவத்தைச் செந்தமிழாற் பாடும் வல்லமை பெற்றவர். சைவத்தின் பெருமையைத் தன்னைச் சார்ந்த வர்களும் அறியவேண்டுமென அவர் பெரிதும் விரும்பினார். அவருடைய தேவாரப்பாடல்கள் பிற்காலத்திற் பன்னிருதிருமுறை களில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சம்பந்தரது பாடல்களில் அமைந்துள்ள காட்சிப்புலப்பாடு இறைவனை நேரிற்காணும் உணர்வினைப் படிப்போர்க்கு ஊட்டவல்லது.

இறைவனின் திருவுருப் பற்றிய குறிப்புகளைக் கூறும்போது ஓர் ஒழுங்கு முறையிலே அவர் கூறுகிறார். மனித உருவைவிட இறைவனுடைய திருவுருவம் வேறுபட்டது. நெற்றியிலே ஒரு கண், கையிலே அனல், பாதி பெண்ணுருவம், சடையிலே கூனற்பிறை, பண்ணோடு கூடிய இசை, பயிர்ச்செழுமை கொண்ட திருத்தலம் என அவர் அடுக்கிக் கூறும் முறைமை படிப்பவரை அவ்வுருவைப் பார்க்கத் தூண்டுகிறது. விடை எழுதிய கொடியுடைய கோயில் என திருவெண்காடு ஆலயத்திற்குச் சம்பந்தர் பாடலிலே வழிகாட்டிய பாங்கு உள்ளத்திலே நினைத்திருக்கும் உருவை நேரிற் காணும் ஆவலைத் தூண்டுகிறது.

"கண்காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும் பிறை காட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டும் கொடியாலே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## பாடுவார் பசி தீர்ப்பாய் பரவு வார் பிணிகளைவாய்

உலகம் எங்கும் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டிப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவராகப் போற்றப்படுகின்றனர். பசி தீர்க்கவேண்டும் என்னும் எண்ணம் எல்லோருடைய உள்ளத்திலும் நிலைபெற்று இருக்கவேண்டும். வறுமையால் வாடுவோரின் பசியைப் போக்க வழிபாட்டு நிலையில் 'அன்னதானம்' என்னும் நடைமுறை உண்டு.

முற்காலத்தில் கால்நடையாகப் பயணஞ் செய்வோருக்கு நீர் வழங்கத் தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கும் வழக்கம் இருந்தது. திருக்கோயில்களிலே திருவிழா நடைபெறும் காலங்களில் வழிபட வருவோரின் வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்குச் சோறும் தண்ணீரும் வழங்கப்படும். எனவே, வழிபாடு வயிற்றுப்பசியையும் தீர்க்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே அக்காலத்தில் நிலைத்திருந்தது.

கோயில் வழிபாட்டையும், பக்தி உணர்வையும் மக்கள் அறிய வழிகாட்டியவர்கள் நாயன்மார்களாவர். இறைவனை முழு மனதோடு வழிபட்டால் விரும்பியவற்றையும் பெறலாம் எனக் கூறிய நாயன்மார்கள்; கோவிலில் உறையும் இறைவனைப் பற்றிப் பாடும்போது இரண்டு முக்கியமான விடயங்களைக் குறிப்பிட்டுள்ளனர். மக்கள் வாழ்வியலில் துன்பந்தருகின்ற பசியையும் பிணியையும் போக்க இறைவழிபாடே சிறந்தது என எடுத்துரைத்தனர்.

இறைவனின் இயல்புகளைப் பாடும் சுந்தரர் இவ்விரு நிலைகளையும் எடுத்துக்கூறியுள்ளார். இறைவன் தன்னைப் பாடுபவருடைய பசியைத் தீர்ப்பான். பரவுபவர்களுடைய பிணிகளை நீக்குவான். தானே ஓட்டைக் கையிலேந்திப் பிச்சைக்காக அலைவான். இக்குணம் மனிதருக்கும் இன்றியமையாதது. பிச்சையெடுக்கும் நிலையிலும் பிறருடைய வயிற்றுப் பசியைப் போக்கும் கொடையுள்ளம் தேவை.

காட்டையே தனக்கு வாழும் இடமாகக் கொண்டு நள்ளிருளிலே நடமாடும் வேடனாகத் தோன்றும் இறைவனின் இயல்பு மக்களை வழிப்படுத்தும் தன்மையது. ஆடம்பரமான வாழ்வை விடுத்து எளிமையான வாழ்க்கை வாழ்வதே சிறந்தது. பிறருக்கென உழைக்கும் மனம் வேண்டும். 'திருக்குருவாவூர் வெள்ளடை' என்னும் தலத்திற்குச் செல்லும் வழியிலே அவரது பசியும் தாகமும் தீர்க்க இறைவன் வழிசெய்திருந்தான். சுந்தரர் அதைவியந்து பாடுகிறார்.

"பாடுவார் பசி தீர்ப்பாய் பரவு வார் பிணிகளைவாய்

ஓடுநன் கலனாக உண் பலிக்கு உழல்வானே

காடு நின்னிடமாக் கடுவிருள் நடமாடும்

வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்

நாம் அனுபவித்த உணர்வை இன்னொருவருக்கு எடுத்துக்கூறுவதற்குத் தனிப்பட்ட ஆற்றல் ஒன்று தேவை. இந்த ஆற்றலுக்கு அடிப்படையாக அமைவது நாம் பேசும் மொழியாகும். விலங்கினங்களிலிருந்து எம்மை வேறுபடுத்திக் காட்டுவதும், இம்மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலே. எனவே, மொழியாற்றல் எம்மைப் பிறரோடு தொடர்புறுத்தும் ஒரு சிறந்த ஊடகமாக, மனிதராக எம்மை இனங்காட்டி நிற்கிறது.

மனிதன் தான் கண்டதையும் கேட்டதையும் நன்கு உணர்ந்ததையும் பிறரோடு பகிர்ந்து கொள்ள மொழியைப் பயன் படுத்துகிறான். இம்மொழியிற் சிறப்புடைய மொழியாகத் தமிழ் மொழி விளங்குவதை உலகிற்கு உணர்த்தியவர்கள் நாயன்மார்களாகும். சமயகுரவர்களாகத் தாம்பெற்ற இறையனுபவத்தைத் தமிழ்மொழியிலே பாசுரங்களாகப் பாடி அவர்கள் செய்த பணி இன்றும் நிலைபெற்றுள்ளது. அதற்குச் சான்றாகத் திருமுறைத் தொகுப்புகளும் உள்ளன.

இறைவன் பற்றிய தனது உணர்வினைப் பாடிய சுந்தரர் தமிழ்மொழியை இறைவன் இயல்பை விளக்கப்பயன்படுத்துகிறார். பண்ணோடு பாடும் பாட்டில் இணைந்திருக்கும் தமிழை யொத்தவன் இறைவன் எனக் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு அம்சங்களுடன் ஒப்பிட்டுக் காட்டும் சுந்தரர் முதலில் தமிழ் மொழியை எடுத்துச்சொல்வது அவருடைய தாய்மொழி பற்றிய உணர்வினை நன்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது. பண்ணிடைத் தமிழ், பழத்தினிற் சுவை, கண்ணிடை மணி என மூன்று நிலைகளோடு இறைவனை ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

நாம் அறியாத ஒரு பொருளைப் பற்றி உணர்வதற்கு நாம் அறிந்த உணர்வுகளுடன் சுந்தரர் ஒப்பிட்டுக்காட்டும்போது இன்னொரு விடயமும் தெளிவாக உள்ளது. நாவின் சுவையும், கண்ணாற் பார்க்க உதவும் கருமணியும், நாம் பேசும் மொழியும் எமக்கு இன்றியமையாதன. அதுபோலவே இறைவன் பற்றிய எண்ணமும் எமக்கு இன்றியமையாதது. நாம் விரும்புவதைச் சுவைக்க உதவும் நாவும், விரும்பியதைக்காண உதவும் கருமணியும் எம்மை மகிழ்விப்பதுபோல இறைபற்றிய எண்ணமும் செயலும் எம்மை மகிழ்விக்கும். இந்த மண்ணுலகில் வாழும் மக்கள் மனத்திலே இடர்வராமல் இவ்வெண்ணமே காத்துநிற்கும். எமக்கு எதிர்பாராதுவரும் துன்பமே இடரெனப்படும். அதைத் தாங்கிக் கொள்ளவும், அதனின்றும் மீளவும் இறைவன் துணை செய்வான் என்பதே சுந்தரர் உணர்ந்த நெறியாகும். அதையே எமக்காகப் பாடுகிறார்.

"பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை யடியார்கள்கண் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே"

# வெள்ளி நற்சிந்தனை
## பக்தியின் மொழி தமிழ்

## நலியுங் குற்றமும் நம்முடல் நோய் வினை

மகிழ்வான வாழ்க்கைக்கு இடையூறாக இருப்பன இரண்டு விடயங்கள். ஒன்று நோய். மற்றது நாம் செய்கின்ற குற்றச் செயல். முன்னையது எமது உடலை வருத்தும். மற்றது உள்ளத்தை உறுத்தும். நோய் எம்முடலில் இருப்பதை எல்லோரும் அறியலாம். ஆனால், செய்த குற்றம் பிறரறியாது மறைத்து வைக்கப்படவும் கூடும். எனினும் குற்றம் செய்தவருடைய உள்ளத்தில் உறுத்தல் இருக்கும். 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்ற முதுமொழியும் இதனை உணர்த்துகின்றது.

இத்தகைய இருநோய்களையும் தீர்க்கவல்ல சிறந்த மருத்துவன் இறைவனே என நமது முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர். இறைவனை வைத்தியநாதன் என்றும் மருந்தீஸ்வரர் என்றும் சிறப்பாகப் பெயரிட்டு வழிபாடு செய்தனர். உள்ளம் தூய்மையாக இருந்தாற் செயற்பாட்டிலும் தூய்மையும், ஒழுங்கும் இருக்கும். அதனால் உடலில் நோய் குடிகொள்ளாது. உள்ளத்திலும் குற்றம் செய்யும் உணர்வு ஏற்படாது.

ஆனால், இன்று இத்தகைய உள்ளத் தூய்மை பலரிடம் இல்லை. கற்றவர்களிடமே இல்லை. அறிவுடையோரே தெளிவற்றவராய் அவலப்பட்டு உள்ளத்திலும், உடலிலும் நோயுடன் அவதியுறுகின்றனர். புலனடக்கமின்றிக் குற்றச் செயல்களைப் புரிகின்றனர். அவர்கள் செயற்பாடு கல்லாத பாமரமக்களையும் அவ்வழியே ஏற்றதெனப் பின்பற்ற வைக்கின்றது.

சமயகுரவர்கள் வாழ்ந்த காலத்திலும் இத்தகைய சீரற்ற நிலை சமூகத்திலே மலிந்திருந்தது. எனவே, அச்சமூகத்தை நன்னெறிப்படுத்த அவர்கள் சீர்மியவாதிகளாகச் செயற்பட்டனர். அவர்களுடைய சொந்த வாழ்விலும் உடல் நோயும், உளநோயும் ஏற்பட்டபோது தம்மையும் திருத்திக்கொள்ள முனைந்தபோது பெற்ற பட்டறிவை, மற்றவர்க்கும் பாடல்களில் எடுத்துரைத்தனர். இன்று அவர்களுடைய கருத்து சமூகத்தில் ஊடுருவியுள்ள ஒழுங்கீனத்தைச் செம்மைப்படுத்த உதவும்.

ஒருவர் தன்னளவில் தனது செயற்பாடுகளை ஒழுங்கு படுத்திக்கொள்ள முனையும்போது அது சுயநலப்பணியாகிவிடும். ஆனால் 'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்' என்ற பொது நலப் பணியை மேற்கொண்டிருந்த சமய குரவர் காட்டிய சீர்மியநெறி காலத்தைவென்று நிலைத்திருப்பது. அதனை இன்றுள்ளவர் நன்கு அறியவேண்டும். கூட்டாகச் செய்யும் கோவில் வழிபாடுதான் சமூகத்தைச் சீர்மியம்செய்ய வல்லது என்ற சமயகுரவர்களின் சமயமறிந்த பணியை நாமும் மனங்கொள்வது நன்று.

"நலியுங் குற்றமும் நம்முடல் நோய் வினை
மெலியு மாறது வேண்டுதிரேல் வெய்ய
கலிகடிந்தகையார் கடற் காழியுள்
அலைகொள் செஞ்சடையாரடி போற்றுமே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## செந்நெலங் கழனிப் பழனத்தயலே

குழந்தைப் பருவம் வாழ்க்கையின் முதற்பருவம். அப்பருவத்திலே பார்க்கின்ற எல்லாப் பொருள்களிலும் விருப்பம் ஏற்படும். அதை அடுத்துவரும் இளமைப் பருவம் ஓர் இனிமையான பருவமாகும். அழகாகத் தோன்றவேண்டும் என்ற அவாவுடைய காலம். அதுமட்டுமல்ல; அழகான தோற்றத்தால் பெரிதும் ஈர்க்கப்படும் பருவமுமாகும். கவர்ச்சியும் தோற்றப் பொலிவும்தான் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என எண்ணி வாழும் காலமும் இதுவே. இந்த எண்ணம் மனித வாழ்க்கையைச் சிலவேளைகளில் சிறுமைப்படுத்திவிடும்.

உண்மையான அழகை எல்லோரும் உணரவேண்டும். அதனை எங்கே காண்பது? இயற்கையின் தோற்றத்திலா அல்லது செயற்கையான செயற்பாட்டிலா? இன்று பலர் குழம்பி நிற்கும் விடயம் இது. குறிப்பாக இளமையான தோற்றமே நிரந்தரமான அழகு எனப் பலர் கருதுகின்றனர். முதுமையை மறைக்க முகப்பூச்சுகளை நாடுகின்றனர். பெண்மையும் ஆண்மையும் இச்செயற்பாட்டிற் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இளைஞரான சம்பந்தர் உண்மையான அழகு எங்கே யுள்ளது என்பதைத் தமது பாடல்களிலே நயமாகப் பதிவு செய்துள் ளார். நம்மைச் சூழவுள்ள இயற்கையின் தோற்றத்தில் இருக்கும் அழகை எடுத்துக்காட்டுகிறார். பல திருத்தலங்களை வழிபடச் சென்ற சம்பந்தருக்குத் தலங்களின் அமைவிடம் கவர்ச்சியை ஏற்படுத்துகிறது. பார்வையிற்பட்ட இடமெல்லாம் அழகாய்த் தோன்றுகிறது. தான் கண்டு மகிழ்ந்த இயற்கைக் கோலங்களை மற்றவரும் காணவேண்டும் என விளைகிறார். கற்பனையிலாவது அக்கோல அழகைக் காணப் பாடலாகப் பாடியுள்ளார்.

செந்நெல் விளைந்த செழிப்பான வயலருகே அமைந்த திருக்கோயில்; வளமான புன்னை மரங்கள் பூத்து நிற்கும் கோலம் வெண்ணிறத் திரைச் சீலையில் பவளம் பதித்ததுபோன்ற தோற்றம். பூந்தராய் திருத்தலத்தின் சூழல் சம்பந்தரைப் பரவசப்படுத்துகிறது. கோயிலின் உள்ளே செல்கிறார். இறைவன் தோற்றத்தை உற்று நோக்குகிறார். இமையவர் விரைந்து வந்து தம் முடிதாழ்த்தி வழிபடும் கழல் அணிந்த அழகிய திருவடிகள் கண்ணில் படுகின்றன. இறைவனை முழுமையாகக் கண்களால் பணிகிறார். பின்னிக் கிடக்கும் சிவந்த சடையிலே உள்ள இளம்பிறையும், பாம்பும் அவர் கண்களைக் கவர்கின்றன. இது எப்படி? இறைவனிடமே கேட்கிறார். வானத்தில் துலங்கும் பிறையையும் பற்றையில் வாழும் பாம்பையும் ஏன் வைத்திருக்கிறீர்? சம்பந்தரின் இளவயது இயற்கையை இரசித்தாலும் இங்கே இறைவனும் செயற்கையழகை நாடுபவரோ எனப்பாடுகிறார்.

"செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழ யிற்பவ ளம்புரை பூந்தராய்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே."

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

## பண்ணினேர் மொழி மங்கைமார்

ஆடலும் பாடலும் மக்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் தன்மையன. படிப்பறிவில்லாத பாமரரையும் பாடல்மூலம் அறிவுடையோராக்கலாம். கல்வியறிவு என்பது கல்விக் கூடங்களில் மட்டும் பெறுவது ஒன்றன்று. வீட்டு நிலையிலும், சமூக நிலையிலும் பெறக்கூடியது. வழிபாட்டு நிலையில் ஒரு கல்விப்பயிற்சி நடைபெறுகின்றது. ஆனால், இப்பயிற்சி இப்போது கைவிடப் பட்டுள்ளது.

கலைகள் பற்றிய அறிவையும், கல்விப் பயிற்சியையும் திருக்கோயில்கள் வழங்கிவந்தன. முன்னைய மன்னர்களும் அதற்கு ஆதரவு நல்கினர். சிறப்பாகப் பல்லவர் காலத்திற் கோயில் மக்களுடைய அனைத்துக் குறைகளையும் தீர்க்கும் நிறுவனமாக இயங்கியது. அதற்குச் சமயகுரவர்களும் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். அவர்களுடைய திருக்கோயில்களைப் பற்றிய பதிகங்கள் இதற்குச் சான்றாகவுள்ளன. ஆடலும் பாடலும் அனைவரும் பயில வழிபாட்டு நடைமுறைகள் நன்கு வாய்ப்பளித்தன.

தேவாரப்பதிகங்களில் அமைந்த பத்துப்பாடல்கள் திருகோயிலை வலம்வந்து பாட உதவின. எல்லோரும் இணைந்து பாடவும் வாய்ப்புத் தந்தன. கோவிற் சூழலும்; பண்ணோடு சேர்ந்த பாடலும்; தாளத்துடன் இணைந்த ஆடலும் நலிவுற்ற மக்கள் உள்ளத்திற்கு ஒரு புத்துணர்ச்சி அளித்தன. அழகும் இசையும் கவர்ச்சி தந்தன. பாடல்வழிப்பொருளை ஆடல் அபிநயம் விளக்கியது. இது ஒரு புதிய செயற்பாட்டுக் கற்கை நெறியாக எல்லா மக்களுக்கும் அமைந்தது. கண்ணுக்கும் செவிக்கும் உள்ளத்திற்கும் ஒரு நிறைவைத் தந்தது.

இந்த அற்புதமான உணர்வைப் பெற மக்கள் கோவிலை நாடிச் சென்றனர். மனக்குறைகளை மறந்து மக்கள் ஒன்றாக இறை பற்றிய எண்ணத்தோடு வழிபட்டனர். கோவிற் சூழலில் தமது வதிவிடச் சூழற் குறைகளை மறந்தனர். கேள்வி நிலையிலும், பார்வை நிலையிலும், செயற்பாட்டு நிலையிலும் பல கருத்துக் களை அறிந்தனர். அவர்கள் பெற்ற புதிய அறிவு வாழ்வைச் செம்மைப்படுத்தியது. 'பக்தி' என்னும் புதியதொரு அன்பு நிலையை அறியவைத்தது. சுயநலம் அற்ற பரநலம் பேணும் குணநலனைப் பெற வைத்தது. அடியார்கள் என்ற பெயரோடு 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற வாழ்வியல் இலக்கோடு சமூகம் இயங்கலாயிற்று. இத்தகைய நெறியே எமக்கும் ஏற்றது.

"பண்ணி னேர்மொழி மங்கை மார்பலர்
பாடி யாடிய வோசை நாள்தொறுங்
கண்ணி னேரயலே பொலியுங் கடற்காழிப்
பெண்ணி னேரொரு பங்கு டைப்பெரு
மானை யெம்பெரு மானென் றென்றுன்னும்
அண்ண லாரடியா ரருளாலுங் குறைவிலரே."

## பொய்யா நாவதனாற் புகழ்வார்

மனத்திலே மாசு ஏற்படின் சொல்லிலே களங்கம் ஏற்படும். மனம் தூய்மையாக இருந்தால் எண்ணங்கள் எல்லாம் உயர்வாக இருக்கும். பொய்மை பேசாத நாவிலிருந்து புகழ்ச்சி வரும்போது அது உள்ளத்தை மகிழ்விக்கும். இறைவழிபாடு என்பது போலியான செயற்பாடு அன்று. உண்மையான உணர்வு நிலையில் மனம் ஒன்றிச் செய்யப்படவேண்டிய ஒன்று. எமது முன்னோர்கள் மன மது சுத்தமானால் மந்திரம் செபிக்க வேண்டியதில்லையெனக் கூறி யுள்ளனர்.

சமயகுரவர்களில் இளமை நிலையில் இறைவழிபாட்டைச் செய்த சுந்தரர் இதனை நன்குணர்ந்தவர். பதினெட்டு ஆண்டுகள் மட்டுமே இந்த உலகில் வாழ்ந்தவர். இருமுறை திருணம் செய்தவர். அவருடைய வாழ்க்கை அனுபவம் இறைவனை வழிபடவேண்டிய முறைமையை நன்கு உணர வைத்தது. சுந்தரர் இறைவனோடு தோழமைநிலையிற் பாவனை செய்து பாடல்களைப் பாடிய போதும் மனத்திற் பொய்மையில்லாத குணநலம் வேண்டும் எனக் கூறியுள்ளார்.

பொய்மையைப் பற்றி எண்ணாத தூய மனத்திலே நின்று எரியும் விளக்கு என இறைவனைச் சுந்தரர் எமக்கு விளக்கிக் காட்டுகிறார். இந்த விளக்கம் அவர் பெற்ற அனுபவத்தாற் கிடைத்து. மெய்யாக மனத்திலே ஒரு விளக்குப்போல, இறைவன் பற்றிய எண்ணத்தை நாம் நிலையாக இருத்திக்கொள்ள வேண்டும். அதனால் எமது மனத்திலே தோன்றும் இருளை அகற்ற முடியும். ஆனால், இத்தகைய விளக்கு பொய்மையுள்ள மனத்திலே தோன்றாது. போலிவேடமிட்டு வழிபாடு செய்பவர் மனத்திலே இறைவன் பற்றிய தெளிவான எண்ணம் ஒருபோதும் தோன்றாது. பிறர் காண நெற்றியிலே அலங்காரமாக வெண்ணீறு அணிந்து செல்பவர் மனதிலே பொய்மையும், களவும் குடிகொண்டிருப்பின் அவர்களால் இறைவனை உணரமுடியாது. திருமாலும் பிரமனும் கூட, தமது மனத்துள்ளே இறைவனைக் காணமுடியாது அடிமுடி தேடிச் சென்றதைச் சுந்தரர் பாடலிலே பதிவு செய்துள்ளார்.

'திருக்கழிப்பாலை என்னும் தலத்திலே' உறைகின்ற இறைவன் மையார்ந்த கண்ணியொடு மகிழ்வாய்த் தோற்றும் காட்சி சுந்தரரது மனத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. தேவர்களுக்கு எல்லாம் தலைவனான சிவபிரானை எம் மனத்துள்ளே வைத்து வழிபட வழிகாட்டுகிறார். பொய்மையான வாழ்க்கை வாழ்பவர் நித்தலும் கோயில் சென்று வழிபாடு செய்தாலும், அவர்களுடைய மனம் இருள் படர்ந்தே இருக்கும் என்ற உண்மையைச் சுந்தரர் எடுத்துக்காட்டுவது, இன்றைய காலத்திற்கும் ஏற்றதொரு வழி காட்டுதலாக இருப்பது நோக்குதற்குரியது.

"பொய்யா நாவதனாற் புகழ்வார் கண் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கே யொத்த தேவர் பிரான்
செய்யானு கரிய நிறத்தானுந் தெரிவரியான்
மையார் கண்ணியொரு மகிழ்வான் கழிப்பாலையதே"

வலம்புரி - 13-06-08

# வெள்ளி நற்சிந்தனை
## பக்தியின் மொழி தமிழ்

### அன்புறு சிந்தைய ராகியடியவர்

அன்பு என்பது ஓர் அருமருந்து. உடலுக்கும் உள்ளத்திற்கும் இன்பம் தருவது. ஒருவர்மீது நாம் செலுத்தும் அன்பு உறுதி யானதாக இருக்க வேண்டும். அன்புடையார் செயற்பாட்டில் தன்னலம் இருக்காது. பரநலமே செறிந்திருக்கும். அன்பினால் ஆர்வம் உண்டாகும். அது நட்பு என்னும் சிறப்பைத்தருமென வள்ளுவர் கூறியுள்ளார். சிலர் அன்புள்ளவர்போல நடித்துத் தமக்கு வேண்டிய சலுகைகளைப் பெற்றுக்கொள்வர். தவறான செயற்பாட்டினைச் செய்து அன்புடையார்போல வாழ்வர். இத்தகையவர் அன்பை உண்மையான அன்பு என மயங்கி வாழ்பவர் இன்று உலகிற் பலருளர். இவ்வாறு போலியான அன்பின் வயப்பட்டவர் மயக்கத்தால் பல தவறுகளைச் செய்வர்.

இந்நிலையை மாற்றவேண்டுமெனச் சம்பந்தர் எண்ணிச் செயற்பட்டார். இறைவனை அன்போடு வழிபட்டு அவனுடைய இணையடிகளை வழிபடும் அடியாருடைய நிலையை எமக்குக் காட்டுகிறார். போலி அன்புடையாரால் துன்பத்திற் ஆளாகு பவரை மீட்க ஒரு வழி சொல்லுகிறார். வயதிலே மிகக் குறைந்த சம்பந்தருடைய உள்ளத்தில் அன்பு பற்றிய தெளிவு ஏற்பட அவர் பெற்ற வாழ்க்கை அனுபவங்களே உதவி செய்தன. பாண்டி நாட்டு மன்னனுடைய மதமாற்றம் நாட்டுமக்களையும் மதம் மாறச் செய்தது. சமணசமயத்தை அவன் சார்வதற்குக் காரணம் சமணர் அவன்மீது காட்டிய போலியான அன்புதான். மன்னனுடைய மதமாற்றம் தவறானது என அவனுடைய மனைவி மங்கையர்க்கரசி எடுத்துரைத்தாள். ஆனால், மன்னன் மனைவியின் சொல்லை மதிக்கவில்லை.

மங்கையர்க்கரசியின் துன்பம் இறைவன்மீது கொண்ட உறுதியான அன்பினால் நீங்குகிறது. பாண்டிய மன்னன் வெப்பு நோயால் வேதனைப்படும் வேளையிற் சமணர்களுடைய வைத்தியம் கைகொடுக்கவில்லை. சம்பந்தரின் திருநீறுதான் நோயைத் தீர்க்கின்றது. திருவாலவாய் இறைவனின் அருளால் மன்னன் மீண்டும் சைவசமயத்தைச் சார்கிறான். மங்கையர்க்கரசி யின் அன்பினையும் நன்கு உணர்ந்துகொள்கிறான்.

இறைவனுடைய இணையடிகளை அன்போடு ஏத்தி வழிபாடு செய்கின்றவர்கள், துன்பத்தை அனுபவித்தாலும் அது துன்பம் அன்று. தொண்டு செய்பவரே எனச் சம்பந்தர் கூறியுள்ளார். இறையடியவர்கள் துன்பத்தை அனுபவிக்கும்போது அதனை மற்றவர் தவறாக விளங்கக்கூடும். பிறருடைய நலன்கருதித் தொண்டு செய்பவரே உண்மையான அன்புடையவராவார். மனத்திலே அன்புடைய அடியார்கள், வரும் துன்பத்தை எல்லாம் பொறுத்திருப்பர். இறைவன்மீது அசையாத நம்பிக்கை கொண்டு தம் கடமைகளைச் செய்வர். அத்தகைய அன்பு மனமுடைய தொண்டரையே சம்பந்தர் பாடல் இனங்காட்டுகிறது.

"அன்புறு சந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவி நின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே"

வலம்புரி - 20-06-08

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

## கொண்டல் சேர் கோபுரம் கோலமார் மாளிகை

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என ஒரு முதுமொழி உண்டு. மக்கள் குடியிருக்கும் இடத்திலே ஒரு கோவில் இருக்கவேண்டும். அதுவே ஊர்மக்கள் ஒன்றுகூடும் பொது இடமாகும். குடும்ப நிலையில் ஒன்றாக வாழும் வாழ்க்கைக்கு மேற்பட்டதாகப் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மகிழ்வாய் வாழ்வதற்குக் கோயில் பெரிதும் உதவுகின்றது. கோயிலின் அமைப்பும் சூழலும் மக்களின் மனங்களை ஈர்க்கும் தன்மையுடையவை.

சமய வாழ்க்கை பற்றிய அறிவையும், ஞானத்தையும் நாம் பெறுவதற்குக் கோயில்களே சிறந்த பயிற்சிக் கூடங்களாக விளங்குகின்றன. இளவயதுடைய சம்பந்தர் கோயில்கள் பலவற்றைச் சென்று தரிசித்தவர். கோவிலைச் சுற்றி வழிபாடு செய்கையில் பத்துப்பாடல்களைப் பாடி வழிபட்டவர். அவரது வழிபாடு இறைவன்மீது கொண்ட அன்போடு, ஓர் இயற்கையழகை இரசிக்கும் தன்மையையும் கொண்டிருந்தது. சுற்றுச் சூழலைக் கூர்ந்து கவனித்துச் சொற்சித்திரங்களாகப் பாடல்களை அமைத்துள்ளார்.

உயர்ந்த வானை முட்டுகின்ற கோபுரங்களைக் கண்டு அவர் வியப்படைகின்றார். கோலங்கள் நிறைந்த பெரிய மாளிகை போன்ற கட்டட அமைப்பு அவர் கண்ணைக் கவர்கிறது. சூழவுள்ள கண்டல் மரங்களும், கைதை மரங்களும் நிரையாக வளர்ந்திருக்கும் காட்சி இயற்கையின் ஒழுங்கமைப்பைக் கூறி நிற்கிறது. அவற்றை வேலியாக்கி உள்ளே நிற்கும் வாவியில் தாமரை மலர்கள் அழகாக மலர்ந்திருக்கின்றன. வாவியின் அருகே வண்டுகள் உலாவுகின்ற பூம்பொழில் அணிசெய்து நிற்கிறது. இத்தகைய அழகான சூழலில் திருமயேந்திரபள்ளி என்னும் தலம் அமைந்துள்ளது. அங்கு வீற்றிருக்கின்ற சிவன் விடையில் அமர்ந்திருக்கும் காட்சி அவர் மனதைப் பெரிதும் கவர்ந்தது. அங்குள்ள இறைவனின் திருவடியை எல்லோரும் பணிந்து வணங்கும்படி பாடலில் அழைப்பு விடுத்துள்ளார்.

கோவிற் சூழலின் கவர்ச்சியால் உந்தப்பட்டு மக்கள் அங்கு சென்று வழிபட விரும்புவர் எனச் சம்பந்தர் கருதியதில் தவறில்லை. குறிப்பாக இளம் உள்ளங்கள் அழகான இடங்களைச் சென்று பார்வையிட விரும்புவது இயல்பே, சம்பந்தருடைய இள உள்ளமும் அதனையே விரும்பி நின்றதை அவருடைய பாடல்கள் நன்கு உணர்த்துகின்றன. இறைவனைக் கண்டு வணங்குவதற்கு முன்னர் அவன் உறைகின்ற சூழலின் அழகுக்காட்சியைக்காண மக்களை அழைக்கின்றார். நீர்வளமும், நிலவளமும்கொண்ட பிரதேசத்தில் கோயில் அமைந்தால், அங்கு குடியிருப்பும் நிலை பெற்றிருக்கும்.

"கொண்டல் சேர் கோபுரம் கோலமார் மாளிகை
கண்டலுங் கைதையுங் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியிற்
செண்டுசேர் விடையினான் திருத்தடி பணிமினே"

## கோங்கன்ன குவிமுலையாள் கொழும் பணைத் தோட்கொடியிடை

பக்திநெறி நிற்போரைப் பற்றிப் பலர் பலவாறு பேசுவர். நாள்தோறும் வழிபாடு செய்யும் மனவிருப்புடையோரைக் கண்டு பிறர் கேலி செய்வதும் உண்டு. பக்திநெறி என்பது ஒரு வரையறை யான வாழ்க்கைக்கு வழிகாட்டுவது. மனிதனுக்குப் பெற்றோரும், ஆசிரியரும் சிறந்த வழிகாட்டிகளாவர். அவர்களுடைய சொற் கேட்டு நடப்பதே நல்லது. சிவனுடைய தோற்றத்தைக் கண்டு சம்பந்தர் சிந்திக்கின்றார்.

திருச்சாய்க்காடு என்னும் தலத்திலே உறைகின்ற இறை வனின் புதுமையான தோற்றம் கண்டு அவருடைய உள்ளத்திற் புதிய கருத்து ஒன்று தோன்றியது. அழகிய ஒரு பெண்ணைத் தன்னுடலின் சரிபாதியாகக் கொண்டிருக்கும் இறைவனைக் கூர்மையாக நோக்குகிறார். கோங்கு போன்ற குவிந்த முலைகளை யுடையவள். வளமான மூங்கில் போன்ற தோளுடையவள். கொடியிடை கொண்டவள். இத்தகைய பெண்ணொருத்தியைப் பாகமாகக் கொண்டவன் மனத்திலே மகிழ்ச்சிக்குக் குறைவே யில்லை. மேலும் பரவிய சடையிலே இளமதியைத் தாங்கி நிற்கிறான். இந்தக் கோலஅழகு எங்குமே காணமுடியாத ஒரு புதுமையான அழகு. எனவே, அதைப் பாடலிற் பதிவு செய்துள் ளார்.

குடும்ப நிலையில் ஆணும் பெண்ணும் ஒன்றாய் இணைந்துவாழும் முறைமை நீண்டகாலமாகத் தொடர்கிறது. இளவல் சம்பந்தர் உள்ளத்தில் இறைவனின் இணைந்த தோற்றம் ஒரு செய்தியைச் சொல்வதாகத் தோன்றுகிறது. 'பாங்கெனவைத்து உகந்தான்" என இறைவனின் உள்ளத்தை அறிந்தவர்போலச் சம்பந்தர் பாடியுள்ளது நோக்குதற்குரியது. தன்னோடு வாழ்வில் இணைந்த பெண்ணை ஆண் எவ்வாறு பேணி வாழவேண்டும் என்பதையே இறைவன் தோற்றம் உணர்த்துவதாகச் சம்பந்தர் விளக்குகின்றார். உகத்தல் என்னும் சொல் மிக அருமையான ஒரு பொருளைத்தருவது. ஒன்றை உள்ளத்திலே திரும்பத்திரும்ப நினைத்து வாழ்வதே மகிழ்வைத்தரும். அதனால் உள்ளத்திலே மகிழ்ச்சி பரவும். சம்பந்தரின் பார்வையில் இறைவன் அத்தகைய தொரு மகிழ்வுடனிருப்பதாகவே தோன்றுகிறது. மகிழ்வாக இருப்பவருடைய மகிழ்ச்சிக்குரிய காரணத்தை அறிந்துகொண் டால் நாமும் அவரைப் பின்பற்றி மகிழ்வாக இருக்கலாம். எனவே கோவிற் சூழலிலே குடியிருப்பவர் குடும்பமாக வாழ்பவர் என்றும் மகிழ்வுடன் இருப்பவர் அவர்களை வாழ்க்கையில் உயர்ச்சி பெற்றவரென உலகத்தவரே பாராட்டுவர். தமிழர் பண்பாட்டில் ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் அன்பு நெறியில், ஆணுக்கே பெண்ணைப் பேணிவாழும் மனம்வேண்டும் என்கிறார்.

"கோங்கன்ன குவிமுலையாள் கொழும்பணைத்தோட் கொடியிடையைப்

பாங்கென்ன வைத்து கந்தான் படர்சடைமேற் பான்மதியந்

தாங்கினான் பூம்புகார்ச் சாய்க்காட்டான் தாள்நிழற்கீழ்

ஒங்கினாரோங்கினா ரெனஉரைக்கும் உலகமே"

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

## தோடுலா மலர்கள் தூவித் தொழுது எழும் மார்க்கண்டேயன்

வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், மனிதரைப் புடம் போடும் கருவிகள் எனலாம். அடியார்களில் மிக்க துன்பத்தை இளமையிலேயே அனுபவித்தவர் திருநாவுக்கரசர். பெற்றோரின் மறைவும் தமக்கையின் மண வாழ்வின் சிதைவும் அவரை வாழ்க்கையே துன்பமானது என வெறுத்து, சைவசமயத்தைக் கைவிட்டுச் சமண சமயத்தைத் தழுவச் செய்தன. ஆனால் அச்சமய வாழ்வியலும் அவருக்கு உலக வாழ்க்கையின் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தவில்லை. உடல் நோயைக்கூடத் தீர்க்க உதவ வில்லை. இந்நிலையில் மீண்டும் சைவவாழ்வியலுக்குத் திரும்பி வந்து சிவனை வழிபடும் வழிபாட்டு நடைமுறையை மேற்கொள் கிறார்.

விட்டுப்போன வழிபாட்டு நடைமுறைகளை மீண்டும் முழுமனதோடு மேற்கொள்ளும் நாவுக்கரசர்; இறைவன் அருட் செயல்களைப் பற்றி ஆழமாக நினைத்துப் பார்க்கிறார். கோவில் கள் தோறும் சென்று வழிபடும்போது, அங்கு நடந்த அருட் செயல்களை எண்ணிப் பார்க்கிறார். வயதின் மூப்பும், உடல் தளர்ச்சியும் அவருக்கு வாழ்க்கையில் ஒரு சோர்வு நிலையை ஏற்படுத்த முனைகின்றன. மரணபயம் பற்றிய எண்ணம் எல்லோருக்கும் உண்டு. அதை வெல்வதற்கு உரிய வழியைத் திருநாவுக்கரசர் தனது பாடல்களிலே கூறிச்சென்றுள்ளார்.

திருச்சாய்க்காடு என்ற திருத்தலத்திற்கு அவர் சென்றபோது இந்த நினைவு அவர் நெஞ்சில் அலைமோதுகிறது. அத்தலம் மார்க்கண்டேயனைக் காத்த தலம். வாழ்நாளின் முடிவில் வந்து காலன் அவரைக் கூட்டிச்செல்ல வந்தபோது; சிவலிங்கத்தைத் தழுவிநின்ற மார்க்கண்டேயனைக் காலன் அணுகாமல், காலனைக் காலினால் உதைத்த சிவனின் கருணையை திருநாவுக்கரசர் பாடலிற் குறிப்பிட்டுள்ளார். மார்க்கண்டேயன் செய்த மலர் வழிபாட்டைச் சுட்டிக்காட்டுகிறார். இதழ்கள் பொருந்திய மலர்களை எடுத்து இறைவன் பெயரைச் சொல்லி அவற்றைத் தூவி மார்க்கண்டேயன் நாள்தோறும் வழிபாடு செய்து வந்தான். ஆனால், காலன் அந்த வழிபாட்டைக் கருத்திற் கொள்ளவில்லை. கணக்கை முடிக்கும் தன் கடமையையே எண்ணி வந்தான் காலனின் பாசக்கயிறு தன்னை, பிணைக்கவே மார்க்கண்டேயன் அஞ்சி இறைவன் பாதமே அடைக்கலமென இறுகப் பற்றிக்கொண்டான்.

தாள்களை நம்பிக்கையோடு பற்றிய அடியவனை இறைவன் காப்பாற்றக் காலனையே தன் காலினால் உதைத்தான். மார்க்கண்டேயன் மரண பயம் தீர்ந்தது, வழிபாட்டு வாழ்வியல் தொடர்ந்தது. காலனை மாளச் செய்து அடியவனைக் காப்பாற்றும் இறையுள்ளத்தை எல்லோரும் அறியவேண்டுமென நாவுக்கரசர் மனங்கனிந்து பாடியபோது, அவரது மரண பயமும் அகன்றுவிட்டது.

"தோடுலா மலர்கள் தூவித் தொழுது எழும் மார்க்ண்டேயன்
வீடுநாள் அணுகிற்றென்று மெய் கொள்வான் வந்த காலன்
பாடுதான் செலலும் அஞ்சிப் பாதமே சரண மென்னச்
சாடினார் காலன்மாளச் சாய்க்காடு மேவினாரே"

## கட்டலர்த்த மலர்தூவிக் கைதொழுமின்

கோவில் வழிபாட்டில் மலர்கள் இன்றியமையாதவை. இறைவனுக்கு உகந்த மலர்களை எடுத்துச்செல்லும் வழக்கம் பண்டையக் காலத்திலிருந்தே காணப்படுகிறது. குன்றிலே வாழும் குறவனுடைய செல்வ மகள் வேங்கை மலர்களை எடுத்துச்சென்று மலையிலே உறைகின்ற கடவுளை வழிபட்டதாகச் சங்க இலக்கியத் தொகுப்பு நூல்களுள் ஒன்றான ஐங்குறுநூறு பதிவு செய்துள்ளது. ஆனால் திருநாவுக்கரசர் தாம் வாழ்ந்த காலத்திற் கோயிற் சூழலே மலர்த்தோட்டங்களால் பொலிவு பெற்றிருந்தமையைக் குறிப்பிடு கிறார். இறைவனுடைய பாதங்களில் அன்றலர்ந்த மலர்களைத் தூவி, தொழுது வணங்குவதால் பயன் உண்டு எனக் கூறுகிறார்.

நாவுக்கரசர் உழவாரப்படையாளி என்று சிறப்பிக்கப் பட்டவர். கோவிற் சூழலை அழகுபடுத்துவதற்காக உழவாரம் கொண்டு தேவையற்ற புல், பூண்டுகளை அழித்தவர். அந்த இடங்களில் இறைவனைத் தொழுவதற்குச் செல்கையில் எடுத்துச் செல்ல மலர்ச்செடிகளை அமைக்கலாம் என்பது அவருடைய நோக்கமாகும். வழிபாடு செய்வதற்கும், இறைவனுக்குச் சூட்டுவ தற்கும் கோவிற்சூழலிற் பூந்தோட்டங்கள் அமைக்கப்பட்டன.

மலர்களை எடுத்துச் செல்லும்போது பொன்னியன்ற தட்டத்திலே எடுத்துச்செல்ல வேண்டும். செருந்திகோங்கு பெரிய மடல்களையுடைய தாழை என்பன நிறைந்த பொழில் பெருந்திய கோயில் திருச்சாய்க்காடு. பரந்த இடத்திலே பல்வேறு மலர்களும் கொண்ட செடி, கொடி, மரம் என்பன நிறைந்திருப்பதால் அவ்விடம் பொழில் என அழைக்கப்பட்டது. தாழை மரம் நிற்குமிடத்திலே எப்போதும் நறுமணம் வீசிக்கொண்டிருக்கும். எல்லா மலர்களையும்விடத் தாழை மலருக்கு நறுமணம் அதிகம்.

ஆனால், அம்மலர் கோவிலினுள் எடுத்துச் செல்லப்படுவ தில்லை. அதனால், நறுமணமுடையதாகத் திகழச் செய்யும் மலர் என நாவுக்கரசர் குறுப்பிட்டுள்ளார். தாழை முருக்குயிர்க்குங் காவிரிப் பூம்பட்டினம் என; திருச்சாய்க்காடு தலம் அமைந்த பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இறைவழிபாட்டுக்குரிய மலர் உடனலர்ந்த மலராக இருக்கவேண்டும் மலரின் நறுமணமும், குளிர்ந்த இயல்பும், அதனைத் தூவி வழிபாடு செய்யும்போது ஏற்படும் பரவச உணர்வும் திருநாவுக்கரசர் பெற்ற அனுபவமாகும். அதனைப் பிறரும் உணரவேண்டுமென விரும்புகிறார். மலர் தூவிக் கைகூப்பித் தொழுது வணங்குதல் என வழிபாட்டின் முறைமையையும் விளக்கிக் காட்டுகிறார். மலர்ப்பண்பாடு ஒன்று வழிபாட்டுடன் இணைந்து இன்றுவரை தொடர்கிறது. அப்பரின் உள்ளத்திலே இறைவன் உறைகின்ற கோயிற்சூழல் அழகாகவும், மனம் கவரும் வகையிலும் இருக்கவேண்டுமென்ற பெருவிருப்பம் இருந்ததைப் பாடல் காட்டுகிறது.

"கட்டலர்த்த மலர்தூவிக் கைதொழுமின் பொன்னியன்ற
தட்டலர்த்த பூஞ்செருந்தி கோங்கமருந் தாழ்பொழில்வாய்
மொட்டலத்த தடந்தாழை முருகுயிர்க்குங் காவிரிப்பூம்
பட்டினத்துச் சாய்க்காட்டெம் பரமேட்டி பாதமே"

## மண்ணோடு நீர் அனல் காலோடு ஆகாயம் மதிஇரவி

இறைவன் எங்கும் நிறைந்திருப்பவன் என்ற கோட்பாடு எம்முடைய வழிபாட்டு மரபின் அடிநாதமாக உள்ளது. இக் கருத்தை மெய்யடியார்கள் தமது பாடல்களிலே குறிப்பிட்டுள் ளனர். இயற்கையிலே இறை ஆற்றலைக் கண்ட அவர்கள் அதனைப் பாடல்களிலே பதிவு செய்துள்ளனர். ஐம்பூதங்களான மண், நீர், அனல், காற்று, விண் என்பவற்றோடு சூரியன், சந்திரன் என்பவற்றையும் வழிபடும் மரபு எமது மூதாதையினரிடையே இருந்துள்ளது.

இவற்றோடு இகம், பரம், எண்திசை, பெண்ணோடு ஆண், பெருமை, சிறுமை என எல்லாவற்றோடும் இறைவனைத் தொடர்புறுத்திப் பல வழிபாட்டு நடைமுறைகளும் உள்ளன. பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை ஓர் உருவிலே கண்டு வழிபடக் கோவில்கள் அமைக்கப்பட்டன. இயற்கையின் பேராற்றல்களையெல்லாம் நெறிப்படுத்தி ஆளும் இறைவனுக்கு உருவம் தந்தபோது ஐம்பொறிகளும், ஐம்புலன் களும் வழிபாட்டில் இணைந்துகொண்டன. இறைவனைக் கண்ணாரக் கண்டுகளிக்கக் கண்களும், வாயார வாழ்த்தவாயும், தாழ்ந்து வணங்கத்தலையும், பணிசெய்ய உடலும், முரல்வதற்கு மூக்கும், நினைப்பதற்கு நெஞ்சும், கேட்பதற்குச் செவிகளும் இருப்பதாக நாவுக்கரசர் தனது பாடல்களில் விளக்கிக் கூறியுள்ளார்.

இறைவன் இருப்பிடமான கோயிலில் ஐம்பொறிகளாலும், ஐம்புலன்களாலும் வழிபாடு செய்யலாம். விண்ணிலே இருக்கும் இறைவன் அடியார்க்கு அருள்செய்யவென மண்ணுக்கு வந்து விரும்பி உறையும் கோயில்கள் பல உள. அவற்றுள் ஒன்றான திருவெண்காடு பிள்ளைப்பேறு வேண்டி வழிபடுதற்கு உகந்த தலம் எனப்படுகிறது. இத்தலத்தின் சிறப்பை ஞானசம்பந்தர் பத்துப் பாடல்களிலே பாடியுள்ளார். கோவில் வழிபாட்டு நடைமுறை யில் ஒரு முக்கியமான செயற்பாட்டினை அப்பதிகத்திலே குறிப் பிட்டுள்ளார்.

திருவெண்காட்டிலே அமைந்துள்ள முக்குளத்திலே மூழ்கிநீராடுபவர் பிள்ளைப் பேற்றைப் பெறுவார் என்ற செய்தியையும் கூறியுள்ளார். கோவில் வழிபாட்டிற்குச் செல்வோர் அகமும் புறமும் தூய்மையாகச் செல்லவேண்டும். புறத்தூய்மை நீராடலால் நிறைவாகும். அகத்தூய்மை இறைவன்பற்றிய நினைப்பால் நிறைவேறும். ஆனால், இத்தலத்திலே முக்குள நீரில் நீராடுபவர்க்கு இன்னொரு பயனும் உண்டு. ஒரு விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் தொடர்ந்த முயற்சி தேவை. இறைவழிபாட்டின் பண்பும், பயனும் இத்தகையதே. திருஞான சம்பந்தர் இள வயதிலே இறைசிந்தையாற் பல அற்புதங்களை நிகழ்த்தியவர். அவரது பாடல் உலக வாழ்க்கையில் வழிபாட்டின் பயனை விளக்கி நிற்கிறது.

"மண்ணோடுநீர் அனல்காலோடு ஆகாயம் மதிஇரவி
எண்ணில்வரு மியமான இகபரமும் எண்திசையும்
பெண்ணினொ டுஆண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடுஇடமா விரும்பினனே"

## உண்டாய் நஞ்சை உமையோர் பங்கா

இறைவன்மீது ஈடுபாடுகொண்ட மெய்யடியார்கள் அவனைப்பற்றிப் பேசுவதிலும், பாடுவதிலும் பொழுதைக் கழிப்பவர்கள். இறைவனின் அருட்செயல்களை எண்ணி வியப்பவர்கள். இளம் அடியவரான ஞானசம்பந்தர் இத்தகைய நிலையில் நின்று பாடிய பாடல்கள் இதற்குச் சான்றாக உள்ளன. அடியவர் துயர் தீர்க்க இறைவன் செய்த அற்புதங்களில் ஒன்று அவருக்குப் பெரிதும் வியப்பைத் தருகிறது. பலருடைய உயிரைக் காப்பாற்றுவதற்குத் தனது உயிரைச் துச்சமென நினைத்துச் செயற்படும் இறைவனுடைய செயற்பாடு மனித நிலையில் செய்வதற்கு அரியது.

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது வெளிவந்த நஞ்சைக் கண்டு எல்லோரும் அஞ்சி நின்றபோது இறைவன் அதனை எடுத்து உண்டான். தனது அடியார் இடுக்கண் களைந்தான். நஞ்சு அவன் கண்டத்திலே நின்றுவிடக் "கறைக்கண்டன்" என்ற பெயரைப் பெற்றான். பவளம் போன்ற அவன் திருமேனியில் அது ஒரு கறையாகவே விளங்குகிறது. இறைவனுடைய இத்தகைய செயலை எண்ணி அடியவர்கள் நெக்குருகி நிற்பர்.

திருவெண்காடு தலத்திற்குச் சம்பந்தர் சென்றபோது இறைவன் தோற்றத்தை நினைத்துத் தொண்டு செய்யும் அடியவர்களைக் காண்கிறார். உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டிருக்கும் அற்புதமான தோற்றம் அவர் மனத்தைக் கவர்கிறது. சிவன் நஞ்சை எடுத்து உண்டபோது அவனுடைய கண்டத்தை உமையம்மை பற்றியதால் நஞ்சு கீழிறங்காமல் கண்டத்திலேயே தங்கிவிட்டது. அத்தகைய அன்புடையவளைத் தன் உடலிலே ஒரு பாகமாக இறைவன் கொண்டிருப்பது சம்பந்தர் உள்ளத்தைத் தொட்டது. அடியவர்கள் இறைவனுடைய இச்செயலை நினைந்து தொண்டராய்த்திரியும் காட்சியைப் பாடவேண்டும் என்று எண்ணினார்.

தமது நலனையே தனது கருத்தாகக் கொண்டிருக்கும் இறைவன் தங்களை எதுவித துயரங்களும் அண்டா வண்ணம் காப்பான் என்ற நம்பிக்கையோடு வழிபாடு செய்யும் அடியார் செயற்பாட்டைத் தமது பாடலிலே குறிப்பிட்டுள்ளார். மேலும் அடியார் கூட்டம் அக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்வதற்குக் கோயிற் சூழலும் ஒரு காரணமாகும். கோயிற் சூழலில் அமைந்த குளத்தில் மலர்ந்த வெண்தாமரை மலரின்மேற் கருவண்டுகள் யாழ் வாசிப்பதுபோல இன்னொலி எழுப்பிக்கொண்டிருக்கும் காட்சியையும் பாடலில் இணைத்துள்ளார்.

இளவயது காரணமாக இயற்கையழகிலே உள்ளத்தைப் பறிகொடுக்கும் இயல்புடையவர் சம்பந்தர். அதனால் அழகான குளத்தையும் உற்றுநோக்குகிறார். கருவண்டுகளின் ஒலி யாழொலி போலக் கேட்கிறது. வெண்தாமரை மலர்மீது வீற்றிருக்கும் கரு வண்டுகள் யாழ் வாசிக்கும் இன்னிசைக் கலைஞர்போலத் தோற்றம் தந்தன. இறைவனை வண்டுகளும் வணங்கிப்பாடுவதாகச் சம்பந்தரும் எண்ணிப்பாடுகிறார்.

"உண்டாய் நஞ்சை உமையோர் பங்காவென்று உள்கித்
தொண்டாய்த் திரியும் அடியார் தங்கள் துயரங்கள்
அண்டா வண்ணம் அறுப்பான் எந்தை ஊர் போலும்
வெண்டா மரைமேல் கருவண்டு யாழ்செய் வெண்காடே"

வலம்புரி - 01-08-08

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## நாதன் நம்மை ஆள்வான்

வாழ்க்கையில் வழிபாடு ஒரு ஒழுங்கான செயற்பாடாகும். நாள்தோறும் நாம் செய்கின்ற கடமைகளூடு இறைவன்பற்றிய எண்ணமும் எமக்கு ஏற்பட்டால் அதுவே வழிபாடாகிவிடும். எனினும் கோயிலுக்குச் சென்று இறை உருவைக் கண்டு வழிபடும் போது முழுமையாக வழிபாட்டை நிறைவேற்றிய ஒரு மனநிறைவைப் பெறமுடியும் என்பதே பலருடைய கருத்தாகும். அதனால் கோவிலுக்கு நாள்தோறும் சென்று வழிபாடு செய்வது நல்லது என்ற நிலையும் உருவாகிற்று.

பக்திநெறி ஒன்றைப் பரப்பிய நாயன்மார்கள் கோவில் வழிபாட்டையே சிறப்பித்துப் பாடியுள்ளனர். இன்று எமக்குக் கிடைத்துள்ள தேவாரப்பதிகங்கள் இதற்குச் சான்றாக உள்ளன. சில கோவில்களின் பெயர்கள் தொடக்கத்தில் இயற்கை நிலையில் வழிபாடு நடந்த இடங்களென்பதையும் விளக்கி நிற்கின்றன. எடுத்துக்காட்டாக: இடும்பவனம், இடையாறு, ஈங்கோய்மலை, ஐயாறு, கடவூர் மயானம், குரங்காடுதுறை, கொள்ளிக்காடு, பழனம், நெல்லிக்கா போன்றவற்றைக் கூறலாம்.

கோவில் அமைப்பு வந்த பின்னர் அடியார் வழிபாட்டு முறைகள் வளர்ச்சியடைந்துள்ளன. குறிப்பாக வேதவழிபாட்டு நடைமுறைகள் இணைந்தன. வேதத்தின் ஒலியும், தேவாரத்தின் ஒலியும் பக்தியுணர்வை மக்களிடையே ஊட்டின. இறைவன் நாமத்தையும், அருட் குணங்களையும், அருட்செயல்களையும் யாவரும் விளங்கிக்கொள்ளும் வகையில் நாயன்மார்கள் பல பதிகங்களைப் பாடினர். அவற்றைக் கோவில் வழிபாட்டில் மக்களும் பாடிப்பரவினர். தம்குறை தீர இறைவனுக்குப் பாமாலை சாற்றிப் பணிந்து வணங்கினர்.

சம்பந்தர் பாடல்களில் இயற்கையழகைப் பாடும் பண்புமிக்கிருந்தது. இளம் உள்ளங்களை ஈர்க்கும் கோவிற் சூழலைப் பாடல்களில் சொற்சித்திரங்களாக அவர் காட்டிய போது, பக்தியுணர்வு இளம் உள்ளங்களிலும் தொற்றிக்கொண்டது. இறைவழிபாடு உள்ளத்துக்கு மகிழ்வுதரும் என்ற உணர்வை ஊட்டியது. கோயிற்சூழலில் உள்ள சோலைகள், குளங்கள், பறவைகள், விலங்குகள் என அனைத்தையுமே வழிபாட்டோடு தொடர்புபடுத்தி அவர் பாடலகளிலே விளக்கியுள்ளமை சிறப்பானது.

கோயிலின் அருகிலே உள்ள சோலையிலே வாழும் கிளி அங்கிருந்து வருகின்ற வேதத்தின் ஒலியை நாள்தோறும் கேட்பதால் சொற்பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. ஒருவரது பேச்சைக் கேட்டால் அதைத் திருப்பிச் சொல்லும் பயிற்சி கிளிக்கு உண்டு. அதனால் வேதஒலியையும் கேட்டு; தன் பயிற்சியைக் கிளி செய்வதாகச் சம்பந்தர் பாடும்பாடல், படிப்பவர் மனத்தில் அத்தலத்திற்குச் சென்று கிளிவேதத்தைச் சொல்வதைக் கேட்கும் விருப்பை ஏற்படுத்துகிறது.

"நாதன் நம்மை ஆள்வான் என்று நவின்று ஏத்தி
பாதம் பன்னாள் பணியும் அடியார் தங்கண்மேல்
ஏதம் தீர இருந்தான் வாழு மூர்போலும்
வேதத் தொலியாற் கிளி சொற் பயிலும் வெண்காடே"

## ஆலைசேர் தண்கழனி

இறைவனை வழிபடுவதற்கு உரிய நேரம் எது என்று எண்ணுபவரும் எம்மிடையே உளர். 'செய்யும் தொழிலே தெய்வம்' எனப் பாரதியார் பாடியிருப்பதால் வழிபாடு தேவையில்லை என்றும் சிலர் கருதுகின்றனர். ஆனால் அவசரமான வாழ்வியல் நடக்கும்போது அனைவரும் அவதிப்படும் வேளையில் மன அமைதி தரவல்லது வழிபாடு ஒன்றுதான். நமக்கு முன்னே வாழ்ந்த நாயன்மார்கள் இதனைத் தமது வாழ்வியலால் நன்கு உணர்ந்த வர்கள். தாம்பெற்ற வழிபாடு பற்றிய பட்டறிவை எமக்குப் பயன்படும் வகையிற் பாடல்களாகப் பாடி வைத்துள்ளனர்.

நாயன்மார்கள் வாழ்ந்த காலத்தில் அடிப்படையான வழிபாட்டுப் பயிற்சி வீட்டிலேயே நடந்துள்ளது. குறிப்பாகப் பெண்கள் வழிபாட்டு நடைமுறைகளைப் பேணிவந்துள்ளனர். பண்பாட்டில் ஓரங்கமான வழிபாடுபற்றிய தெளிவான சிந்தனை ஒன்று அவர்களிடமிருந்தது. திலகவதியாரும் பாண்டிமாதேவியா ரும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆவர். கோயில் வழிபாட்டால் தமது துன்பங்களையும், துயரங்களையும் வென்றவர்கள்.

இத்தகைய பெண்களின் கோவில் வழிபாடுபற்றிச் சம்பந்தர் தமது பாடலிற் பதிவு செய்துள்ளார். கரும்பு வயல்களாற் சூழப்பட்ட கோயிற் சூழலிற் குளிர்மையான நீர் நிறைந்த வயல்கள் இருக்கின்றன. இது அப்பிரதேசத்து இயற்கையை அழகாக்கி யுள்ளது. அருகேயுள்ள சோலைகளில் மலர்களிலுள்ள இனிய தேனையுண்டு களித்த வண்டினங்கள் இனிமையாக ஒலி எழுப்பிக் கொண்டிருக்கும். இனிய காலைவேளையில் தூய்மையான சிந்தனையும், தூய்மையான பேச்சும் கொண்ட பெண்கள் கோவிலுக்கு வந்து வழிபாடு செய்கிறார்கள். அவர்கள் வழிபடுகின்ற கோலம் குறிப்பிடத்தக்கது. "இறைஞ்சிக்கை தொழ" எனச் சம்பந்தர் அந்நிலையைக் குறிப்பிடுகின்றார். "இறைஞ்சுதல்" என்பது தன்னை மற்றவர்களுக்காகத் தாழ்த்திநிற்கும் நிலை. வழிபாடு செய்கின்ற பெண்கள் தாய்மையுள்ளம் கொண்டவர்கள். அதனால், காலையிலே கோவிலுக்குச் சென்று தம்மைச் சார்ந்தவரின் நன்மைக்காக வழிபாடு செய்கிறார்கள்.

பெண்கள் வழிபாடு செய்யும் காட்சியை வேணுபுரத்திலே காண்கின்றபோது திருமுலைப்பால் தந்த இறைவியும், இறைவ னோடு இருப்பது மனதைக் கவர்கிறது. வழிபாடு செய்பவர் இருவரையும் இறைஞ்சிநிற்கும் நிலை ஒரு பண்பாட்டின் வெளிப் பாடாக உள்ளதைச் சம்பந்தர் கண்டு வியக்கிறார். அக்காட்சியைச் சொல்லோவியமாக்கி எம்மையும் காணச் செய்கின்றார்.

"ஆலைசேர் தண்கழனி அழகாக நறவுண்டு
சோலைசேர் வண்டினங்கள் இசைபாடத் தூமொழியார்
காலையே புகுந்திறைஞ்சிக் கைதொழமெய் மாதினொடும்
பாலை யாழ் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே"

## மங்கை ஓர் கூறு உகந்த மழுவாளன்

இறைவனுடைய திருவுருவைக் கண்டு வணங்கும்போது எமது கண்களால் அவன் கோலத்தைக் கூர்மையாகப் பார்க்கச் சம்பந்தர் வழிகாட்டுகிறார். குழந்தைப் பருவத்திற் காணுகின்ற வற்றையெல்லாம் குறிப்பாகப் பார்க்கும் பழக்கமும் உண்டு. வயதில் இளையவரான சம்பந்தர் திருப்புகலியிலே வீற்றிருக்கும் இறைவனை நன்கு உற்றுப் பார்க்கிறார். அவர் கண்ட கோலம் இதுவரை காணாத கோலமாய்த் தெரிகிறது. மீண்டும் பார்க்கிறார். ஒவ்வொரு நாளும் சென்று பார்க்கிறார். தன் கண்களுக்குத் தென்பட்டதை எடுத்துரைக்கின்றார்.

மங்கைப்பருவத்துப் பெண்ணை உடம்பிலிலே ஒரு கூறாகக் கொண்டிருக்கிறான். அதை மிக உவப்போடு கொண்டி ருக்கிறான். கையிலே மழுவை வைத்திருக்கிறான். நீண்ட சடையிலே திங்களை ஒருபுறம் சூடியிருக்கிறான். மறுபுறத்திலே கங்கை நதியை யாருங்காணாதபடி மறைத்து வைத்திருக்கிறான். அவனுடைய கண்டத்திலே கறை காணப்படுகிறது. இக்கோவிலில் இத்தகைய இறைவன் நம்மை எண்ணி வந்திருப்பது போற்றுதற் குரியது.

கோயிலின் சூழல் வயலாற் சூழப்பட்டது. சிவந்த கயல் மீன்கள் நிறைந்த குளிர்மையான பிரதேசம். இக்கோவிலுக்கு வந்து வழிபாடு செய்யும் அடியவர்களுக்கு 'அவலம்' என்ற துன்பம் அறியாதது ஒன்றாகும். இங்கு கோவில் வழிபாடு பற்றிய கருத்தொன்றைச் சம்பந்தர் கூறியுள்ளார். அர்த்தநாரி வடிவத்தில் அமர்ந்திருக்கும் சிவனைக் கோவிலிற் சென்று வழிபடுவதே நல்லது. இறைவன் விரும்பி உறையும் தலம் சிறப்புடையது. அப்பன் பாதி, அம்மை பாதியாக அமைந்த தோற்றம் சிறாருக்கு நல்ல வழிகாட்டியாகவும் அமைந்திருந்ததை உணர்த்துகிறார். கேட்பதைக் கொடுக்கும் இறைவன் தாயாகவும், தந்தையாகவும் இருப்பான். அதனால் அந்த இறைவனிடம் நாள்தோறும் சென்று வழிபாடு செய்யவேண்டும். அழகிய கைகளிலே தாமரை மொட்டுக்களைச் சமர்ப்பிப்பது போலக் கரங்களைக் குவித்து, தலைமேல் வைத்து வணங்க வேண்டும். அவ்வாறு அங்கையினால் வழிபடுபவர்களுக்கு அவலம் ஏற்படாது. எம்மை வருத்துகின்ற துன்பங்களில் மிகப்பெரிய துன்பம் அவலமாகும். இத்தகைய துன்பத்தை நாமடையும்போது எமக்கு யாரும் துணையாக மாட்டார்கள். மனித நிலையால் இத்துன்பத்தை நீக்கமுடியாது.

சிலப்பதிகாரத்தில் கோவலன் கள்வனெனக் குற்றம் சாட்டப்பெற்றுக் கொலையுண்ட செய்தி கேட்டபோது; கண்ணகி அவலம்கொண்டு அழுவதாக இளங்கோவடிகள் கூறுகிறார். அவளுடைய துன்ப நிலையை யாராலும் மாற்றமுடியாத நிலை. இத்தகைய துன்பத்தை மாற்றவல்லவன் இறைவனே என்கிறார் சம்பந்தர்.

"மங்கை ஓர் கூறு உகந்த மழுவாளன் வார் சடைமேல் திங்கள்
கங்கைதனைக் கரந்த கறைக் கண்டன் கருதுமிடஞ்
செங்கயல் வார் கழனி திகழும் புகலிதனைச் சென்றுதம்
அங்கையினால் தொழுவார் அவலம் அறியாரே"

## கடிகொள் கூவிள மத்தம் வைத்தவன்

மனிதர்களோடு இறைவன் தொடர்பாடல் செய்பவன் எனச் சம்பந்தர் கூறியுள்ளார். அப்பரும் இக்கருத்தைச் சொல்லியுள்ளார். சம்பந்தர்: இறைவன் எல்லோரிடமும் பேசுகின்ற பான்மையன் எனக் குறிப்பிட்டுள்ளார். தெய்வம் நம்முடன் வாய் திறந்து பேசுமா? இக்கேள்வி எல்லார் உள்ளத்திலும் தோன்றுவதுண்டு. மனிதரோடு மனிதர் பேசும்போது வாய்விட்டுப் பேசாமற் குறிப்பினால் பேசுகின்ற நிலையும் உண்டு. முகக் குறிப்பும், கண்களின் பார்வையும், பேசும் கருவிகளாக நாம் தொடர்பாடல் செய்வதுண்டு.

இத்தகைய பேச்சுத் தொடர்பு நெருக்கமான தொடர்புடையவர்களாற் பயன்படுத்தப்படுகிறது. மற்றவர்களறியாமல் இருவர் மட்டும் தமது கருத்துப் பரிமாற்றத்திற்கு இப்பேச்சைப் பயன்படுத்துவர். இது சுயநலத்தின் பாற்பட்டது. இறைவன் எல்லா உயிர்களிடமும் அன்பு கொண்டவன். உலகத்தவர் எல்லோரிடமும் இத்தகைய தொடர்பாடலைச் செய்பவன். அவனுடைய தோற்றத்தை நன்கு உற்று நோக்கினால் அவனுடைய பேசம் பான்மையை உணரலாம் எனக் குழந்தைக்கவியான சம்பந்தர் பாடியுள்ளார். இது அவருடைய சொந்த அனுபவம்.

பூம்புகலி என்ற தலத்திற்குச் சென்றபோது அவருக்கு இத்தகைய அனுபவம் ஏற்பட்டது. வழிபடச் சென்றவர் இறைவன் திருக்கோலத்தை உன்னிப்பாகப் பார்க்கிறார். மிகுந்த நறுமணமுடைய கூவிளமலரும், மத்தமலரும் அவரை இறைவன் அருகே செல்ல அழைக்கின்றன. பொடி பூசிய அவனுடைய மேனியழகு அவரைக் கவர்கிறது. இறைவன் தன்னிடம் பேசுவதுபோலத் தோன்றுகிறது. நாள்தோறும் இறைவன் பேச்சைக் கேட்பதற்கு விருப்புடன் செல்கிறார். அப்போது இறைவன் தன்னுடன் மட்டுமல்ல, வழிபட வருகின்ற அனைவருடனும் பேசுவதைக் காண்கிறார். இறைவன் பேசுகின்ற பாங்கு அடியவர்களை ஆலயத்திற்கு அழைக்கிறது. வரதகரமும், அபயகரமும் சொல்லும்செய்திகள் அடியவர்களை ஆறுதற்படுத்துகின்றன.

சம்பந்தர் தான்கண்ட பேசுகின்ற இறைவனை எல்லோரும் சென்று காணவேண்டும் என்று நினைக்கிறார். அதனால் பத்துப் பாடல்களைப் பாடி இறைவனின் அன்பு உள்ளத்தை எல்லோரும் அறியவைக்கிறார். புகலிநகரில் உறையும் இறைவனைப் போற்றினால் இன்னலம் உண்டாகும். துன்பம் ஏற்படாது. நேசம் உண்டாகும். பாவங்கள் அற்றுப்போகும். சென்று கைதொழுதால் செல்வம் சேரும்.

இவ்வாறு திருக்கோயில் வழிபாட்டின் பயனைச் சம்பந்தர் விளக்கமாக எடுத்துக் கூறுவது எல்லோரும் பயன் அடைய வேண்டும் என்பதற்காகவேயாம். தான்பெற்ற இறையனுபவத்தையும், மனமகிழ்ச்சியையும் எலோரும் பெறவேண்டும் என விரும்பிய சம்பந்தர் அதனைப் பாடலிற் பதிவு செய்துள்ளார்.

"கடிகொள் கூவிள மத்தம் வைத்தவன்
படிகொள் பாரிடம் பேசும் பான்மையன்
பொடிகொள் மேனியன் பூம்பு கலியுள்
அடிகளை அடைந்து அன்பு செய்மினே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## நல்குரவு இன்பம் நலங்கள் அவையாகி

நாம் செய்கின்ற வினைகள் நல்வினை, தீவினை என இரு வகைப்படுமென்பர். நல்வினை நன்மை தரும். தீவினை செய்தவருக்கும் பிறருக்கும், பெரும் துன்பத்தைத் தரும். எனவே, இத்தகைய தீமையான தீவினையைச் செய்தவர் தம்முடைய பெரும் துன்ப நிலையிலிருந்து விடுபடுவதற்குரிய வழியைச் சம்பந்தர் காட்டியுள்ளார். தீவினையைச் செய்பவர்கள் அதன் பயனாக வறுமையை எதிர்கொள்ள நேரிடும். மீண்டும் அவர்கள் இன்பத்தையும், ஏனைய நலன்களையும் பெறுவதற்கு வழிபாடு ஒன்றுதான் வழியாகும்.

கோயிலுக்குச் சென்று வழிபடுவோரின் தன்மைகளையும், சம்பந்தர் தமது பாடல்களிற் குறிப்பிட்டுள்ளார். சிலர் தமது உடலை மண்ணிலே புரளச் செய்து உருக்கமாக வழிபடுவர். வேறு சிலர் இசைபாடி இறைவனை மனமுருகி வழிபடுவர். உடலை வருத்தி வழிபடுவோர் தீவினையால் தாமடைந்த துன்பங்களைப் போக்குவதற்காகச் சிறப்பு வழிபாடு செய்வார்கள். இசையினால் இறைவனைத் துதிப்போர் இன்பங்களையும், நலன்களையும் இறைவனிடம்பெற விரும்புபவர். இவ்வாறு வழிபடும் அடியவர் மன நிலையைச் சம்பந்தர் நன்கு அறிந்தவர். நாள்தோறும் சென்று கோவிலின் புறவீதியிலே உடல் புரள வழிபாடு செய்யும் நிலையைக் கண்டவர். அவர் சென்ற கோயில்களில் எல்லாம் அடியார்கள் புரண்டுவரும் காட்சிதான் அவரை மனம் உருகச் செய்தது. எனவே, அத்தகைய சிறப்பான வழிபாட்டைத் தனது பாடல்களிலே குறிப்பிட்டு எல்லோரும் அறியச் செய்துள்ளார்.

இன்றும் கோவில்களிலே, தேர்த்திருவிழாவிலே சிறப்பாக இத்தகைய வழிபாடு நடைபெறுவதைக் காணலாம். ஆண்களே நிலத்தில் உருண்டு வழிபாடு செய்யலாம் என்ற நடைமுறையும் பேணப்பட்டு வருகிறது. ஆனால் முற்காலத்தில் இத்தகைய கட்டுப்பாடு இருந்ததாகத் தெரியவில்லை. தமிழகக் கோவில்களில் இன்றும் பெண்கள் உருண்டு வழிபாடு செய்யும் நடைமுறை உண்டு. ஆண்கள் மட்டும்தான் இவ்வழிபாட்டைச் செய்யலாமெனில் தீவினையைச் செய்பவர்கள் ஆண்கள் என்ற தவறான விளக்கமும் தோன்றிவிடும். எனவே, சம்பந்தர் தனது பாடலில் 'அடியார்கள்' என இருபாலாரையும் அடக்கிக் கூறியிருப்பதே உண்மையான நடைமுறையாக இருந்திருக்கவேண்டும். அவர்களுடன் இசைபாடும் குழு ஒன்றும் உடன்சென்று வழிபட்டிருக்க வேண்டும்.

கோவில்கள் தோறும் சென்று சம்பந்தர் இசைப்பாடல்களைப் பாட அவரைத் தொடர்ந்து பல அடியார்களும் கோவிலை வலம்வந்து பாடி வழிபட்டனர். சம்பந்தர் வழிபாட்டிற் கூட்டு இசை மரபைச் சேர்த்து ஒரு புதிய பக்தியின் மொழியாகத் தமிழ் மொழியைச் சிறப்புறச் செய்துள்ளார்.

"நல்குரவு இன்பம் நலங்கள் அவையாகி
வல்வினைகள் தீர்த்தருளும் மைந்தன் இடம் என்பர்
மல்கும் அடியார்கள் படியார இசைபாடிச்
செல்வ மறையோர் உறை திருப்புகலியாமே"

# வண்டு வாழும் குழல் மங்கையோர் கூறுகந்தார்

தமிழர் பண்பாட்டில் மலர்கள் முக்கிய இடம் பெற்றிருப்பதைத் தேவாரங்கள்மூலம் அறியக்காணலாம். கோயில், வழிபாட்டில் இடம்பெறுவதற்கு முன்னரே இயற்கைச் சூழலில், மலர்ப் பொழில்களில் வழிபாட்டிடம் அமைந்திருந்தது. பூவும் புகையும் சொரிந்து இறைவனை வழிபடும் மரபும் தோன்றியது. சங்க இலக்கியச்செய்யுட்களில் இதற்கான சான்றுகள் உள்ளன. பிற்காலங்களில் கோயில் அமைப்புத் தோன்றியபோது கோவிலைச் சூழ மலர்த்தோட்டம் அமைக்கும் நடைமுறை ஏற்பட்டது. இறைவனுக்கு அழகு செய்வதற்காக மலர் மாலைகள் கட்டப்பட்டன. அதைவிடக் கோயிலுக்குச் செல்லும் அடியார்கள் மலர்களைத் தாமே கொய்து; இறைவன் தாள்களில் இட்டுத் தொழுவதற்கும் மலர்கள் தேவைப்பட்டன.

கோயிற் சூழலில் மலர்த்தோட்டங்கள் அமைக்கப்பட்டபோது அக்கோயிலின் சூழல் தூய்மையும், அழகும் பெற்றுப் புதுப் பொலிவுடன் விளங்கியது. சம்பந்தர் கோயில் தோறும் சென்று வழிபட்டபோது அச்சூழலால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அவருடைய பதிகங்களில் ஒரு பகுதி கோயிற் சூழலைப்பாடுவதாகவே பெரும்பாலும் அமைந்துள்ளது. அவரது இளமைப் பருவம் இயற்கையழகில் ஈடுபாடு கொண்டது. அதனால், சூழலின் அழகுத் தோற்றத்தை விரிவாகப் பாடல்களிற் பதிவுசெய்ய விழைந்தது. இத்தகைய பதிவுக்குப் பிறிதொரு காரணமும் உண்டு எனலாம்.

தமிழ் நாட்டில் சைவசமயம் சிறப்புடன் விளங்கியபோது வழிபாட்டிற்காகப் பல கோயில்கள் கட்டப்பட்டன. சிற்ப வேலைப் பாடும், கட்டட நிர்மாணச் சிறப்பும்கொண்ட அக்கோயில்களின் அமைவுக்கு மேலும் அழகு செய்ய மலர்த் தோட்டங்கள் கோயிலைச் சூழ அமைக்கப்பெற்றன. சம்பந்தருடைய தேவாரத் திருப்பதிகங்களில் கோவிற் சூழலைப் பாடும்போது இந்த மலர்த் தோட்டங்களையும் மனதிற் பதியும் வண்ணம் பாடினார். குறிப்பாக அங்கு மலர்ந்துள்ள மலர்களைப் பற்றி விரிவான செய்திகளையும் இணைத்துள்ளார்.

மலர்த்தோட்டங்களோடு அருகிற் குளங்களும் அமைந்திருக்கும் இயற்கை வளத்தைச் சம்பந்தர் பாடும்போது விரிவான செய்திகளைத் தருகிறார். குளத்திலே மலர்ந்து உள்ள மலர்களையும் குறிப்பிட்டுள்ளார். தாமரை மலர் நிறைந்துள்ள காட்சியை நாமும் காண வைக்கின்றார். கேதகை, மாதவி எனச் சூழலிலுள்ள மலர்களைச் சுட்டியுள்ளார். இம் மலர்களின் பெயர்கள் இப்போது பயன்பாட்டில் இல்லை. 'புண்டரீகம்' என அவர் பாடலிற் குறிப்பிடும் தாமரை, தாமரை மலர்களில் ஒரு வகையென்று கொள்ளலாம். **"கெண்டை மீன்கள் பாய்கின்ற மடு"** எனச் சம்பந்தர் குறிப்பிடுவது நீர்வளத்தை உணர்த்துகிறது.

மலர்ப்பண்பாட்டின் இன்னொரு பயன்பாட்டையும் சம்பந்தர் நயமாகக் குறிப்பிட்டுள்ளார். "வண்டு வாழும் சூழல் மங்கை" என இறைவியைக் குறிப்பிடும்போது, "தேன் நிறைந்த அன்றலர்ந்த மலர்களைத் தலையிலே சூடிய மங்கை' எனக் குறிப்பிட்டமை நோக்குதற்குரியது. பண்டைக்காலந் தொட்டே பெண்கள் கூந்தலில் மலர் சூடும் வழக்கம் இருந்துள்ளது. அன்றலர்ந்த இயற்கையான மலர்களையே பெண்கள் சூடினர். இப்போது செயற்கையான மலர்களைச் சூடுகின்ற நிலையும் உருவாகிவிட்டது. இது மலர்ப்பண்பாட்டின் சிதைவுற்ற தன்மையை விளக்குகின்றது. சம்பந்தர் தமது தேவாரங்களில் மலர்ப்பண்பாட்டையும் நிலை நிறுத்த முயன்றமையைப் பின்வரும் பாடல் நன்கு உணர்த்துகிறது.

"வண்டு வாழும் குழல் மங்கையோர் கூறுகந்தார் மதித்
துண்ட மேவுஞ் சுடர்த் தொல் சடையார்க் கிடமாவது
கெண்டை பாயும் மடுவில் உயர் கேதகை மாதவி
புண்டரீகம் மலர்ப்பொய்கை நிலாவும் புகலியே"

## கண்ணுதலானும் வெண்ணீற்றினானும் கழலார்க்கவே

இல்லறம்தான் உலகிற் சிறந்த அறமாகும். துறவறம் தன்னை மட்டும் ஈடேற்றுவதற்காக மேற்கொள்ளப்படுவது. இல்வாழ்க்கை வாழ்பவன் பரநலம் பேணும் பண்புடையவரென வள்ளுவப் பெருந்தகையும் விளக்கியுள்ளார். தென்புலத்தில் வாழ்பவர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர், தான் என ஐவகையினரையும் ஓம்பிக் காக்கும் பணியை இல்லறத்தான் செய்கின்றான். இத்தகைய பரநலம் பேணுவதற்கு ஒரு சிறந்த வாழ்க்கைத் துணை இன்றியமையாதது.

தெய்வங்களும் இப் பண்பினை மக்களுக்கு உணர்த்து கின்றன. ஞானசம்பந்தர் தனது பாடலில் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார். இறைவனை இறைவியுடன் கண்ட அவருக்கு அக்காட்சி ஓர் உண்மையையும் விளக்கியது. ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் அன்பான இல் வாழ்க்கையை எல்லோரும் வழ வேண்டும் என்பதை இறைவனே காட்டுவது போலிருந்தது. சம்பந்தர் தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும் இதனை நன்கு கண்டு உணர்த்திருந்தார். புகலி நகரில் வீற்றிருக்கும் இறைவன் இறைவியுடன் வீற்றிருக்கும் காட்சியைக் கண்டபோது ஒரு சிறந்த வாழ்வியல் முறைமையை இறைவனே காட்டுவதை உணர்ந்தார்.

இறைவன் வீற்றிருந்த கோலத்தை உற்றுப் பார்க்கிறார். நெற்றியிலும் ஒரு கண்ணுடன் இறைவன் எல்லோரையும் பார்த்துக்கொண்டிருக்கிறான். பொதுவாக எல்லோருக்கும் இரு கண்களே உண்டு. ஆனால் இறைவனின் மூன்றாவது கண் சம்பந்தருக்கு வியப்பைத் தருகிறது. வெண்ணீறணிந்த நெற்றியின் நடுவே அமைந்த அந்தக் கண் இறைவனுடைய சிறப்பான அம்சமாக உள்ளது. கால்களிலே கழல் பேரொலி செய்கிறது. பக்தர்கள் அந்தக் கோலத்தைக் கண்டு பரவசமாகப் பாடி நிற்கின்றனர். பரஞ்சோதியான இறைவன் புண்ணியம் தேடி மறை பாடும் அடியார்கள் ஏத்திப் பாடும் பாடல்களையும் கேட்டபடி திருநடனம் ஆடிக்கொண்டிருப்பவன். அவனுக்கு அருகிற் பெண்ணின் நல்லாள் வீற்றிருக்கின்றாள். இருவரும் இனிதாய் வீற்றிருக்கும் கோலம் இல்லறத்தின் மாண்பைக் காட்டுகிறது.

திருநடனம் ஆடுகின்ற தோற்றம்விட்டுப் புகலியூரிலே பெண்களிலே சிறந்த தேவியுடன் இறைவன் வீற்றிருக்கும் திருக் காட்சி சம்பந்தருக்கு இல்லறத்தின் ஏற்றத்தையே காட்டுகின்றது. தேவியின் உருவை அவர் வர்ணிக்கவில்லை. "பெண்ணின் நல்லாள்" என்று குறிப்பிடுகிறார். இறைவியின் தோற்றம் அவரால் வர்ணித்துப்பாடமுடியாத அற்புதத் தோற்றமாகவுள்ளது. பெண் மையின் மாட்சியை அவரால் திருவுருவ நிலையிற் காணமுடிய வில்லை. தாய்மையின் பண்பான அக்கோலத்தை எம்மைக் கற்பனை செய்ய விட்டுள்ளார்.

"கண்ணுத லானும்வெண் ணீற்றினா னுங்கழ லார்க்கவே
பண்ணிசை பாடநின் றாடினா னும்பரஞ் சோதியும்
புண்ணிய நான்மறை யோர்களேத் தும்புக லிந்நகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் வீற்றிருந் தபெரு மானன்றே"

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

## விண்ணவர் தொழுதெழ வெங்குரு மேவிய

கடவுள் பற்றிய எண்ணம் மிகப் பழைய காலத்திலேயே தோன்றிவிட்டது. மனிதன் ஓரிடத்திலே நிலையாக வாழும் நாகரிகம் தோன்றியபோது கடவுள் பற்றிய எண்ணமும் தோன்றியது. நிலையாக வாழும் சூழலிலேதனது ஆற்றலாற் கட்டுப்படுத்த முடியாத இயற்கையின் ஆற்றல்களைக் கண்டபோது அவற்றிற்குப் பணிந்து வாழும் முறைமையைக் கைக்கொண்டான். மழை, காற்று, இடி, மின்னல், மலை, கடல், ஆறு, சுனை, பெருமரம் முதலான இயற்கை நிலைகளை வணங்கி வாழும் நிலையை மேற்கொண்டான்.

பின்னர் இத்தகைய பேராற்றல் கொண்ட இயற்கையை இறை உருவாக அமைக்கும் காலம் தோன்றியது. காரைக்காலம் மையார் பாடிய பாடல்களில் சிவனுடைய திருவுருவத்தோற்றம், முதன்முதலில் தமிழ் மொழியிற் சொல்லோவியமாக வரையப் பட்டுள்ளது. இறைவனின் மேனியின் நிறத்தைக் "காலையே போன்றிலங்கும் மேனி" என அவர் வர்ணித்துள்ளார். காலத்தின் கரைவில் மனிதன் கலையுணர்வால் சிற்பமும், ஓவியமும் உருவாகிய போது, இறை உருவங்களும் சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் அமைக்கப்பட்டன. அவற்றைக் கோயில்களில் அமைத்து வழிபடும் பக்தி நெறியும் உருவாகியது.

கோயில்கள் தோன்றியபோது கூட்டு வழிபாடு என்னும் முறைமையும் தோன்றியது. இக்கூட்டு வழிபாட்டை முனைப்புடன் பரவச் செய்தவர் சம்பந்தராவார். சம்பந்தர் வளர்ப்பு நெறியும், வாழ்வுச் சூழலும், வழிபாடு பற்றியதொரு தெளிவான விளக்கத்தை அவருக்கு வழங்கியிருந்தன. மக்களிடையே வழிபாடு பற்றிய உள்ளார்ந்த விருப்பை ஏற்படுத்த இசையை அவர் இணைத்துவிட்டார். செந்தமிழால் கோயிலையும், சூழலையும் இறை உருவங்களையும் இசையோடு பாடினார். கூட்டு வழிபாட்டு நிலையில் எல்லோரும் ஒன்றாய்கூடிப் பாடிப் பரவும் பக்தி நெறியைப் பரப்பினார். அவர் பாடிய தேவாரங்களின் பொருளும் இனிமையும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன.

புராணங்களிலே கூறப்பட்டுள்ள இறைவன் பற்றிய செய்திகளை மக்களுக்குச் சம்பந்தர் தனது பாடல்களால் எடுத்துக்கூறிப் பக்திநெறி பற்றிய ஒரு புதிய கற்கைநெறியையும் மேற்கொண்டார். விண்ணும் மண்ணும் தொழும் கடவுளர் பற்றிய அறிவைப் பயிற்றினார்.

மக்கள் தமது வாழ்க்கையில் எதிர்கொள்ளும் இடர்களி லிருந்து விடுபடுவதற்குக் கடவுள்வழிபாடு பற்றிய எண்ணமே சிறந்தது என நல்வழிகாட்டினார். அதுவே இன்றுவரை எம்மை வழிநடத்தி நிற்கிறது.

"விண்ணவர் தொழுதெழ வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணிவீர் உமதொழுகழல்
எண்ணவல் லாரிடர் இலரே"

## வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்

பக்தி என்பது ஓர் உயர்ந்த அன்பு நிலையாகும். இது சாதாரண மனித நிலையிற் செலுத்துகின்ற அன்பு நிலையைவிட உயர்வானது. நாம் ஒருவர்மீது செலுத்தும் அன்பிற் சுயநலம் கலந்திருக்கும். சுயநலமற்ற தூய்மையான அன்பு நெறியை அடியார்கள் பலர் மேற்கொண்டிருந்தனர். அவர்களில் வயதில் மிக இளையவரான சம்பந்தர் அன்பு நிலையை; மனிதநிலை நின்று மக்களுக்கு உணர்த்தியுள்ளார். இளமைப்பருவத்தில் ஏற்படும் இயல்பான காம உணர்வை இறைவன் மீது கொள்ளும் காதல் நிலையாக விளக்கியுள்ளார்.

காமம் என்பது உடல் தொடர்பான ஓர் உணர்வாகும். காதல் என்பது உள்ளம் தொடர்பானது. மனித வாழ்க்கையிற் காமத்திற்குப் பலர் அடிமையாகி நெறிதவறிச் செல்கின்றனர். காமம் அவர்களுடைய உள்ளத்தில் அன்பு மறையத் துணை நிற்கும். அதனால் அவர்கள் சுயநலம் மிக்கவராய் மாறிவிடுவர். இந்நிலை சமூகத்தின் செம்மையான வாழ்க்கை நெறியைச் சீரழித்துவிடும். இதனைச் சீர்செய்யப் பக்திநெறியை அடியார்கள் கைக்கொண்டனர். மக்கள் வாழ்க்கையில் அன்பு நெறியே தொடரவேண்டும்.

சம்பந்தர் இத்தகையதொரு அன்புநெறியை இளமை நிலையின்நின்று விளக்கியுள்ளார். இளமை நிலையில் தோன்றும் காம உணர்வைக் கட்டுப்படுத்தி அது அன்பு நெறியிலே செயற்பட ஒரு வழியைக் காட்டுகிறார். தன்னை ஒரு பெண்ணாக உருவகம் செய்து காம உணர்வின் செல்வாக்கைத் தடைசெய்ய இறைவனையே காதலனாக உருவகம் செய்து பாடியுள்ளார். தனது நிலையை இறைவனிடம் எடுத்துச்சொல்வதற்கு வண்டைத்தூது விடுகின்றார்.

வண்டு மலர்களிலே சென்று தேனுண்டு மகிழ்கின்ற ஒரு நிலையில்; பெண்ணின் உள்ளத்து நினைவுகளை அவளது விருப்பத்திற்கு உரியவரிடம் சென்று சொல்வதற்கு ஏற்ற தூதன் எனச் சம்பந்தர் தெளிவாக உணர்த்துகின்றார். இயற்கை அழகு கொஞ்சும் இனிமையான சூழலில் தேன் உண்டு மகிழ்ந்து பெடையுடன் பாடிக் கொண்டிருக்கும் வண்டை நோக்கிப் பாடுகின்றார். தன்னுடைய உள்ளங்கவர்ந்தவனின் தோற்றத்தைத் தெளிவாக விளக்கிக்கூறி, தூதுபோகச் சொல்லி வேண்டுகிறார். மனித நிலையில் உள்ளத்தில் எழும் காம உணர்வை வளரவொட்டாது தடுக்க இறைமீது அன்பு கொள்ளும் மனப்பக்குவத்தையே மருந்தாகக் காட்டுகிறார். பக்தி என்னும் உயர்ந்த அன்பு நிலையில் உள்ளத்தில் ஏற்படும் பரவச உணர்வால் மனித வாழ்க்கையின் செல்நெறி நன்னெறியாகும் என்பதே சம்பந்தர் பெற்ற மனப்பக்குவமாகும். அதனையே எமக்கும் புகட்டியுள்ளார்.

"வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடு மளியரசே ஒளி மதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க்கு என்னிலை பரிந்தொருக்காற் பகராயே"

## பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப்

வழிபாட்டில் மனங்கொள்ளாது வாழ்நாளை வீணே கழிப்பவர் பலர் உளர். அவர்களுடைய உள்ளத்திலே இறைவனைப் பற்றிய எண்ணம் எழாது. தமது மனித முயற்சியால் அனைத்தையும் அடையமுடியும் என்ற இறுமாப்பும் அவர்களிடம் இருக்கும். இத்தகையவர்களை வழிபாட்டிற்குத் திருப்புவது சற்றுக் கடினமான செயல்தான். எனினும் எமது முன்னோரது வரலாற்றை நோக்கினால் இதனை எளிதிற் செயற்படுத்த வழி கிடைக்கும்.

அப்பருடைய வாழ்க்கை வரலாறு வழிபாட்டில் ஈடுபட மறுப்பவருக்கு ஒரு நல்லறிவைக் கொடுக்கவல்லது. வாழ்க்கையில் அடுத்தடுத்து எதிர்கொண்ட துன்பங்கள் அவரை வழிபாட்டில் நம்பிக்கை இழக்கவைத்தன. காலம்காலமாகப் பெற்றோர் கைக்கொண்ட வழிபாட்டு மரபால் எதுவித பயனும் இல்லை என முடிவுசெய்து, சைவ வாழ்வியலைக் கைவிட்டுச் சமண சமய நெறியிலே சென்று இணைந்துகொண்டார். ஆனால், அங்கு அவர் எதிர்பார்த்த நிறைவான வாழ்வையும் மன அமைதியையும் பெற முடியவில்லை. மீண்டும் சைவ வாழ்வியலுக்குத் திரும்பி வருகிறார். தமது முன்னோரது வழிபாட்டு நெறியே வாழ்க்கைக்கு உகந்தது என மன நிறைவடைகிறார்.

அவருடைய பட்டறிவு தமிழ் பாடல்களைப் பாட வைத்தது. தனக்கு ஏற்பட்ட பக்தி உணர்வைப் பிறரும் அறிய வேண்டும் என எண்ணுகிறார். இறைவனைப்பற்றி, பாடுவதற்கு ஒரு பரவச நிலை வேண்டும். இறைவனை நினைக்கும்போதும் எண்ணும் போதும் ஏற்படும் உணர்வுகளைச் சொல்லால் விளக்க அப்பர் முனைந்தபோது அவை தேவாரப்பாடல்களாக அமைந்தன. பல நாட்களாக இறைவனைப் பாடுவதற்கு ஒரு பயிற்சி தேவை. எல்லோரும் ஏத்திப்பாடும் இறைவனை எப்படிப் பாடமுடிந்தது என்பதை ஒரு பாடலில் அப்பர் மிகத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். தனது உள்ளத்திலே ஊறும் இறை உணர்வை பல்வேறு சுவைகளோடு ஒப்பிட்டுச் சொல்கிறார். மனிதர் அறிந்த சுவைகள் மூலம் இறையுணர்வைப் பெறலாம் என்பதைக்காட்டுகிறார்.

இனிமையான தேனை, அமுதத்தை, ஆவின் பாலை, தித்திப்பான இனிய கரும்பை உண்ணும்போது ஏற்படும் மன மகிழ்வை இறைவனை உள்ளத்தில் நினைக்கும்போது பெறலாம் என்கிறார். நான் பலகாலம் இந்த இனிமையான வாழ்வியலைக் கைவிட்டு இருந்தேன் என மனம் வருந்துகிறார். சுவையை நினைத்து மகிழும் இனிய உணர்வு எல்லோரும் அறிந்ததே. இனிமையானவற்றை ஒவ்வொன்றாக எண்ணிப்பார்த்து அவற்றைச் சுவைக்க மனித நிலையில் விரும்புவது இயல்பே. அந்த அனுபவத்தையே அப்பர் பாடியுள்ளார்.

"பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித்தானை
எத்தேவு மேத்து மிறைவன்றன்னை
யெம்மானை யென்னுள்ளத்துள்ளே யூறும்
அத்தேனை யமுதத்தை யாவின் பாலை
யண்ணிக்கும் தீங்கரும்பையரனை யாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே"

## பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்

ஒலி எல்லோரையும் கவரும் தன்மையுடையது. இயற்கையாக எழுவது. ஓசை அதைவிட உள்ளங்கவர்வது. கருவிகளால் வேறுபட்ட ஓசைகளை எழுப்பமுடியும். இளமைக் காலத்தில் இசைக்கருவிகளின் ஓசை வசியமாக்கும். இதனைப் பல தமிழிலக்கியப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. இறைவன் ஓசையும், ஒலியும் ஆனவன். இயற்கையிலே இறவனைக் காணும் மனப்பக்குவம் ஒலியாக நிற்பதை உணர்ந்திருந்தனர். உள்ளத்தால் வழிபடுபவர் ஓசையால் இறைவனைக் கண்டனர்.

இறைவன் உறையும் இடங்களை அறிவிக்கும் மரபு ஒன்று எம்மவரிடையே உள்ளது. இன்றும் கோயில்களில் அம்மரபு பேணப்படுவதைக் காணலாம். அப்பர் தான் வாழ்ந்த காலத்தில் இம் மரபு எவ்வாறிருந்தது என்பதை ஒரு பாடலில் தெளிவாகக் கூறியுள்ளார். நாயன்மார்களில் நாவுக்கரசரின் தொண்டு தனித்துவமானது. "உழவாரப்படையாளி' எனச் சிறப்புப் பெயரைப் பெற்றவர். அவர் நாள்தோறும் கோவிலுக்குச் சென்று உழவாரத்தாற் கோயிற் சூழலிலுள்ள புல், பூண்டுகளைக் களைபவர். கோவிலின் புற வீதிகளைச் சுத்தமாக வைத்திருப்பவர். முதுமைக் காலத்திலும் இப்பணியைத் தொடர்ந்து செய்தவர்.

கோவிற் புறவீதியிலே பணி செய்யும் வேளைகளில் கோவிலில் இசைக்கும் கருவிகளின் ஓசையை நாள்தோறும் கேட்கும் வாய்ப்புப் பெற்றவர். கோவிற் சூழலிலே உள்ள பூம்பொழில்களிலே உரிய பணியைச் செய்யும்போது காதில் வந்து விழும் ஓசையைக் கேட்டுக் கோவிலில் உள்ள இறைவன் திருஉருவத் தோற்றத்தை மனத்திலே கண்டு வழிபடுபவர். வழிபாட்டு நடைமுறைகளை இசைக்கருவிகளின் ஓசையே அவருக்குத் துல்லியமாக உணர்த்தியது.

மூன்று ஓசைகள் அவர் காதிற் கேட்டன. அவற்றைப் பறையின் ஓசை, பாடலின் ஓசை, மறையின் ஓசை என வகைப்படுத்திக் காட்டுகிறார். பறை ஓசை வழிபாட்டின் தொடக்க வேளையை அறிவிக்கும். பாடல் ஓசை வழிபடும் அடியவர் நிலையை உணர்த்தும். மறையின் ஓசை கிரியைகளை ஆற்றுவோர் பணியை விளக்கி நிற்கும்.

இவ்வோசைகள் மூன்றும் கோயிலின் செயற்பாடுகளை வெளியே இருப்பவர்க்கு எடுத்துரைப்பவை. அதுமட்டுமன்றிக் கோவிலின் சிறப்பான நிலையையும் அறிவிக்கும். நியமம் தவறாமல் நடைபெறும் கோயில் வழிபாட்டிற் பங்குகொள்ளும் வாய்ப்பற்ற அடியவர்கள் இவ்வோசைகளைக் கேட்டு இறை உருவை மனக்கண்ணிற் கண்டு வழிபடுவர். அத்தகைய அடியவரில் தானும் ஒருவராக நின்று, கோயிற்புறச் சூழலில் நின்று இறைவனை வழிபடும் நாவுக்கரசர் ஓசைகளூடே இறைவனைக் காணும் ஒரு புதிய பக்திநெறியைப் பயிற்றியவர். தன் அனுபவத்தைப் பிறரும் பெற்று வழிபாடு செய்யப் பாடியுள்ளார்.

"பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் மல்கிய அயலெலாம்
நிறையும் பூம்பொழில் சூழ்திரு நின்றியூர்
உறையும் ஈசனை உள்கும் என் உள்ளமே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## வையகமுற்று மாமழை மறந்து

இயற்கை மனித வாழ்வுக்குத் தேவையானவற்றைத் தரும் இயல்புடையது. அதனால், நமது முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டிருந்தனர். மரம், மலை, கடல், ஆறு, சுனை என்பவற்றை வணங்கிப் பணிந்து வாழ்ந்தனர். அதனால், மனித வாழ்வுக்குத் தேவையான மழை, வெப்பம், விளைபொருள் என்பன எதுவித இடையூறுமின்றிக் கிடைத்தன.

காலப்போக்கில் மனிதன் பிறபண்பாட்டுத் தாக்கங்களினால் இயற்கையோடு ஒன்றிய வாழ்வியலிலிருந்து மெல்ல மெல்லத் தன்னை விடுவித்துக் கொள்ளலானான். இத்தகைய மாற்றம் மனிதனுக்குத் துன்பத்தையும் தந்தது. பல்வேறு மாறுபட்ட இயற்கை நிலைகளுக்கு அவன் முகங்கொடுக்க நேர்ந்தது. அந்தவேளையில் இறைபற்றிய தேடலை மனிதன் மேற்கொண்டான். முன்னோரது நம்பிக்கைகளையும், வாழ்வியல் நடைமுறைகளையும் மீளவும் எண்ணிச் செயற்படுவதற்கு முனைந்தான். வழிபாட்டினால் இயற்கையின் கொடையைப் பெற முயன்றான்.

இத்தகைய முயற்சியைச் சுந்தரமூர்த்தி நாயனாருடைய பதிகம் ஒன்றிற் காணமுடிகிறது. சுந்தரர் திருப்புன்கூருக்கு இறைதரிசனம் செய்வதற்குச் சென்றிருந்தபோது அங்குள்ள மக்கள் அவரிடம் வந்து தாம் நெடுங்காலம் மழையில்லாமல் வருந்துவதாக விண்ணப்பம் செய்தனர். சுந்தரர் அவர்களிடம் இறைவன் மழையை அருளினால் அதற்கு இறைவனுக்கு என்ன தருவீர்கள் எனக் கேட்டார். மக்கள் "இறைவனுக்குப் பன்னிரு வேலி நிலம் தானமாகத் தருவோம்" எனக் கூறினர். சுந்தரரும் அதற்கு ஒப்புக்கொண்டு இறைவனை வேண்டித் திருப்பதிகம் பாடினார். மழையும் விடாது பெய்தது. தொடர்ந்து மழை பெய்தமையால் மக்கள் சுந்தரரிடம் வந்து மழை நிற்கும்படி பதிகம் பாடினால் இன்னும் பன்னிரு வேலி நிலம் இறைவனுக்குத் தானமாகத் தருவோம் என்று கூறினர். சுந்தரரும் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கிப் பதிகம் பாட மழை நின்றது.

இந்த நிகழ்ச்சி சுந்தரர் பாடலிற் பதிவு செய்யப்பட்டுள்ளது. "இறைவன் நான் விரும்பியதைத் தருவான்" என்ற நம்பிக்கை சுந்தரரிடம் இருந்தது. மக்களுக்காக அவர் இறைவனிடம் வேண்டுகை செய்தார். மக்களும் மனித நிலையில் ஒரு காரியம் நிறைவேற்றக் கையுறை கொடுப்பதுபோல இறைவனுக்கு நிலத்தைக் கொடுத்தனர். இறைவனை மனிதநிலையில் வைத்து எண்ணிச் செயலாற்றும் ஒரு நெருக்கமான பக்தி நிலையை இங்கு உணரமுடிகிறது. சுந்தரர் மழை பெய்யவும், நிற்கவும் பாடிய பதிகங்கள் கிடைக்கவில்லை. ஆனால், இந்நிகழ்வை குறிப்பிடும் பாடல் ஒன்று திருப்புன்கூர் திருப்பதிகத்தில் இடம்பெற்றுள்ளது. அப்பாடல் மழைவளம் வேண்டி நிற்போருக்கு இறைவனிடம் ஆற்றுப்படுத்தி அமைதி தருகிறது.

"வையகமுற்று மாமழை மறந்து
வயலி னீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன வொளி
கொளவெண் முகிலாய்ப் பரந்தெங்கும்
பெய்யுமாமழைப் பெருவெள்ளந் தவிர்த்து
பெயர்த்தும் பன்னிரு வேலி கொண்டருளும்
செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூருளானே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## கண்டமும் கறுத்திட்ட பிரானை

இறைவனை உணர்ந்தவர் உள்ளத்தில் ஒரு தெளிவு இருக்கும். அவருடைய எண்ணத்திலே இறைவனைப் பற்றிய நினைவுகள் கலந்திருக்கும். தமது அனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் பெருவிருப்பும் அவரிடம் குடிகொண்டிருக்கும். சுந்தரமூர்த்தி நாயனார் தனது இயைனுபவத்தைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளப் பல பாடல்களைப் பாடியுள்ளார். சுந்தரரது இறையனுபவம் ஏனைய நாயன்மார்களின் அனுபவத்தை விட வேறுபட்டது. நெருக்கமான நட்புநிலையில் இறைவனோடு தொடர்புற்றிருந்தவர்.

உலக வாழ்க்கையின் இன்பங்களையெல்லாம் நுகர இறைவனை அடிக்கடி நாடுபவர். மனித நிலையில் நெருங்கிய நண்பனுடன் பேசுவதுபோலப் பல பாடல்களைப் பாடியுள்ளார். 'பித்தனே" என்று இறைவனை ஏசியவர். இளமைக் காலத்து இன்ப வாழ்வுக்கு வேண்டியவற்றைப் பெறுவதற்காக அவர் பாடிய செந்தமிழ்ப் பதிகம் இன்றும் நட்பின் நெருக்கத்தை அறியச் சான்றாக உள்ளது. மனத்திலே தோன்றும் எண்ணங்களைச் செயற்படுத்துவற்கு மனிதரைக் கேளாமல் இறைவனையே கேட்கலாம் என்ற புதியதொரு வழியைக் காட்டியவர் சுந்தரர். துன்பங்கள் எம்மைத் தொடரும் போது இறைவனிடம் நேரில்நின்று முறைப்பாடு செய்வதன் மூலம் அவற்றை நீக்கிவிடலாமெனச் சுந்தரர் கூறிய வழி இன்றைய கோயில் வழிபாட்டின் நம்பிக்கையை நன்கு விளக்கி நிற்கிறது.

கோயில் வழிபாட்டினால் மனித மனத்திற்கு எத்தகைய நிறைவு கிடைக்கும் என்பதைச் சுந்தரருடைய பாடல்கள் தெளிவாய்ப் புலப்படுத்தும். எமக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதற்காகவே இறைவன் கோயிலிற் காட்சி தருகிறான். கோவிலுக்குச் சென்று எமது மனக்குறையையும் உடற்குறையையும் எடுத்துக் கூறினால் போதும். அவை எல்லாமே இறையருளால் நீங்கிவிடும். மனிதரிடம் எம்நிலையைச் சொல்லுவதால் எப்போதும் எமது குறைகள் நீங்கிவிடாது. ஆனால், கோவிலுக்குச் சென்று இறையுருவின் முன்னே நின்று எம் குறைகளைச் சொல்லும்போது அதைக் கேட்பதற்கு மனிதருக்கும் மேலாக இறைவன் இருக்கிறார் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. அந்த நம்பிக்கை எமது குறைகள் தீரும் என்ற மன நிலையைத் தருகிறது. எமது முயற்சிகளை எம்மளவிற் செய்யும் மனப்பக்குவத்தைத் தருகிறது. வழிபாட்டினால் எமக்குக் கிடைக்கின்ற உச்சமான பலன் இதுவேயாகும். இதற்கான பயிற்சி கோவிலில் கிடைக்கிறது. மனம் பக்குவப்பட்டுவிட்டால் இறைவனை நினைக்கும் பயிற்சி ஏற்படுகிறது. இந்நிலையில் கோவிலுக்குச் சென்று வழிபடாமல் இறைபற்றிய நினைவுடன் எதையும் செய்யக்கூடிய மன ஆற்றல் ஏற்படும். அதுவே சுந்தரர் கூறுவது.

"கண்ட மும்கறுத் திட்ட பிரானை காணப்
பேணு மவர்க்கெளி யானை
தொண்ட ரைப்பெரி தும்முகப் பானைத்
துன்ப மும்துறந் தின்பினி யானைப்
பண்டை வல்வினை கள்கெடுப் பானைப்
பாகம்மா மதி யானவன் றன்னைக்
கெண்டை வாளை கிளர்புன லீடுர்க்
கேண்மை யாற்பணி யாவிட லாமே"

## மின்னுமாமேகங்கள் பொழிந்திழிந்தருவி

கோவில் அமைந்திருக்கும் சூழல் மனத்திற்குப் பரவசம் தருவது. அதனால் கோவிலுக்குச் செல்வது மட்டற்ற மகிழ்வைத் தரும். தேவாரப்பதிகங்களில் இத்தகைய கோயிற் சூழல்கள் விளக்கப்பட்டன. இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் பல கோயில்கள் அமைந்திருப்பதையும் தேவாரப்பதிகங்கள் பதிவு செய்துள்ளன. பல்லவர் காலத்திற் பெரிய கோவில்கள் கட்டப்பட்டபோது இயற்கைச் சூழலின் வளம் மிக்க பிரதேசங் களில் அவை கட்டப்பட்டுள்ளன. வழிபாடு செய்யப்போகும் அடியவர்களுடைய மனதிலே அழகுபற்றிய ஆர்வத்தைத் தூண்ட இச் சூழல் பெரிதும் துணை செய்தது. பூத்துக்குலுங்கும் மலர்களும் பச்சைமரச் செடிகொடிகளும், நீர்நிலைகளின் வளமும், மனிதக் குடியிருப்பு நிலைகளுக்கும் மேலான ஒரு பரவசம்தரும் பக்திச் சூழலை ஏற்படுத்தியிருந்தன.

மக்கள் கோயிலை நாடிச் செல்வதை ஒரு பயிற்சியாக்க எண்ணிய நாயன்மார்கள் கோயிற்சூழலை நேரிற்சென்று கண்டு அதைப்பாடலிற் பதிவு செய்தனர். அவர்கள் கோயிலுக்குச் சென்றபோது சூழலை ஊன்றிக் கவனித்தனர். கோவிற் பண்பாடு இயற்கையுடன் ஒன்றியிருப்பதை நன்கு உணர்ந்தனர். அழகும் தூய்மையும், நறுமணமும் மனிதரைக் கவரும் இயல்புடையவை. நாள் தோறும் அங்கு செல்லும் விருப்பத்தை அவை ஏற்படுத்தும்.

கோயிற் சூழலைப் பாடும்போது பிறிதொரு விடயத்தை யும் இப்பாடல்கள்மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளனர். தமிழ் மக்களிடையே நிலவிய மலர்ப்பண்பாட்டு நடைமுறையையும் விளக்கியுள்ளனர். கோயிற்சூழலில் இயற்கைநிலையில் தோன்றியுள்ள மரங்களையும், செடி, கொடிகளையும் அவற்றின் வளர்ச்சிநிலைகளையும் விளக்கியுள்ளனர். மலர்களின் தோற்றம், பொலிவு, நிறவேறுபாடு, மலரும் காலநிலை, நறுமணம், தேன்பிலிற்றும் நிலை என்பன பற்றிய செய்திக் குறிப்புகளைச் செந்தமிழிலே தந்துள்ளனர். இறைவனுக்குச் சாற்றுகின்ற மலர்களைப்பற்றியும், அவற்றின் ஒழுங்கமைதிபற்றியும் பல நுணுக்கமான செய்திகளைக் குறிப்பிட்டுள்ளனர். அவை மிகவும் பயனுடையவை.

சுந்தரரும் சம்பந்தரும் இளவயதினராதலால் இயற்கை அழகாற் பெரிதும் கவரப்பட்டனர். எனவே, கோவிற்சூழலை மனக்களிப்புடன் பாடியுள்ளனர். சுந்தரர் சம்பந்தரைவிடத் தன்னை அழகுபடுத்துவதில் ஆர்வமுடையவர். அதனால், அவரு டைய பாடல்களில் இயற்கை அழகு நுணுக்கமாக அமைந்திருக் கும். இயற்கையழகிற்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பது நீர்வளமாகும். இந்த நீர்வளம் பற்றிச் சுந்தரர் குறிப்பிடும்போது காவிரியாற்றின் தோற்றத்தை நமது மனக்கண்ணில் முழுமையாகக் காணவைக்கிறார். தன்னை மறந்து நின்று பாடுகிறார்.

"மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந்தருவி
வெடிபடக் கரையொடுத் திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி யகன்கரை யுறை
வாரடியிணை தொழுதெழு மன்பரா மடியார்
சொன்ன வாறறிவார் துருத்தியார் கேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனே னாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெருமானை
யென்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பது இல்லை

மனிதன் தான் வாழுங்காலத்தில் மூப்புநிலையைப் பற்றி எண்ணிப்பார்ப்பது உண்டு. அதற்கு மேலாக இறப்பை எண்ணிக் கவலைப்படுவதும் வழக்கம். மூப்படைந்துவிட்டால் தொடர்ந்து இறப்பும் வந்துவிடும். இது பொதுவாக மனித குணவியல்பாக உள்ளது. இத்தகைய துன்பத்தைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்று பலர் நினைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நினைப்பை நீக்கி மகிழ்வாக வாழ்க்கை நடத்த நாம் உதவ வேண்டும். இறைவழிபாட்டால் இத்துன்பத்தை நீக்க முடியும் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்த நாயன்மார்களுடைய வரலாறு களைப் படிக்கும்போது எமக்கும் சற்றுத் தெளிவு ஏற்படும். மரணபயம் எல்லாப் பயங்களிலும் மேலானது. அது எல்லோரையும் பற்றிக்கொள்ளும் தன்மையது. ஆனால் அந்தப் பய உணர்வை அகற்றிப் பக்தி நெறியிலே புலனைச் செலுத்த வேண்டும். உலகவாழ்க்கை இன்பங்களை நீண்டகாலம் அனுபவிக்கவேண்டும் என்ற ஆவலுடையோர் தமது வாழ்நாளை நீட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படுவர். மூப்பு வந்தபோதும் அந்த மூப்புக் கோலத்தை மாற்றி இளமைக் கோலத்தைப் பெற அரிய செயல்களைச் செய்யமுற்படுவர்.

மூப்பு ஏற்படும்போது அதற்கு முன்னே நரை தோன்றும், நரை, திரை, மூப்பு என மூன்று தோற்ற நிலைகள் மனிதனுக்கு வந்து சேரும். நரை என்பது மனிதனின் வயது முதிர்கின்றபோது தலைமயிரின் கருமையான நிறம் மாற்றமடைந்து வெண்மையாக மாறுவது. திரை என்பது மனிதனின் பார்வை வலுவிழப்பது. மூப்பு உடல் உறுப்புகள் தளர்ச்சியடைய ஏற்படும் சோர்வுநிலை. இப்பருவத்திற் பிறர் உதவி பெற்றே அவன் தன்னுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டி நேரிடும். இத்தகைய இயற்கையான மாற்றங்களை மனிதன் தனது முயற்சியால் மாற்றிவிட முயலும் நிலையும் உண்டு. நரையை மறைப்பதற்குத் தலைக்குக் கருமை பூசி இளமைத் தோற்றத்தைப் பெறமுயல்கிறான். திரையைப் போக்கக் கண்ணாடி அணிகின்றான். இந்த முயற்சிகளெல்லாம் அவன் அறியாமையை அவனே விளம்பரம் செய்வது போலுள்ளது.

சுந்தரமூர்த்தியும் சுந்தர வேடங்கள் பூண்பதில் பெருவிருப் புடையவர். ஆனால், அவரது வாழ்வியல் அனுபவம் அவரை இறைவன்பற்றிய சிந்தனையிற் சேர்த்தது. மூப்பு, பிறப்பு, இறப்பு எல்லாவற்றையும் இறைபக்தியிலே இணைந்த போது மறக்க வைத்தது. அழகும் இளமையும் நிலைத்திருக்க வேண்டின் வேள்விக்குடியில் இருக்கும் இறைவனைப் பற்றிச் சிந்திப்பதே சிறந்தது எனக்கூறுகிறார். அவருடைய பட்டறிவை, இறை அனுப வத்தைப் பாடலிலே எடுத்தியம்புகிறார்.

"மூப்பதும்இல்லை பிறப்பதும்இல்லை இறப்பது இல்லை
சேர்ப்பது காட்ட கத்தான் ஊரினுமாகச் சிந்திக்கின் அல்லால்
காப்பது வேள்விக்குடி தண்துருத்தி எங்கோன் அரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமே இவர்க்கு ஆட்பட்டோமே"

## மத்தயானை ஏறிய மன்னர் சூழ வருவீர்காள்

வாழ்க்கையின் இறுதி மரணம் என்பதை எல்லோரும் அறிவர். மரணம் ஒருவருக்கு நேரும் வேளையில் யாராலும் அதைத் தடுக்கமுடியாது. மிக்க செல்வச் சிறப்பாக வாழ்பவருக்கும் இதே நிலைதான். மன்னர்களாக வாழ்பவரும் மரணத்தை வெல்ல முடியாது. நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களின் முன்னேற்றத்தாற்கூட மரணத்தை நிறுத்திவிட முடியவில்லை. மரணம் மனிதனின் நிழலாக இருக்கிறது. அதனால் அது எம்மை வந்து நிச்சயமாகத் தழுவிக்கொள்ளும். மனித வாழ்வின் இயல்பாக இதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் எல்லோருக்கும் இன்றியமையாதது. மரண பயத்தை மனதிலிருந்து விரட்டுவதற்கு பக்திநெறியிற் செல்வதே சிறந்தவழியென எமது முன்னோர் உணர்ந்துள்ளனர்.

மரணத்தின் பின்னர் என்ன நடக்கிறது என்பதை இன்னும் தெளிவாக யாரும் விளக்கவில்லை. பக்திநெறி நின்றோர் மரணம் என்பது இறைவன் பாதங்களைச் சென்றடையும் நிலையென விளக்கம் தந்துள்ளனர். மரணத்தையும் மகிழ்வோடு எதிர்கொள்ள அவர்காட்டும் வழி இது. குடும்பம், உறவு, சுற்றம், நட்பு எனப் பலரோடு வாழ்ந்த வாழ்க்கையை விட்டுச்செல்ல விரும்பாதவர்களே மரணத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். காலக் கணக்கு முடிவடையக் காலன் எம் உயிரைக் கவர்வான். அப்போது இறைவன்பற்றிய சிந்தனையோடு இருந்தால் அச்சமில்லை. ஏனெனில், நாம் செல்லும் இடம் இறைவனுடைய இருப்பிடமே என்ற நம்பிக்கை எமக்கு இருக்கும்போது மரணத்தை இயல்பாக ஏற்கின்ற மனப்பக்குவமும் வந்துவிடும்.

இம்மனப்பக்குவத்தை எல்லோரும் பெறவேண்டுமெனச் சுந்தரமூர்த்தி நாயனார் அறிவுறுத்துகின்றார். சிந்தனையில் சிவன் பற்றிய எண்ணமே நிறைந்திருக்க வேண்டும். பல வசதிகளோடு யானைமேல் ஏறி உலாவருகின்ற மன்னர்களே செத்தபோது; உங்களுடன் யாரும் இருக்கமாட்டார்கள். இதனை உங்களுடைய சிந்தையிலே நன்கு பதியவைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சிந்தனையில் வைத்துள்ள சிவன்பற்றிய எண்ணத்தை மாற்றி விடாதீர்கள். என்னோடு வாருங்கள். திருவெதிர்கொள் பாடி என்னும் திருத்தலத்திலே உறைகின்ற சிவனை வணங்குவோம். இறப்பைப்பற்றி எண்ணிக் கவலைப்படாமல் எமக்கு இறப்பின் பின்னும் துணையாக இருக்கும் இறைவனைக் கோயிலுக்குச் சென்று வழிபடுவதன்மூலம் மகிழ்வாக இருக்கலாம். உலகியல் நிலையில் இறப்பின்போது யாரும் துணை வரமாட்டார்கள் என்பதை எல்லோரும் அறிவர். ஆனால், இறப்பின்போது எம்மோடு இருக்கும் இறைவனைப் பற்றியே சிந்திப்பதன்மூலம் நாம் என்றும் மரணபயமின்றி மகிழ்வாய் வாழ எண்ணிச் சுந்தரர் பாடுகிறார்.

"மத்த யானை ஏறி மன்னர் சூழவரு வீர்காள்
செத்த போதில் யாரும் இல்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த உள்ளம் மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர் கோயில் எதிர்கொள் பாடி யென்பது அடைவோமே"

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

## கூசம் நீக்கி குற்றம் நீக்கிச் செற்ற மன நீக்கி

'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்பது அனைவரும் அறிந்த பழமொழி. மனித வாழ்வியலில் ஆசை அற்று இருப்பது கடினமாகும். உணவு, உடை, உறையுள் என்ற இன்றியமையாத தேவைகளில் ஏற்படும் ஆசை பலருக்குத் துன்பத்தைத் தருகின்றது. புலனடக்கம் இல்லாமையால் ஆசையை அடக்குவது கடினம். சாதாரண மனித நிலையில் ஆசையால் ஏற்படும் துன்பங்களுக்கு முன்னோடியான செயற்பாடுகளை எல்லோரும் அறிய வேண்டும்.

வழிபாட்டு நெறியை மக்களிடையே நன்கு உணர்த்த எண்ணிய நாயன்மார்களில் சுந்தரமூர்த்தி நாயனார் ஆசையால் அல்லல் உற்றவர். தனது பட்டறிவைப் பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார்.

தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களை எண்ணிப் பார்க்கிறார். அவ்வாறு துன்பங்களை எதிர்கொள்வதற்கான காரணங்களையும் ஆராய்கிறார். தன்னைத் தானே விமர்சனம் செய்கிறார். தன்னுடைய செயற்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்க்கிறார். பிறர் செய்வதற்குக் கூசுகின்ற செயல்களைச் செய்தமை, குற்றமான செயல்களைச் செய்தமை, பிறரை எதிர்க்கும் செய்கை, பெண்களோடு தான் வாழ்ந்த வாழ்க்கை என்பவற்றையெல்லாம் மீட்டுப் பார்க்கிறார். அப்போது அவருக்கு ஓர் உண்மை தெளிவாகத் தெரிந்தது. தன்னுடைய ஆசை காரண மாகவே இச்செயற்பாடுகளை மேற்கொள்ள நேர்ந்ததை நன்கு உணர்ந்து கொண்டார். தன்னலங் கருதித் தான் செய்த தவறுகளை மற்றவர்களும் செய்யாமலிருப்பது நன்று என எண்ணுகிறார்.

வேதியர் குலத்திலே பிறந்த சுந்தரர் அழகனாக விளங்கியமையால் அரசர் நரசிங்க முனையரின் வளர்ப்பு மகன் ஆனார். அரசபோக வாழ்க்கைச் சூழலால் அவருடைய குண இயல்பில் தன்னலம் நேர்ந்தது. இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட பின்னரும் உலகியல் வாழ்க்கை இன்பங்களை நுகர இறைவனையே நாடினார். தோழமையுணர்வுடன் இறைவனைப் பாடி வழிபட்டு வேண்டியவற்றைப் பெற்றுக் கொண்டார். இரு மனைவியரை மணந்து இல்லறம் நடத்தினார். இறைவன் அவருடைய செயற்பாடுகளுக்குத் துணை நின்றமையால் சுந்தரரிடம் ஒரு செருக்குக் குடி கொண்டது. வாக்குறுதி தவறிய போது கண் பார்வை இழந்தார். அந்த அநுபவம் அவரைத் தன்னை அடியவர்களிலும் கீழான ஒருவன் என நன்கு உணரவைத்தது. இறைவனைத் தொடர்ந்து வழிபட்டபோது மெய்யறிவு பெற்றுத் தன் முரண்பட்ட செயற்பாடுகளைக் கைவிட்டார். பக்திநெறி நின்று பிறர்க்கு அதை உணர்த்தும் பணியை மேற்கொண்டார். ஆசைகளை நீக்கி இறைவனை அன்புடன் வழிபட ஈசன் வாழும் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று எடுத்துரைத்து எம்மையும் வழிநடத்தியுள்ளார்.

"கூசம் நீக்கிக் குற்றம் நீக்கிச் செற்ற மனநீக்கி
வாசம் மல்கு குழலி னார்கள் வஞ்ச மனைவாழ்க்கை
ஆசை நீக்கி அன்பு சேர்த்தி என்புஅணிந்து ஏறேறும்
ஈசர் கோயில் எதிர்கொள் பாடி என்பது அடைவோமே"

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

# பொய்யாத வாய்மையால் பொடிபூசிப் போற்றிசைத்துப் பூசை செய்து

வழிபாட்டு நடைமுறைகளைச் செய்வதற்கு உரிய ஒழுங்கு முறை எது என எல்லோரும் அறிய விரும்பும் காலம் இது. கோயில் என்ற அமைப்புத் தோன்ற முன்னர் இயற்கை ஆற்றல்களை வழிபடும் மரபு இருந்தது. மக்கள் தம்முடைய எண்ணத்தில் தோன்றிய இயற்கையான வழிபாட்டு உணர்வில் வழிபாடு செய்தனர். தமது முயற்சியால் விளைபொருட்களைப் பெற்றபொழுது விளக்கேற்றி வைத்து அவ்விளைபொருட்களை மடையாகப் பரவி இறையாற்றலுக்குப் பணிந்து வணங்கினர். தமது உணர்வு நிலைக்கேற்ப இசை எழுப்பி ஆடிப்பாடி வழிபாடு செய்தனர்.

கோயில் என்ற அமைப்புத் தோன்றிய போது வழிபாட்டு மரபில் மாற்றம் ஏற்பட்டது. இறை உருவங்கள் உறைகின்ற தூய்மையான அருள் நிறைந்த இடங்களாக கோயில்கள் தனித்துவப்படுத்தப்பட்டன. வழிபாட்டு நடைமுறைகளை ஒழுங்கு முறையிலே செய்வதற்கு ஒருவர் நியமிக்கப்பட்டார். பூசுரர், அந்தணர் என அழைக்கப்பட்ட உயர்ந்த குலத்தவரால் வழிபாடு நெறிப்படுத்தப்படுகின்ற மரபு தோன்றிற்று. வடமொழியில் இருந்த இறைவனை பரவும் பாடல்களை இசைத்து மூன்று வேளை அல்லது ஆறுவேளை பூஜை செய்யும் நடைமுறையும் ஏற்பட்டது. அந்தணர் குலத்தில் தோன்றியவர்களின் பணியாக அது வரையறை செய்யப்பட்டது.

நாயன்மார் காலத்தில் கோயில் வழிபாட்டில் மக்களை நெறிப்படுத்த வேண்டிய தேவையும் இருந்தது. சமணம், பௌத்தம் போன்ற பிற மதங்களின் செல்வாக்கு மக்களிடையே வேகமாகப் பரவ மக்கள் அம்மதங்களோடு தம்மை இணைத்துக் கொள்ள லாயினர். மக்களை மீண்டும் சைவவழிபாட்டிற்கு அழைத்துவரும் முயற்சியில் நாயன்மார் முனைப்பாக ஈடுபட்டனர். கோயில் களைப் பற்றி பதிகங்கள் பாடி இசையால் மக்களை ஈர்ந்தனர். அப் போது கோயில்களில் பூசை செய்யும் அந்தணரின் தகுதிப் பாட்டையும் தனித்துவத்தையும் தமது பாடல்களிலே விளக்கி யுள்ளனர்.

பொய்மை இல்லாத வாய்மையான சொற்களைப் பேசுபவர், திருநீற்றை உடம்பிலே பூசியிருப்பவர், இறைவனை இசையால் போற்றுபவர், வேளை தோறும் பூசை செய்பவர், தமது கையினால் தீயை வளர்த்து மறையை வளர்க்கும் பணியைச் செய்பவர் - அத்தகைய அந்தணர் பணி செய்யும் கோயில்களிலே சென்று வழிபாடு செய்வதால் நற்பயன்கள் உண்டாகும். கோயிலுக் குப் போகமுடியாதபோது அங்கு உறைகின்ற இறைவனை மனத்தால்நினைந்து வழிபாடு செய்தால் எமக்கு எல்லாம் இனியவாக இருக்கும் என சுந்தரர் கூறுகிறார். தான் வாழ்ந்த வழிபாட்டுச் சூழலை நினைத்தபோது மனதில் ஏற்பட்ட இனிமையான உணர்வைப் பாடலில் பதிந்துள்ளார்.

**"பொய்யாத வாய்மையால் பொடிபூசிப் போற்றிசைத்துப் பூசை செய்து
கையினால் எரியோம்பி மறை வளர்க்கும் அந்தணர்தம் கருப்பறியலூர்க்
கொய்யும் மலர் சோலைக் குயில் கூவ மயில் ஆலும் கொகுடிக் கோயில்
ஐயனை என் மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனி யவாறே"**

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

# கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்க காதிலோர் வெண்குழையோடு

அழகு அனைவரையும் கவருந்தன்மையது. இளமைக் காலம் அழகை ஊன்றிக் கவனிக்கும் காலமாகும். இந்த இயற்கை நிலை இன்றுவரை நிலைத்துள்ளது. உலகெங்கம் இந்நிலை காணப்படுகின்றது. அழகை விரும்பும் மனத்தை அலையவிடாமல் ஒரு நிலைப்படுத்தவேண்டும். ஆனால் அவ்வாறு மனதைப் பக்குவப்படுத்துவதற்கு என்ன செய்யலாம்? அழகின்பாலுள்ள கவர்ச்சியை மட்டும் கண்டு மயங்கி நிற்பவரே அதிகம். மற்றவர் தம்மை மதிக்க வேண்டும் என்பதற்காக இயற்கை முறைகளை விடுத்துச் செயற்கை முறைகளைக் கையாண்டு பயனற்ற செயற்பாடுகளையே பலரும் மேற்கொள்கின்றனர். உண்மையான, நிலையான அழகை எப்படி உருவாக்குவது?

இந்த வினாவுக்கான விடையை உலகமே தேடியது. நீண்ட காலம் அழகு நிலைத்திருக்க ஆய்வுகள் பல செய்தது. செயற்கைப் பொருள்களையெல்லாம் உருவாக்கி வணிகப் பயனைப் பெருக்கியது. நிலையான அழகுத் தோற்றதைச் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் பேணி வைக்கும் முறைமை ஒன்றும் தோன்றியது. அழகை அனைவரும் காண அது வழி செய்தது. ஆனால் காலம் செல்லச் செல்ல பேணும் நிலையும் அருகி அது அழிநிலை எய்திவிடும் என்ற அச்சமும் தோன்றியது. எனவே அழகைப் பேணி அதை அனைவரும் கண்டு மகிழச் சைவசமயம் ஒரு வழியைக் காட்டியது. அழகிய உருவை அமைத்து இறைவடிவாகக் காணும் வழிபாட்டு மரபு ஒன்றைத் தொடக்கி வைத்தது.

கோவில்களில் இறைவனைச் சிலைவடிவிலே கண்டு வழிபடும் ஒரு மனப்பயிற்சியைச் சைவசமயம் பயிற்றியது. இறைவனை அழகுக்கோலங்கள் புனைந்த உருவாகக் கண்டு மனம் மகிழ்ந்தபோது அழகு வணங்கப்படவேண்டியது என்ற எண்ணம் வலுப்பெற்றது. ஞானசம்பந்தர் இவ்வெண்ணத்தை மக்களிடையே பரப்பியவராவார். கோவில்களுக்குச் சென்று வழிபாடு செய்யும் போது இறைவனுடைய திருக்கோல அழகிலே மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சியை மக்களுக்கு உணர்த்தினார். உள்ளத்திலே பொங்கிவரும் அழகைக் காணும் ஆவலை, இறைவன் கோலத்திற் கண்டு அமைதி பெறலாம் என்ற உண்மையைத் தனது தேவாரங்களில் பாடிள்ளார்.

இறைவனின் திருக்கோலத்தை அழகுபடுத்துவதற்கு இயற்கையின் இனிய கொடையான மலர்களைப் பயன்படுத்தும் மாண்பினைக் காட்டும் சம்பந்தருடைய பாடல்கள் இன்றும் எமக்கு வழிகாட்டுகின்றன. வழிபாட்டு நிலையிலும் பொது விழாநிலையிலும் இன்று செயற்கைப்பூக்களே சிறப்பிடம் பெற்று வருகின்றன. சமய நிலையில் அவற்றைத் தவிர்க்க வேண்டும். வணிக நிலையில் அவற்றை வாங்கிப் பயன்படுத்துவோர் இறைவன் திருக்கோல அழகை உணரும் மனப்பக்குவம் அற்றவராவர். அவர்களைப் பக்குவப்படுத்த சம்பந்தருடைய பாடல்களை அறிய வைப்பதே சாலவும் சிறந்தது.

"கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்க காதிலோர் வெண்குழையோடு
புனமலர்மாலை புனைந்து ஊர்புகுதியென்றே பல கூறி
வனமுலை மாமலை மங்கையோர் பாகமாய் அவன் வாழ்கொளி புத்தூர்
இனமலர் ஏய்ந்தன தாவி எம் பெருமான் அடி சேர்வோம்"

## மெய்யனை மெய்யினின்று உணர்வானை

'இறைவன் இருக்கிறான்' என்ற நம்பிக்கையோடு வாழும் வாழ்வியலை வகுத்துக்காட்டுவது சமயநெறியாகும். மனிதன் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் நன்மைகளையும் தீமைகளையும் முன்னே உணரும் ஆற்றல் பெறுவதற்கு அவனுக்குச் சமய உணர்வு இன்றியமையாதது. தன்னுடைய வாழ்க்கையின் செல்நெறியைத் திட்டமிடுவதற்குச் சென்ற காலத்து நிலைகளை அவன் எண்ணிப் பார்க்க வேண்டும். அதன்பின் எதிர்காலத்தைப் பற்றிய செயற்பாடு களைத் திட்டமிட வேண்டும். முன்னோர் வாழ்வியலையும் தன்னு டைய எதிர்கால வாழ்வியலையும் இணைத்து நிற்கும் சமயத்தைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்.

இவ்வகையில் 'சமயம்' என்ற சொல் 'நேரம்' என்ற பொருள்தராமல் ஒரு 'செல்நெறி'யைக் குறிப்பதாக பயன்பாட்டி லுள்ளது. மனித வாழ்வின் செல்நெறி எத்தகையது என்பதை முன்னோர், தமது முன்னோர் மூலம் நன்குணர்ந்திருந்தனர். அதனால் அவர் வழிபாட்டு நெறியிலே வாழ்வை நடத்தினர். எனவே 'சமயம்' என்னும் செந்நெறி மக்கள் வழிபாட்டினூடாகக் காலங்காலமாக உணரப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகின்றது.

ஆனால், இத்தகைய மரபான வாழ்வியல் முறை அண்மைக் காலத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவின் வளர்ச்சியால் மாற்றமடையத் தொடங்கியுள்ளது. 'இறைவன்' என்ற, மெய்யாக உணர்ந்த மனப்பக்குவ நிலையைப் பொய்யென்று கூறும் நிலை உருவாகிவிட்டது. நம்பிக்கை என்ற உணர்வினால் இறைவன் பற்றிய உணர்வைப் பெற்றவர்கள் சிலரே. அவர்களும் அந்த நம்பிக்கையை மறந்து செயற்பட்ட தன்மையையும் அதனால் ஏற்பட்ட அவலநிலையையும் அடியார் வரலாறு கூறும் பெரியபுராணம் பதிவு செய்து வைத்துள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனாருடைய வாழ்க்கையில் இத்தகைய அநுபவம் ஏற்பட்டுள்ளது. இறைவழிபாட்டு மரபில் வந்த குடும்பத்திலே பிறந்த அவருடைய மனதிலே இறை நம்பிக்கை குடிகொண்டிருந்தது. ஆனால் பின்னர் கிடைத்த அரசபோக வாழ்க்கை மனிதநிலையில் எதையும் அடையமுடியும் என்ற எண்ணத்தை வலுப்படுத்தியது. அப்போது இறைவனை மறந்து வாழும் நிலை ஏற்பட்டது. அதனால் துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந்தபோது இறைவன் பற்றிய எண்ணமே மெய்யானது. அதுவே மனத்தைப் பக்குவப்படுத்தி உண்மையை உணர வைப்பது என்பதைச் சுந்தரர் நன்குணர்ந்து கொண்டார். அந்த உண்மை அனுபவத்தைப் பாடல் மூலமாக அனைவரும் உணரவைக்கின்றார்.

"மெய்யனை மெய்யினின்று உணர்வானை
மெய்யிலாதவர் தங்களுக்கெல்லாம்
பொய்யனைப் புரமூன்று எரித்தானைப்
புனிதனைப் புலித்தோலுடையானைச்
செய்யனை வெளிய திருநீற்றில்
திகழுமேனியன் மான் மறி ஏந்தும்
மைகொள் கண்டனை வாழ்கொளி
புத்தூர் மாணிக்கத்தை மறந்தென் நினைக்கேனே"

## வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

# அருந்தவத்தோர் தொழுதேத்தும் அம்மான் தன்னை

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழி. மனிதன் தன்னுடைய உடல்நலத்தைப் பேணாவிட்டால் மிகுந்த துன்பங்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடும். சைவநாயன்மார்களில் நீண்டகாலம் வாழ்ந்து இறைபணியை ஆற்றியவர் திருநாவுக்கரசர். 81 வயது வரை வாழ்ந்தவர். அவருடைய வாழ்க்கை மனித வாழ்வியல் பற்றிய ஒரு படிப்பினையாக உள்ளது. இளவயதில் பெற்றோரை இழந்தவர். தமக்கையின் அவல வாழ்வைக் கண்டவர். அதனால் குடும்ப நிலையால் பயின்ற வழிபாட்டு நெறியில் வெறுப்புக் கொள்கிறார். அக்காலத்திலே செல்வாக்குப் பெற்றிருந்த சமணசமய நெறியினைப் பின்பற்றி வீட்டை விட்டே வெளியேறுகிறார்.

நாவுக்கரசருடைய செய்கை மனித நிலையில் சரியெனத் தோன்றினாலும் முன்னோரது வழிபாட்டு மரபு நன்மை பயக்காது என அவர் செய்த முடிவு தவறானது என்பதைப் பின்னர் உணர்ந்து கொள்கிறார். சமணர்களால் 'தருமசேனர்' எனச் சிறப்பான பட்டம் பெற்றுச் செல்வாக்கோடு வாழ்ந்த அவர் சூலை நோயினால் பீடிக்கப்படுகிறார். சமணர்களுடைய வைத்திய முறைகளால் நோய் குணமாகவில்லை; மேலும் வீறு கொண்டு அவரைப் பெரும் துன்பத்திற்கு ஆளாக்கிற்று. அப்போதுதான் திருநாவுக்கரசர் பழைய வழிபாட்டு நடைமுறையைப் பற்றித் தான் எடுத்த முடிவு பிழையானது என்பதை நன்கு உணர்ந்து கொண்டார். தமக்கையாருடைய உதவியால் மீண்டும் சைவ சமயத்தைத் தழுவிக் கொண்டார். தனது பிழையை இறைவனிடம் எடுத்துக்கூறிப் பல பதிகங்கள் பாடினார். அவருடைய வழிபாட்டு நம்பிக்கை வீண்போகவில்லை. நோய் முற்றாகத் தீர்ந்தது.

இதனால் திருநாவுக்கரசர் இறைவனைத் தனது மருந்தாவான் என்று பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். வருகின்ற துயரங்களையெல்லாம் தீர்க்கும் ஆற்றல், இறை நம்பிக்கையுடையவருக்கே கைகூடும் என்பது அவருடைய வாழ்க்கை வரலாற்றால் அறியப்படுகின்றது. இடைக்காலத்தில் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையைக் கைவிட்டதைப் பற்றிப் பாடலில் குறிப்பிடும்போது 'இறைவனைச் சேராதே திகைத்து நாள்களை வீணாக்கி விட்டேனே' என மனம் வருந்துகிறார்.

வாழ்க்கையில் வரும் துன்பங்களையும், துயரங்களையும், இன்னல்களையும், இடர்களையும், அவலங்களையும் களைவதற்கு மருந்தாக இறை நம்பிக்கை இருக்கிறது என அப்பர் கூறும் மனப்பக்குவம் எல்லோருக்கும் இன்றியமையாதது. அரிய தவஞானிகள் இறைவனை நன்கு அறிந்து தொழுதேத்துகின்றனர். மக்களும் மனப்பக்குவம் பெற்றால் இறையருளைப் பெறலாம் என்பதைப் பட்டறிவால் அறிந்த நாவுக்கரசர் அதனை எல்லோரும் உணர வேண்டித் தனது பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார்.

"அருந்தவத்தோர் தொழுதேத்தும் அம்மான் தன்னை
ஆராத இன்னமுதை அடியார் தம்மேல்
வருந்துயரம் தவிர்ப்பானை யுமையாள் நங்கை
மணவாள நம்பியை என் மருந்து தன்னைப்
பொருந்து புனல்தழுவு வயல் நிலவு தூங்க
பொழில் கெழுவு தரு ஓமாம்புலியூர் நாளும்
திருந்து திருவட தளியெம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே".

## ஆலமிடற்று அணியா அடக்கினானை

உள்ளத்தில் இறைவனைப் பற்றிய எண்ணம் நிறைந்திருப்பின் அவன் திருவுருவை நேரில் காணமுடியும் என்கிறார் அப்பர். அவருடைய இறை அனுபவம் வேறுபட்டது. பிற சமயத்தில் நாட்டம் கொண்டிருந்த காலத்தில் இறைவனை மறந்திருந்தமையால் இறைவனைக் காணவேண்டும் என்ற பெருவிருப்புக் கொண்டிருந்தார். பெற்றோருடன் வாழ்ந்த காலத்தில் இறைவனைப் பற்றி அறிந்த அற்புதங்களையும் வரலாறுகளையும் நினைவுபடுத்திப் பார்க்கிறார்.

அந்த நினைவுகள் அவர் நினைவில் நிழலாடும்போது அவற்றைத் தமது பதிகங்களிலே குறிப்பிட்டுப்பாடியுள்ளார். சைவசமயத்தின் பெருமைகளை, முன்னோர் வாயிலாக அறிந்தவற்றையும் தான் கற்றுணர்ந்தவற்றையும் விரிவாகவே பாடியுள்ளார். ஒன்று இறைவனுடைய அருட்செயல்களைப் பற்றிய செய்திகளை குறிப்பிடுவது மற்றது தன்னுடைய அனுபவத்தைக் கூறுவது. இறைவனுடையமிடறு பற்றிய செய்தியைக் கூறும்போது ஆலகாலமாகிய விஷத்தைத் தன்னுடைய கண்டத்திலே அணிபோல இறைவன் அணிந்திருப்பதாகக் கூறுகிறார். இக்குறிப்பு கவனத்திற்குரியது. இறைவனுடைய கழுத்து மட்டுமே நீல நிறமாக இருக்கிறது என அப்பர் கூறிய செய்தி புராணங்களிலே கூறப்பட்ட செய்தியாகும். ஆனால் இன்று சிவனின் உருவைச் சித்திரமாக அமைப்பவர்கள் திருமேனி முழுவதையும் நீல வண்ணத்திலே தீட்டுகின்றனர். இம் மாற்றம் ஆய்வுக்குரியதொன்றாகும்.

அப்பருடைய பாடலில் அவர் இறைவனை உணர்ந்தவற்றைக் கூறும்போது பல்வேறு சுவை உணர்வில் கண்டதாகக் கூறுகிறார். இனிமையான, சுவையுடைய பொருள்களை உண்ணும்போது ஏற்படும் இனிமையான உணர்வை இறைவனைக் கண்டபோது அனுபவித்ததாகக் கூறுகிறார். பால், தேன், பழம், பைங்கரும்பு போன்றவற்றை அருந்தும் போது ஏற்படும் சுவை போல இறைவன் இருந்தான் எனக் கூறுகிறார். நினைவிலே நின்ற இறைவன் நேரில் தரிசனம் தரும்போது ஏற்பட்ட உணர்வை சுவையின்பத்தில் வைத்து விளக்குகிறார். சமணசமயத்திலி ருந்து மீண்டும் சைவத்திற்கு வந்தபோது அப்பர் இறைவனை நினைப்பற நினைக்கிறார். தன்னுடைய சூலை நோயை நீக்கிய தாய்மை அருளைக் கண்டு வியக்கிறார். பாலூட்டி வளர்க்கும் தாய் தருகின்ற முலைப்பால்தான் மனிதன் முதலில் உணரும் சுவை, அதன் இனிமையை எவரும் மறக்க முடியாது. எனவே அப்பர் தனது மீள்நினைவுகளில் அதனை நினைந்து பாடுவது அவரது ஆழமான பக்தியை வெளிப்படுத்துகிறது.

"ஆலமிடற்று அணியா அடக்கினானை ஆலத்தின் கீழ்
அறம் நால்வர்க்கு அருள் செய்தானை
பாலாகித் தேனாகிப் பழமுமாகிப் பைங்கரும்பாய்
அருந்தும் சுவையான் ஆனானை
மேலாய வேதியர்க்கு வேள்வியாகி வேள்வியின்
பயனான விமலன் தன்னை
நாலாய மறைக்கு இறைவன் ஆயினானை
நாரையூர் நகரிற் கண்டேனே"

# அரவினோடு ஆமையும் பூண்டு

ஒரு நாளின் அமைப்பு இரு வகைப்படும். பகற்பொழுது, இரவுப்பொழுது என அதை நம் முன்னோர் அழைத்தனர். காலத்தின் கடப்பை இயற்கைத் தோற்றத்தால் உணர்ந்த காலம் அது. கதிரவனையும் திங்களையும் கண்டு நாளின் தொடக்கத்தை யும் முடிவையும் உறுதி செய்த பண்டைய மக்கள் வாழ்வியல் சீர் பெற்றிருந்தது. வழிபாட்டு நிலையில் நாளின் பாகுபாடு இன்றி யமையாததாகவும் கருதப்பட்டது.

கோயில் வழிபாட்டு நிலையில் இரவும் பகலும் வெவ்வேறு செயற்பாடுகளுக்கு ஏற்ப மக்கள் வாழ்வியல் நடைமுறைகளில் பங்கு கொண்டிருந்தன.

இயற்கைத் தோற்றத்திலே உள்ளத்தை ஈடுபடுத்திய மெய்யடியார்களது செயற்பாடுகள், நாளின் இரு கூறுகளை செயற்பாட்டிலே ஏற்ற நிலையில் இணைத்திருந்தன. பகலும் இரவும், ஒளியும் இருளும் என தோற்றத்தால் உணரப்பட கதிரவன், திங்கள் என்ற இரு சுடர்களும் உதவின. இயற்கையின் இந்த ஒளி தரும் சுடர்களை வழிபாடு செய்யும் முறைமையும் தோன்றியி ருந்தது. அது இயற்கைத் தெய்வ வழிபாடு என அழைக்கப்பட்டது.

கால மாற்றத்தில் வழிபாட்டு நிலையில் கோயில்களும் தெய்வ உருக்களும் தோன்றியபோது இயற்கைத் தோற்றங்களும் இணைக்கப்பட்டன. இறைவன் உருவத் தோற்றத்தைப் பாடிய அடியவர்கள் இத்தகைய இணைப்பை நன்கு பதிவு செய்துள்ளனர். இளவயதினரான சம்பந்தர் பாடல்களில் இயற்கையை இறைவ னோடு இணைத்துப் பாடுந் தன்மை பெரிதும் காணப்படுகிறது. சிவனுடைய கோல அழகைப் பாடும் போது இவ்விணைப்பினை நன்கு சித்திரித்துக் காட்டியுள்ளார்.

இறைவனுடைய ஆபரணங்களாக அரவும் ஆமையும் பூணப்பட்டுள்ளன. புலியின் தோல் ஆடையாக உள்ளது. சிறந்த திருமுடியிலே வெண்மையான திங்கள் சூடப்பட்டுள்ளது. பசுமையான கண்களையுடைய வெண்மையான ஏற்றிலே ஏறி அமர்ந்து வருங்காட்சி மிகவும் அழகானது. அப்போது அவர் பாதம் தொழும் வாய்ப்பும் கிடைப்பதால் இரவும் பகலும் அங்கே உறைகின்ற தெய்வத்தைக் காணலாம் எனப் பாடலிலே பாடியுள்ளார். கடம்பூர் என்னும் திருக்கோயிலில் அவர் கண்ட காட்சி பரவசத்தையும் வியப்பையும் தந்தது. அதனால் அத்திருக்கோயில் சென்று வணங்கினால் இன்ப உணர்வு ஏற்படு மெனப் பாடல் பாடியுள்ளார். பாதத்திலிருந்து திருமுடிவரை இறைவன் கோலம் கண்டு நாம் வணங்கும் முறைமையைக் காட்டி யுள்ளார். இத்தகைய கோல அழகைக் கண்டு வழிபடும் பணிவு எல்லோரிடையேயும் இன்ப உணர்வை ஏற்படுத்தும் எனக் கூறுகிறார்.

"அரவினோடு ஆமையும் பூண்டு வந்துகில் வேங்கையதளும்
விரவும் திருமுடி தன்மேல்வெண்டிங்கள் சூடி விரும்பிப்
பரவுந் தனிக் கடம்பூரில் பைங்கண் வெள்ளேற்றண்ணல் பாதம்
இரவும் பகலும் பணிய வின்ப நமக்கதுவாமே"

## குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும்

இறைவன் மீது நம்பிக்கை கொண்டு வாழும் மக்களுக்குச் சிலவேளைகளில் அந்த நம்பிக்கையில் ஐயம் ஏற்படுவது உண்டு. எதிர் கொள்ளும் துன்பங்களால் இறை நம்பிக்கையை இழப்பதும் வழக்கம். இத்தகைய வேளையில் இறை நம்பிக்கையை இழக்காதிருப்பதற்கு ஒரு வழிகாட்டல் தேவைப்படுகின்றது. ஐயங் கொண்டு அலை பாயும் மனத்தை மீண்டும் நிலை பெற வைப்பதற்கு ஆலயம் சென்று வழிபாடு செய்வதே ஏற்ற வழியாகும். "ஆலயம்" என்பதன் பொருள் மக்களை லயப்படுத்தும் இடம் என்பதாகும். முட்டி மோதிவரும் உணர்வலைகளைக் கட்டுப்படுத்த அங்கு காணும் காட்சிகள் கைகொடுக்கும்.

நாம் அதிகமாக அன்பு கொண்டவர்கள் மீதுதான் கோபம் ஏற்படுகிறது. எமது எதிர்பார்ப்புகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிறோம். அது நடக்காதபோது கோபம் கொள்கிறோம். உடனே அவர்களைப் பற்றிய குற்றங்களையே முன்னிறுத்திப் பேசுகிறோம். ஆனால் நமது எதிர்பார்ப்புகளை அவர்கள் நிறைவேற்றின் அவர்களுடைய குணங்களையே பாராட்டி உரைக்கின்றோம். இத்தகைய மனித குணத்தைப் பற்றி இறை நம்பிக்கையோடு தொடர்புறுத்தி அப்பர் பெருமான் அழகாகப் பாடியுள்ளார்.

ஆலயத்திற்கு வழிபாடு செய்ய வரும் அடியார்கள் இறைவன் தமது மனக்குறைகள் யாவற்றையும் உடனே தீர்க்க வேண்டுமென விரும்புகின்றனர். எனவே தமது குறைகளை நீக்க வேண்டுதல் செய்கின்றனர். அடியார்களின் உள்ளத்து உணர்வு நிலைப்பாட்டிற்கு ஏற்ப வழிபடுகின்றனர். சிலர் இறைவன் குணங்களைச் சொல்லிப் போற்றுகின்றனர்; சிலர் இறைவன் மீது குற்றங்கள் கூறி நிற்கின்றனர். சிலர் அவனை வாழ்த்தி வணங்குகின்றனர். இறைவன் மீது அசையாத நம்பிக்கையும் மாறாத அன்பும் உடையோர் வணங்கி, அவன் மலரடிகளில் நாள் தோறும் நல்ல மலர் இட்டு வணங்குகின்றனர். அப்பர் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த அடியார்கள் எல்லோரும் இறை நம்பிக்கையை எமக்கு நினைவூட்டுபவர் அவர்களது செயற்பாடுகள் எம்மையும் வழிபடத் தூண்டுகின்றன.

மலர்களைக் கொய்து இறைவன் அடிகளில் இட்டு வழிபடுவதால் உள்ளம் அமைதி பெறும். இயற்கையின் கொடையான வண்ண மலர்களை நாம் வழிபாட்டிற்குப் பயன்படுத்தும் போது அது சிறந்த கையுறையாகின்றது. நாம் வழிபாடு செய்யக் கோவிலுக்குப் போகும்போது மலர் கொண்டு போக வேண்டும் என்ற விருப்பத்துடன் இருப்பின் அது எம்மை முயற்சியுடையவராக மாற்றும். நாள் தோறும் தொடர்ந்து செய்யும்போது எமக்கு வினைத்திட்பம் உண்டாகும். இறைவன் எம் மோடிருக்கிறான் என்ற நம்பிக்கையை ஆழமாக உள்ளத்தில் ஊன்றிவிடும்.

"குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவர் அன்புடையாரெலாம்
வணங்கி வான் மலர் கொண்டு அடி வைகலும்
கணங்கள் போற்றிசைக்கும் கரக் கோயிலே"

## நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்

மனிதனாகப் பிறந்த நம்முடைய பிறப்பின் நோக்கம் பற்றிய தேடுதல் ஒன்று இப்போது நடைபெறுகின்றது. பிறவிகளில் எல்லாம் சிறப்பான பிறவி மனிதப்பிறவியே. இதனை உணர்ந்து சொன்னவர் நாவுக்கரசர். இறைவன் கோல அழகைக் கண்டு மகிழ்வதற்கு மனிதனாக இம் மாநிலத்தில் பிறக்க வேண்டும் என்றார். அழகின் வயப்படும் மனித உள்ளத்தை அவர் அறிந்திருந்தார். இயற்கை அழகை விரும்புவோர் சிலரே. ஆனால், செயற்கை அழகை விரும்புவோர் பலர். அதனால் அத்தகையவர்களை வழிபாட்டில் இணைப்பதற்கு இறைவனின் கோல அழகைப் பற்றி அறிவிப்பது நல்லதென நாவுக்கரசர் எண்ணினார்.

குறிப்பாக இளையோர் அழகை நாடிச் செல்லும் இயல்புடையவர். எனவே அவர்களை அவர்களது விருப்பு வழியே அழைத்துச் சென்று இறைவன் கோல அழகைக் காட்ட எண்ணினார். தனித்திருக்கும் இறைவன் கோல அழகைவிட இறைவியுடன் இணைந்திருக்கும் இனிய கோலத்தையே காட்டுவது நன்றென எண்ணித் தனது பாடல்களிலே அதனைப் பதிவு செய்துள்ளார். குழந்தையாக இருக்கும் போது நாம் கண்ட கோல அழகு ஒன்று, அழியாத கோலமாக எமது மனத்திரையில் வரையப்பட்டிருக்கும். எமது தாயையும் தந்தையையும் ஒரு சேரக் கண்டு மகிழ்ந்து மனம் நிறைவெய்திய கணங்கள் உண்டு. ஆனால் வயது முதிரஅந்த அழியாத கோலம் மெல்ல மெல்லச் சிதையும் நிலையும் உண்டு.

இந்தக் கோல அழகைவிடச் சிறந்ததொரு அழகுக் காட்சியை நமக்கு நாவுக்கரசர் காட்டுகிறார். இறைவனும் இறைவியும் ஒன்றாய் இருக்கும் அழகுக் கோலம், எமது தாய் தந்தையரது கோல அழகைவிட உள்ளத்தைப் பிணிக்கும் தன்மையது. முருகன் என்றால், அழகன் என்று பொருள். அந்த அழகைக் காணும்போது முருகனுடைய தாய் எப்படி இருப்பாள் என்ற எண்ணமும் தோன்றுவது மனித இயல்பு. முருகனின் அழகு தாயிடமும் நிலை கொண்டிருக்கும் என்ற எதிர்பார்ப்பும் மனித இயல்பே. இதனை உணர்ந்த நாவுக்கரசர் மனித இயல்பையும் மீறித் தோன்றும் இறைவனும் இறைவியும் இணைந்திருக்கும் அற்புதமான கோல அழகைப் பாடலில் பதிவு செய்து காட்டியுள்ளார். 'நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' என இறைவனும் இறைவியும் அர்த்த நாரீஸ்வர வடிவில் அமர்ந்திருக்கும் கோலத்தைக் கண்டு மகிழத்தூண்டுகிறார். அந்தக் கோலத்தை வணங்கினால் இறைவன் எம்மைத் தாங்கிநிற்பான் என நாவுக்கரசர் கூறுகிறார். எல்லா அடியவர்களையும் தாங்கும் இறையன்பைப் பெறுவதற்கு ஒரு வழியையும் சொல்லியுள்ளார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இலக்கோடு வாழ்வு நடத்த வேண்டும். அப்போது எம்மை இறைவன் என்றும் தாங்கி நிற்பான்.

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்மைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"

## வெள்ளை நீறணி மேனி யவர்க் கெல்லாம்

கோல அழகு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையது. இந்த அழகை இயற்கையிலும் செயற்கையிலும் காணலாம். மனிதரின் கோல அழகு செயற்கையால் ஏற்படுவது. உடலின் கருமையைப் போக்க வண்ணப் பொடிகளைப் பூசும் வழக்கம் இன்றுவரை நிலவுகிறது. பக்தி நெறி நின்ற நாயன்மார்கள் இறைவன் திருக்கோலத்தைக் கண்ணாரக் கண்டு பரவசமடைந்து பாடல்களைப் பாடியுள்ளனர்.

திருநாவுக்கரசர் வயதில் முதிர்ந்தவர். அதனால் மனிதக் கோலங்களை அல்லல் தரும் கோலமாகக் கண்டு பாடுகிறார். இல்லக் கோலமும் இளமைக் கோலமும் அல்லற் கோலங்களெனக் கூறி, அவற்றை விடுத்து இறைவனுடைய கோலங்களைக் காண்பதே நல்லதென்கிறார்.

ஆனால், இக்கருத்தை ஏற்றுக்கொள்ளாத மனிதரே உலகில் அதிகம். வாழ்க்கையென்பது இன்பங்களை மட்டும் அனுபவிப்பது என்பதே அவர்களது விளக்கம். இத்தகைய எண்ணமுடையவர் இளமைக்கோலத்தை நிலைநாட்டப் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வர். அவர்களை நினைத்து நாவுக்கரசர் கோயில் தொண்டு செய்கிறார். கோல அழகை விரும்புவோர் கோயிலின் சூழலையும் அழகுபடுத்தினால் கோயிலை நாடி வருவர். கோயிலுக்குச் செல்ல விரும்பாமல் தம்மைக் கோலம் செய்து வாழ்பவர்கள் இறைவனையே ஈர்க்கும் ஆற்றலைப் பெற வழி சொல்கிறார்.

வெண்ணீறணிந்து மேனியைக் கோலம் செய்பவருடைய உள்ளம் வெண்மையானது. அங்கு இறைவன் நினைவிருக்கும். அந்த நினைவிருக்கும் இறைவன் கோலத்தை நேரிற்பார்க்க வேண்டுமென்றால் கடம்பூர்க்கரக் கோவிலுக்குச் செல்ல வேண்டும். ஆற்றங்கரையிலமைந்த அழகான கோவில் முல்லை, மல்லிகை மலர்த்தோட்டங்களால் சூழப்பெற்ற கோவில் உழவாரப்படையாளியான நாவுக்கரசர் கோவிலின் புறச்சூழலை அழகு படுத்தும் பணியை ஏற்றவர். மணற்புன்னை, ஞாழல், தெங்கு எனக் கோவிலைச் சுற்றியுள்ள மரங்கள் கோவிலுக்கு மேலும் அழகுக் கோலம் தருகின்றன.

இத்தகைய அழகான கோவிலில் துண்டப் பிறையைத் தலையிலே சூடிய இறைவன் கோல அழகு எம் உள்ளத்தைக் கவரும். பிறையைப்பிள்ளைவெண்பிறை, எனக் கூறுகிறார். பக்தர்களுடைய உள்ளத்தைக் கோல அழகால் கவர்ந்தவன். எனவே கோவிலும் அங்கு உறையும் இறைவனும் வணங்கவரும் அடியவரும் வெண்மையான கோல அழகுடையவராக இருப்பது ஓர் அற்புதக் காட்சியென்கிறார். கோவில் வெள்ளை நிற மலர்களால் சூழப்பட்டதால் அழகு பெற்றுள்ளது. இறைவன் சென்னி இளம் வெண்பிறையைச் சூடியதால் கவின் பெற்றுள்ளது. வழிபடவருவோர் மேனியெங்கும் வெள்ளைநிற நீறணிந்திருப்பதால் கோல அழகைப் பெற்றுள்ளனர். இக்காட்சியைக் காண வேண்டின் கடம்பூர்க்கரக் கோவிலுக்கு வரும்படி அழைக்கிறார்.

"வெள்ளை நீறணி மேனி யவர்க் கெல்லாம்
உள்ளமாய பிரனாருறைவிடம்
பிள்ளை வெண்பிறை சூடிய சென்னியான்
கள்வன் சேர் கடம்பூர்க் கரக்கோயிலே"

# கழியுளாரெனவும் கடலுளாரெனவும் காட்டுளார் நாட்டுளாரெனவும்

பக்தி என்னும் உணர்வு அவரவர் பக்குவ நிலைக்கேற்ப வெளிப்படுவது. இத்தகைய பக்தி நிலை ஏற்படுவதற்கு வயது ஒரு தடையாக அமையாது. ஆனால், ஒரு வாழ்வியற் பயிற்சியால் இப்பக்குவநிலை ஏற்படும். வாழும் சூழ்நிலையும் தொடர்பு நிலைகளும் பக்தி செய்யும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தும். குழந்தைப் பருவத்தில் தாயின் வழிகாட்டல் பக்திநிலையில் மனம் செல்வதற்குத் துணை செய்யும். நாள் தோறும் செய்யும் செயல்களில் ஓர் ஒழுங்கும் நேர்மையும் நம்பிக்கையும் ஏற்படும் போது அதற்கு வழிகாட்டிய தாயை வணங்கும் மனப்பக்குவம் தானாகவே தோன்றும்.

திருஞான சம்பந்தர் தமது மூன்றாவது வயதிலே இம் மனப்பக்குவம் பெற்றிருந்ததை அவர் பாடிய 'தோடுடைய செவியன்" என்ற தொடரே நன்கு உணர்த்துகிறது. தொடர்ந்த அவருடைய வாழ்வியல்; இம்மனப்பக்குவம் மேலும் உறுதியடைய வழிகாட்டியது. இறைவன் பற்றிய எண்ணமே அவருடைய சகல செயற்பாடுகளுக்கும் உந்து சக்தியாக விளங்கியது. அதனால் இளமைப் பருவத்திலும் பக்தி நிலைநின்று செயற்படும் திறன் அவருக்கு ஏற்பட்டது. மூன்று வயதில் கோவிற் சூழலில் அவர் பெற்ற அனுபவம் அழமாக மனதில் பதிந்து நின்றமையால் அந்த அனுபவத்தை எல்லோரும்பெற வேண்டும் என்ற நினைப்புடன் செயற்படும் ஆற்றல் தோன்றியது. அல்லல் வந்தபோது அதை அகற்ற ஒரு ஆழமான நம்பிக்கை வேண்டும். அதுவே இறைபற்றிய நினைப்பாகும். துன்ப நினைவுகள் உள்ளத்தில் திரண்டு எழும் போதில் அதைத் துடைத்தெறியும் ஆற்றல் இறை நம்பிக்கையால் உறுதியாகக் கைகூடும்.

இத்தகைய அனுபவத்தைத் தமது வாழ்க்கையில் நேர் கொண்டவர், பக்தர், என்ற பெயரைப் பெற்றவராவர். தத்தமது அனுபவத்திற்கேற்ப இறைவனை உணர்ந்தவர். அவன் உறையு மிடத்தைப் பிறர்க்கும் உரைக்கும் பண்புடைய இறைபக்தராயினர். தொண்டு மனங்கொண்டு பிறர் துயர் தீர்க்கப் பணிபுரிபவர், தமது அனுபவத்தைக் கூறிப் பிறரையும் பரவசப்படுத்துவர். திருஞானசம்பந்தர் அத்தகைய பக்தி நிலை நின்று பணிபுரிபவரை ஒன்று கூட்டி தொண்டுப்பணியைச் செய்யப் பயிற்றினார். அவருடைய இளமையும் அழகும் தூய்மையும் ஒரு கவின் கலந்த பக்திக் கோலமாக எல்லோரையும் கவர்ந்தது. அவரோடு இணைந்து செயற்பட வேண்டும் என்ற விருப்பை ஏற்படுத்தியது. அது ஒரு பக்தி இயக்கமாக நாடெங்கும் பரவியது. பக்தர்களை அவர் அனுபவ நிலையில் இனங்கண்ட சம்பந்தர் செந்தமிழில் அவற்றைப் பதிவு செய்து வைத்தார். அப்பாடல்களில் ஒன்று பக்தி வயப்பட்டவரின் மனப்பக்குவத்தை வரிசைப்படுத்திக் காட்டி எம்மையும் அழைக்கிறது.

"கழியுளாரெனவும் கடலுளாரெனவும் காட்டுளார் நாட்டுளாரெனவும்
வழியுளாரெனவும் மலையுளாரெனவும் மண்ணுளார் விண்ணுளாரெனவும்
சுழியுளாரெனவும் சுவடுதாமறியார் தொண்டர் வாய் வந்தன சொல்லும்
பழியுளார் போலும் பந்தனை நல்லூர் நின்ற எம் பசுபதி யாரே"

வலம்புரி - 13-02-09

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## வண்டாடும் பூங்குழலாள் பாகன்

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்ற முதுமொழி எம்மிடையே வழக்கிலுண்டு. வழிபாட்டு நிலையில் தெய்வம் உறையுமிடம் எல்லாச் சிறப்பும் பெற்று விளங்கும். குழந்தை குடும்பத்தில் எல்லோரையும் மகிழ வைக்கும் தெய்வம் எங்கே இருக்கிறது? என்ற கேள்வி எல்லோர் உள்ளத்திலும் இருக்கிறது. தெய்வம் என்றதோர் சித்தம் உண்டானால் இக்கேள் விக்கு எளிதில் விடை கிடைத்துவிடும். உலக வாழ்க்கையில் பல்வேறு அநுபவங்களைப் பெற்ற முதிர்வினால் தெய்வம் பற்றிய உண்மையை உணரும் வாய்ப்பும் பெற்றவருளர். அப்பர் பெருமான் அத்தகையவர்களில் ஒருவர். இளமை வரை சைவசமய வாழ்வு நடத்திப் பின்னர் சமணசமய நெறியிலே நின்று மீண்டும் சைவசமய நெறியை நாடி வந்தவர். இதனால் மெய்ச்சமய நெறி எது என்பதைத் தெளிவாக விளங்கிக் கொண்டவர். எனவே அவருடைய எண்ணத்தில் இறைவன் பற்றிய தேடல் நிறைய பல பாடல்களாக அவ்வெண்ணங்கள் பதிவாகின.

தெய்வத்தின் தோற்றம், தெய்வத்தின் இருப்பிடம், தெய்வத்தின் அருள் நிலை என்பவற்றைப் பற்றி எடுத்துரைக்கும் அவருடைய திருத்தாண்டகப் பாடல்கள் இன்று எமக்கு வழிகாட்டி யாக அமைந்துள்ளன. ஒரு பாடலிலேயே பல விடயங்களைப் பாடியுள்ள அப்பருடைய பக்தி நிலை எம்மையும் இறைவனைப் பற்றி நினைக்கத் தூண்டுகிறது. வண்டுகள் மொய்க்கும் பூங்குழலையுடைய இறைவியைப் பாகமாகக் கொண்ட இறைவன் தோற்றம் இல்லறவாழ்வின் நிலையை உணர்த்தி நிற்கிறது. திருமறைக்காடு என்னும் தலம் இறைவன் இறைவியுடன் மணாள னாக வீற்றிருக்கும் கோலத்தைக்காட்டுகிறது.

இறைவனுடைய அருட்செயல்கள் எண்ணிடலங்காதவை. பண்டுதொட்டு எம்மைத் தொடரும் பழவினைகளை, அவற்றால் நாம் அனுபவிக்கும் நோய்களையெல்லாம் தீர்க்கும் ஆற்றல் படைத்தவன். எமக்காக எமக்குத் துன்பம் தருபவர்களையெல்லாம் அழிக்கும் இயல்புடையவன். பல்வேறு தலங்களில் நாம் வழிபடுவதற்காக எழுந்தருளியிருப்பவன். தன்னை நினைப்ப வருடைய மனத்துள் இருப்பவன். கோயில்களிலே வழிபடச் செல்லும் போது தெய்வத்தின் தோற்றத்தை உற்று நோக்கும் போது அப்பர் கூறிய கருத்துகளை மீள எண்ணிப் பார்க்கும் போது அடையும் பரவச நிலையே பக்தியுணர்வாகும். பக்தியுணர்வோடு இறைவன் தோற்றத்தை மனத்துள் காணும் நிலையே உயர்ந்த பக்தி நிலையாகும். எனவே இந்த உயர்ந்த மன நிலையைப் பெற எமது மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்குத் திருக்கோயில் களுக்குச் சென்று வழிபாடு செய்ய வேண்டும். எமது மனத்தை இறைவன் தோற்றத்திலே ஈடுபடுத்த அப்பர் பாடல் வழிகாட்டுகிறது.

"வண்டாடும் பூங்குழலாள் பாகன் கண்டாய் மறைக்<br>
  காட்டுறை மணாளன் கண்டாய்<br>
பண்டாடு பழவினை நோய் தீர்ப்பான் கண்டாய் பரலோக<br>
  நெறிகாட்டும் பரமன் கண்டாய்<br>
செண்டாடி அவுணர் புரம் செற்றான் கண்டாய்<br>
  திருவாரூர் திருமூலட்டானன் கண்டாய்<br>
கொண்டாடுமடியவர் தம் மனத்தான் கண்டாய்<br>
  கோடிகாவமர்ந்து றையும் குழகன் தானே"

## இன்று நன்று நாளை நன்றென்று நின்ற விச்சையால்

இளமைப்பருவத்தில் வாழ்க்கை இனிமையாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் உண்டு. இளமைக்காலம் கல்விக்கு உகந்த ஒரு காலமாகும். அறிவுப்பசி கொண்டு அலையும் காலம் எனவும் அதனைக் கூறலாம். குறிப்பாகப் பிறரது செயற்பாட்டை விமர்சனம்செய்யும் எண்ணம் இந்தப் பருவத்திலே முனைப்பாகத் தோன்றும்.

முதியவரைக் கண்டாலே ஒரு வெறுப்பு மூளும். தானும் ஒரு நாள் முதுமையடைய வேண்டும் என்ற நியதியை மறந்துவிட்டு தன் மனத்தை அலையவிடும் காலமும் இதுவே. இத்தகைய இளமைப்பருவத்தை விரும்பிய சம்பந்தர் பல பாடல்களில் தன்னுடைய நோக்கத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

சம்பந்தருடைய வாழ்வியல் சிறுவயது முதல் இளமை வரை ஒரு நெறிப்பட்டதாக இருந்தது. வளர்ப்புச் சூழலால் ஒரு பக்தி நெறியின் செயற்பாடுகளை அவர் உணர்ந்திருந்தார். அதனால் பெரிதும் ஈர்க்கப்பட்ட அவர் இளந்தலைமுறையினரைப் பக்திச் சூழலில் இணைக்கப் பணிசெய்தார்.

இசையின் துணை கொண்டு அந்த இளம் உள்ளங்களை வசப்படுத்தலாம் என எண்ணினார். அதற்கேற்ற வகையில் பக்திப் பாடல்களைத் தலங்கள் மீது பாடினார். ஒவ்வொரு தலத்தைப் பற்றியும் பத்துப்பாடல்கள் பாடினார். தாளத்தோடு அவர் பாடல்களைப் பாடிக் கோயிலை வலம் வந்தபோது இளம் தலைமுறையினர் அவரோடு இணைந்து கொண்டனர்.

தலங்களின் இயற்கைச் சூழலும் அழகிய தோற்றமும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன. வாழ்க்கையைப் பற்றிய உண்மையான நிலையை அறியவைத்தன.

திருக்கோவில் வழிபாட்டால் கிடைக்கும் அமைதியான நிறைவான இன்பத்தை எல்லோரும் அனுபவிக்கலாம் எனக் கூட்டிச் சென்றார் சம்பந்தர்.

உலக வாழ்க்கையின் மீதுள்ள பற்றினால் இன்றைய நாட்பொழுதையும் நாளைய நாட்பொழுதையும் நன்றென்று கருதுகின்ற இச்சையால் தூண்டப்பட்டுச் செயற்படும் இளைஞர்களுக்குச் சம்பந்தர் கூறும் அறிவுரை சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. "இறக்கப் போகின்ற வாழ்க்கையை விட்டு விட்டுச் செல்லுங்கள். அழகான சிவனின் தோற்றத்தைக் கண்டு மகிழலாம்" தொடர்ந்திலங்கும் சோதி வடிவானவனும் வெண்மையான சந்திரனையும் பரந்த புனலையும், கொன்றை மலரையும் செருகியுள்ள உச்சியை உடைய இறைவனின் அழகுக்கோலத்தைக் கூட்டிச் சென்று காட்ட விரும்புகிறார். இளம் உள்ளங்களை அழகு நிச்சயமாக வசியப்படுத்தும் என்பதைத் தனது உணர்வின் மூலம் உணர்ந்தமையால் அதை மற்றவருக்கும் உணர்த்த விரும்புகிறார். திருக்கோடிகா என்னும் திருத்தலத்தில் சம்பந்தர் கண்ட இறைவன் உருவத்தின் சென்னி அழகு இளம் உள்ளங்களைக் கவரும் தன்மையானது. புதுமையை விரும்பும் இளமையை அதுவே ஈர்க்கும்.

"இன்று நன்று நாளைநன்றென நின்ற விச்சையால்

பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்

மின்றியங்குசோதியான் வெண்மதி விரிபுனல்

கொன்றை துன்று சென்னியான் கோடி காவுசேர்மினே"

## மெய்யின் மாசினர் மேனி விரிதுவர் ஆடையர்

வண்ணங்களால் புனையப்படும் அழகுக் கலை ஒன்று உலகெங்குமே இன்று பேணப்படுகிறது. 'கவின் கலை' என்ற சிறப்புப் பெற்றுள்ள இக்கலை வாழ்வியலோடும் நெருங்கிய தொடர்புள்ளது. அழகுக்கு அழகு செய்யும் நிலையில் பல்வேறு வண்ணங்களைப் பயன்படுத்தும் முறைமையும் பண்டைக் காலந்தொட்டே மக்களிடம் பரவியுள்ளது. நீராடும் போது வண்ணப் பொடிகளைப் பயன்படுத்தியதாகப் பதிவுகள் உள்ளன. மேனியில் வண்ணப் பொடிகளைப் பூசித் தோற்றத்தில் பொலிவை ஏற்படுத்தும் முயற்சிகளும் நடைபெற்றுள்ளன. இளவல் சம்பந்தரும் 'காண இனியது நீறு கவினைத் தருவது நீறு' என்று கவின் தரு நிலையைத் தமது பாடலிலே பதிவு செய்துள்ளார்.

இத்தகைய கவின் தரும் வண்ணங்களில் செம்மைக்குத் தனிச்சிறப்பு உண்டு. செம்மலர், செய்யமேனி, செவ்வாடை, செங்கண் எனப் பல சொற்கள் செம்மையோடு சேர்ந்து அதன் சிறப்பை வெளிப்படுத்தி நிற்கின்றன. முருகனுக்கு உகந்த வண்ணமாகச் செம்மை குறிப்பிடப்படுகின்றது. செந்தளிர், செம்பவளம், செந்நெல், செம்பொன், செந்தாமரை, செந்தழல் போன்ற சொற்கள் செம்மையின் வண்ணத்தைத் தரப்படுத்திக் காட்டுகின்றன. செங்காந்தள் செம்மையின் முழுவண்ணம் காட்டும் மலராகும்.

செவ்வலரி செம்மையின் வண்ணத்தின் பிறிதொரு வகையைக் காட்டும். இன்று சிவப்பு என்ற சொல்லால் செம்மை அழைக்கப்படுகின்றது. செவ்வாய், செம்மேனி, செங்கண், செஞ்சடை என்ற உடலுறுப்பு நிலையின் அழகையும் இந்த வண்ணம் உணர்த்தி நிற்கிறது. இதனை பல தமிழ்ச் செய்யுள்கள் பதிவு செய்துள்ளன.

தேவாரங்களில் இறை உருவங்களின் அழகு பற்றிப் பாடும்போது நாயன்மார் செம்மை வண்ணம் பற்றி விதந்து பாடியுள்ளனர். வேறுபட்ட செம்மை வண்ணத்தை உணரும் வகையில் ஒரு பாடலில் விளக்கும் நிலையையும் காணமுடிகின்றது. சிவனுடைய கோல அழகைப்பாடும் சம்பந்தர் தான் கண்ட கவின் சிறப்பைச் சொற்சித்திரமாக வடித்துக் காட்டியுள்ளமை அவவருடைய கவின் கலை ஆற்றலையும் செந்தமிழ்ப் பயிற்சியையும் விளக்கி நிற்கிறது. மெய்யிலே பூசிய சுடலைப் பொடி மேனியிலே துவர் ஆடை செய்யமேனி சடையிலே செழும்புனற் கங்கை. செறிந்த சிவந்த சடை, சிவந்த அடிகள் என அவர் இறைவன் கவின் கோலத்தை நாம் காண வைக்கும் முறைமை அவரது பரவச நிலையைப் பறைசாற்றி நிற்கிறது. பாதாதிகேச நிலையில் சிவன் கோலத்தை உற்று நோக்கும் பக்தி நிலையைப் பயிற்றுகிறது.

அடியிலிருந்து முடிவரை இறைவன் கோலம் செம்மை வண்ணம் கொண்டு விளங்கும் காட்சி கண்வழியே புகுந்து கருத்தில் நிறைகிறது. உள்ளத்தைக் கவரும் செம்மை வண்ணம் பரவச நிலையைத் தருகிறது. இறைவனின் கவின் கோலத்தை மீண்டும் மீண்டும் காண வேண்டும் என பெருவிருப்பைத் தருகிறது.

"மெய்யின் மாசினர் மேனி விரிதுவர் ஆடையர்
பொய்யை விட்டிடும் புண்ணியர் சேர் மங்கலக்குடிச்
செய்ய மேனி செழும்புனற் கங்கை செறிசடை
ஐயன் சேவடி ஏத்த வல்லார்க்கு அழகாகுமே"

## செற்றரக்கன் வலியைத் திருமெல்விரலா லடர்த்து

மனித வாழ்வியலில் ஆடை இன்று அழகு நிலையில் இணைந்துள்ளது. 'ஆள்பாதி ஆடைபாதி' என்ற பழைய தொடரும் பயன்பாட்டில் உண்டு. ஒருவருடைய எடுப்பான தோற்றத்திற்கு ஆடை துணை செய்யும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது. இந்த நம்பிக்கையை வழிபாட்டு நிலையிலே நோக்கும்போது பழைய காலத்தில் ஆடை எத்தகைய நிலையில் இருந்ததென்பதை ஊகித்துணரமுடிகின்றது.

இறைவனுடைய கோலத்தைப் பாடிய அடியவர்கள் இது பற்றிய குறிப்புகளைப் பதிவு செய்துள்ளனர். வயதில் இளமையும் அழகுத் தோற்றமும் கொண்ட சம்பந்தரது தேவாரப்பாடல்களில் கோலச் சிறப்புப் பற்றிய குறிப்புகள் அதிகமாக உள்ளன. பல தலங்களிலே உறையும் சிவனின் கோல அழகைப் பாடிய சம்பந்தர் அந்த அழகினைச் செந்தமிழ்ச் சொற்சித்திரங்களாக வரைந்து காட்டியுள்ளார். அவை மனத்தைக் கவரும் வண்ணம் கொண் டவை.

குளிர்மையான வயல்களால் சூழப்பட்ட 'திருப்பனந்தாள்' என்னும் தலம் காவிரியின் வட கரைத் தலங்களுள் ஒன்றாகும். கோயில் திருச்சுற்றில் பல பனைமரங்களுள. இக்கோயில் அர்ச்சகர் மகள் தாடகை என்பவள் வழிபட்ட லிங்கமும் அங்கு இருப்பதால் 'தாடகையீச்சரம்' என்ற பெயரும் இக்கோயிலுக்கு வழங்கப்படு கின்றது.

அங்கு வீற்றிருக்கும் இறைவன் தோற்றத்தைச் சம்பந்தர் பாடும் போது இறைவனது ஆடை பற்றிய குறிப்பைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். இடையிலே புலித்தோலை அணிந்திருப்பதையும் அதன் மேல் புற்றரவை அணிந்திருப்பதையும் அத்துடன் கோவண ஆடை அணிந்திருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

கோவண ஆடை ஒரு எளிமையான தோற்றத்தைத் தருவது. மேலாடை என்ற நிலையில் புலித்தோல் காணப்படுகிறது. வெளி யாகத் தோன்றும் மேனியெங்கும் வெண்ணீறு பூசப்பட்டுள்ளது. இறைவனுடைய இந்தக் கோல அழகு பார்ப்பவரை ஆடை பற்றி ஆய்வு செய்யத் தூண்டும்.

இராவணனுடைய வலிமையைத் திருமெல்விரலால் அடக்கிய சிவனின் ஆடை எடுப்பாக இல்லாமல் எளிமையாக இருப்பது சம்பந்தரைக் கவர்கிறது. அந்தக் கோலத்தைப் பாடும் போது எமக்கு ஒரு செய்தியையும் தருகிறார். ஆடை என்பது மனிதனுடைய அழகைக் காட்டும் அணியல்ல. அவனுடைய குண இயல்பை வெளிப்படுத்திக் காட்டும் செயற்பாடு என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். குழந்தைப் பருவத்திலே சம்பந்தருக்கு சிவ தரிசனம் கிடைத்தமையால் அந்தக் கோலத்தை ஏனைய கோயில்களிலே உறையும் இறைவன் கோலத்தோடு ஒப்பிட்டு நோக்கும் தன்மை அவரிடம் மிக்கிருந்தது. இறைவன் கோலத்தை உன்னிப்பார்க்கும் பயிற்சியை எல்லோருக்கும் பாடலில் தருகிறார்.

"செற்றரக்கன் வலியைத் திருமெல்விரலா லடர்த்து
முற்றும் வெண்ணீறணிந்த திருமேனியன் மும்மையினான்
புற்றரவம் புலியின்னுரி தோலொடு கோவணமும்
தற்றவனூர் பனந் தாட்டிருத் தாடகையீச்சரமே"

## வன்னி வாளரவு மத்தமதியமுமாறுஞ் சூடி

இறை பக்தி என்பது ஒரு பரவச நிலை. தன்னை மறந்து சூழலால் கவரப்பட்டு மனம் ஒன்றியிருத்தல். இந்நிலை வழிபாட்டுப் பயிற்சியால் எளிதில் கைகூடும். அடியார் பலர் இத்தகைய பக்தி வயப்பட்டுப் பல பாடல்களைப் பாடியுள்ளனர். அப்பாடல்களில் அவர்களின் ஆழமான பக்தி உணர்வும் நெறியும் அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இறையுணர்வினால் முழுமையாக ஆட்கொள்ளப்படுவதற்கு காட்சியனுபவம் தேவை.

நாளாந்தம் காணும் காட்சிகளுக்கு அப்பால் புலன்களைக் குவியப்படுத்தவல்ல காட்சியாக இறைவன் திருக்கோலக் காட்சியை அடியார் கண்டனர். இறைவனுடைய கவின் நிறைந்த தோற்றத்தில் உள்ளடக்கப்பட்டவற்றை உன்னிப்பாகப் பார்க்கின்ற பயிற்சியால் அவற்றைப் பாடல்களிலே விரித்துக் கூற முற்பட்டனர். தமிழ்மொழிப் பயிற்சியும் செய்யுள் புனையும் ஆற்றலும் அதற்கு உறுதுணையாய் இருந்தன.

முதுமை நிலையில் நாவுக்கரசர் பாடிய பாடல்களில் இறைவன் கோலத்தை மிக உன்னிப்பாக பார்த்த தன்மையைக் காணக் கூடியதாகவுள்ளது. கேசாதிபாதமாக இறைவன் கோலக் காட்சியை அப்பர் பாடியுள்ளார். வன்னி, வாளரவு, மத்தம், மதியம், ஆறு என்பவற்றைத் தலையிலே சிவன் சூடியிருக்கும் திருக்கோலம் அவர் பார்வையில் முழுமையாகப் பதிவாகிறது. இறைவன் திருமேனி வண்ணம் கண்களை நிறைவிக்கின்றது. மின்னல் போலப் பளிச்சென்று உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வனப்பு அவர் கண்ட கோல அழகு. அந்த வனப்பின் சிறப்பை எல்லோருக்கும் கூறவேண்டும் என்ற நினைப்புத் தோன்றகிறது. அருகிலே உமையம்மையோடு வீற்றிருக்கும் திருக்கோலம் மேலும் மனத்தைப் பரவசப்படுத்துகிறது. நினைப்பவர் நினைவில் நிறையும் இறைவன் கோலத்தைப் பாடுகின்றார்.

சிவனையும் உமையையும் ஒரு சேரப் பார்க்கக் கிடைத்த பேறு நாவுக்கரசர் வாழ்க்கையிலே மீண்டும் கிடைத்தபோது அவர் நெஞ்சுருகி நிற்கும் நிலை பாடலிலே சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. சிவனையே நினைந்து பாடும் இன்னிசைத் தொண்டர்களையும் திருக்கோயிலில் கண்டபோது அவரது உள்ளம் பக்தியின் பான்மை கண்டு வியந்து போகிறது. திருவாப்பாடி தலத்திலே நாளும் இன்னிசை பாடி வழிபாடு செய்யும் தொண்டர்களில் ஒருவனாகத் தன்னையும் இணைத்துக் கொள்கிறார். அதுவே மன நிறைவு தருமென எமக்கும் உணர்த்துகிறார்.

இறை வழிபாட்டில் இசை இணையும்போது அது எல்லோரையும் ஈர்க்கும். இன்னிசைக் கேட்டு, இறைவன் உறையும் இடத்திற்கு விருப்போடு செல்லும் எண்ணம் தோன்றும். அதுவே உள்ளத்தை மகிழ்விக்கும் இடமென உணர்த்தும்.

"வன்னி வாளரவு மத்தமதியமுமாறுஞ் சூடி
மின்னியவுருவாஞ் சோதி மெய்ப் பொருட் பயனுமாகிக்
கன்னியோர் பாகமாகிக் கருதுவார் கருத்துமாகி
இன்னிசை தொண்டர் பாட விருந்த வாப் பாடியாரே"

## நீறு அடைந்த மேனியின் கண் நேரிழையாள் ஒருபால்

குழவிப் பருவம் மனித வாழ்வியலில் ஒரு தனித்துவமான பருவமாகும். கண்ணெதிரே தோன்றும் காட்சிகளைக் கண்டு வியப்பும் ஐயமும் கொள்ளும் முற்றாத இளம் பருவம்; எதையும் துருவியறிய விரும்பும் பருவம்; கேள்விக் கணைகளால் எல்லோரையும் திணறடிக்கும் குழந்தைப் பருவம். இப்பருவத்திலே குழந்தையைப் பக்குவமாகப் பயிற்ற வேண்டும். பெற்றோரும் உற்றோரும் இப்பணியைச் செவ்வனே செய்யக் கடமைப்பட்டவர்கள். குழந்தை கல்வி கற்கும் பருவத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இப்பணியை ஏற்று அவர்களை நன்னெறியிலே ஆற்றுப்படுத்துவர்.

திருஞானசம்பந்தர் அடியார்களில் வயதில் குறைந்தவர். மூன்று வயதிலே இறைவன் இறைவியுடன் காட்சிதரும் கோலத்தைக் கண்ணாரக் காணும் பெரு வாய்ப்பை பெற்றவர். அதனால், இறைவன் திருக்கோலத்தைக் காண்கின்ற போதெல்லாம் அவருடைய குழந்தைப் பருவத்திற்கேற்ற பக்குவத்தில் பல கேள்விகளைக் கேட்கும் இள அடியாராக விளங்குகிறார். தான் தரிசனத்திற்காகச் செல்லும் தலங்களிலே விரும்பி உறையும் இறைவனுடைய திருக்கோலத்தையே உன்னிப்பாகப் பார்த்துப் பல்வேறு வினாக்களை எழுப்பிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

திருச்சேய்ஞலூர் என்னும் திருத்தலம் பற்றி அவர் பாடிய பதிகத்தில் பலகேள்விகளை இறைவனிடமே கேட்டு நிற்கிறார். குழந்தைப்பருவ நிலையில் இறைவன் பற்றித் தான் பிறர் மூலமாக அறிந்த செய்திகளையும் விளக்கமாக அறிய முற்படுகிறார். ஆலமர நிழலிலே நால்வர்க்கு அறமுரைத்த செய்தியை பதிகத்தின் முதலாவது பாடலிலே வினாவாக்கியுள்ளார்.

திருக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவனின் கோலம் கண்டபோது அவர் குழந்தை மனம் வியப்படைகிறது. அப்பனும் அம்மையுமாக வீற்றிருக்கும் அழகுக் கோலம், சென்னியிலே சூடியிருக்கும் திங்களும் கங்கையும், சேர அரவை அணிந்து அழகாய்த் தோன்றுவதும் அவரைப் பரவசப்படுத்தின. முரண்பட்ட விடயங்களோடு இணைந்திருக்கும் அமைதியான இருப்பு அவர் சிந்தனையைத் தூண்டுகிறது. அது எப்படிச் சாத்தியமாயிற்று என நினைக்கிறார். விண்ணும் மண்ணுமாய் இணைந்திருக்கும் கோலம் கண்டு, அது பற்றி இறைவனிடமே கேட்டுத் தெளிவுபெற எண்ணுகிறார். எரியேந்தி ஆடுவது முப்புரமெரித்தது, வேழம் உரித்தது, வேடனாய் வந்து அம்பு எய்தது, தந்தையைத் தண்டித்தவனுக்கும் தலைமைப் பதவி தந்தது, இராவணனுக்கு அருள் செய்தது; பிரமனுக்கும் அரிக்கும் அருள் செய்தது எனப் பல விடயங்களைக் கேட்டு விளக்கம் பெற எண்ணுகிறார். பத்து பாடல்களிலே பாடிக்கேட்க முனைகிறார்.

அவர், முதலிலே திருக்கோலத்தைப் பற்றிய வினாவை எழுப்புவது, சம்பந்தருடைய குழந்தைப் பண்பு நிலையைக் காட்டி நாமும் இறைவனிடம் கேட்கலாம் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

> "நீறு அடைந்த மேனியின் கண் நேரிழையாள் ஒருபால்
> கூறு அடைந்த கொள்கை அன்றி கோல வளர் சடைமேல்
> ஆறு அடைந்த திங்கள் சூடி அரவம் அணிந்தது என்னே
> சேறு அடைந்த தண் கழனிச் சேய்ஞலூர் மேவியவனே"

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

# விரை கமழு மலர்க்கொன்றைத் தாரான் கண்டாய்

நறுமணம் எம்மைக் கவரும் தன்மையது. ஐம்பொறிகளுள் ஒன்றான மூக்கு நறுமணத்தை உடனடியாக எமக்கு உணர்த்தும். நறுமணத்தை வெளிப்படுத்தும் நல்ல மலர்கள் முற்காலத்தில் மக்கள் வாழ்வியலில் பெரிதும் தொடர்புபட்டிருந்தன. நாளாந்தம் நடைமுறைகளிலும் சிறப்பு நிகழ்வுகளிலும் வழிபாட்டு நடை முறைகளிலும் மலர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக இருந்தது. இயற்கையின் இனிய கொடையான மலர்களைப் பேணும் மலர்ப் பண்பாடு ஒன்று மனித வாழ்வியலோடு நெருங்கிப் பிணைந்திருந்தது.

இன்று இப்பண்பாடு நடைமுறைகளில் மலினப்பட்டு வருகின்றது. குறிப்பாக, வீட்டுச் சூழலிலும் பொது இடங்களிலும் நறுமலர்ச் செடிகள் புறந்தள்ளப்பட்டு செயற்கை மலர்கள் பேணப்படுகின்றன. மேலை நாட்டார் கொணர்ந்த இலைச் செடிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

முன்னோர் வாழ்வியலில் மலர் முக்கிய பங்கேற்றிருந்தது. நறுமணம் இயற்கை நிலையில் சூழலைத் தூய்மைப்படுத்தியது. அழகுபடுத்தும் நிலையில் பல்வேறு நிற மலர்கள் பயன்படுத்தப் பட்டன. வழிபாட்டு நடைமுறையில் நறுமணமான மலர்கள் பயன்பட்டவற்றை தேவாரப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. நாயன்மார்களது பாடல்களில் மலர்ப் பண்பாடு வழிபாட்டு நிலையில் பேணப்பட்டமை விரிவாகவே பேசப்பட்டுள்ளது.

திருக்கோயில் சூழலில் நறுமலர்த் தோட்டங்கள் அமைந்திருந்தன. ஆற்றின் கரையில் அமைந்த திருக்கோயில்களில் நீர்வளம் மலிந்த விளைநிலங்களில் மலர்க்காடுகள் இயற்கையாகவே இணைந்திருந்தன. இயற்கையான மலர்களின் நிறமும் ஒழுங்கு நிலையும் மனிதனைக் கவர, அவன் அவற்றைப் பேண முற்பட்டான். பொன்னியாற்றங்கரையில் அமைந்த திருக் கொட்டையூர் தலத்தைப் பாடிய அடியவரான நாவுக்கரசர் அச் சூழலைப் பாடலில் பதிவு செய்துள்ளார். நறுமணம் வீசும் கோயிலின் சூழலிலிருந்த குரவ மரங்கள் நிறைந்த பொழிலின் அமைப்பையும் பாடலில் குறிப்பிடுகிறார். இறைவனுடைய அருட்சிறப்புகளை எல்லாம் நினைப்பதற்கு நறுமணம் வீசும் மலர்களே வழிகாட்டும் அற்புதமான அனுபவம். அவர் பாடிய பதிகத்திலே பரவியுள்ளது. பொன்னி நதியின் நீர்வளமே அதற்கு முக்கிய காரணமாக இருப்பதையும் உணர்கிறார். "சலம்பூவொடு தூபம்" மறந்தறியேன் என இறைவனிடம் முறையிடும் நாவுக்கரசர் மலர்ப்பண்பாட்டை மனித வாழ்வியலில் நிலைபெறத் தொண்டு செய்தவர். தமக்குப் பின்னே எல்லோரும் இப்பண்பாட்டைப் பேணுவது நன்று என நினைத்தவர். எல்லோரும் இறைவனுக்கு மடையிடும் எளிமையான பொருள் மலர்களே என்பதை உணர்த்தியவர். எம்மையும் அப்பணி செய்யத் தூண்டுகிறார்.

"விரை கமழு மலர்க்கொன்றைத் தாரான் கண்டாய்
வேதங்கள் தொழ நின்ற நாதன் கண்டாய்
அரையதனிற் புள்ளியதளுடையான் கண்டா
யழலாடி கண்டா யழகன் கண்டாய்
வருதிரை நீர்ப்பொன்னி வலஞ் சூழியான் கண்டாய்
வஞ்சமனர்த்தவர்க் கரிய மைந்தன் கண்டாய்
குரவமரும் பொழில் புடைசூழ் கொட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங்கோமான்றானே"

# தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று

பக்தியின் வசப்பட்டவருடைய செயற்பாடுகள் சற்று வேறுபட்டன. பொதுவான செயற்பாடுகளாக நாம் வகுத்துக்கொண்ட நடைமுறைகள் சில உள. உணவு உண்பது, ஆடை அணிவது, மனம் போனபடி பொழுதைப் போக்குவது, நட்புப் பாராட்டுவது என அவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் சித்தத்தைச் சிவன் பால் வைத்தவர்களுடைய செயற்பாடு பார்ப்பவர்களக்கு விநோதமாக இருக்கும். அத்தகைய பக்திவயப்பட்டவர்களுடைய செயற்பாடுகளை நாயன்மார் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

திருக்கோயிலில் அவர்கள் கோலம் கண்டு அதனைப் பாடலிலே பதிவு செய்யும்போது ஏனையவர்களும் அதைப் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும் என்ற நோக்கம் நாயன்மாருக்கு இருந்தது. திருக்கோயிலில் தொழுகின்றனர்; தூய்மையான நறுமலர்களைத் தூவிப் பாடி வழிபடுகின்றனர். அழுகின்றனர். இறைவன் மேல் கொண்ட காமத்தால் அரற்றுகின்றனர். சிலர் வீண் பொழுது போக்கி வழிபாட்டைப் புறக்கணித்து நிற்கின்றனர். இவர்கள் எல்லோரையும் தனது கணக்கிலே இறைவன் எழுதுகின்றான். கோயில் எல்லோரும் ஒன்று கூடி வழிபாடு செய்யும் ஒரு பொது இடம். அவரவர் தத்தமது மனப்பக்குவத்திற்கு ஏற்றவகையில் வழிபாடு செய்யும் நிலையை நாவுக்கரசர் தனது பாடலில் தொகுத்துக் கூறியுள்ளார்.

மக்களின் மனப்பக்குவத்தை அவர் ஒரு வரிசை நிலையிலே எடுத்துக்காட்டுகிறார். மனப்பக்குவம் பெற்ற பக்தர்கள் இறைவன் பேராற்றலை உணர்ந்து, தமது கைகளைத் தலைமேல் வைத்துப் பூரண சரணாகதி நிலையில் தொழுகின்றனர். தம்மை இறைவனுக்கு அடைக்கலமாக்கி வழிபடும் அவர்களை முதலிலே குறிப்பிடுகின்றனர். அடுத்து மலர்களைத் தூவி வழிபாடு செய்பவர்களைக் காண்கிறார். திருக்கோயிலுக்குச் செல்லும் போது தூய்மையான மலர்களைக் கொண்டு போய் இறைவன் காலடியிலே பக்தியுணர்வோடு தூவித்துதித்து வழிபடுபவர் ஒருநியமமான வழிபாட்டைச் செய்பவர். வேறு சிலர் திருக்கோயிலிலே அழுது வழிபாடு செய்கின்றனர். தாங்கமுடியாத துன்பங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி அரற்றிக் கொண்டிருக்கின்றனர். இறைவன் திருச்செவியில் தமது குரல் கேட்கவேண்டும் என்ற அவாவுடன் வழிபாடு செய்கின்றனர். இறைவனைத் தமது குறைகேட்கும் அரசனாக நினைத்து அவர்கள் நம்பிக்கையோடு வழிபடும் காட்சி பிறரையும் அவர் குறைகேட்கத்தூண்டும் பரிவு நிலைக்கு ஆளாக்கும். இவற்றையெல்லாம்விட, கோயிலுக்கு வந்து வீணே பொழுது போக்கி இறை வழிபாட்டைப் புறக்கணிப்பாரையும் திருநாவுக்கரசர் சுட்டிக்காட்டத்தவறவில்லை. இந்த வழிபாட்டு நிலைகள் இன்று வரை தொடர்கின்றன. இறைவன் எழுதும் கீழ்க் கணக்கில் இவை இடம்பெறும். இங்கு கீழ்க்கணக்கு என்ற தொகுப்புத் தொடர் இடம்பெற்றுள்ளது.

"தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கின் அம்பரீசனே"

## என்னிலாரு மெனக் கினியாரில்லை

எமக்கு இனியவரைத் தேடும் இயல்பு எமக்கு உண்டு. குழந்தைப் பருவத்தில் தாய் எமக்கு மிக இனியவளாகத் தோன்றுகிறாள். ஆனால் வளர்ந்த பின்னர் சிலவேளை எண்ணத்தில் மாற்றமேற்பட்டு விடுகிறது. இளமைப் பருவத்தில் நட்பு மிக இனிய உறவாக இருக்கும். இந்த நட்பும் முதுமை வரை நிலைத்து நிற்பதில்லை. சிலருக்கு நட்பு கேண்மையாகி வாழ்க்கைத் துணையாகும் நிலையும் உருவாகும். அந்த உறவும் முதுமையில் முறைமாறி விடுவதுண்டு. எமக்கு இனியவர் யார்? என்ற கேள்வி ஒன்று உருவாகியுள்ளது.

எமக்கு எம்மைப் போல இனியவரைத் தேடுவது எளிதான செயலன்று. எமது குணவியல்புகள் எல்லாவற்றையும் இன்னொருவரிடம் எதிர்பார்க்க முடியாது. எமது விருப்புகளையெல்லாம் நிறைவேற்றும் ஒருவர் எமக்கு இனியவராகத் தோன்றலாம். ஆனால் அவரும்இடையில் வெறுப்புத்தரும் செயல்களைச் செய்ய முற்பட்டால் 'இனியவர்' என்ற மதிப்பீட்டிலிருந்து இறங்கிவிட நேரிடும். எனவே எமக்கு இனியவர் நாமே தான்.

திருநாவுக்கரசர் இக்கருத்தை மிகத் தெளிவாகத் தனது தேவாரப் பாடலில் எடுத்துக் கூறியுள்ளார். 'என்னில் ஆரும் எனக்கினியாரில்லை' என்ற அவருடைய கூற்று அனுபவநிலையால் வெளிப்படுகின்றது. தனது வாழ்க்கையில் பல கஷ்டங்களை அனுபவித்த அவருக்கு அவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்குத் தான் எடுத்த முடிவே துணை நின்றதை நன்கு உணர்ந்தமையால் இவ்வாறு கூறியுள்ளார். சமண சமயம் தனக்குத் தந்த செல்வாக்கால் சைவசமயத்தை விட்டு சமணசமயநெறி நின்ற நாவுக்கரசருக்குத் தன்னைவிட இனியவன் ஒருவன் இருப்பதை முதலில் உணரமுடியவில்லை. திருக்கோயிலில் தொண்டு செய்யும் போது ஈசனே தனக்கு மிகவும் இனியவானக இருப்பதை நன்கு உணர்ந்தார். கேட்பதையெல்லாம் கொடுக்கின்ற ஈசனின் அருட் குணம் தான் இனிய குணமாகும். பலன் கருதாது செய்யும் உதவியை மனத்தினால் இனியவரால் தான் செய்யமுடியும். அதனால் இறைகுணம் என்பது ஒருவருடைய மனத்தை மகிழ்விக்கும் செயற்பாடாகும். தன்னைப் பற்றிச் சிந்தியாமல் பிறரை மகிழ்விக்கும் பணியைச் செய்பவர் பிறருடைய உயிர்ப்பாக நின்று வாழ்வார்.

இறைவன் எமது உள்ளத்திலே புகுந்து எம்மை உயிர்ப்பிக்கும்போது அவனே எமக்கு எல்லோரைக் காட்டிலும் இனியவன் என்ற உணர்வு ஏற்படும். இறைசிந்தையைக் கொண்டவர் எப்போதும் மகிழ்வாய் இருப்பர். அவருக்குப் பிறர் தன்னை மகிழ்வூட்டவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எள்ளளவும் இருக்காது. அடியார் என்ற நிலையில் பிறரிடம் அன்பு செலுத்தும் ஆர்வம் ஏற்படும். அதனால் அனைவரும் அடியாராக நின்று பிறரிடம் அன்பு செலுத்துகையில் யார் யாருக்கு இனியவரென்பது தெளிவுறும்.

"என்னிலாரு மெனக் கினியாரில்லை
என்னிலு மினியா னொருவன்னுளன்
என்னுளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னுளே நிற்குமின்னம் பரீசனே"

## செவிகளார்விப்பன சிந்தையுட் சேர்வன

எமது கண்ணில் தோன்றும் காட்சிகள் எமக்கு பல்வேறு உந்துதல்களைத் தரும். எமது பார்வை படும் இடங்களில் எம்மைப் பரவசப்படுத்தும் காட்சிகள் இருப்பின் அதை மீண்டும் மீண்டும் சென்று பார்க்கும் ஆவல் உண்டாகும். மனிதனுடைய உடல் உறுப்புகளில் செவி, கண், நா என்னும் மூன்றும் மிகவும் இன்றியமையாதவை. செவி எல்லாவிதமான ஒலிகளையும், அவற்றின் வேறுபாடுகளையும் துல்லியமாக உணர்த்தும் பொறுப்பைச் செய்கிறது. கண் எம்மைச் சூழ உள்ளவற்றைத் தெளிவாக நாம் காண்பதற்குத் துணையாகவுள்ளது. நா எமக்கு இரு வகையில் உதவுகிறது: சுவைகளைப் பகுத்து அறிவதற்கும் சொற்களால் எமது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும் துணையாகவுள்ளது.

எனவே, தொழில்நுட்ப நிலையில் செவி, கண், நா என்னும் மூன்று பொறிகளும் தகவல் தொழில் நுட்ப அறிவை எமக்கு ஊட்டும் சாதனங்களாக விளங்குகின்றன. எம்மைச் சுற்றியுள்ள சூழ் நிலையில் உள்ள ஒலிகளை அறிந்து அவற்றை வெளிப்படுத்தும் மூலங்களை பார்வையால் கண்டறிந்து அவை பற்றிய கருத்தை எடுத்துரைப்பதற்கு மூன்று பொறிகளும் ஒருங்கிணைந்து தொழிற்பட வேண்டும். இப்பொறிகளின் இயக்கத்தால் மனிதன் தன்னை சூழ உள்ளவர்களோடு தொடர்பாடல் கொண்டு வாழ்கிறான்.

இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் நவீன கருவிகளின் ஆக்கமும் மின் வலுவும் இணைந்து, மனிதன் தொடர்பாடலைச் செய்வதற்கு முன்னிற்கின்றன. தகவல் தொழில் நுட்பமும் தொடர்பாடலும் புதிய கற்கைநெறிகளாக உலகெங்கும் சிறப்புறுத்திப் பேசப்படுகின்றன.

ஆனால், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எமது நாயன்மார் இது பற்றிய அறிவை மக்களுடன் எடுத்துரைத்துள்ளனர். மனிதனுக்கு இயற்கை வழங்கியுள்ள பொறிகளினால் அவன் இப்பணியை ஆற்றலாம் என உணர்த்தியுள்ளனர். இயற்கையோடு இயைந்த இறைவழிபாட்டில் இப்பொறிகளின் தொழிற்பாட்டை எடுத்துரைத்து மனிதனின் மொழியாற்றலையும் தகவல் தொடர்பாடல் அறிவையும் பெறுவதற்கு வழி கூறியுள்ளார். இது சிறப்பானதொரு கற்கை நெறியாக விளங்கியுள்ளது.

திருந்து தேவன்குடியென்னும் கோயிலில் வீற்றிருக்கும் அருட்கோலத்து இறைவனை வழிபாடு செய்யும்போது செவியும் கண்ணும் நாவும் ஒன்றிணைந்து தொடர்பாடல் செய்வதையும், மொழி ஆற்றல் அதைக் கவிதையாக வெளிப்படுத்துவதையும் திருஞானசம்பந்தர் தனது தேவாரத்தில் பதிவு செய்துள்ளார். அவருடைய அன்றைய வழிகாட்டல் பொதுமக்கள் அனைவரையும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடலில் வல்லவராக ஆற்றுப்படுத்துகிறது.

"செவிகளார்விப்பன சிந்தையுட் சேர்வன
கவிகள் பாடுவன கண் குளிர்விப்பன
புவிகள் பொங்கப் புனல் பாயும் தேவன்குடி
ஆவிகளுய்க்கப்படும் அடிகள் வேடங்களே"

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

## பதியுஞ் சுற்றமும் பெற்ற மக்களும் அண்டை யாரவர்பெண்டிரும்

மனை வாழ்க்கையென்பது இல்லறம் எனச் சிறப்பாகப் பேசப்படுவது; நிலையாக ஓரிடத்தில் கூடி வாழ்வது எல்லோருக்கும் இன்பம் தரும். அந்த வாழ்க்கையில் இருக்குமிடமும் நன்றாக அமையவேண்டுமென எல்லோரும் விரும்புவர். அத்துடன் சுற்றத்தவரும் பெற்ற மக்களும் அண்டை அயலிலுள்ளவர்களும் பெண்களும் சூழ இருக்க வேண்டும் என்பதே மனை வாழ்க்கையின் சிறப்பு என்றும் கருதப்படுகிறது. இத்தகைய ஆரவாரமான வாழ்க்கையைப் பற்றிய மதிப்பீட்டைச் சுந்தரமூர்த்திநாயனார் வேறு விதமாகத் தனது தேவாரப் பாடலிலே பாடியுள்ளார்.

சுந்தரர் பெற்றோருடைய அன்பான அரவணைப்பிலே வாழும் சிறு பராயத்திலே, அவர்களைப் பிரிந்து அரசருக்கு வளர்ப்பு மகனாக வாழும் பேறு பெற்றவர். திருமண நிலையிலும் முதல் திருமணத்தின்போது இறைவனால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டவர். பின்னர் இரு பெண்களை ஒன்றன்பின் ஒன்றாகத் திருமணம் செய்து பல அல்லல்களை எதிர்கொண்டவர். அதனால் மனை வாழ்வு என்பது அவரைப் பொறுத்தவரையில், மிகச் சிக்கலான தென்றே காணப்பட்டது. செல்வம் இல்லாத மனை வாழ்க்கையில் இன்பம் காணமுடியாது. தனக்குத் தேவையானவற்றை இறைவனிடம் தோழமையுணர்வுடன் கேட்டுப் பெற்றுக் கொண்டாலும் அருள் வாழ்க்கையே சிறந்தது என்பதே சுந்தரர் தனது வாழ்வியலில் கண்டதெளிவாகும்.

எனவே, மனை வாழ்க்கையில் துன்பம் தொடரும்போது அதை வெல்வதற்கான வழியைச் சுட்டிக்காட்டும் சுந்தரர் பாடல்கள் எம்மையும் சிந்திக்கத் தூண்டுகின்றன. மனை வாழ்க்கையை விடத் திருக்கோயில் வழிபாடே நிலையான இன்பந்தரும் எனக் கூறுகிறார். 'திருப்புறம்பயம்' என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனைத் தொழும்படி தனது நெஞ்சத்தை ஆற்றுப்படுத்துகிறார். அங்குள்ள இறைவன் தோற்றத்தை இயற்கையின் கோலமாகக் காட்டுகிறார். நிறை நிலாவையும் செம்மையான சடைக் கற்றைகளிடையே பாயும் கங்கை நதியுமாகத் தோன்றும் இறைவன் மகிழ்ந்துறையும் திருக்கோயிலின் சூழல் மகிழ்வைத் தரும். மல்லிகை, செண்பகம் போன்ற புதிய மலர்கள் மலர்ந்திருப்பதால் பகற்பொழுதெல்லாம் நறுமணம் வீசும் இடமாக உள்ளது. இத்திருகோயில் வழிபாட்டில் நீ மகிழ்வுடன் வாழலாம் எனத் தனது நெஞ்சத்திற்கு எடுத்துரைத்துள்ளார்.

போதும் என்ற ஒரு மன நிலையை வழிபாட்டு வாழ்வியல் அனுபவத்தால் பெற்ற சுந்தரர் அதை எல்லோருக்கும் அறிவிக்க விரும்புகிறார். ஆரவாரமான மனையின் சுற்றுப்புறச் சூழலைவிட இயற்கையழகும் நறுமணமும் கொண்ட கோயிற் சூழலுக்கு எம்மை அழைத்துச் சென்று அறிவூட்டப்பாடுகிறார்.

"பதியுஞ் சுற்றமும் பெற்ற மக்களும் அண்டை யாரவர் பெண்டிரும்
நிதியிலிம்மனை வாழும் வாழ்க்கையு நினைப் பொழிமட நெஞ்சமே
மதியஞ் சேர் சடைக் கங்கை யானிட மகிழ மல்லிகை செண்பகம்
புதிய பூ மலர்ந்தெல்லி நாறும் புறம் பயந்தொழப்போதுமே"

# சொன்மாலை பயில்கின்ற குயிலினங்கள் சொல்லீரே

இறைவன் பற்றிய நம்பிக்கை மனிதவாழ்வியலின் அடிப்படை என்பது நமது முன்னோர்களால் உணர்த்தப்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையால் இறைவனை எமக்கு மிக நெருக்கமான உறவாக எண்ணி வாழும் முறைமை ஒன்று இருந்துள்ளது. வாழ்க்கையில் எதிர்கொள்ளும் துன்பத்தையும் இன்பத்தையும் பகிர்ந்து கொள்ள ஒரு உறவு தேவை. அந்த உறவு எமக்கு அருகில் இருக்க வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகிறோம்.

அருகில் இல்லாதபோது தொடர்பு கொண்டு பேச வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது. ஆனால் உலகியல் நிலையில் எல்லோருக்கும் இத்தகைய உறவு கிடைப்பதில்லை. கிடைத்திருந்தாலும் தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்படுவதுண்டு. இந்த நிலையில் மனித மனம் துவண்டுவிடும். வாழ்வை வெறுத்துச் சாவைத் தழுவத் தயாராகும். தனது மன அழுத்ததைப் புரிந்து கொண்டு ஆறுதல் தந்து அன்புடன் அரவணைக்க ஒரு நட்பு இல்லையே என ஏங்கிநிற்கும். கடந்து போன வாழ்வையும் இருந்த இருப்பையும் எண்ணிச் சோர்ந்து விடும். அதுவே ஒரு நோயாகி மனித உடலையும் உள்ளத்தையும் வருத்தும். இத்தகைய நோயை மாற்றி மனிதனை மீண்டும் வாழ வைக்க ஒரு மருந்து தேவை. அதனை எமது நாயன்மார்களில் வயதில் மூத்தவரான நாவுக்கரசர் தனது பாடல்களிலே விளக்கிக் கூறுகின்றார்.

வாழ்க்கையில் ஒரு பற்று ஏற்படுவதற்கு சிறந்தவொரு உறவு நிலையை அறிமுகம் செய்துள்ளார். இறைவனையே எமக்கு மிக நெருக்கமான உறவாகக் கொண்டு வாழும் போது மனித மனமும் உடலும் நலம் பெற்றுப் பொலிவு பெறும் என்ற உண்மையைப் பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார். நெருக்கமான பற்றுக் கொண்ட உறவாக இறைவனையே மனத்தில் வரித்துக் கொண்டால் வாழ்க்கை அமைதி பெறும் என்பதே அவருடைய வாழ்வியல் அநுபவம்.

இறைவனோடு இயற்கை நிலையில் தொடர்பு கொள்ள வழியையும் காட்டியுள்ளார். இயற்கையாக எம்மோடு சூழ இருக்கும் உயிரினங்களைத் தோழமையாகக் கொண்டு வாழும் வாழ்க்கையை அறிமுகம் செய்கிறார். இறைவன் இருக்குமிடத்தை உணர்ந்த குயிலினங்களைத் தோழமையாக்கித் தொடர்பாடல் செய்ய முடியும் எனக்காட்டுகிறார். எம்முடைய நிலையை இனிமையான குரலில் எடுத்துக்கூறக் கூடிய ஒரு நல்ல தூதாகக் குயிலினத்தைக் குறிப்பிடுகிறார்.

"யாரொடு நோவேன்! யார்க்கெடுத்துரைப்பேன்! என்று வருந்தாமல் எமது நிலையைச் சோலைக் குயிலினங்களிடம் சொல்லிவிட்டால் போதும். அவை இறைவனுக்கு அதை ஏற்றபடி எடுத்துரைத்து எம்மையும் இறைவனையும் தொடர்புபடுத்திவிடும் எனப் புதியதொரு நம்பிக்கையைத் தன் வாழ்வியல் அனுபவத்தை எமக்கும் வழியாக்கியுள்ளார்.

"சொன்மாலை பயில்கின்ற குயிலினங்கள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகு திங்கள் முகிழ் விளங்கி முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநல முண்டிகழ்வானோ"

## கண்ட கங்காள் முண்டகங்காள் கைதைகாள் நெய்தல் காள்

இயற்கையை எமக்கு இனிய தோழமையாகக் கொண்டு வாழும்போது உள்ளம் அமைதி பெறும். இறைவன் கொடையான இயற்கைத் தோற்றத்தை நன்கு ஊன்றிக் கவனிக்கும் பயிற்சி ஒன்று தேவை. நொந்துகிடக்கும் உள்ளத்தையும் மலர வைக்கும் ஆற்றல் இயற்கைக்கு உண்டு. பூத்துக்குலுங்கும் செடியை சற்று நேரம் ஊன்றிக் கவனித்தால் அது எம்மோடு உரையாட விழைவதை நாம் உணரமுடியும். மனத்தில் உறைந்து கிடக்கும் உணர்வுகளை இளகச்செய்யும் மலர்களின் சிரிப்பு மனிதனையும் சிலிர்க்க வைக்கும். இறைவன் படைப்பில் எல்லா உயிரினங்களும் நட்புறவுகளே என்ற தெளிவு ஏற்படும்.

பக்தி நெறி நின்ற அடியார்கள் இக்கருத்தை தமது பாடல்களிலே தெளிவாக புலப்படுத்தியுள்ளனர். சிறப்பாக இயற்கையின் மலர்கொடையைப் பற்றி விதந்து பேசியுள்ளனர். பேச்சுத்துணைக்கென யாரும் இல்லாத தனிமை நிலையில் இயற்கையோடு உறவாடி மகிழலாம் என காட்டியுள்ளனர். நிலத்திலும் நீரிலும் பூத்துக்கிடக்கும் மலர்கள் இறைவனோடு நெருங்கிய தொடர்புடையவை. இறைவன் திருமேனியை அலங்கரிக்கும் பேறு பெற்றவை. திருவடியையும் திருமுடியையும் தழுவும் உயர்ந்த பேறுடையவை. அதனால் அந்த மலர்களிடம் எம் குறைகளைச் சொல்லி இறைவனிடம் தூது அனுப்ப லாம்.

இல்லத்தின் தன்மைக்கேற்ற மலர்களின் வேறுபாட்டை யும் ஊன்றிக்கவனிப்பதற்கு நாவுக்கரசர் ஆற்றுப்படுத்துகிறார். கண்டகம், முண்டகம், கைதை, நெய்தல் என அவர் வேறுபடுத்திக் காட்டும்போது மலர்களின் அழகுத் தோற்றம், வண்ண வேறுபாடு நறுமணம் என்பவற்றையும் உணர்த்தியுள்ளார். தற்போது அம் மலர்களின் பெயர்கள் வழக்கொழிந்து வருகின்றன. நாவுக்கரசர் மலர்களின் பெயர்களை பாடல்களில் குறிப்பிட்டு இருப்பது போல ஏனைய நாயன்மார்களும் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

அதனால் தமிழ்மொழியில் மலர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த மலர்களோடு பேசும்போது உள்ளக் கிடக்கையை முழுமை யாக வெளிப்படுத்தலாம். கோயில், மலர்களால் சூழப்பட்டுப் பொலிவுடன் இருக்கவேண்டும் என்ற கருத்தும் நாவுக்கரசரிடம் இருந்தது. "உழவாரத்தொண்டு" என்ற புதியதொரு நெறியைப் பக்தியில் அவர் இணைத்திருந்தார். வண்டுகள் வந்து உலாவும் மலர்ச் சோலையில் பக்தி வயப்பட்டவர் தனது குறையைக் கூறி மனம் ஆறலாம் என்ற நாவுக்கரசரது வழிகாட்டல் மலர்ப் பண்பாட்டை பேணும்படி மறைமுகமாகக் கூறுகிறது. மன அழுத்தமும் மன உழைச்சலும் மன வெறுமையும் தீர மலர்ச் செடிகளை வளர்த்து மலர்களால் இறைவனை வழிபட வழிகாட்டு கிறார்.

"கண்ட கங்காள் முண்டகங்காள் கைதைகாள் நெய்தல் காள்
பண்டரங்க வேடத்தான் பாட்டோவப் பழனத்தான்
வண்டுலாந் தட மூழ்கி மற்றவன் என் தளிர் வண்ணம்
கொண்ட நாடனறிவான் குறிக்கொள்ளாதொழிவானோ"

## மனைக் காஞ்சி இளங்குருகே மறந்தாயோ

பிரிவு என்பது மனித வாழ்வியலில் எல்லோரும் எதிர்கொள்ளவேண்டிய ஒன்றாகும். பண்டைய இலக்கியங்கள் பிரிவு பற்றி விரிவான பல விளக்கங்களைத் தந்துள்ளன. இளமையிலும் முதுமையிலும் ஏன் குழந்தைப் பருவத்திலும் கூடப் பிரிவு துன்பமானதே. உறவையும் சுற்றத்தையும் நட்பையும் விட்டுப் பிரிந்திருக்கும் போது அநுபவிக்கும் துன்பத்தை மாற்றுவதற்கு ஏதும் வழியுண்டா என்ற தேடல் எல்லோரது உள்ளத்திலும் இருக்கிறது. எம்முடையது என்ற பற்றும் உரிமையுணர்வும் பிரிவின்போது அழுத்தமாக ஏற்படுகின்றன. மூளாத்தீபோல் உள்ளே கனன்று, முகத்தால் வாடி அல்லற்படும் நிலையைச் சுந்தர மூர்த்தி நாயனார் எடுத்துரைத்துள்ளார்.

பக்தி நிலையில் பிரிவால் வருந்தும் நிலையை திருநாவுக்கரசர் பாவனை செய்து பாடியுள்ள பாடல் ஒன்று மனித மனங்களை ஆற்றுப்படுத்தும் தொடர்பாடலாக உள்ளது. இறைவனோடு கொண்டிருந்த நெருக்கமான தொடர்பை நாவுக்கரசர் மனித வாழ்வியலில் இணைத்துக் காட்டுகிறார் பிரிந்தவரோடு தொடர்பை ஏற்படுத்த ஏற்ற தூதர்களை இனங்காட்டுகிறார். இயற்கை நிலையில் மனிதனைச் சுற்றி இருக்கும் உயிரினங்கள் அவனுக்காகத்தூது செல்லும் என்கிறார்.

பெண்ணொருத்தியாக நின்று உணர்வு நிலை வெளிப்பாட்டில் அவள் பிரிவைப் பாடலில் உணர்த்தும் நாவுக்கரசரின் பக்தி நெறி இயற்கையை மனிதனுக்குத் தோழனாக்குகிறது. வீட்டருகேயுள்ள காஞ்சி மரத்தில் வாழும் இளங்குருகையும் பழனத்திலே பறந்து திரியும் வண்டையும் தூதாக அனுப்பித் துயர்தீர்க்கலாமெனக் கூறுகிறார். வழக்கமாக இளங்குருகு பக்தி வயப்பட்டவர்களின் நிலையை இறைவனுக்கு எடுத்து உரைக்கும் இயல்புடையது. அதேபோல வண்டும் தூது செல்லும் பண்புடையது. பிரிவால் வருந்துவோரது முகக் குறிப்பால் அவர் நிலையறிந்து ஆறுதல் சொல்லும் ஓர் அன்பு மனம் அவற்றுக்கும் உண்டு. எம்மோடு அவை பேசுவது எமக்குப் புரிவதில்லை. ஆனால் தமிழர் பண்பாட்டில் காகம் கரையும்போது அது ஏதோ செய்தியைச் சொல்கிறது. என்ற நம்பிக்கை இருந்தது. அது தொடரவேண்டும். பறவைகளையும் வண்டுகளையும் நட்பு நிலையில் தொடர்புபடுத்தி வாழும் ஒரு வாழ்வியல் மனிதனுக்கு இன்றியமையாதது என நாவுக்கரசர் கூறுகிறார்.

உணர்வு நிலையில் ஒருவர் துன்பத்தைக் கண்டு வாளாதிருப்பது தகாது. அவருக்காக எம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும். ஆனால் இத்தகைய மனிதர்களை நாம் சந்திக்க முடியா விட்டால் குருவிகளையும் வண்டுகளையும் இறைவனிடம் தூதனுப்பலாம். எனவே எம்மைச் சூழவுள்ள இயற்கையோடு நெருக்கமான நிலையில் உறவாடும் ஒரு பயிற்சியை நாம் ஏற்படுத்திக் கொள்வதே பிரிவுத் துன்பத்திலிருந்து விடுபடச் சிறந்த வழியாகும்.

"மனைக் காஞ்சி இளங்குருகே மறந்தாயோ மத முகத்த
பனைக் கைம்மாவுரி போர்த்தான் பலர் பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ நிகழ் வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றுதாய்ச் சோர்வாளோ"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## புதியை யாயினியை யாம்பூந்தென்றால் புறங்காடு

திருக்கோயில் வழிபாடு மனதைப் பண்படுத்தும் ஒரு பயிற்சிக் களமாகும். நாளாந்தம் அங்கு சென்று வருவது ஒரு நல்ல பொழுது போக்கு எனலாம். நாயன்மாரில் நாவுக்கரசர் திருக்கோயில் வழிபாட்டின் பயனை நன்கு உணர்ந்தவர். சைவசமய வழிபாட்டை வெறுத்துச் சமண சமயத்தைத் தழுவிச் சில காலம் வாழ்ந்தவர். சமயம் என்பது வெறுமனே கருத்துப் பரிமாற்றம் அன்று. உடல் ரீதியான சில செயற்பாடுகளையும் அது கொண்டிருக்க வேண்டும். இதனைத் தனது செயற்பாடாக்கி வாழ்ந்தவர்; நித்தமும் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வதால் மனதை மகிழ்வாக வைத்திருக்கலாமென வழிகாட்டியவர்.

திருக்கோயில் வழிபாட்டில் எமக்கு வேண்டியவற்றைப் பெறும் எண்ணத்தை விட்டுவிட்டு உடல் ரீதியான தொண்டு செய்ய வேண்டும் என்கிறார் நாவுக்கரசர். கோயிற் சூழலைத் துரப்புரவு செய்யும் செயற்பாடு மனத்தைச் சுத்தம் செய்ய உதவும். புல் பூண்டுகளையும் காலடியை உறுத்தும் சிறு பரற்கற்களையும் நீக்கி வழிநடைப்பகுதியைத் துப்புரவு செய்யும்போது பரநலம் பேணும் பண்பாடு மனத்தில் உரம் பெறுகிறது.

அடியவர் திருக்கோயிலுக்கு வருகை தரும் போது, எது விதமான துன்பத்தையும் அடையக்கூடாது. நடந்து செல்லும் போது இறைசிந்தனையோடு செல்கையில் காலடியை எதுவும் தடைசெய்யக்கூடாது. அது வழிபாட்டைத் தடுத்துவிடும்.

எனவே, கோயிலின் புறச்சூழலையும் அகச்சூழலையும் துப்புரவு செய்வது ஒரு திருத்தொண்டு என நாவுக்கரசர் வகுத்துக் கொண்டு வாழ்ந்தார்.

மனத்தை ஒருமுகப்படுத்தி வழிபாட்டிற்குச் செல்லும் போது இயற்கையாக எம்மை வந்து தழுவும் புதிய தென்றற் காற்றை உணரும் பக்குவம் தேவை. இறைவன் கொடையான இயற்கையின் பரிவைப் பிறரிடம் நாம் செலுத்தவேண்டும். நாளாந்தம் திருக் கோயிலுக்குச் செல்லும்போது வீசும் மென்மையான தென்றலின் புதிய தன்மையைப் பகுத்துணரும் புலனடக்கம் வழிபாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது. இறைவனே எம்மீது வீசும்படி விட்ட தென்றலின் தன்மையை நாம் உணரும் பக்குவத்தை அடைவதே வழிபாட்டின இலக்காகும்.

இறைவன் இருக்குமிடம் திருக்கோயில் மட்டுமல்ல, புறங்காடாகவும் உள்ளது. பலர் புகழ்ந்துபாடும் பழனத்தானாகவும் இறைவன் இருக்கிறான். மனிதன் வாழுமிடமெல்லாம் இறைவன் கோயில் கொள்கிறான். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என முன்னோர் கூறியுள்ளர். நாவுக்கரசர் சைவசமயத் திற்கு மீண்டும் வந்தபோது கோயில் வழிபாட்டையே தனது வழி பாட்டு நடைமுறையாக வகுத்துக் கொண்டார். அதனால் அவருடைய பல பாடல்களில் திருக்கோயில் தொண்டு பற்றிய செய்திகள் விளக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அது எம்மையும் வழிபாட்டிற்கு அழைக்கிறது.

"புதியை யாயினியை யாம்பூந்தென்றால் புறங்காடு
பதியாவ திதுவென்று பலர் பாடும் பழனத்தான்
மதியார் வேள்விதனை மதித்திட்ட மதி கங்கை
விதியான னென்னுயிர் மேல் விளையாடல் விடுத்தனனோ"

வலம்புரி - 29-05-09

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## பொங்கோத மால் கடலிற் புறம்புறம் போய் இரைதேரும்

நம்பிக்கை என்பது மனித வாழ்வியலுக்கு ஓர் அரு மருந்தாகும். அதனை வளர்த்துக் கொண்டு வாழும் பக்குவத்தை அறிந்தவரே துன்பத்தை வெல்ல வல்லவர். எனினும், சில வேளைகளில் மனிதமனம் நம்பிக்கை தளர்ந்து சோர்ந்து விடும். மன உறுதி கலைந்து அல்லற்படும் வேளைகளில் யாரையாவது சேர்ந்து அடைக்கலமாகி நிற்க விரும்பும். இறைநினைப்போடு வாழும் வாழ்க்கையில் இத்தகைய இடர்பாடு ஏற்படுவதுண்டு. மனம் தன்னைப் பரிவாகப் பேசித் துணையாக் கொள்ள ஒரு தோழமையைத் தேடும். பல அனுபவங்களைப் பெற்று ஈற்றில் இறைவன் மீது கொள்ளும் நம்பிக்கையே இறுதிவரை துணையாய் நிற்கும் என்ற தெளிவைப் பெற்ற முதியவரான நாவுக்கரசர் கூட நம்பிக்கை தளர்ந்த நிலையைத் தமது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

மனத்திலே மண்டிக் கிடக்கும் துன்பங்களின் அழுத்தத்தை நீக்க ஒரு வழிதேடுவது மனித இயல்பாகும். "தளர்ந்தேன் எம்பெருமான் என்னைத் தாங்கிக்கொள்" என இறைவனிடம் அடைக்கலம் புக நினைக்கிறார் மணிவாசகர். ஆனால், நாவுக்கரசர் மனத்திலேஉ ள்ள சோகத்தைச் சொல்லி ஆறுவதற்கு ஒரு துணையை நாமே தேடலாம் என நினைக்கிறார். கடற்கரை ஒரு துன்பத்தைச் சமர்ப்பணம் செய்யும் இடமெனக் காட்டுகிறார். பொங்கு அலைகள் எம்மை ே நாக்கிவரும் போது அவை எம் துன்பத்தைத் துடைக்கும் ஆர்வத்துடன் வருகின்றன. அலைகளைப் பார்க்கும்போது அருகில் இரைதேடும் செங்கால் மட நாரை கண்ணிற்படுகிறது. வானத்திலே வேகமாகப் பறந்து செல்லும் நாரை நாட்டு நடப்புகளையெல்லாம் பார்க்கம் வாய்ப்புப் பெற்ற பறவையாகும். எனவே அதனிடம் மனத்துக் கவலைகளைக் கூறி ஆறுதல் பெறலாம். நாரையிடம் தூது சொல்லும் மரபு ஒரு புறம் இருக்க அதனிடம் இறைவன் திருவருள் பற்றிக் கேட்கும் புதிய தொடர்பாடல் முறையொன்றை நாவுக்கரசர் கையாளுகிறார்.

நாம் தொடர்பு கொள்பவதோடு பேசம் போது எமது உணர்வுகளைப் புலப்படுத்த வல்ல ஒரு சிறந்த மொழிநடை தேவை. கருத்துப் பரிமாற்றத்தில் பேசும் மொழி, இணைப்பை ஏற்படுத்து வதில் சிறப்பான பங்கு வகிக்கின்றது. நாரையின் இயல்பை மொழி யால் எடுத்துக்காட்டும்போது 'புறம் புறம் போய் இரைதேடும்" என நாவுக்கரசர் குறிப்பிடுகிறார். நாரை பற்றிய தகவலை வெகு நுட்பமாக மொழியால் வெளிப்படுத்துகிறார். ஒருவருடைய இயல்பான செயற்பாடுகளை நன்கு உணர்ந்த பின்னரே அவரோடு தொடர்பாடல் செய்வது எமது குறைகளைச் சொல்வது ஒரு நயக்கத் தக்க நாகரிகமாகும். ஒருவரை நன்கு உணர்ந்து அவரை அணுகி எமது நிலை என்னாகும் என்று கேட்கும்போது அது மிக அவசியம் என்பதை உணர்த்தியுள்ளார்.

"பொங்கோத மால் கடலிற் புறம்புறம் போய் இரைதேரும்
செங்கால் வெண்மட நாராய் செயற்படுவதறியேன் நான்
அங்கோல வளை கவர்ந்தான் அணி பொழில் சூழ் பழனத்தான்
தங்கோல நறுங் கொன்றைத்தார் அருளாது ஒழிவானோ"

## நீரவன் றீயினோடு நிழலவனெழிலதாய

கோயில் அமைப்புத் தோற்றம் பெறாத காலத்தில் இறைவன் எங்கும் இருக்கிறான், எதிலும் இருக்கிறான் என்ற கருத்து மனிதரிடையே தோன்றிவிட்டது. இயற்கையின் தோற்றங்களைக் கண்டு மனிதன் அச்சம் கொண்டமையால் அவன் அந்த ஆற்றல் களைப் பணிந்து பயபக்தியுடன் வாழத் தலைப்பட்டான் என்ற கருத்தும் நிலவுகிறது. தன்னால் கட்டுப்படுத்த முடியாத பேராற்ற லைக் கண்டு பயந்த மனிதனிடம் ஒரு வியப்பும் ஏற்பட்டிருக்க வேண்டும். நீர், தீ, காற்று, நிலம், ஆகாயம் என்ற ஐந்தையும் பஞ்சபூதங்கள் எனப் பெயரிட்டு அழைக்கும் மரபையும் மனிதன் ஏற்படுத்திக் கொண்டான்.

ஐம்பூதங்களின் தொழிற்பாடும் தொடர்பும் மனிதனோடு ஒன்றி அவனடைய வாழ்வியலுக்கு இன்றியமையாத சக்திகளாக இருப்பதைத் தெளிவாக உணர்ந்தபோது அவற்றை வழிபாட்டுத் தெய்வங்களாகக் கொண்டான். ஆனால் இப்பஞ்சபூதங்களின் செயற்பாடுகளையெல்லாம் இயக்குகின்ற ஒரு பேராற்றல் படைத்த சக்தி இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டபோது அச்சக்தியே எல்லாவற்றுக்கும் மூலகாரணம் என முடிவு செய்து கொண்டான். 'இறைவன்" என அச்சக்தியைப் பெயரிட்டு வழிபாடு செய்யும் மரபு தோற்றம் பெற்றது.

வயதில் மூத்தவரான நாவுக்கரசர் பஞ்சபூதங்களாய் நிலை பெற்றிருக்கும் பரமனைப் பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார். கோயில் வழிபாடு தோன்றி இறை உருவங்களைப் பிரதிஷ்டை செய்து வணங்கும் வழிபாடு தோன்றிய பின்னரும் இறைவனைப் பஞ்சபூதங்களாகக் கண்டு வழிபடும் மனநிலை அவருக்கிருந்தது. கோயிலுள்ளே உறைகின்ற இறைவனை இயற்கையின் தோற்ற மாகக் கண்டு அவன் இருப்பையும் அருட்டிறத்தையும் எல்லோருக் கும் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். நீராகவும், நெருப்பாகவும், நிலமாகவும், விண்ணாகவும், காற்றாகவும் இறைவன் காட்சியளிப் பதைக் காட்டுகிறார். இவ்வைந்தும் மனித வாழ்க்கைக்கு மிகவும் தேவையானவை. ஆனால் அளவோடு இருந்தால் நம்மை பயக்கும். அவை சீற்றம் கொண்டால் மனிதனால் அதனைத் தாங்கிக் கொள்ளமுடியாது. நவீன விஞ்ஞான அறிவினால்கூட அவற்றைக் கட்டுப்பாடு செய்யமுடியாது.

எனவே இப்பேராற்றல்களை வழிபட்டு வாழும் முறைமையே மனிதனுக்கு ஏற்றதென ஆற்றுப்படுத்துகிறார். இயற்கைத் தோற்றங்களில் இறைவனைக் காணும் பரவச நிலையை அடையப் பயிற்ற எண்ணுகிறார். தான் உணர்ந்த அப்பரவச நிலையைப் பக்தி நெறியைப் பற்றிப் பரப்புரை செய்யப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றைப் படிக்கும்போது இதனை நன்குணரலாம்

"நீரவன் றீயினோடு நிழலவனெழிலதாய
பாரவன் விண்ணின் மிக்க பரமவன் பரமயோகி
ஆரவனண்ட மிக்க திசையினோடொளிகளாகிப்
பாரகத்தமிர்த மானார் பழனத்தெம் பரமனாரே"

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

# நீரோடு கூவிளமும் நிலாமதியும் வெள்ளெருக்கு நிறைந்த கொன்றை

வழிபாட்டில் ஆடலும் பாடலும் இணைந்திருப்பது ஒரு சிறப்பாகும். பண்டைக் காலந்தொட்டே வழிபாட்டில் இவை இணைந்திருப்பதைப் பல பாடல்கள் பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியங்களில் 'வேலன் வெறியாட்டு' 'தெய்வமேறி ஆடல்' என்னும் குறிப்புகள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர்கள் திருமாலைப் பற்றிப் பாடி ஆடி வழிபட்டதாகச் சான்றுகள் உண்டு. கோயில்களிலே நடம் ஆடும் மகளிரும் பாடல் மகளிரும் ஆடலையும் பாடலையும் இறைவனுக்கு நிவேதனம் செய்ததாகத் தேவாரங்களில் நாயன்மார் குறிப்பிட்டுள்ளனர். 'வலம் வந்த மடவார்கள் ஆட' என்ற சம்பந்தருடைய குறிப்பு கோயிலைச் சுற்றிப் பெண்கள் நடமாடியதைக் கூறுகிறது.

'ஆடுமின் அன்புடையீர்' எனச் சுந்தரர் தனது பாடல் களிலே விண்ணப்பித்துள்ளார். இறைவன் 'ஆடலழகன்' எனப் போற்றப்படுகிறான். கானகத்திலும் சுடுகாட்டிலும், தில்லையம் பதியிலும் சிவன் திருநடனம் செய்வதாகப் பாடற்குறிப்புகள் உண்டு. காரைக்காலம்மையார் 'இறைவன் ஆடும் போது அருகிருந்து பாட வேண்டும் என வரம் வேண்டுகிறார். பக்தி நெறியில் இசையும் ஆடலும் இணைந்தபோது மக்கள் மனதை அது ஈர்த்தது. குறிப்பாக இளம் உள்ளங்களை வழிபாட்டிடங்களை நாடி வரச் செய்தது. இசைக்கருவிகளின் ஒலியும் பாடலின் இனிமையும் ஆடலின் கவினும் கோவில் வழிபாட்டில் மக்களுக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தியதுடன் மட்டுமன்றிக் கலை பற்றிய உணர்வையும் ஏற்படுத்தின. இறைவனக்குக் கலை வடிவம் ஒன்றை நிவேதனம் செய்ய வேண்டும் என்ற கருத்துத் தோற்றம் பெற்றது. கோயில்கள் கலைப்பயிற்சியை வழங்கும் இடங்களாகவும் பேணப்படலாயின. இளையவரான திருஞானசம்பந்தர் திருவையாறு என்னும் தலத்தைப் பற்றிப் பாடுகின்றபோது அங்கு நடனப்பயிற்சி நடைபெற்றதைக் குறிப்பிட்டுள்ளார். இறைவன் தோற்றத்தை முதலிலே குறிப்பிடுகிறார். திருமுடியிலே சூடியிருக் கும் மலர்களைக் காட்டுகிறார். கூவிளமும், வெள்ளெருக்கும், கரந்தையும் கொன்றையும் சூடிய திருமுடியின் கவின் கண்டு பரவசப்படுகிறார். துண்டப்பிறையும் நீரும் சடையிலே அணிந்தி ருக்கும் கோல அழகுடையவர் தங்குங் கோயில் திருவையாறு. அக்கோயிலின் சூழல் மேகங்களிடையே சென்று வானத்தை நறுமணமாக்கும் பொழில்கள் நிறைந்தது. தேரோடும் அகன்ற வீதிகள். அங்கு 'சேயிழையார்' நடமாட அமைக்கப்பட ஆடலரங்கமும் இருப்பதைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். 'செயிழையார் நடம் பயிலும்' என அவர் குறிப்பாக அங்கு நடனப் பயிற்சி நடைபெறுவதை ஆவணப்படுத்தி உள்ளமை வழிபாட்டில் நடனம் பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

"நீரோடு கூவிளமும் நிலாமதியும் வெள்ளெருக்கு நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த தத்துவனார் தங்குங்கோயில்
காரோடு விசும்பளந்து கடிநாறும் பொழிலணைந்த கமழ்தார் வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும் திருவையாறே"

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

# வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு நெறி காட்டு விகிர்தனாகி

கலைகள் பயில்வோர் மனத்தை பண்படுத்த வல்லவை. அப்பயிற்சி வழிபாட்டோடு இணைக்கப்பட்டபோது தூய்மை பெற்றது. வெறுமனே பொழுதுபோக்கு நிலையில் மனித வாழ்வியலில் கலை தொடர்புறும் போது அது மனிதனை மாற்றியும் விடுகின்றது. சிலப்பதிகாரம் இதனைக் கோவலனின் வாழ்வியல் ஊடாக நன்கு விளக்கிக் காட்டியுள்ளது. இத்தகைய சீர்கேட்டைக் கலை செய்யக்கூடாது என எண்ணிய முன்னோர் அதனை இறை சிந்தனையோடு தொடர்புபடுத்தியுள்ளனர். இசையும் ஆடலும் இறைவன் குண இயல்புகள் எனக் காட்டி மக்கள் மனத்தை நெறிப்படுத்தினர்.

பெண்களின் கலைத்தொண்டை இறைவனுக்குச் செய்யும் பணியாக மாற்றி அமைத்தனர். கோவில்களிலே கலை பயிலும் வாய்ப்பையும் அதனை இறைவனுக்கும் இறைவிக்கும் நிவேதிக்கும் பணியையும் பெண்களே செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தினர். திருவையாறு தலத்திலே பெண்கள் இப்பணியைச் செய்வதைச் சம்பந்தர் பாடலிலே குறிப்பிட்டுள்ளார்.

விண்ணுலகத்தவருக்கும் மண்ணுலகத்தவருக்கும் நெறி யைக்காட்டும் விகிர்தனான சிவனுடைய திருக்கோயிலில் பெண் களின் கலைப்பணி எவ்வாறு நடைபெறும் என்பதைச் சம்பந்தரு டைய பாடல் கூறுகிறது.

காலத்திற்கு ஏற்ற இசை அமைத்துப்பாடும் திறன் படைத்த காரிகையர் கோவிலில் பணி செய்துள்ளனர். அரங்கேறி இறைவனுக்கு ஆடல் நிவேதனம் செய்யும் சேயிழையார் பலர் வாழ்ந்துள்ளனர். பெரியபுராணம் குறிப்பிடும் உருத்திர கணிகையர் இத்தகைய கலைத்தொண்டு செய்த பெண்களேயாவர். பக்தி நெறியிலே கலை இணைந்தபோது அதன் மூலம் இறைவன் பற்றிய கருத்துக்களை விளக்குவது எளிதாக இருந்தது. பொதுமக்களின் கலையார்வம் தூண்டப்பட்டது. கலைப்பயிற்சி பெற்ற பெண்கள் 'விலைமாதர்' என்று ஒதுக்கப்பட்ட நிலை மாறித் தேவரடியார் என்ற ஒரு நிலைக்கு உயர்த்தப்பட்டனர். 'கணிகையர் என்ற சொல் இன்று இழிந்த பொருளில் வழங்கப்படுகிறது. ஆனால் சம்பந்தர் அவர்கள் காலத்தைக் கணித்து இறைபணி செய்ததை எடுத்துரைத்துள்ளார்.

கலைப்பயிற்சி காலக்கணிப்போடு நெருங்கிய தொடர் புடையது. கலையின் தெய்வீக வெளிப்பாடு இளமையையும் அழகையும் வழிபாட்டில் இணைத்தபோது புலப்பட்டது. பெண்மையின் தெய்வீகப் பணியும் மதிப்புப் பெற்றது. இறைவன் விரும்பியுறையும் கோயிற் பணியில் கலை இணைந்தமையால் மக்கள் பக்திப் பரவச நிலையை அறிய முடிந்தது.

"வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு நெறி காட்டு விகிர்தனாகிப்
பூந்தாம நறங்கொன்றை சடைக்கணிந்த புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாமென்றரங்கேறிச் சேயிழையார் நடமாடுந்திருவை யாறே"

## கோடல் கோங்கங் குளிர்கூவிள மாலை

மக்கள் வாழ்வியலில் இன்று கருவிக் கையாட்சி பெரிதும் வரவேற்புப் பெற்றுள்ளது. தொடர்பாடல் நிலையில் கைத்தொலைபேசி என்னும் கருவி செல்வாக்குடன் திகழ்கிறது. அதனை வெறுமனே தொடர்பாடலுக்கு மட்டுமன்றிப் பல்தேவைகளுக்குப் பயன்படுத்தும் கருவியாகவும் எல்லோரும் ஏற்றுள்ளனர். ஆனால், முற்காலங்களில் விஞ்ஞானத் தொழில்நுட்ப நிலையை விட கலைநுட்ப நிலையில் பல கருவிகள் பயன்படுத் தப்பட்டுள்ளன. அவற்றில் இசையோடு தொடர்புடைய கருவிகள் வழிபாட்டு நடைமுறைகளில் முக்கியம் பெற்றிருந்தன. அதனைப் பக்திப் பாடல்களில் குறிப்பிட்டு நாயன்மார் பாடுவதற்குக் காரணம் கருவிக்கையாட்சி எல்லோரையும் வசப்படுத்தியமையே.

இறைவனைப் பற்றிப் பாடுகின்றபோது இசைக் கருவிகளும் இணைவது இனிமையையும் பரவசத்தையும் ஊட்டியது. கோவில்களில் திருவிழாக்காலங்களில் இசைக்கருவி யின் பயன்பாடு பெரிதும் பேணப்பட்டது. பாடலைப் பாடும்போது அதனுடன் இணையும் வாத்தியங்களின் ஒலி கேட்போர் மனதைப் பிணித்தது. இதனால் இக்கருவிகளின் பயிற்சியும், பேணலும் கோயில் நடைமுறைகளில் ஒன்றாக இணைந்திருந்தன.

திருவையாறு திருத்தலத்திலே இசைக் கருவிகள் பயன் பட்டவாற்றைச் சம்பந்தர் தனது தேவாரங்களில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அவருடைய இளமைப் பருவம் இயல்பாகவே இசைக் கருவிகளில் நாட்டமுற்றிருந்ததால் பாடல்களில் குறிப்பிடு வதும் இயல்பாயிற்று. தனது பாடல்களில் முதலிரு அடிகளில் இறைவன் அழகுக் கோலத்தைப் பாடும் சம்பந்தர் அடுத்த இரண்டு அடிகளில் கோயிலில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகள் பற்றிய குறிப்பை இணைத்துள்ளார். வீணை, குழவம், குழல், மொந்தை என அவற்றை வகைப்படுத்திக் காட்டுகிறார். அழகான திருக்கோலங் கொண்ட இறைவன் திருநடனம் செய்யும்போது பண்சேர்ந்த பாடலும் அணிசெய் இசைக் கருவிகளும் தேவை. இவ்வாறு நடைபெறும் அரங்க விழாவை அனைவரும் பார்த்துப் பரவசமடையலாம்.

வழிபாட்டில் இன்றும் இசைக் கருவிகள் பயன்படுத்தப்படு கின்றன. ஆனால் இன்று இசைக்கருவிப் பயிற்சியில் யாருக்கும் விருப்பமில்லையாகையால் எந்திரப் பொறியால் இசைக்கருவி களில் ஒலியை ஒலித்து இறைவன் ஆடலுக்குப் போலியான இசையை வழங்க முற்பட்டுள்ளனர். அதனால் கருவிப் பயிற்சியும் பயன்பாடும் புறந்தள்ளப்பட்டுள்ளன. விரல்களால் இயக்கும் இசைக்கருவி உள்ளத்தைத் தொட்டு உணர்வில் கலக்கும் தன்மையது. வழிபாட்டில் உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி இறை சிந்தனையை ஏற்படுத்தத்துணை நிற்கிறது.

"கோடல் கோங்கங் குளிர் கூவிள மாலை குலாயசீர்
ஒடு கங்கை யொளி வெண் பிறை சூடு மொருவனார்
பாடல் வீணை முழவங்குழன் மொந்தை பண்ணாகவே
ஆடுமாறு வல்லானுமையாறுடை யையனே"

## மானும் மரையினமும் மயிலினமுங் கலந்தெங்கும்

உலகத்தில் தோன்றிய உயிரினங்கள் எல்லாம் இறைவனது அருளால் மகிழ்வாக வாழமுடியும். மனிதரை விட அறிவிற் குறைந்த உயிரினங்கள் தாம்வாழும் இயற்கைச் சூழலோடு இயைபுபட்டு வாழ இறைவனே துணை நிற்கின்றான் என்ற உண்மையைச் சுந்தரமூர்த்தி நாயனார் வெகு விளக்கமாகத் தனது பாடல்களிலே பாடியுள்ளார். சீபர்ப்பதமலை பற்றிய பதிகத்தில் அவர் மலையில் வாழும் உயிரினங்களின் வாழ்வியலை ஊன்றிக் கவனித்துப் பாடல்களிலே பதிவு செய்துள்ளார்.

வட நாட்டிலே உள்ள தலங்களில் ஒன்று திருப்பருப்பதம். இத்தலத்தை ஸ்ரீசைலம் அல்லது மல்லிகார்ச்சுனம் என்றும் வழங்குவர். சீ பற்பதமலை என்றும் அழைக்கப்படுகிறது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் இத்திருத்தலத்தைப் பாடியுள்ள னர். மூவருடைய பதிகங்களிலும் பாடல்களின் முடிவில் குறிப்பிட்ட ஒரு சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சம்பந்தர் 'பருப் பதம் பரவுதுமே' எனப் பாடலை முடித்துள்ளார். நாவுக்கரசர் 'பருப்பதம் நோக்கினாரே' என நிறைவாகப் பாடுகிறார். சுந்தரர் 'சீபர்ப்பதமலையே' எனச் சிறப்பாகப் பாடுகிறார். பக்தி நிலையில் இயற்கை எழிலைப் பார்க்கும்போது அவர்கள் இறைவன் அருள் எங்கும் எதிலும் செறிந்திருப்பதைக் காண்கின்றனர். அதை எமக்கும் உணர்த்துகின்றனர்.

சுந்தரர் பாடல்களில் மலையில் வாழும் உயிரினங்களின் வாழ்வியல், ஊன்றிய கவனத்திற்குள்ளாகியமை புலப்படுகின்றது. முதலாவது பாடலில் சீபர்ப்பதமலையில் வாழும் மான், மரை, மயில் என்பவற்றின் வாழ்க்கையை அழகான சொல்லோவியமாகக் காட்டியுள்ளார். மான், மரை, மயில் என்னும் மூன்றும் கலந்து மலையிலேமேய்ந்து கொண்டிருக்கின்றன. மேய்ப்பன் இல்லாமல் தாமாகவே தமது உணவைத்தேடி வாழும் இயல்புடனிருக்கின்றன. மேய்ச்சல் முடிந்ததும் அகன்ற நீர்ச்சுனைகளில் நீரைப் பருகும். அதன்பின் அங்கு பூத்திருக்கும் மாமரத்திலே தமது உடல் உரச நடந்து மலர்ப்பொழில்களினூடே புகுந்து செல்கின்றன. அங்குள்ள இனிய மாஞ்சோலை நிழலிலே மகிழ்வுடன் உறங்கு கின்றன.

இக்காட்சி உயிரினத்தின் தேவையை இயற்கை நல்கும் தன்மையை நன்கு விளக்குகின்றது. உணவும் உறையுளும் எல்லா உயிரினங்களுக்கும் இன்றியமையாதவை. அது கிடைத்து விட்டால் மகிழ்ச்சிக்கும் குறைவில்லை. இந்த மகிழ்ச்சியையே எல்லோரும் அடைய விரும்புகின்றனர். பல்வேறுபட்ட விலங்குகளின் ஒற்றுமையான வாழ்வியல் அமைதியை ஏற்படுத்தும். சீபர்ப்பதமலை சுந்தரர் நமக்குக் காட்டும் பக்திநெறியால் அடையும் அன்புலகமாகும்.

"மானும் மமைரயினமும் மயிலினமுங் கலந்தெங்கும்
தாமே மிக மேய்ந்து தடஞ்சுனை நீர்களைப் பருகிப்
பூ மாமரம் உரஞ்சிப் பொழிலூடே சென்று புக்குத்
தேமாம் போழில் நீழல் துயில் சீபர்ப்பத மலையே"

## மலைச் சாரலும் பொழிற்சாரலும் புறமே வருமினங்கள்

மகிழ்வான வாழ்க்கையில் இடையே குறுக்கீடுகள் வரும் போது மனிதன் மட்டுமல்ல விலங்குகளும் கலங்கிவிடுகின்றன. ஒருவர் வாழும் சூழலில் பிறர் வந்து நுழைந்தால் இயல்பு வாழ்க்கை பாதிப்படையும். உறவோடு கலந்திருந்த உன்னதமான வாழ்வில் பிரிவு நேர்ந்தால் துன்பந்தான். கணவனும் மனைவியும் வாழும் வாழ்வுச் சூழலில் பிறர் தலையீடு தோன்றும்போது படுந்துன்ப நிலையைச் சுந்தரர் நன்குணர்ந்தவர். விலங்குகளின் வாழ்வியலி லும் இத்தகைய சோகம் ஏற்படுவதை இயற்கையை உன்னிப்பாய்க் கவனித்துள்ளார்.

மலைச்சாரல் பொழிற்சாரல் என இரு வேறுபட்ட சூழல்களில் விலங்குகள் வாழ்கின்றன. குறிப்பாக ஆண்யானையும், பெண்யானையும் குடும்பமாக மகிழ்வாக வாழ்வு நடத்துகின்றன. இப்பிரதேசங்களில் வேறு மிருக இனங்கள் வந்துவிட்டால் குழப்பந்தான். முன்னர் அங்கிருந்த பெண்யானை பயந்து ஆண்யானையை அழைக்கும். அவ்வொலியைக் கேட்ட ஆண்யானை பிளிறியபடி ஓடி வரும். பிற விலங்கினங்களிடையே பெண்யானையைக் காணாமல் திகைத்து ஓடும். மீண்டும் தனது பெண்யானையை தேடித்திரியும். சீபர்ப்பதமலையிலே சுந்தரர் இந்த அன்பான விலங்குக் குடும்பத்தைக் கண்டு வியந்து பாடியுள்ளார்.

வாழ்க்கையில் ஏற்படும் திடீர் நிகழ்வுகள் எம்மைப்பெரும் பாதிப்புக்கள்ளாக்கும். அவ்வேளையில் மிக நிதானமாகச் செயற்படவேண்டும். மலையில் வாழ்கின்ற விலங்கினத்திடையே இத்தகைய பாதிப்பு இருப்பதைச் சுந்தரர் பாடியதற்குத் தனியான காரணமும் உண்டெனலாம். தமது சொந்த வாழ்வில் இருமனைவியரைத் துணையாகக் கொண்டமையால் ஏற்பட்ட சிக்கல்களும் அதனைத் தீர்க்க வந்த இறைவன் அருட்செயலையும் நினைவுபடுத்திப் பார்க்கிறார். ஒருவரைப் பிரிந்துவிட்டால் அவரைத் தேடியலையும் துன்பம். அது மிகவும் கடினமானது. பிடியின் அவலக்குரல் கேட்ட களிறு படும்பாடு. பிளிறி அலமந்து வந்து திகைத்து ஓடும் காட்சியைப் பாடலில் சுந்தரர் உணர்வு பூர்வமாகவும் காட்சி ரூபமாகவும் காட்டுகிறார்.

பாதுகாப்பான வாழ்வுச் சூழலிற் கூடத்துன்பம் ஏற்பட லாம். அமைதியான வாழ்வு அவலமாகலாம். இது நியதி என்று பலர் கருதலாம். எனினும் பிடியைத் தேடும் களிற்றைப் போல எமக்கும் ஒரு தேடுதல் உணர்வு தேவை. துன்பத்தில் ஆழ்ந்து விட்டவரை அதிலிருந்து மீட்கும் மனப்பக்குவம் தேவை. பக்தி நெறியில் பிறர்துயர்துடைக்கும்பணி பிறவித்துயரை நீக்கி இறை யோடு இணைத்து வைக்கும் சுந்தரர் தனது பாடலிற் சொல்லும் வாழ்வியல் எல்லோரையும் "இறையருள் நாடும் பக்தி நெறியிற் செலுத்தி அமைதியாக வாழவைக்கும்"

"மலைச் சாரலும் பொழிற்சாரலும் புறமே வருமினங்கள்
மலைப்பால் கொணர்ந்திடித்தூட்ட மலங்கித் தனகளிற்றை
அழைத்தோடியும் பிளிறியவை அலமந்து வந்தெய்த்துத்
திகைத்து ஓடித் தன் பிடித்தேடுஞ் சீர்ப்பதமலையே"

## மன்னிப் புனங்காவல் மடமொழியாள் புனங்காக்கக்

இயற்கை அழகைக் கண்டு ரசிப்பதற்கு ஒரு கலை உள்ளம் தேவை. தன்னைச் சூழவுள்ளவற்றைக் கூர்ந்து நோக்கும் குணமுடையோர் சிலரே உளர். இறைவன் படைப்பைக் கண்டு வியப்புடையும் பக்திப்பரவசம் ஒரு பயிற்சி நிலையாகும். அந்நிலையை எய்தியவர் கண்களில் காண்பனவெல்லாம் மனித இயல்புடன் தெரியும். இத்தகைய உணர்வைச் சுந்தரரது பாடல்களிலே தெளிவாகக் காணமுடியும். அவர் பார்வை சிவன் உறையும் சீபர்பதமலையில் உள்ள காட்சிகளிலே புதுமையைக் காண்கிறது.

தினைப்புனத்தைக் காவல் செய்யும் இளம் பெண்ணின் செயற்பாட்டில் கூர்மையாகப் பார்வையைப் பதிக்கின்றார். முற்றிவிளைந்த தினைக்கதிரைக் கவர்ந்து செல்லவெனப் பறந்து வரும் கிளியைக் கண்டவுடன் காவற்பணியில் நிற்கும் கன்னிக்குக் கடுங்கோபம் வருகிறது. தினைக்கதிரை வாயினாலே வளைத்துக் கொய்கின்ற கிளி தன்னை மதிக்கவில்லையே என்று எண்ணுகிறாள். உடனே தன்னுடைய கையிலிருந்த கவணால் ஒலியெபப்புகிறாள். அந்த ஒலியைக் கேட்டதென்னைமரப் பொந்திலே வாழும் இயல்புடைய கன்னிக் கிளிதென்னை மரத்தை நோக்கி வேகமாகப் பறந்து போகிறது.

கிளியும் இளமையான பருவத்தில் நிற்கிறது. அதனால் சுந்தரர் கிளியைக் கன்னிக்கிளி என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார். அதைப் போலத் தினைப்புனக் காவலுக்கு நிற்கும் பெண்ணும் இளம்பருவத்தினளாக இருக்கிறாள். இருவர் செயற்பாட்டிலும் இளமையின் வேகமும் துடுக்கும் காணப்படுகின்றது. இளம்பெண், பறவையான கிளி தன்னை மதிக்கவேண்டும் என்று நினைக்கிறாள். ஆனால் கிளியோ தன்னுடைய இளமையின் துணிச்சலாலும் திறமையாலும் செயற்படுகின்றது. இந்த இளமையின் முரண்பாடு பக்தி நெறிக்குத் தடையானது. பிறரை மதிக்கும் பணிவு எல்லோருக்கும் இருகக்வேண்டும். பிறர் பொருளைக் கவர்ந்து அனுபவிக்க எண்ணும் செயற்பாடு மிகத்தவறானது.

இன்றைய உலகில் இளமைக்கு வழிகாட்டல் இன்றியமையாதது. உடல் வலுவைப் பயன்படுத்திப் பிறர் உழைப்பைக் கவரும் செயற்பாடு களையப்பட வேண்டியது. நீண்ட கால முயற்சியால் பெற்ற விளை பொருளை உரியவரிடமிருந்து பறிப்பது தகாது. மலைப்பகுதியில் வாழும் உயிரினங்களின் வாழ்வியலிலும் ஓர் ஒழுங்கு தேவை. அதனைப் பக்தி நெறியால் பெறமுடியும். தினையைக் கவர வரும் தென்னங்கிளியைக் கன்னிப்பெண் கவண் ஒலியால் விரட்டும் செயற்பாடு பெண்மையின் பரிவான வழிகாட்டலாக அமைந்துள்ளது. பெண்ணின் இயல்பான தாய்மை நிலையான வழிகாட்டலைச் சுந்தரர் தனது பாடலில் சிறப்பாகக் காட்டியுள்ளார்.

"மன்னிப் புனங்காவல் மடமொழியாள் புனங்காக்கக்
கன்னிக்கிளி வந்து கவைக் கோலிக் கதிர் கொய்ய
என்னைக் கிளி மதியா தென்று எடுத்துக் கவண் ஒலிப்பத்
தென்னக்கிளி திரிந்து ஏறிய சீபர்பத மலையே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## மையார் தடங்கண்ணாண் மடமொழியாள் புனங்காக்கச்

பெண்களுக்கு வகுக்கப்பட்ட கடமைகள் நிலத்து வாழ்வியற் செயற்பாடுகளை விளக்கி நிற்பன. வாழும் சூழலின் இயற்கை வள நிலைக்கேற்ற தொழில் செய்யும் காலம் ஒன்றிருந்தது. பண்டைய இலக்கியங்கள் இது பற்றி விரிவான பதிவுகளைச் செய்துள்ளன. ஆணின் உழைப்புக்கு உறுதுணையாக இருந்து உணவுத் தேட்டத்தில் உதவிய பெண்ணின் பங்களிப்பு நிறையவே உள்ளது. இயற்கை நிலையில் இருந்தபடியே, பெண் செய்யும் தொழில் நிலையான பங்களிப்பு இன்றுவரை நிலைத்துள்ளது.

மலைப்பிரதேசத்தில் வாழும் மக்களின் உணவுத் தேட்டத்தில் தினைப் பயிர்ச்செய்கை முக்கியம் பெற்றிருந்தது. அடர்ந்த காட்டை அழித்து எரியூட்டி நிலத்தைப் பண்படுத்திப் புன்செய் நிலமாக்கித் தினை விதைத்து ஆண் பணி செய்தான். முற்றி விளைந்த தினைப்பயிரைப் பறவைகளிடமிருந்து பாதுகாக்கும் பணி பெண்ணுக்கு வழங்கப்பட்டிருந்தது. குறிப்பாக இளம் பெண்களின் பணியாக இப்பணி நடைபெற்றது. தினைப் புனத்திலே பரண் அமைத்துக் கவணைக் கையில் வைத்துப் பெண்கள் பறவைகளை விரட்டினர். இந்த வாழ்வியலைச் சுந்தரர் தனது பக்திப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

சீ பர்பத மலையில் உறையும் இறைவனைப் பாட வந்த அவருக்கு மலைவாழ்வியல் நடைமுறையில் கவனம் செல்கிறது. அங்கு பணி செய்யும் பெண்ணின் அழகு கண்ணில் படுகிறது. மை நிறையப் பூசிய பெரிய கண்களையுடைய பெண்ணின் இளமைப் பேச்சொலி காதில் கேட்கிறது. தினைப்பயிரை உண்ண வரும் கிளிக் கூட்டத்தை விரட்டும் அவள் செயற்பாட்டைக் காண்கிறார். கிளிக் கூட்டத்தை அவள் விரட்டியபோதும் அவை இடத்தை விட்டு அகலாமல் நிற்பது அவளைச் சினமுறச் செய்கிறது. பண்போடு கிளிகளை விரட்டுவதை விடக் கவணால் எறிந்து கலைக்கின்றாள். சிறிய பறவைகளான கிளிகளின் செயற்பாட்டைத் தண்டனை வழங்கித் தடுக்கும் பெண்ணின் உள்ளம் சுந்தரருக்கு இறைவன் தன்னைத் தடுத்தாட்கொண்ட செயற்பாட்டை நினைவுபடுத்து கிறது.

இறைபணியை மறவாதிருக்க ஒரு பயிற்சி தேவை. நாள் தோறும் திருத்தலம் சென்று வழிபாடு செய்யும்போது செயற் பாட்டில் ஒரு சீர்மை உண்டாகும். மனத்திலுள்ள தீய எண்ணங் களைக் களையும் தெளிவு தோன்றும். கிளிகளின் செயற்பாடு மனித உள்ளத்தின் ஆசைப்பாட்டைப் புலப்படுத்துகிறது. தீயவை தீய பயத்தலால் அவற்றிற்கு அஞ்சி வாழும் வாழ்வியல் ஒன்று இன்றியமையாதது என்ற செய்தியைச் சுந்தரர் சொல்லும் முறைமை சிறப்பானது. தவறு செய்த கிளிகள் சீபர்பதமலையில் உறையும் இறையைப் பாடுகின்றன.

"மையார் தடங்கண்ணாண் மடமொழியாள் புனங்காக்கச்
செவ்வே திரியந்தாயோ எனப் போகாவிடம் விளிந்து
கை பாவிய கவணால் மணியெறி விரிந்து ஒடிச்
செவ்வாயன கிளி பாடிடும் சீ பர்பத மலையே"

## ஆனைக்குலம் இரிந்தோடித் தன்பிடி சூழலில் திரிய

முற்காலங்களில் மனிதன் பிற உயிர்கள் மீது அன்பும் இரக்கமும் கொண்டவனாக வாழும் இயல்புடையவனாக இருந்தான். தன்னைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வாழும் உயிர்களுக்கு ஓர் ஊறு ஏற்பட்டால் ஓடிச் சென்று உதவினான். இறைவன் படைப்பில் எல்லா உயிர்களும் சமமே என்ற எண்ணம் கொண்டிருந்தான். ஏற்றத் தாழ்வு பற்றிய சிந்தனை எதுவும் அவனுக்கிருக்கவில்லை. உணர்வுகளால் ஒளிவு மறைவில்லாத உன்னதமான வாழ்வை நடத்தினான். குறிப்பாகத் தான் வாழும் சூழலில் வதியும் உயிரினங்களோடு ஒன்றுபட்டு வாழ்ந்தான்.

இத்தகைய இனிய வாழ்வியலைச் சுந்தரர் தனது பாடலிலே சுட்டிக்காட்டுகிறார். இன்று எம்மிடையே கருணையும் இரக்கமும் குறைவுபட்டிருக்கும் வேளையில் சுந்தரர் பாடல் எம்மை மீள் சிந்தனை வசப்படுத்துகிறது. மலைப் பிரதேசத்தில் வாழும் குறவர்களுடைய வாழ்வியலைச் சுந்தரர் தனது பாடல் மூலமாக எமது கண் முன்னே கொணர்ந்து நிறுத்துகிறார்.

காட்டிலே மகிழ்வான வாழ்வு நடத்திய யானைக் கூட்டம் ஒன்றையொன்று பிரிய நேர்ந்து விட்டது. பெண் யானை ஆண் யானையைப் பிரிந்து தவிக்க வேண்டி நேர்ந்தது. வாழும் சூழலிலே திரிந்து கொண்டிருந்தது. குறவனைக் கண்டு தன் செவியைத் தாழ்த்தியது. அதன் செயற்பாடு குறவனை மனம் இரங்கச் செய்தது. குறவர் வலிய மனம் படைத்தவர்கள். ஆனால் அவர்கள் தொழில் நிலையில் வலிமை இன்றியமையாதது. எனினும் கல்லுக்குள் ஈரம் இருப்பது போலப் பெண் யானையைக் கண்டு அதற்கு ஆவன செய்கின்றனர். இலையால் கல்லை கோலி பிழிந்த தேனை அதனுள் வார்த்து அதற்கு ஊட்டுகிறார்கள். மிக இரக்கத்தோடு செயற்படும் குறவர் வாழும் சீபர்பத மலையைச் சுந்தரர் காட்டும் விதம் பக்தியைப் பரப்பும் முயற்சியாக உள்ளது.

உறவைப் பிரிந்து அல்லற்படுபவரைக் கண்டு மிக இரக்கத்தோடு தொழிற்படும் 'மனிதம்' மலைவாழ் குறவரிடம் இருந்தது. எனவே அறிவுள்ள மனிதனிடம் அப்பண்பு செறிவாகவே இருக்க வேண்டும். இறைவனின் எண்குணங்களில் ஒன்றான எல்லா உயிர்களிடமும் அன்பாக இருக்கும் இயல்பு மனிதனுக்கும் இன்றியமையாதது. பக்தி நெறியில் அன்பும் தொண்டும் அடிப்படையான பண்பு நலனாகும். சீபர் பதமலையில் இறைவன் எழுந்தருளியிருப்பதால் அங்கு ஒரு பண்பான வாழ்வியல் நடக்கின்றது. கோயிற் சூழலில் வாழும் மக்கள் பிறர் தயர் துடைக்கும் கனிவான உள்ளங் கொண்டவராக இருப்பர். துன்புறும் மக்களைக் கண்டால் ஏற்றது செய்யும் தொண்டராயிருப்பர். பக்தி வயப்பட்ட சுந்தரர் எல்லோரையும் அந்நெறியிற் செல்ல வழி சொல்லியுள்ளார்.

"ஆனைக்குலம் இரிந்தோடித் தன்பிடி சூழலில் திரியத்
தானப்பிடி செவிதாழ்த்திட அதற்கு மிக இரங்கி
மானக்குற அடல் வேடர்கள் இலையாற் கலைகோலித்
தேனைப் பிழிந்தினிது ஊட்டிடும் சீபர்பத மலையே"

## மாற்றுக் களிறு அடைந்தாயென்று மதவேழங்கையெடுத்து

இயற்கையோடு இயைந்த வாழ்வியல் ஒன்று முன்னர் இருந்ததை எமது இலக்கியப் பாடல்கள் எடுத்துக் காட்டியுள்ளன. இறை வழிபாட்டில் இயற்கையை ஊன்றிக் கவனிக்கும் ஒரு பண்பாடு தோன்றியிருந்தது. தேவாரப் பாடல்களில் அது பதிவு செய்யப்பட்டுள்ளது. இளமையில் இறையருள் பெற்ற சுந்தரர் பாடல்களில் இயற்கை பற்றிய புனைவு தனித்துவமானது. சீர்பதமலையின் இயற்கைக்காட்சிகளைப் பாடும்போது உலகியல் வாழ்வில் தாம் பெற்ற அனுபவங்களையும் இணைத்துள்ளார்.

சீபர்பதமலையில் அவர் கண்ட விலங்கின வாழவியலைச் சிறப்பாகச் சொல்லால் ஓவியமாகத் தீட்டியுள்ளார். மலை சார்ந்த இடமாகையால் யானைகள் கூட்டமாக வாழும் இடமாகும். அந்த யானைகளின் குடும்ப வாழ்வைச் சுந்தரர் வெகு நுட்பமாகக் கவனித்துள்ளார். ஆண்யானையும் பெண்யானையும் வாழும் நிலையைச் சுட்டிக்காட்டுகிறார். களிறு பிடி என்னும் சொற்களால் அவற்றின் குணவியல்பை விளக்கியுள்ளார். பெண்யானையிடம் நீ மாற்றுக்களிறு அடைந்தாயென்று ஆண் யானை குற்றம் சாட்டு கிறது. மதம் பிடித்த யானை தும்பிக்கையை எடுத்துக்கோபத்துடன் நெருப்புத் தலை உமிழ்வது போல மூச்சு விடுகின்றது. மதத்தைப் பொழிகின்றது. முகத்தைச் சுழித்துத் தூற்றுகின்றது. ஆண் யானையின் இத்தகைய செயற்பாடுகள் பெண் யானையை துன்பப்பட வைக்கின்றது. பொறுக்கமுடியாது என்று சொல்லிய ஆண் யானை அயலிலே நிற்கின்ற ஏனைய யானைகள் எல்லாம் அறியும் படியாகத்தன்னைத்தானே தேற்றிக் கொண்டு பெண் யானையிடம் செல்கிறது. சீபர்பதமலையில் நடந்த இந்த ஊடல் காட்சி சுந்தரருடைய மனத்தைப் பெரிதும் தாக்கியுள்ளது.

குடும்ப நிலையில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஏற்படும் ஊடல் நிகழ்வு போல யானையின் செயற்பாட்டையும் சுந்தரர் காண்கிறார். பெண்யானை ஆண்யானை சொல்லும் குற்றச்சாட்டைப் பொறுக்கமுடியாமல் அயலிலே உள்ள யானைகளுக்குத் தெரியும்படியாக சூள் உரைத்துச் சொல்வதாகவும் ஒரு பொருள் கொள்வதற்கு இடமுண்டு. ஆணின் தவறான கோபத்தை பெண் பொறுத்துப்போவதால் குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். பொறுக்காது ஆணைவிட்டுப் பிரிந்து போனால் குடும்பம் சீர்குலையும். சுந்தரருடைய வாழ்வில் இருமனைவியரை மணம் செய்தமையால் ஏற்பட்ட சிக்கல் தீர இறைவழிபாடே துணை நின்றது. விலங்குகளின் வாழ்வியலிலும் இத்தகைய சிக்கல் ஏற்பட இடமுண்டு.

மனித குணங்களை விலங்கிற்கும் பொருத்திப் பார்க்கச் சுந்தரர் முயல்கிறார். ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு வாழும் இல்லற வாழ்வில் ஒழுக்கச் சீர்கேடு ஏற்படுத்தும் சீர் குலைவு தவிர்க்கப்பட வேண்டியது என்பதை சுந்தரர் தனது பாடலில் எடுத்துரைக்கிறார். அவருடைய வாழ்வியல் அனுபவம் பாடலில் மறைபொருளாக நிற்கிறது.

"மாற்றுக் களிறு அடைந்தாயென்று மதவேழங்கையெடுத்து

மூற்றித் தணலுமிழ்ந்தும் மதம் பொழிந்தும் முகம் சுழியத்

தூற்றத் தரிக்கில்லேன் என்று சொல்லி அயலறியத்

தேற்றிச் சென்று பிடி சூளுறும் சீபர்தமலையே"

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

## அப்போது வந்து உண்டீர்களுக்கு அழையாது முன்னிருந்தேன்

ஒருவருடைய பெருமுயற்சியால் விளைந்த விளை பொருளை இன்னொருவர் வந்து கவர்ந்து செல்வது ஓர் அடாத செயலாகும். பகலிரவாகப் பாடுபட்ட ஒருவர் தன் விளை புனத்திலே முற்றி விளையும் தினைப்பயிரை பாதுகாக்க இளம் பெண்களை நியமிக்கும் வழக்கம் முன்னர் இருந்தது. பருவம் அடைந்த பெண்கள் பண்டைக் காலத்தில் திருமணம் ஆகும் வரை வீட்டைவிட்டு வெளியே செல்வதில்லை. இதனால் இப்பருவம் இல்லிகவாப் பருவம் என்றே அழைக்கப்பட்டது. ஆனால் மலைப் பிரதேசத்திலே வாழும் மக்கள் வாழ்வியலில் இல்லிகவாப் பருவத்துப் பெண்களைத் தினைப்புனத்துக் காவற்பணிக்கு அனுப்பும் வழக்கம் இருந்துள்ளது. சுந்தரர் பாடிய தேவாரத்தில் இப்பெண்களின் பணியைச் சிறப்பாகக் குறிப்பிட்டு பாடியுள்ளார்.

சீபர்பதமலைப் பிரதேசத்தில் தினைப்புனத்தில் தினை நன்கு செழித்து வளர்ந்து கதிரைத்தள்ளி நிற்கிறது. அந்த முற்றிய தினைக் கதிரைப் பாதுகாப்பதற்கு இளம் பெண்கள் தினைப் புனத்திலே பரண்கட்டி அதன் மேல் நின்று காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றி விட்டு பச்சைக் கிளிகள் பறந்து வந்து தினைக் கதிரைக் கொய்து உண்கின்றன. பெண்கள் அதைக் கவனிக்கவில்லை என எண்ணிக் கிளிகள் மீண்டும் வந்து கதிரை உண்கின்றன. அதைக் கண்ட இளம் பெண் ஒருத்திக்குச் சினம் உண்டாகின்றது. அவள் கிளிகளைப் பார்த்துச் சொல்கிறாள் "அப்போது வந்த கதிரைக் கொய்து உண்டீர்கள் நான் உங்களை அழையாது பேசாமலிருந்தேன். ஆனால் நீங்கள் மீண்டும் மீண்டும் வந்து உண்டால் எம்முடைய சுற்றத்தவர்கள் எம்மைக் கடிந்து பேசுவார்கள் இப்போது இவ்வாறு கவர்ந்து உண்பது தானே உங்கள் தொழில்" என்று கிளிகளை ஓட ஓட விரட்டுகின்றாள். கவண் கல்லினால் அடித்து விரட்டுகின்றாள்.

இப்பாடலில் தாய்மையின் பரிவைச் சுந்தரர் காட்டியுள்ளார். பசியால் உணவைத் தேடி வந்த கிளிகளை ஒரு முறை உண்பதற்கு அனுமதித்தமை இதனை நன்கு உணர்த்தியுள்ளது. ஆனால் தாய்மை, கண்டிப்பு நிலைமையில் ஒரு தவறை மீண்டும் செய்ய அனுமதிக்காது. அப்படிச் செய்யின் உரிய தண்டனையை வழங்கும். இங்கே இளம் பெண்ணாக இருந்தபோதும் இயற்கையின் தன்னிகரற்ற தாய்மை என்னும் கொடை பெற்ற பெண் என்பதால் அவள் கிளியைத் தண்டிக்க முற்படுகின்றாள். 'செப்பேந்திய இள முலையாள்' என்ற தொடரால் இளம் பெண் என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

உலகியல் வாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த சுந்தரருக்கு சீர்பதமலையிலே காணும் இயற்கைக் காட்சிகள் வாழ்வியல் அனுபவத்தை விளக்குவதாகவுள்ளன. இதனால் இறைவனைப் பற்றிப் பாடும் பதிகத்தில் எட்டுப் பாடல்களில் இயற்கைக்காட்சிகளைப் பாடியுள்ளார். இயற்கையிலே இறை அருள் காண்கிறார்.

"அப்போது வந்து உண்டீர்களுக்கு அழையாது முன்னிருந்தேன்
எப்போதும் வந்துண்டால் எமர்கள் சுழியாரோ
இப்போது உமக்கு இதுவோ தொழிலென்று ஓடியக் கிளியை
செப்பேந்திள முலையாள் எறி சீபர் பதமலையே"

## திரிபுரம் நீறாக்கிய செல்வன்

ஒரு பிரதேசத்தின் அழகுக்கு இயற்கையான செடி, கொடி, மலர் என்பவற்றை விட அங்கு வாழும் உயிரினங்களும் காரணமாகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களிலே இயற்கை பெரிதும் இணைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் எனும் இலக்கிய நூல் சங்க இலக்கியங்கள் கூறும் அகப்பொருளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. அந்நூலில் கருப்பொருள் என்ற வகையில் இயற்கையும் விலங்கு, புல், பறவை போன்றவையும் அடக்கப்பட்டுள்ளன. இந்த மரபைத் தேவாரம்பாடிய நாயன்மார் களும் பின்பற்றியுள்ளனர். சிறப்பாகச் சம்பந்தரும் சுந்தரரும் தமது பாடல்களில் இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

கோவில்களைப் பற்றிப் பாடும்போது சூழலில் உள்ள இயற்கைத் தோற்றங்களையும் இணைத்துப்பாடியுள்ளனர். சம்பந்தரும் சுந்தரரும் இளமைப் பருவத்தினராதலால் இயற்கை யால் பெரிதும் ஈர்க்கப்பட்டிருந்தனர். தமது பாடல்களில் இரண்டு வரிகளில் இறைவன் புகழையும் மீதி இரண்டு வரிகளில் இயற்கையழகையும் பாடியுள்ளார்.

சுந்தரரது சீபர்பதமலைப் பதிகத்தின் எட்டாவது பாடலில் முதலிரண்டு அடிகளிலும் சிவன் திரிபுரத்தை எரித்த செய்தியும் இறைவனுடைய கழலை திருமாலும் அயனும் தேடிச் சென்றும் அடையமுடியாத நிலையும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு அடிகளில் மலையிலே உள்ள விலங்கான யானையின் வாழ்வியல் குறிப்பிடப்படுகின்றது. யானைக்கூட்டத்திலே பெண்யானை தேனையுண்டு மிகுந்த களிப்போடு இருக்கின்ற காட்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்குமிங்குமாய் அவை அசைந்து திரிகின்ற காட்சியைச் சுந்தரர் காட்டுகிறன்றார். அந்த யானைக்கூட்டம் திரிவதால் மலைக்கு ஒரு புதிய பொலிவே ஏற்பட்டு விட்டதாகப் பாடி யுள்ளார். கரிய நிறத்தை உடையதால் யானை கரி என அழைக் கப்பட்டது. யானைகளின் அசைவைக்கவனித்த சுந்தரருக்கு அதைப் பற்றிப் பாடலிலே சொல்ல வேண்டுமென எண்ணு கின்றார். திரிந்தவை என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். மலைப்பிரதேசத்தில் கூட்டமாக யானைகள் திரிகின்ற காட்சி கவின் தரு காட்சியாக உள்ளது.

கோவிலுக்கு வழிபடச் செல்லும் போது அங்குள்ள இயற்கைக்காட்சிகளிலும் மனதைச் செலுத்த வேண்டும். இறைவன் உறையும் சூழலில் இயற்கையின் தோற்றத்தையே இறை உருவாக எண்ணி வழிபாடு செய்யும் முறைமையும் முற்காலத்திலி ருந்தது. விலங்கினங்களின் செயற்பாடுகளும் அங்கு அமைதி யாகவே நடைபெற்றன. இறைவனின் ஆக்கல் அருள்திறத்தை இயற்கையும் உணர்த்தி நிற்பதை நாம் உணரவேண்டும். உலகத்துத் தோன்றிய உயிரினங்கள் அனைத்தும் இயற்கையெனும் இறைவன் கொடையால் மகிழ்வுறுகின்றன.

"திரிபுரம் நீறாக்கிய செல்வன் தன் கழலை
அரிய திருமாலோடு அயன் தானும் அவரறியார்
கரியின் இனமோடும் பிடி தேனுண்டவை களித்துத்
திரிதந்தவை திகழ்வால் பொலி சீபர்பத மலையே"

## ஏனத்திரள் கிளைக்க எரி போல மணி சிதற

மலை வளங்களில் உயர்ந்த நவமணிகளும் அடங்கும். மக்களுடைய அணிகலன்களிலே விலை மதிப்புடன் இடம் பெறும் நவமணியைப் பற்றி விலங்குகள் அறியமாட்டா. மண்ணுள்ளே புதைந்து கிடக்கும் மணியைச் சிலவேளைகளில் பன்றிக்கூட்டம் வெளிக்கொணரும். பன்றிக்கூட்டம் நிலத்தைக் கிளறும்போது மணிகள் வெளியே வந்து ஒளியைக் காலும். அந்த ஒளியைக் நெருப்பின் ஒளி எனக்கருதி மலைச்சாரலிலே திரிகின்ற கரடி, மான், மரைக்கூட்டமும், மயிலும் ஏனையவையும் எல்லாம் ஓடும். வண்டுகள் தேன் உண்ணுகின்ற பொழில்களாற் சூழப்பட்டதாக சீபர்ப்பத மலை இருக்கிறது. இயற்கை வளத்தோடு இருக்கும் இந்த மலையை பற்றிய சுந்தரர் பாடல்கள் பக்தி நெறிக்கு ஒரு புதிய வழியைக் காட்டுபவை.

உலகில் வாழும் உயிரினங்கள் தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கேற்ற வாழ்வியலைக் கொண்டிருக்கின்றன. தமது உணவுப் பழக்கத்தையும் அங்கு கிடைக்கும் விளைபொருட்களுக்கு ஏற்ப மேற்கொண்டுள்ளன. மலைப்பிரதேசத்தில் உள்ள பொழில் களிலே தேன் நிறையக்கிடக்கும். சீபர்ப்பதமலையிலே வாழும் விலங்குகள் அங்கு கிடைக்கும் தேனை உண்டு வாழும் இயல் புடையவை. இறைவனுடைய கொடையால் மகிழ்வாக வாழ்வு நடத்துகின்றன. மலைச்சாரலிலே அவை ஒன்றாகத் திரியும் காட்சி சுந்தரருக்கு இறைவன் பெருங்கருணையை நினைவுக்குக் கொணர்கின்றது. பயம் ஏற்படும்போதெல்லாம் இறைவனை உள்ளத்திலே நினைந்தால் அது அகன்று விடும். மணிகளின் ஒளியைக் கண்டு பயந்த விலங்குகள் முதலில் பயப்படுகின்றன. ஆனால் பின்னர் மகிழ்வாக வாழ்வு நடத்துகின்றன. இயற்கை யோடு இயைபுபட்டு வாழ்ந்ததால் வாழ்க்கை துன்பமின்றிக் கழியும் என்ற நம்பிக்கை சீபர்ப்பத மலையிலே வாழும் விலங்குகளைப் பார்த்தபோது சுந்தரருக்கு ஏற்படுகின்றது. அதனால் தான் இப்பதிகத்திலே இறைவனைப் பற்றிய செய்திகளை பற்றி அதிகம் குறிப்பிடாமல் இயற்கையான விலங்கு வாழ்வைப் பற்றியே அதிகமாக குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியையே எதிர்பார்த்த சுந்தரருக்கு இறைவனுடைய கருணை பற்றிய தெளிவு சீபர்ப்பதமலையிலே கிடைக்கிறது. இயற்கையின் ஒழுங்கில் இறைவனுடைய அருட்டிறத்தை உணர்ந்து கொள்கிறார். எமக்குத் தேவையானவற்றை இறைவன் தருவான் என்ற நம்பிகை ஏற்படுகின்றது. அதனால் தான் தான் பாடிய பதிகத்தின் 10ஆவது பாடலில் இப்பாடல்களைப்படிப்பவர் விரைவாகச் சென்று வானகம் ஆண்டு அங்கிருப்பர் எனக் கூறுகிறார். இறைவனடியைச் சேர்வதே உலக வாழ்வியலில் உன்னதமான இலக்கு என்பதை சுந்தரர் உணர்ந்தபோது அதனை எல்லோரும் உணரப்பாடல் களிலே பாடியுள்ளார்.

"ஏனத்திரள் கிளைக்க எரி போல மணி சிதறத்
தீயென்று அவை மலைச்சாரலில் திரியும் கரடியும்
மானும் மரையினமும் மயில் மற்றும் பலவெல்லாம்
தேன்உண் பொழில் சோலை மிகு சீபர்ப்பத மலையே"

## மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடி

இறைவனைக் கண்ணால் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது இயல்பு. ஆனால் இவ்வெண்ணம் நிறைவேறுமா என்ற ஏக்கமே பலரிடமும் குடிகொண்டுள்ளது. வயதில் முதியவரான அப்பர் இறைவன் தோற்றத்தைக்கண்டு மகிழ வேண்டும் என்ற பெருவிருப்போடு சென்று கொண்டிருக்கிறார். அவர் திருவையாறு திருத்தலத்திற்கு அருகே வருகின்றபோது கண்ணாரக் கண்ட காட்சிகளைப் பாடல்களாகப் பாடியுள்ளார்.

பல அடியார்கள் திருவையாறு தலத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பக்திக் கோலம் அப்பரைப் பரவசப்படுத்துகிறது. சிவனின் திருக்கோல அழகைப் பற்றி அவர்கள் பாடிக்கொண்டு செல்கிறார்கள். இறைவன் திருத்தலையிலே சூடியிருக்கின்ற துண்டப்பிறையும் கண்ணியும் காட்டும் கோல அழகுதான் முதலில் மனக்கண்ணிற்படுகிறது. அந்த அழகுக்கோலமுடையானை மலையத்துவசன் மகளான பார்வதிதேவியோடும் பரவிப் பாடும் அடியார் கூட்டத்தைக்கண்ட அப்பர் தன்னை மறந்து அவர்கள் போகும் திசையையே பார்க்கிறார்.

கைகளிலே நேரத்திற்கேற்ப மலர்ந்த மலர்களையும், நீரையும் சுமந்தபடி இறைவனை ஏந்தித்தொழுதவண்ணம் சென்று கொண்டிருக்கிறார்கள். வழிபாட்டிற்கு இன்றியமையாத பூக்களையும், நீரையும் அடியவர்கள் எடுத்துச் செல்லும் வழிபாட்டு மரபை அப்பர் மனத்துள் கொள்கிறார். அந்த அடியவர்களோடு தானும் செல்ல விரும்புகிறார். அதனால் போகின்ற அடியவர்களுக்குப் பின்னே புறப்படுகிறார். புகுவாரவர் பின் புகுவேன் என்ற உறுதியோடு எந்தவிதமான காலடி ஓசையும் எழாவண்ணம் மெல்ல நடந்து செல்கிறார். அவ்வாறு நடந்து சென்று ஐயாறு திருத்தலத்தை அடைகின்றபோது அவர்கண்ட காட்சி அவரை மெய் சிலிக்கச் செய்கிறது. அங்கு அவரை நோக்கி ஆண்யானையொன்று தனது அன்புக்குரிய பெண்யானையோடு இணைந்து வருகின்றது. அவ்வாறு அவை வருகின்றபோது அப்பருக்கு இறைவனுடைய திருப்பாதம் கண்ணில் தெரிகிறது. அதைக்கண்டவுடன் 'கண்டறியாதன கண்டேன்'. என்று வியந்து நிற்கிறார். ஆண்யானையும், பெண்யானையும் இணைந்து வரும்காட்சி அப்பர் மனத்திலே உள்ள பக்தி நிலையால் இறைவனும் இறைவியும் போலத் தெரிகிறது. காட்டு விலங்கு என்ற எண்ணம் தோன்றவில்லை. யானையின் பாதம் இறைவன் திருப்பாதமாகவே கண்ணில் தெரிய அது அவர் அதுவரை கண்டறியாத காட்சியாக இருக்கிறது.

"மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான்மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

# பிறை இளம் கண்ணியினானைப் பெய்வளை யாளொடும் பாடி

கோயிற் சூழலில் வாழும் உயிரினங்களின் தோற்றத்திலே இறைவன் தோற்றத்தைக் காணும் மனப்பக்குவம் மெய்யடியார்க்கே கைகூடும். அப்பர் பெருமான் சைவ சமய நெறியில் நின்று இடையில் சமணசமய நெறியிலே சென்றவர். பின்னர் மீண்டும் சைவராக மாறி இறைவனைத் தேடியவர். தான் மறந்திருந்த இறைவனடைய இறைவன் திருக்கோலத்தைக் காணவிரும்புகிறார். கயிலை மலையிலே உறையும் சிவனைத் தரிசிக்க விரும்புகிறார். அதற்காகப் பயணத்தை மேற்கொண்டு நடந்து செல்கிறார். உடம்பால் மேற்கொண்டு செல்ல முடியவில்லை. இறையருள் அவருக்கு மனதால் திருக்கோலக் காட்சியைக் காட்ட வழி செய்தது.

மனதால் இறைவன் கோலத்தையே எண்ணிச் செல்லும் போது வழியிலே இயற்கைக் காட்சிகளைக் காணுகிறார். செல்லும் வழியில் இறைவன் திருக்கோலத்தைப் பாடிக்கொண்டு போகிறார். தலையிலே சூடிய இளம் பிறையோடும் மலர்க் கண்ணியோடும் தோன்றும் சிவனது அழகுக் கோலம். அருகிலே வளையல் நிறைந்த திருக்கரங்கள் கொண்ட உமையம்மையின் தோற்றம். ஒருசேரப் பார்க்கும் போது மனம்பொங்கி வரப்பாடுகிறார்.

நீர்த்துறைகளிலே மலர்ந்திருக்கும் பல வகையான மலர்களை அவற்றிலும் உடன் அலர்ந்த இளமலர்களைத் தூவி வழிபட விழைகிறார். தெய்வீகக் காட்சிதரும் திருவுருவங்களில் திருத் தோளைக்கண்கள் 'குளிரத் தொழுவேன்' என்று அவருடைய பாடலிலே வருந்தொடர் படிப்போர் மனத்தையும் குளிர வைக்கும் அற்புதமான உணர்வு பொதிந்த அருட்தொடராகும். கைகளைத் தலையிலே கூப்பித் தொழும் நிலையென்பது ஒரு உச்சமான உணர்வு நிலையின் வெளிப்பாடாகும். தீப ஒளியிலே இறைவன் திருக்கோலத்தைப் பார்க்கும் போது பரவசத்தால் எம் கைகள் தலையை நோக்கி உயரச் சென்று கூப்பும். அப்படித் தொழுதபடி செல்லும் போது இனிய குரலில் இறைவனைப் பற்றிய செய்தி கூறும் பூங்குயிலின் தோற்றம் தெரிகிறது. அதைத் தாண்டிப் பார்வையைப் படரவிடும்போது சேவல் ஒன்று தன் இளம் பேடையோடு ஆடிவரும் காட்சி தென்படுகின்றது.

இந்தக் காட்சி உயிரினங்கள் தோறும் உறையும் இறைவனின் அருட் சிறப்பை உணர்த்த, அற்புதமான திருவடிகள் அவர் கண்களில் தெரிகின்றன.

"பிறை இளம் கண்ணியினானைப் பெய்வளை யாளொடும் பாடித்
துறை இளம் பல் மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்
அறை இளம் பூங்குயில் ஆலும் ஐயாறடைகின்ற போதும்
சிறை இளம் பேடையொடு ஆடிச் சேவல் வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## தண்மதிக் கண்ணியினானைத் தையல் நல்லாளொடும் பாடி

வழிபாடு செய்யும் போது உடலும் மனமும் ஒன்றுபட்டு இறைவன் பற்றிய சிந்தனையோடு இருக்கவேண்டும். உணர்வுகள் எல்லாம் இறையருள் பெறும் நோக்கோடு தொழிற்பட வேண்டும். புறச்சூழலால் மனம் திரிபு அடையாது புலன்களை அடக்கி வழிபாடியற்ற ஒரு பயிற்சி தேவை. அலைபாயும் மனத்தைக் கட்டுப்படுத்தி வழிபாட்டில் ஒன்றச் செய்வதற்கு அப்பர் வழி காட்டியுள்ளார். ஆலயத்தை நோக்கிச் செல்லும்போது நாம் காணுகின்ற காட்சிகளில் இயற்கைக் காட்சிகளில் மனத்தை ஈடுபடுத்துவதே நல்லது. இறைவனின் அருள் இயற்கையிலே முழுமையாகச் செறிந்துள்ளது.

அதனை, இயற்கையை நாம் ஊன்றிக் கவனிக்கும்போது நன்குணர முடியும். இறைவனைப் பற்றிய பாடல்களைப் பாடிச் செல்வதால் எம்முடைய புலன்களை இறைவன் பால் செலுத்தி வழிபாட்டைச் செய்யலாம். திருவையாறு திருத்தலத்தைப் பார்க்கின்ற அப்பர் கண்களில் தெரிகின்ற காட்சி அவருடைய மனப்பக்குவத்தை நன்கு விளக்கி நிற்கிறது. குளிர்ந்த இளமதி சூடிய சிவனைப் பற்றியும் திருமுடியிலே கண்ணிசூடிய இறைவனைப் பற்றியும் பெண்களுக்கு எல்லாம் சிறந்தவளான உமையம்மையைப் பற்றியும் பாடிக் கொண்டு செல்கிறார். அவருடைய உள்மனம் உருகிப் பாடலாக வெளிவருகிறது. கடந்து போன துன்ப வாழ்விலிருந்து தன்னைக் காப்பாற்றிய இறையருள் நினைவிற் செறிகிறது. உணர்வுகளெல்லாம் உருகிப் பக்திக் கோலமாய் நிற்கிறார். பார்க்குமிடமெல்லாம் இறைவன் நீக்கமற நிறைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. எதிரே வண்ணப் பகன்றில் பறவை ஆடி வருகின்ற காட்சி பக்திவயப்பட்ட பறவையின் ஆட்டம் மனத்தில் புதிய கிளர்ச்சியைத் தூண்டுகிறது. பறவையின் ஆட்டம் மட்டுமல்ல அது அங்கே தங்கி வாழும்பேறு பெற்றிருப்பதை எண்ணிப்பார்க்கிறார். அத்தகைய ஒரு பக்திச் சூழலில் வாழும் பகன்றில் மகிழ்வாக ஆடிக்கொண்டிருக்கிறது. அதற்குக் கவலை இல்லை ஐயாறில் வீற்றிருக்கும் இறைவனோடு இருக்கிறேன் என்ற மன நிறைவோடு வாழ்கிறது. "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் கூற்று ஐயாறு திருத்தலத்தில் ஆடி மகிழும் பறவையால் தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. அப்பர் பாடல் அதை எடுத்துரைக்கிறது.

"தண்மதிக் கண்ணியினானைத் தையல் நல்லாளொடும் பாடி
உண்மெலி சிந்தையனாகி உணரா உருகா வருவேன்
அண்ணலமர்ந்துறைகின்ற ஐயாறடைகின்ற போது
வண்ணப் பகன்றிலொடு ஆடி வைகி வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் "

# கடி மதிக் கண்ணியினானை காரிகை யாளொடும் பாடி

விலங்கு வாழ்க்கையும் மனித வாழ்க்கையைப் போல ஒரு பண்பட்ட வாழ்வுதான் என்பதை அப்பர் சுட்டிக்காட்டியுள்ளார். இறைவன் அருள் செய்து வீற்றிருக்கும் சூழலில் வாழும் விலங்கு களின் வாழ்வியலை எடுத்துக் காட்டுவதன் மூலம் இக்கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையை விலங்குகள் மேற்கொண்டுள்ளன. அதிலும் சிறப்பாகக் கோயிற் சூழலில் வாழும் விலங்குகள் பண்பட்ட ஒரு பக்தி நெறியில் நிற்பதை அப்பர் தனது பாடலில் பதிவு செய்துள்ளார்.

வழிபாட்டு நிலையிலும் கோயில் நடைமுறைச் செயற் பாடுகளிலும் தொடர்பு கொண்டுள்ள விலங்குகளின் வாழ்வுச் சூழலில் அவற்றுக்கு ஒரு பயிற்சி கிடைத்திருக்கக் கூடும். கோயில் யானையின் வாழ்வு இவ்வகையில் பண்பட்டுள்ளதை நாம் அறிந்துள்ளோம். ஆனால் கோயில் நடைமுறைகளோடு தொடர்பு பெறாத விலங்குகளும் பண்பட்டு வாழ்வு நடத்துவதை நமக்கு அப்பர் பாடலிலே காட்டியுள்ளார்.

சிவனின் தோற்றத்தைத் திருமுடியிலிருந்து நோக்குகிறார் அப்பர். இளம்பிறையும் மலர்க்கண்ணியும் மலையரசன் மகளோடு வீற்றிருக்கும் மாட்சியும் மனத்தை நிறைவிக்கின்றன. வடிவும் வண்ணமும் பொருந்தி நிற்கும் புதுமை அவரை வாய்திறந்து பாட வைக்கிறது. அப்பன் வடிவும் அம்மை வடிவும் ஒரு சேரப் பார்க்கும் போது புதிய அழகொன்றைத்தருகிறது. இருவருடைய வண்ணமும் வேறுபட்டவை. இறைவன் திருமேனி பவள வண்ணம். இறைவியின் திருமேனி பச்சை வண்ணம். இரண்டையும் காணும் கண்களுக்கு இந்த வண்ணச் சேர்க்கையின் புதிய எழில் குளிர்ச்சியைத் தருகிறது. அதனால் வாய் அந்தக் காட்சியைப் பாடத் தொடங்ககிறது. பாடியே வாழ்க்கை நடத்தும் பண்பைத் தருகிறது. அப்பரின் வாழ்க்கையும் பண்பட்டது.

திருவடியிலே ஆர்க்கின்ற திருக்கழலின் ஒலிக்கேற்ப அத்திருக்கோல அழகை இசையோடு பாட அப்பர் தேவாரம் அற்புதமாய் வெளிவருகிறது. அந்த வேளையில் ஒரு அற்புதக்காட்சி இவர் கண்ணில் படுகிறது. இடிபோல ஒலி செய்யும் இயல்புடைய காட்டுப்பன்றி தன் துணையோடு இசைந்து பண்பட்ட நிலையில் வந்து கொண்டு இருக்கிறது. இறைவன் வண்ணமும் வடிவமும் பன்றியின் பார்வையில் பட்டதால் அதற்கும் பக்தியுணர்வு தூண்டப்பட்டது. மனிதர்களின் பக்தி உணர்வைத் தூண்டுவதற்கும் இறைவன் வண்ணமும் வடிவுமே துணை செய்யுமென அப்பர் சொல்கிறார்.

"கடி மதிக் கண்ணியினானை காரிகை யாளொடும் பாடி
வடிவொடு வண்ணமிரண்டும் வாய்வேண்டு சொல்லி வாழ்வேன்
அடியினையார்க்கும் கழலானை ஐயாறடைகின்ற போது
இடிகுரலன்ன ஓர் ஏனம் இசைந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

## போழிளங் கண்ணியினாளைப் பூந்துகிலாளொடும் பாடி

உலக வாழ்க்கையில் துன்பங்களை எதிர்கொள்ளும்போது இறைவன் பற்றிய சிந்தனை பலருக்கு ஏற்படுகிறது. முன்னர் மறந்த வழிபாட்டு நடைமுறைகளை மீண்டும் செய்ய வேண்டும் என்ற நினைப்பு உண்டாகிறது. மனித நிலையில் ஏற்படும் துன்பம் மனிதரால் தீர்க்கப்படவேண்டும் என்பதும் பலரது விருப்பமாகும். தான் துன்புறும் வேளையில் யாராவது தன்னைத் தாங்கி அத்துன்பத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என நினைப்பவரை யாரும் கவனிக்காத நிலையும் உண்டு. இன்றைய அவசர உலகியல் வாழ்வில் இப்படி எதிர்பார்ப்பதில் பயனில்லை. நாவுக்கரசர் இத்தகையதொரு அல்லலை அனுபவித்தவர்.

சைவ வாழ்வியலில் மகிழ்வாய் வாழ்ந்தவர். அடுத்தடுத்து வந்த இழப்புகள் அவருடைய அடிப்படை நம்பிக்கையையே தகர்த்து விட்டன. அதனால் சைவத்தை விட்டுச் சமண சமயத்திலே சேர்ந்தார். சமணர் போதனைகள் அவருடைய பெருந்துன்பத்தை ஆற்றின. ஆனால் கொடுமையான சூலை நோய்வாய்ப்பட்டு உடல் துன்பத்தை அனுபவிக்கநேர்ந்தபோது சமணர்களின் வைத்தியம் பயனளிக்கவில்லை. மீண்டும் சைவசமய வாழ்வியலுக்கு அவர் திரும்பி வந்தார்.

இந்த அனுபவம் அப்பருக்குப் புதியதொரு வாழ்வியலைப் பின்பற்றுவதற்கு உதவியது. பக்தி செய்து வாழும் புதியதொரு பாதையிலே அவர் நடக்கத் தொடங்கினார். இறைவன் கோலத்தைக் காணவேண்டும் என்பதையே தன் வாழ்வின் இலக்காக்கினார். பல திருக்கோயில்களுக்குச் சென்று பூமாலை தொடுத்தும் பாமாலை சாற்றியும் மனமுருகி நின்றார். தன் உடல் உறுப்புகள் எல்லாம் இறைபணிக்காகவே தமக்குத் தரப்பட்டவை என்ற உண்மையை உணர்ந்து கொண்டார். அதனால் உடல் மொழியிலே இறையனுபவத்தைப் பாடியுள்ளார்.

திருவையாறு தலத்திலே நடந்து செல்கின்ற போது அவர் உள்ளமும் உடலும் ஒத்திசைந்து பக்தி நெறியிலே செல்வதை அவர் பாடிய பதிகப்பாடல்கள் துல்லியமாக விளக்கி நிற்கின்றன. தொடுக்கப்பட்ட புதிய கண்ணி மாலையை அணிந்த இறைவனை அழகான சித்திர வேலைப்பாடமைந்த சேலையணிந்த இறைவியோடு போற்றிப்பாடி வட்டமிட்டு ஆடிக்கொண்டு போகிறார். வட்டமிட்டு வழிபடும் மரபு இன்றும் உள்ளது.

உலகை வலம் வரும் பரிதியொடு இறைவனை வாழ்த்தி வணங்குவதற்காகத் திருவையாற்றிற்குச் செல்லும்போது அவர் கண்ட காட்சி அவரது மனத்தை மகிழ்வித்தது. அவர் முன்னே கோழி பெடையோடு சேர்ந்து வந்து கொண்டிருந்தது. அந்தக் குளிர்மையான பறவையின் கால்கள் இறைவன் இறைவியின் திருப்பாதம் போல அப்பருக்குக் காட்சி தந்தன. விடிகாலைப் போதில் உள்ளத்தை வந்து நிறைவித்த அப்பறவைகளின் கோலம் அப்பரைப் பக்தி வயப்படுத்திப் பாட வைத்தது.

"போழிளங் கண்ணியினாளைப் பூந்துகிலாளொடும் பாடி
வாழியெம் போற்றியென்றே வட்டமிட்டாட வருவேன்
ஆழி வலவனின்றேத்து மையாறடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## எரிப் பிறைக் கண்ணியினானை யேந்திழை யாளொடும் பாடி

இயற்கையைக் கண்டு மகிழும் மனப்பக்குவம் எல்லோருக்கும் நன்மை தரும் என்பது அருளாளர்கள் கருத்தாகும். சம்பந்தர், சுந்தரர், அப்பர் மூவரும் இறையழகை இறைவன் கோலமாகக் கண்டு பக்திவசப்பட்டவராவார். அப்பர் இவர்களில் வயதில் மூத்தவர். ஆனால் இறைவனை மறந்திருந்தவர். அதனால் கைலயங்கிரியிலே இறைவனையும் இறைவியையும் சென்று காணவிரும்புகிறார். ஏனைய கோயில்களிலே சென்று கண்ட இறைவன் கோலங்களை விடத்திருக்கைலாய மலையில் வீற்றிருக்கும் கடவுளைக் காணப் பெரிதும் ஆவலாக இருந்தார்.

எனவே நடந்து செல்கிறார். நடந்து ஆலயங்களக்குச் செல்லும் மரபு இன்றும் பேணப்படுகிறது. இதனைப் பாதயாத்திரை என்று அழைப்பர். எல்லாச் சமயங்களும் பாதயாத்திரை செல்லும் நடைமுறையைக் கொண்டுள்ளன. அப்பர் மிக்க மன உறுதியோடு சென்றாலும் முதுமை காரணமாகப் பல உடல் உபாதைகளுக்கு ஆளாகிறார். இறைவன் அவருடைய மன உறுதியைக் கண்டு அசரீரியாக "நாவுக்கரசனே நீ இந்தத் தடாகத்திலே முழுகித் திருவையாற்றை அடைநது நம்மைக் கைலையங்கிரியில் வீற்றிருந்தபடி அந்தஸ்தலத்திலே கண்டு தரிசித்து வணங்கு" என்று பணித்தருளினார். அப்பர் அதனைச் சிரமேற்கொண்டு திருவையாறு தலத்தை வணங்கும்போது கண்ட காட்சிகளைப் பாடியுள்ளார்.

இறைவன் பற்றிய இடைவிடாத சிந்தனை அவருடைய பதிகப் பாடலெங்கும் பரவி நிற்கிறது. திருப்பதியிலேயுள்ள எல்லா உயிரினங்களும் தத்தம் இனிய துணையோடு பொலிவதைக் கண்டு அவற்றையே சிவமும் சக்தியுமாகப் பார்த்து வணங்கி 'மாதர்பிறைக் கண்ணியானை' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். இப்பதிகத்தில் அவர்தாம் பெற்ற இறையனுபவத்தை வெளிப்படையாகப் பாடியுள்ளார். சிவனடைய கோல அழகைத் திருவையாற்றிலே வீற்றிருக்கும் இறைவன் கோலத்தோடு இணைத்துச் சொற்சித்திரமாக்கியுள்ளார். நீர்வளமும் நிலவளமும் கொண்ட திருவையாற்றை எல்லோராலும் போய்த்தரிசிக்க முடியாவிட்டாலும் அப்பர் தேவாரத்தைப் படிக்கும் போது ஒரு அகதரிசனம் கிட்டும்.

"எரிப்பிறை சூடிய கண்ணியான்" என இறைவனைக் குறிப்பிடுகின்றார். பதிகத்திலுள்ள பத்துப்பாடல்களிலும் இறைவன் திருமுடியழகையே முதலிற் பாடுகிறார். இறைவனைப் பாடும் போது பாதாதி கேசமாகப் பாடுவதே மரபு.

ஆனால் அப்பரோ கேசத்தில் இருந்து தொடங்கிப் பாடுகிறார். தன்னுடைய வழிபாட்டு நடைமுறைகளையும் ஒவ்வொரு பாடலிலும் தவறாமல் குறிப்பிட்டுள்ளார். முகம் மலர்ந்து இறைவன் முன்னே ஆடிச் செல்லும் பக்தியுடையவராகத் தன்னைக் காட்டுகிறார். துள்ளி விழும் அருவியும் சோலைக்குயில் பெடையோடு ஆடி வருவதையும் காணும் போது இறைவன் இறைவியின் அற்புதமே தரிசனமே அவருக்கு கிடைத்து விட்டது. அந்தக் காட்சி அவர் எப்போதுமே காணாத அற்புத தரிசனம். எனவே அதைப் பாமாலையாக இறைவனுக்குச் சாற்றிப்பாடுகிறார்.

"எரிப் பிறைக் கன்னியினானை யேந்திழை யாளொடும் பாடி  
முரித்த விலயங்களிட்டு முகமலர்ந்தாடா வருவேன்  
அரித்தொழுகும் வெள்ளருவியை யாறடைகின்றபோது  
வரிக்குயில் பேடையோடாடி வைகி வருவன கண்டேன்  
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

## ஏடுமதிக்கண்ணியானையே ந்திழை யாளொடும் பாடி

பக்தி வயப்பட்ட நிலையில் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற இறைவன் நிற்பதைக் காணலாம் என வழிகாட்டியவர் அப்பர் பெருமான். அவருடைய பக்தியை இன்றைய காலகட்டத்தில் ஏற்றுக்கொள்ள பலர் தயங்கக்கூடும்.

ஆனால் மனிதப் பிறவியின் நோக்கமே எங்கும் நிறைந்திருக்கும் இறைவனைத் தேடி அடைதலாகும். பிறப்பும் இறப்பும் ஒரு நியதிப்படி நடப்பவை. பிறவி எடுத்த மனிதன் நிறைவான வாழ்வுக்கு வழிபாடு இன்றியமையாதது. அதனைச் செய்வதற்கு வழிகாட்டியவர்கள் நாயன்மார்களாகும்.

அப்பருடைய தேவாரப்பாடல்கள் இப்பணிசை செவ்வனே செய்துள்ளன. மீளாத துன்ப நிலையில் எம்மை மீண்டும் நிமிரவைப்பது பக்தியே. பக்தி வயப்பட்ட செயற்பாடுகள் உடலையும் உள்ளத்தையும் பண்படுத்தும் ஆற்றல் கொண்டவை. உழவாரத் தொண்ட செய்து தம் உள்ளத்துக் கவலையைப் போக்கிய அப்பருடைய முயற்சி அனைவருக்கும் ஏற்றதே. மக்கள் எல்லோரும் கூடி வழிபடும் திருக்கோயில் தூய்மையாக இருக்க வேண்டும். தூய்மையால் புதிய பொலிவுண்டாகும். அதன் அழகு கூடும். அழகு மனதைக் கவரும். அதை நாளும் காண ஆவல் உண்டாகும். இந்த உளவியல் ஆற்றுகையை அப்பர் தனது பாடல்களிலே செய்துள்ளார்.

திருவையாற்றில் வீற்றிருக்கும் இறைவனைக் காணும் போது அவர் பெற்ற நிறைவான இன்பத்தை எல்லோருக்கும் அறிவிக்க விரும்புகிறார். இளம் பிறையைச் சூடிய சிவனையும் அழகு நிறைந்த உமையையும் காணச் சென்றவருடைய கண்களில் கோயிலின் புறச்சூழல்படுகிறது. தான் அங்கு வந்த அனுபவத்தை வாய்விட்டுப்பாட விரும்புகிறார். இறைவனையும் இறைவியையும் பாடிக் கொண்டு காடு, மலை, நாடெல்லாம் கைதொழுதபடி வருகிறார். அவர் நடை ஓர் ஆடலாக அமைந்துவிட்டது. பாடலின் பண்ணுக்கு ஏற்றபடி தலையிலே இரு கைகளையும் கூப்பித் தொழுதபடி ஆடி ஆடி வருகிறார். ஆடவல்லான் அமர்ந்துறையும் திருவையாற்றை அடைகின்றபோது சுற்றும் முற்றும் பார்வையைப் படரவிடுகிறார். அங்கு வாழும் உயிரினங்களின் இயக்கம் நடைபெறுவதைக் காண்கிறார். அவற்றுள் குறிப்பாக அழகான ஒரு மயில் வருகின்ற காட்சி அவர் மனதைப் பெரிதும் கவர்கிறது. பேடைமயிலோடு இணைந்து மகிழ்வாக ஆடிவரும் பாங்கு அவர் உள்ளத்தில் புதிய மலர்ச்சியைத் தெளிக்கிறது. மழை முகிலைக் கண்டுதோகையை விரித்து ஆடும் ஆண் மயிலின் இப்போதைய ஆட்டம் வேறுபட்டிருந்தது. இறைவனும் இறைவியும் ஆடும் திருநடனமாகத் தோற்றுகிறது. கூடிப்பிணைந்து வரும் காட்சி அப்பர் மனதை உருக வைக்கிறது. உலக மக்களை நோக்கி நடந்து வரும் இறைவனையும் இறைவியையும் பேடைமயிலின் அசைந்தாடிவரும் கால்களில் காண்கிறார். மயிலின் பாதம் மறையப்பாடுகிறார்.

"ஏடுமதிக்கண்ணியானையே ந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையுங் கைதொழுதாடா வருவேன்
ஆடலமர்ந்துறைகின்ற வையாறடைகின்ற போது
பேடைமயிலொடுங் கூடிபிணைந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்"

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

## விரும்பு மதிக் கண்ணியானை மெல்லியலாளொடும் பாடி

காலைப் பொழுது இறை வழிபாட்டிற்கு ஏற்ற பொழுதாகும். காலையில் கடமைக்குச் செல்லுமுன் இறைவனை வழிபட்டுச் செல்வது மனதில் புதிய மலர்ச்சியைத் தரும். இதனை அப்பர் பட்டறிவால் நன்கு உணர்ந்தவர். திருவையாற்றுத் திருத்தலத்திலே காலைப் பொழுதில் தான் செய்யும் வழிபாட்டு நடைமுறைப்பற்றி பாடலிலே குறிப்பிட்டுள்ளார். வழிபடுவதற்கு உரிய நேரத்தைப் "பெரும் புலர் காலை" எனக் கூறுகிறார். பொழுது புலர்கின்ற விடியற் காலையிலே எழுந்து நீராடி அப்போது பெறக்கூடிய மலர்களைக் கொய்து கொண்டு திருத் தலத்திற்குச் செல்கிறார். மலர்களைப் பிடுங்குதல், பறித்தல் என்ற சொற்பயன்பாடே தற்போது வழக்கிலுள்ளது. இவ்விரு சொற் களும் ஏற்றவையல்ல. மலர்களைக் கொய்தல் என்பதே சரியான சொற்பயன்பாடாகும்.

வழிபாட்டிற்குச் செல்லும் போது எத்தகைய மலர்களைக் கொய்து கொண்டு செல்லவேண்டுமென்பதை அப்பர் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். "போதொடுகொண்டு", "போது பொன்திகழ் கொன்றை", "அலரும் நீரும் கொண்டாட்டி", "பூப்பெய் கூடை புனைந்து", "எருக்கங்கண்ணி கொண்டு இண்டை புனைந்து", "நறுமலர் கொய்திலர்", "மரங்களேறி மலர் பறித்திட்டிலர்", "அரும்பார்ந்தன மல்லிகை", "மட்டார் மலர் கொன்றை", 'கொய்யா மலர் கோங்கு', "செய்யார் கமலம்", "செம்மலர்க் கமலம்" என வரும் தொடர்கள் இதற்குச் சான்றாகும்.

நீர்வளம் நிறைந்த பிரதேசத்தில் மலர் கொய்து செல்லும் போது அங்கு மணிகளை உருட்டி வருகின்ற ஆற்றுவளத்தையும் காண்கிறார். திருவையாறு என்னும் தலத்தின் அழகுக்கு நீர்வளமே காரணமாகும். அத்தகைய வளமான பகுதியில் குரங்கினங்கள் வாழ்கின்றன. கோயிற் சூழலில் மந்திகள் வாழ்வது பற்றிச் சம்பந்தரும் பாடியுள்ளார். ஆனால் சம்பந்தர் தான் கண்ட மந்தியைப் பிறிதொரு உணர்வு நிலையில் காட்டுகிறார்.

"சிலமந்தி யலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறு" எனச் சம்பந்தர் பாடியுள்ளார். சம்பந்தர் பார்வையில் பட்ட மந்திகள் சாதாரண மந்திகள். ஆனால் அப்பர் கண்ட கருங்குரங்கு ஆண் குரங்கு தனக்குரிய பெண் குரங்கோடு ஆடிமகிழ்ந்து வருகின்றது. இரண்டும் இன்பம் அனுபவித்த மகிழ்வோடு வருவதை அப்பர் நயமாக "ஆடிக்கலந்து வருவன கண்டேன்" எனப்பாடியுள்ளார். கருங்குரங்கின் வாழ்வியல் நடைமுறையை நன்கு அறிந்தவர் போலப் பாடியுள்ளார். துணை யோடு வருகின்ற காட்சி சிவமும் சக்தியுமாகத் தோன்றுகின்றது.

பக்தி வயப்பட்ட அவருடைய தெய்வீக அனுபவம் பாடலில் பதிவான போது எல்லோரையும் பரவசமடைய வைக்கின்றது. இறைவனை எங்கும் காண வைக்கின்றது.

"விரும்பு மதிக் கண்ணியானை மெல்லியலாளொடும் பாடி
பெரும்புலர் காலையெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்துமையாறடைகின்ற போது
கருங்கலை பேடையோடாடிக் கலந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

## முற்பிறைக் கண்ணியினானை மொய் குழலாளொடும் பாடி

கடவுளைக் காணவேண்டும் என்ற ஆவல் ஏற்படும்போது கோயிலை நாடிச் செல்லும் வழக்கம் எம்மிடையே உண்டு. இதற்கு வழிகாட்டியாக நிற்வர்கள் நாயன்மார்களே. திருத்தலங்களுக்குச் சென்று இறைவனைக் காணலாம் என்ற நம்பிக்கையை ஊட்டியவர்களும் அவர்களே. தாமும் திருக்கோயில்களுக்கு யாத்திரை செய்தனர். அவ்வாறு யாத்திரை செய்தபோது அவர்களுடன் மக்களும் கூடச் சென்றனர். அந்த அனுபவத்தை நாவுக்கரசர் தனது பாடல்களிலே அழகாகப் பதிவு செய்து வைத்துள்ளார்.

திருவையாறு என்னும் தலத்தை அவர் மெய்யடியார்களோடு சேர்ந்து சென்று தரிசிக்கும் அனுபவம் பெற்றவர். அந்த அனுபவத்தைப் பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளார். தன்னுடைய நிலையையும் அடியார் கூட்டத்தின் நிலையையும் கோயில் சூழலையும் பரவசமாகி நின்று பாடுகிறார்.

அவர் மனத்திரையிலேயே வரைந்துவைத்திருந்த இறைவனைச் சொற்களால் எல்லோரும் காணும் வண்ணம் எடுத்துக்கூறுகிறார். இறைவன் திருக்கோலத்தில் அவரை முதலில் கவர்ந்த திருமுடியின் அழகை முதலில் பாடுகிறார். இளம்பிறையோடு கண்ணி சூடியிருக்கும் கவின் நிறைந்த காட்சியைக் காட்டுகிறார். துண்டப்பிறைசூடிய கோலம் அற்புதமான காட்சியாக அமைந்துள்ளது. ஆண்களின் தலை அலங்கார மரபை அவர் கண்கள் கூர்மையாக நோக்கியுள்ளன. அதேவேளை இறைவன் அருகில் இருக்கும் இறைவியின் சூழலிலும் அவர் பார்வை படிகிறது. வண்டுகள் மொய்க்கும் மலர்களைச் சூடிய சூழலின் அழகும் பிறை சூடிய இறைவன் சடையும் அழகு நிறைந்த அலங்காரத் தோற்றமாகக் கண்களிலே தென்படப்பாடுகிறார். இந்த அற்புதமான காட்சியை காண்பதற்காக உலகத்துப் பற்றுகளையெல்லாம் கைவிட்டுப் பாடி ஆடிக்கொண்டு வருவதாகப் பாடுகிறார்.

அவருடன் அருள் பெற்ற ஏனைய அடியவர்களும் கூடவே வருகின்றனர். அவ்வாறு நடந்து திருவையாறு திருத்தலத்தை அடைந்தபோது அவர் கண்ட காட்சி அவரது வாழ்க்கையில் முன்பு கண்டறியாத காட்சியாகவுள்ளது. தனது நல்ல துணையான பேடையோடு நாரை ஆடி அசைந்து வரும் அழகான காட்சி தென்படுகிறது. நாரைகளின் பாதங்கள் பூமியில் படிந்துவரும் அருள் நிறை நடையைக் காண்கிறார். அப்போது நாரையின் கால்கள் மறைய இறைவன் இறைவியின் திருப்பாதங்கள் தோன்றுகின்றன. தன்னை நோக்கி வரும் தான் காண விரும்பிய பாதங்களைப் பார்த்து மெய்சிலிர்த்து நிற்கிறார். நாரையின் சிவந்த பாதங்களில் இருந்து விழிகளைப் பறிக்க முடியாமல் வியப்புடன் பரவசப்பட்டு நிற்க வாயில் பாடல் பிறக்கிறது.

"முற்பிறைக் கண்ணியினானை மொய்குழலாளொடும் பாடிப்
பற்றிக் கயிறறுக்கில்லேன் பாடியு மாடா வருவேன்
அற்றருள் பெற்று நின்றாரோ டையாறடைகின்ற போது
நற்றுணைப் பேடையொடாடி நாரை வருவன கண்டேன்
கண்டனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

## திங்கள் மதிக்கண்ணி யானைத் தேமொழியாளொடும் பாடி

பக்தி என்னும் அனுபவம் எல்லோரையும் பண்படுத்தும் உள்ளத்தில் ஏற்படும் குழப்பமான நிலையை அகற்றப் பக்தியிலே திளைக்க வேண்டும். உள்ளத்தில் அமைதி நிலவ இந்த உணர்வு நிலை துணை செய்யும். அதற்கு உள்ளத்தைப் பிணிக்கும் பக்திச் சூழல் இன்றியமையாதது. அத்தகைய சூழல் திருக்கோயிற் சூழலாகும். இதனை நன்குணர்ந்த எம் முன்னோர் பல கோயில்களைத் தாம் சென்று வழிபட என அமைத்தனர். அவற்றின் சூழல் இயற்கையழகுடன் பொலிந்தது. நீரும் நிழலும் தரும் இயற்கைச் சூழல் எல்லோரும் விரும்பிச் செல்லும் இடமாக எல்லையற்ற அமைதியோடு நிலவியது.

கோயிலில் குடி கொண்டிருக்கும் இறைவனைத் தரிசித்தல் ஒரு மகிழ்வும் மன நிறைவும் தரும் இனிய அனுபவமாக இருந்தது. இந்த இனிய அனுபவத்தை எல்லோரும் அறியச் செய்ய வேண்டும் என்பது நாயன்மார்களுடைய நல்நோக்கமாக இருந்தது. அதனை அவர்களுடைய பாடல்கள் நன்குணர்த்துகின்றன. சிறப்பாக நாவுக் கரசருடைய பாடல்களில் இப் பண்பு மிகுதியாகவுள்ளது. கோயிற் சூழல் கவினுடையதாக இருக்க வேண்டும் எனக் கருதி உழவாரம் கொண்டு பணி செய்தவர். இயற்கையான அழகுச் சூழலோடு தூய்மையாக்கும் பணியையும் இணைத்துக் கோயில் தொண்டு செய்யும் பயிற்சியைத் தொடக்கி வைத்தவர் நாவுக்கரசராகும்.

சைவத்தைக்கைவிட்டு சமணத்தை விரும்பிச் சென்ற தன்னுடைய குற்றத்திற்கு இறைவனுக்கு தொண்டு செய்தல் என்னும் தண்டனையைத் தானே வழங்கி பணிப் செய்தவர். எந்நேரமும் இறைவனை நினைப்பதற்கு அவன் கோவிலிலே நித்தம் நின்று பணி செய்வதே சிறந்தது என நினைத்தவர். அவருடைய தொண்டு இன்று வரை தொடரப்படுகிறது.

கோயிற் சூழலில் வாழும் ஏனைய உயிரினங்கள் எல்லாம் இறைவனை நித்தம் வழிபட்டமையால் அருள் பெற்றிருப்பதை உணர்கிறார். இறைவனை வழிபடச் செல்லும் போது அவற்றைக் கண்டு மகிழலாம் என்பதையும் பாடல்களிலே பதிவு செய்துள்ளார். எப்போது எனக்கு அருள் செய்வாய் என்ற கேள்வியோடு தான் இறைவனை வழிபடச் சென்றபோது பெற்ற தெய்வீக அனுபவத் தைத் தன்னுடைய பாடல்களிலே பிறர் அறியும் வண்ணம் குறிப் பிட்டுச் சென்றுள்ளார். வழிபாட்டில் இளைஞரும் தம்மோடு இணைந்து வந்தமையையும் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். இளமங்கையரோடு திருவையாறு திருத்தலத்திற்குச் சென்றபோது பெற்ற பக்தி அனுபவத்தைப் பாடலிலே உணர்வுபூர்வமாகப் பாடியுள்ளார்.

> "திங்கள் மதிக்கண்ணி யானைத் தேமொழியாளொடும் பாடி
> எங்கருணல்குங் கொலெந்தை யெனக்கினியென்னா வருவேன்
> அங்கிள மங்கையராடு மையாறடைகின்ற போது
> பைங்கிளிபேடையொடாடிப் பரந்து வருவன கண்டேன்
> கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

## வளர்மதிக் கண்ணியினானை வார் குழலாளொடும் பாடி

மன உறுதியென்பது எல்லோருக்கும் தேவை. எடுத்த காரியத்தைச் செவ்வனே செய்து முடிப்பதற்கு மன உறுதி வேண்டும். ஆனால் இந்த மன உறுதியை எப்படிப்பெறுவது? இதற்கென ஏதாவது பயிற்சி உண்டா? இந்த வினாக்களுக்கு விடையைக் காண்பதாயின் நம் முன்னோர் வாழ்வியலை ஒரு முறை மீள் பார்வை செய்யவேண்டும். அவர்கள் வாழ்ந்த காலத்தை எம்மால் தரிசிக்க முடியாது. ஆனால் அவர்கள் வாழ்ந்த முறைமையைப் பற்றியறிவதற்கு எமக்குச் சில பதிவுகள் கிடைத்துள்ளன.

மனத்தைப் புலன் வழி செல்லவிடாது நெறிப்படுத்த ஒரு வழியுண்டு என வாழ்ந்து காட்டிய அடியார்களின் பாடற்பதிவு களைப் படிக்கும்போது எமது வினாக்களக்கு விடை கிடைத்து விடுகிறது. சோர்ந்த மனத்துடன் சுருண்டு கிடக்கும் உடலை மீண்டும் இயக்க ஒரு இனிய பாடல் போதும். இதனைத் தேவாரப் பாடல்களைப் பண்ணோடு பாடக்கேட்டால் உணர்ந்து கொள்ள லாம்.

இறைவனைப் பற்றிய பாடல் எல்லோருக்கம் உரியது. உள்ளத்தில் தோன்றும் ஆசையை அடக்கி இறைவனைக் காணவிரும்பும் ஆவல் பாடலைக் கேட்கும் போது உண்டாகும். தோற்றப் பொலிவைக் கண்ணாரக் காணும் விருப்புத் தோன்றும். அப்பருடைய பாடலிலே இத்தகைய சிறப்பு உண்டு. திருவையாறு என்னும் திருத்தலம் பற்றி அவர் பாடிய பதிகம் தனித்துவமானது. காலத்தைக் காத்திருக்கும் மனவுறுதியும் பக்திப்பரவசமும் இணையும் நிலையை அப்பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. "களவு படாததொர் காலங்காண்பான் கடைக்கணிக்கின்றேன்" என அவருடைய பாடல் அடி புலப்படுத்தும் அனுபவம் அற்புதமானது. காலத்தைக் காத்திருக்கும் மனவுறுதியும் அதேவேளை இறைவன் தரிசனத்தைத் தேடும் கடைக்கண்பார்வையும் ஒன்று கூடிய வேளையில் அவர் கண்ட காட்சி இளமையான நாகுவை ஏறு தழுவி வரும் காட்சி மனவுறுதியோடு திருவையாறு தலத்தையடைந்த போது அவருக்கு எல்லாமே இறைவன் தன்னை நோக்கி வரும் காட்சியாகவே தென்படுகிறது.

அவர் பாடிய பத்துப் பாடல்களிலும் கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் என்று பாடியுள்ளார். மனவுறுதியால் அவர் பெற்ற காட்சியின்பம் கற்பனை அல்ல. முழுமையான நினைவோடு இறைவனையே என்றும் காணும் ஆவலுடன் இருந்தமையால் அத்தகையதொரு அற்புதமான தரிசனத்தை அவர் காணும் பேறு பெற்றார். இத்தகைய அனுபவம் ஒரு மனப்பயிற்சியினால் தான் கைகூடும். அப்பயிற்சிக்கே அப்பர் பாடல் வழிகாட்டுகிறது.

"வளர்மதிக் கண்ணியினானை வார் குழலாளொடும் பாடிக்
களவுபடாத தொர் காலங்காண்டான் கடைக்கணிக் கின்றேன்
அளவுபடாத தொரன்போ டையாறடைகின்றபோது
இளமணநாகு தழுவியேறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## பரவும் பரிசொன்று அறியேன்

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனோடு தோழமை நிலையில் தொடர்பு கொண்டு வழிபாடு செய்தவர். தனக்குத் தேவையானவற்றை நட்பான நிலையில் இறைவனிடம் கேட்டுப் பெறும் குணவியல்புடையவர். 18 வயதில் இறைவனடி சேரும் பேறு பெற்றவர். இளமைக் காலத்தில் அவருடைய பக்தி நெறி ஒருவகை வன்பக்தியாக இருந்தது. இறைவனோடு இளமைப் பண்பால் வாதாடியவர். அதனால் 'வன்தொண்டர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டவர். இரு மனைவியரோடு உலக இன்பங்களை அனுபவித்தவர். அதனால் வழிபாட்டு நிலையில் ஏனைய நாயன்மார்களைவிட வேறுபட்டவர். பல சந்தர்ப்பங்களில் இறைவன் மீது நிந்தாஸ்துதி பாடியவர். இது அவருடைய தனிச்சிறப்பியல்பு.

அவருக்கும் திருவையாறு திருத்தலம் சென்று இறை தரிசனம் செய்ய வேண்டும் என்ற விருப்பு ஏற்பட்டது. சேரமான் பெருமான் நாயனாருடன் அத்தலம் செல்ல விரும்புகிறார். காவிரி நதியின் இக்கரையில் நின்று அக்கரையிலிருக்கும் தலத்தையடைய முடியாமல் கவலைப்படுகிறார். வழக்கம் போல இறையருளை நட்பு நிலையில் வேண்டுதல் செய்ய அவரால் முடியவில்லை. எனினும் இரங்கி வழிபட்டால் இவைன் தனக்கு வழிகாட்டுவார் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. இக்கரையில் நின்று ஓலமிட்டுப் பதிகம் பாடினார். தனது பாடலின் இறுதியில் "ஐயாறுடைய வடிகளோ' என்று இறைவனை அழைத்து மனம் உருகிப்பாடினார்.

வழிபாட்டு முறைமையறியாத தன் நிலையைப் பாடினார். பண்டு தொட்டு தான் இறைவனுடன் முரண்பட்டு நின்றதை நினைவு கூர்ந்தார். இரவும் பகலும் இறைவனை நினைத்தாலும் தன்னுடைய நினைப்பிலே இறைவனை நிறுத்த முடியாத தன்குறைபாட்டை எடுத்துக் கூறினார். அவ்வாறு பாடும்போது திருவையாறு தலத்தின் இயற்கை வதிவிடத்தைப் பற்றிய குறிப்பாக இணைத்துப் பாடியுள்ளார். இளமையான அவர் உள்ளம் இயற்கை அழகில் விரைவில் மனம் ஒன்றிப் போகிறது. ஆற்றங்கரையில் செழித்து வளர்ந்திருக்கும் உயர்ந்த மரங்களான கமுகுந்தென்னையும் அவர் கண்ணில் படுகின்றன. காவேரியாறு பாம்புபோல ஒடுகின்ற காட்சி அவர் கண்ணையும் கருத்தையும் கவர்கிறது. வழிபாட்டுத்தலம் அமைந்திருக்கும் காவிரி ஆற்றங்கரை சென்று வழிபட அழைக்கிறது. ஆனால் நீர்ப்பெருக்கைத் தாண்டி எப்படிச் செல்வது? எதையும் இறைவனிடம் உரிமையுடன் கேட்டுப் பெற்ற அனுபவம் உடைய சுந்தரர் இப்போது அதுபோலவே உதவியைக் கேட்டுப் பாடி நிற்கிறார். இறைவன் கன்றின் அழைப்புக் குரல் கேட்ட தாய்ப்பசு போல 'ஓலம்' என்று சொல்லியருளினார். உடனே காவிரியாறு இரண்டாகப் பிரிந்து நடுவே திருத்தலம் செல்ல வழிகாட்டச் சுந்தரர் நடந்து தலத்தை அடைந்தார்.

"பரவும் பரிசொன்று அறியேன் பண்டேயும் உம்மைப் பயிலாதேன்

இரவும் பகலும் நினைத்தாலும் எய்தநினைய மாட்டேன்

கருவில் அருவி கமுகு உண்ணத் தெங்கங்குலைக்கீர் கருப்பாலை

அரவந்திரைக் காவிரிக் கோட்டத்தை யாறுடைய வடிகளோ"

## எங்கே போவேன் ஆயிடினும் அங்கே வந்தென் மனந்தீராய்

இறை நம்பிக்கை என்பது சுந்தரர் வாழ்வில் நடைமுறைச் செயற்பாடுகளுடன் நெருங்கிப்பிணைந்திருந்தது. பெற்றோரை விட்டு அரச வாழ்க்கை வாழ்ந்த அவருக்கு உலக வாழ்க்கையை அனுபவிக்கும் பயிற்சியே கொடுக்கப்பட்டிருந்தது. எல்லாவற்றையும் விரும்பியபோது அனுபவிக்க வேண்டும் என்ற முனைப்புக் குண இயல்பு கொண்டவராக சுந்தரர் விளங்கினார்.

இந்த முனைப்பான குணத்தால் தான் விரும்பும் எல்லாவற்றையும் இறைவன் தருவான் என்ற நம்பிக்கையுடன் இருந்தார். சுந்தர வேடம் புனைய கந்தமுதல் ஆடை ஆபரணம் வரை உரிமையோடு கேட்டுப் பெற்றவர். மனைவி பரவையின் பசி தீரப் பெற்ற நெல்லை வீடு கொணர்ந்து தர வேண்டும் எனப் பாடி அப்படியே பெற்றவர்.

இதனால் சுந்தரர் உலகியல் ஆவல்களோடு வாழும் பொதுமகனாக இருந்தார். அவருடைய பக்தி உணர்வை எம்மால் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும். அவர் எங்கு சென்றாலும் அங்கே இறைவன் வந்து அவர் கேட்பதை நிறைவேற்றும் ஒரு தோழனாகவே இருந்ததை சுந்தரர் பாடல்களிலே பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒன்றும் வெட்கப்படவேண்டிய விடயமல்ல. விரும்பியதைப் பிறரிடம் கேட்டுப் பெறுவதற்குச் சிலர் தயங்குவர். ஆனால் அத்தயக்கம் தேவையற்றது என்பதே சுந்ததரரது கொள்கையாகும். "சங்கை ஒன்றும் இல்லை" எனத் துணிவோடு பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

தனது நட்பான இறைவன் அன்று முதல் இன்று வரை ஒரே மாதிரியாக கேட்டதைத் தருகின்ற அருளாளன் என மெய்சிலிர்த்துப் பாடுகிறார். இறைவனுடைய அருள் நிறைந்த தோற்றப் பொலிவையும் நினைவில் நிறுத்திப்பாடுகிறார். கங்கையை திருமுடியிலே கரந்து வைத்திருக்கும் கோலமும் கலைமான் மறியும் கனலும், மழுவும் தாங்கிய கரமும் கொண்ட இறைவன் கோலத்தை எடுத்துக்கூறுகிறார். அவர் நெஞ்சில் பதிந்த அந்தக் கோலச் சிறப்பை எல்லோருக்கும் அறிவிக்க விரும்புகிறார்.

காவிரிக் கரையில் இருக்கும் திருத்தலத்தைச் சென்று வழிபட கோலச் சிறப்புடைய இறைவன் அருள் செய்ய வேண்டும் என விண்ணப்பம் செய்கிறார். ஒவ்வொரு பாடலிலும் இறைவனை அவர் அழைக்கும் பாங்கு இதனை நன்கு உணர்த்துகிறது. முதல் நாள் போலவே கடை நாள் வரை அருள் செய்யும் அருட்டிறம் அவரைப் பரவசப்படுத்துகிறது. அது பாட்டில் நன்கு வெளிப்பட்டுள்ளது.

இத்தகையதொரு துளக்கம் இல்லாத பக்தி உணர்வே உலகியல் வாழ்க்கைக்கு உறுதுணையானது. சுந்தரர் தனது வாழ்வியல் அனுபவத்தின் மூலம் பெற்ற நம்பிக்கையை எல்லோருக்கும் அறிவிக்க விரும்புகிறார். தோழமை உணர்வுடன் எதையும் கேட்டுப்பெறும் மனப்பக்குவத்தை நமக்கும் விளக்கியுள்ளார்.

> "எங்கே போவேன் ஆயிடினும் அங்கே வந்தென் மனந்தீராய்
> சங்கை ஒன்றும் இன்றியே தலைநாள் கடைநாள் ஒக்கவே
> கங்கை சடைமேற் கரந்தானே கலைமான் மறியும் கலைமழுவும்
> தங்கும் திரைக் காவிரிக் கோட்டத்தை யாறுடையயடிகளோ"

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

# மருவிப் பிரியமாட்டேன் நான் வழி நின்று ஒழிந்தேன் ஒழிகிலேன்

வழிபாடு என்பது தொடர்ந்து செய்யப்பட வேண்டும். அப்போது தான் எமது மனத்தை நாமே வழிப்படுத்தும் ஆற்றலைப் பெறமுடியும். சைவ நாயன்மார் வாழ்வியல் காட்டும் பட்டறிவு இதுவாகும். சுந்தரர் தனது சுய தேவைகளைப் பெறுவதற்காகவே பல சந்தர்ப்பங்களில் இறைவழிபாட்டை மேற்கொண்டவர். உலகியல் இன்பங்களைப் பெறுவதற்கு இறைவனைப் பாடிப் பணிந்தவர். அதனால் அவருடைய பாடல்கள் உலகியல் வாழ்வுடையாரை ஈர்க்கும் தன்மையன. சுந்தரரது இளமை அழகை விரும்பியது. இயற்கையை ரசிக்கும் பண்பு நலனுடையது.

திருத்தலங்களை வழிபடச் செல்லும் கோயிற் சூழலை உன்னிப்பாகக் கவனிக்க சுந்தரர் பாடல்கள் ஆற்றுப்படுத்துகின்றன. இயற்கை இறைவன் எமக்கு நல்கிய இனிய கொடையாகும். அதனைப் பார்த்துப் பரவசம் அடையும் போதுதான் இறைவன் எம்மைச் சூழ்ந்திருப்பதை எம்மால் அறியமுடியும். சுந்தரர் உள்ளம் இயற்கையைக் கண்டு பொங்குகிறது. வழிபாட்டிற்காகத் திருவையாறு தலத்திற்குச் செல்லும் வழியிலே இறைவன் அற்புதப் படைப்பான இயற்கையைக் கண்டு எல்லை இல்லாத மகிழ்வடைகிறார். சென்ற வழியை விட்டு அகல முடியாமல் இயற்கைக் காட்சியோடு ஒன்றி நிற்கின்றார். "மருவிப் பிரியமாட்டேன் வழி நின்றொழிந்தேன்" என்று தன் மன நிலையை வெளிப்படையாகக் கூறுகிறார். நின்றபடியே நின்று அந்த இடத்தை விட்டு நகர முடியாமல் நிற்பதாகத் தனது நிலையை இறைவனுக்கு எடுத்துக் கூறுகிறார். இது பக்தியின் இன்னொரு படி நிலையாகும்.

இத் தொடருக்குப் பிறிதொரு பொருளும் கொள்ள இடமுண்டு. உலக வாழ்க்கையில் நின்று பிரிய முடியாமல் இருப்பதைக் குறிப்பிடுவதாகவும் இவ்வடி அமைந்துள்ளது. வாழ்க்கைப் பாதையில் இறைவன் நோக்கிய அருட்பயணத்தில் இடையிலே தொடர முடியாத நிலையில் நிற்கும் நிலையைச் சொல்கிறார். பருவி விச்சி மலைச்சாரலில் பட்டை கொண்டு பகடாடி நிற்கும் காட்சியில் மனம் ஆழ்ந்து போய்விட்டது. மேலும் மலைச்சாரலில் காணும் இன்னொரு காட்சி அவரைக் கவர்ந்திழுக்கிறது. தினைப்புனத்திலே வந்து படியும் கிளிகளை விரட்டும் கன்னியர் அவர்கள் சுருண்ட கூந்தலில் மேல் சூடிய மாலையை அக்கிளிகள் கவர்ந்து ஓடும் காட்சி கண்ணையும் கருத்தையும் மாற்றி வழியில் நிற்க வைத்துள்ளது. அங்கே அரவணைத்தோடு திரை நீர் பாயும் காவிரி ஆறு அந்த காவிரியின் கரையில் அமைந்திருக்கும் கோட்டத்தில் உறையும் இறைவன், அவனை சென்று காணவேண்டும் என்று வழிநடந்து வந்த சுந்தரர் இடைவழியில் மனங்கவர்ந்த இயற்கைக் காட்சியில் மயங்கி நின்றார். அவருடைய மனம் தன்னுடைய உண்மையான நிலையை எடுத்துரைக்கவிழைந்தது. ஆறுபாய்ந்தோடும் அழகிய தோற்றத்தை ரசிக்கும் பக்குவத்தில் இறைவனைச் சற்று மறந்து விட்ட குற்றத்தை ஒப்புக்கொள்கிறார். பக்தியின் உயர்வான நிலையும் இதுவே. பிழையை எடுத்துச் சொல்லும் பண்புடைமை சுந்தரரிடம் நாம் கண்டு கொள்ள வேண்டிய விழுமியமாகும். அவரது பாடல் படிக்கின்ற போது எம் மனங்களையும் பக்குவப்படுத்தி விடுகின்றது.

"மருவிப் பிரியமாட்டேன் நான் வழி நின்று ஒழிந்தேன் ஒழிகிலேன்
பருவி விச்சிமலைச் சாரற் பட்டை கொண்டு பகடாடிக்
குருவி ஒப்பிடக் கிளி கடிவார் குழல்மேல் மாலை கொண்டோட்டம்
தரவந்திரைக் காவிரிக் கோட்டத்தை யாறுடைய வடிகளோ"

## பழகா நின்று பணி செய்வார் பெற்ற பயன் ஒன்று அறிகிலேன்

வழி நடைப் பயணத்தின் இடையே கடந்த செல்லும் இயற்கைக் காட்சியின் அழகு பயணக் களைப்பை ஆற்றிப் புத்துணர்ச்சி தரவல்லது. சுந்தரரின் தவம் நோக்கிய பயணத்தில் அவர் பெற்ற மகிழ்வான அனுபவத்தை எல்லோருக்கும் எடுத்துக் கூறவிரும்புகிறார். வானகங்களில் பயணத்தை மேற்கொள்வதற்கு நினைப்பவருக்கு இயற்கையை ரசிக்கும் வாய்ப்புக் குறைவு வேகமாகச் செல்வதும் இதற்கு ஒரு காரணமாகும். சுந்தரர் கால்நடையாகத்திருத்தலம் காணச் சென்றவர் அவரது மனதிலே ஒரு குறை. ஏனைய மெய்யடியார் போல இறைவனிடம் சேரமுடிய வில்லையே என்ற ஆதங்கம். அதைப்பற்றியே எண்ணியபடி திருவையாறு திருத்தலத்தை நோக்கி வழி நடைப் பயணமாகச் செல்கிறார்.

வழியில் காணும் இயற்கைக் காட்சிகளிலிருந்து கண்களை அகற்ற முடியவில்லை. அவ்வாறு அழகையே ரசிக்க விரும்பும் தன்னையும் ஏனைய அடியார் நிலையையும் ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்க்கிறார். பழகிய நிலையில் இறைபணி செய்வார். பெற்ற பயன் என்ன எனத் தன்னால் அறியமுடிய வில்லையே என்ற வருத்தம் அவர் மனதில் இருந்தது. இறைவன் தனக்கு ஆட்பட்டோருக்கு அருள் செய்யும் கருணையையும் எண்ணுகிறார். அவர் மனதிலே ஓர் உறுதி பிறக்கிறது. உள்ளதை உள்ளவாறு கூறி வருவதை எதிர்கொள்ள விரும்புகிறார்.

இறைவன் அரையிலே சீறும் பாம்பைச் சாற்றியிருக்கும் கோலம் மனக்கண்ணில் தெரிகிறது. தன்னிடம் சரண் அடைந்தவருக்கு அருள் செய்யும் இறைவனின் தனிப் பெருங் கருணையை எல்லோரும் அறிய வேண்டும் என்ற பரநலம் அவர் எண்ணத்தில் படர்கிறது. இயற்கையின் அழகுக் கோலங்கள் எமக்காக, எமது மனத்தை நாம் பண்படுத்துவதற்காக இறைவன் படைத்திருப்பதை உணர்கிறார். சுற்றுப்புறமெங்கும் செறிந் திருக்கும் இயற்கையின் வளம் அவரைப் பரவசப்படுத்துகிறது. உலகியல் நிலையில் அழகைச் சுவைக்கும் இளமைப் பருவமுடைய சுந்தரர் ஒரு புதிய அனுபவத்தைப் பெறுகிறார். வாழை குலையோடு வளத்தைச் சாற்றி வளர்ந்து நிற்கிறது. குலைகளைப் பார்க்கும் போது நிலத்தின் வளம் நன்கு தெரிகிறது. அதற்கு மேலாக உயர்ந்து நிற்கும் குலையோடிருக்கும் தெங்கின் தோற்றம் உணவுச் சுவையை நாவில் படர வைக்கிறது. "வாழைக்குலைத் தெங்கு" எனப் பாடலில் வருந்தொடர் இரு பொருள் கொள்ளும் தன்மையது. "வாழைக்குலையென" வாழையுடன் சேர்ந்த ஒரு பொருள் தரும் "குலைத்தெங்கு" எனத் தெங்கு என்னும் சொல்லுடன் சேர்ந்த இன்னொரு பொருள் தரும் சுந்தரருடைய செந்தமிழ்ப் பயிற்சிக்கு இத் தொடர் ஒரு எடுத்துக்காட்டாகும். கரை மேல் இரு விளை பொருளும் கொணரும் அழகிய திரையாகும். காவிரியாற்றின் ஓட்டம் திருக்கோயிலின் வளமான நிலப்பண்பையும் விளக்கி நிற்கிறது. திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளுக்குப் பயன் படுத்தப்படும் வாழைப்பழமும், இளநீரும், தேங்காயும் இயற்கை யின் கொடையாக இருக்கின்றன. இத்தகைய இயற்கை வளம் கொண்ட திருக்கோலுக்கு எல்லோரையும் வழிநடைப் பயணமாக வரும்படி பாடல் அழைகிறது.

"பழகா நின்று பணி செய்வார் பெற்ற பயன் ஒன்று அறிகிலேன்
இகழாது உமது உட்பட்டோருக்கு வேகபடமொன்று அரைச்சார்த்தி
குழகா வாழைக்குலைத் தெங்கு கொணர்ந்து கரைமே லெறியவே
அழகார் திரைக்காவிரிக் கோட்டத்தை யாறுடைய வடிகளோ"

# பிழைத்த பிழையொன்று அறியேன் நான் பிழையைத் தீரப்பணியாயே

பிழைசெய்பவர் அதை ஒத்துக்கொள்ளத் தயங்குவர். சிலவேளைகளில் பெரிய பிழைகளைச் செய்பவர் அதனைப் பிழையென்று நினைப்பதே இல்லை. காம, குரோத வயப்பட்ட வரது இயல்பு இது, சுந்தரமூர்த்திநாயனாரும் இத்தகைய ஓர் அனுபவத்திற்குட்பட்டவர். பரவையாரை உறுதி மொழி செய்து மணம் புரிந்தவர் பின்னர் சங்கிலியாரையும் கண்டு விரும்பி மணம் செய்கிறார். அவருக்கு அவரது செயல் பிழையாகத் தெரியவில்லை. ஆனால் இறைவன் அவருடைய பிழை நன்கு உணர்த்தக் கண்ணைக் குருடாக்கி விடுகின்றார். அப்போதுதான் சுந்தரருக்குக் தன்னு டைய பிழை தெரிகிறது. பார்வையைப் பறித்த தண்டனையின் காரணமும் விளங்குகிறது. தன் பிழையைத் தான் உணரா திருந்தமையை எண்ணி வருந்துகிறார்.

"பிழைத்த பிழை ஒன்றறியேன் நான் பிழையைத் தீரப் பணியாயே" என இறைவனிடம் இறைஞ்சுகிறார். பரவையாரைத் திருமணம் செய்வதற்கு இறைவனைத் தூதனுப்பியதைச் சுந்தரர் மறந்து விட்டார். இப்போது திருவையாறு திருத்தலத்திற்குச் செல்லும் போது அதனை நினைத்துக்கொண்டு செல்கிறார். இந்த நினைவு வந்தமைக்கு அவர் வழியில் கண்ட காட்சியே காரணம். காவிரியாற்றிலே பெண்கள் மகிழ்வாக நீராடிக் கொண்டிருக்கிறார் கள். "மழைக்கண் நல்லார்" என அப்பெண்களைச் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். மழைபோன்ற குளிர்ந்த கண்களையுடைய நீராடும் பெண்களைக் கண்டவுடன் அவரது மனம் தன் வாழ்க்கையில் குறுக்கிட்ட மழைக்கண் நல்லாரான பரவையாரதும், சங்கிலியாரதும் நினைவால் வாடுகிறது. உலகியல் வாழ்க்கையில் தான் கொண்ட விருப்பால் இறைவன் பற்றிய சிந்தனை அற்றதையும் உணர்கிறார். அச் சிந்தனையைப் புறந்தள்ளிவிட்டு கோயிற் சூழலிலே அதன் அழகிலே ஈடுபடுகிறார். பெண்கள் குடைந்து நீராடுகின்ற காவிரியாற்றின் போக்கிலே புலனைச் செலுத்தி நிற்கிறார் மலையையும் நிலத்தையும் சூழப்பாய்ந்து வரும் காவிரி மூங்கில் ஊடாகப் பாய்ந்து வருகிறது. தேன் கூட்டிலே இருந்த தேன் சிந்தி ஆற்று நீருடன் கலந்து செல்கிறது. எங்கும் பாய்ந்து வயல்களிலே படிந்து வரத் திரைகளெல்லாம் கைகாட்டி அழைக்கும் காட்சி போல இருக்கிறது.

ஆற்று வளம் பற்றிச் சுந்தரர் சொல்லும் செய்தி அப்பகுதியின் நிலவளத்தையும், விளைபொருள் வளத்தையும் சுட்டி நிற்கிறது. மலையிலிருந்து வரும் காவிரியின் நீர்வளம் பற்றியும் குறிப்பிடுகிறது. காவிரியின் நீர் தேன்கலந்து வருவதால் இனிமை பெற்றுள்ளது. சுந்தரரின் இயற்கையைப் பாடும் மரபு சொல்வளத்தால் பெரிதும் சிறப்புறுகிறது. இறைவனிடம் பிழை பற்றிக் குறிப்பிட்டவர் இப்போது அதனை முற்றாக மறந்து இயற்கையை ரசித்திருக்கும் நிலை சுந்தரரது குண இயல்பைக் காட்டுகிறது. திருவையாற்றிலே உள்ள திருத்தலத்திற்குச் சென்று இறைவழிபாடு செய்வோர் இயற்கையின் கொடையையும் பெற வழி காட்டுகிறார். மூங்கில், பிரசம், காவிரி, கழனி என்னும் சொற்களால் விளைபொருள் வளம் சுட்டப்பட்டுள்ளது. "காவிரிக் கோட்டம்" என்ற சிறப்புப் பெயரும் திருவையாறு தலத்திற்குச் சூட்டப்பட்டுள்ளது. சுந்தரரின் இயற்கையைப் பாடும்திறன் இப்பாடலில் வாழ்வியல் அனுபவத்தோடு இணைந்து நிற்கிறது.

"பிழைத்த பிழையொன்று அறியேன் நான் பிழையைத் தீரப்பணியாயே
மழைக்கண் நல்லார் குடைந்தாட மலையும் நிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங்கலந்தெங்கும் கழனி மண்டிக் கையேறி
அழைக்கும் திரைக் காவிரிக் கோட்டத்தையாறுடைய வடிகளோ"

## பூவும் நீரும் பலியுஞ்சுமந்து புகலூரரையே

வாழ்க்கையில் அமைதி வேண்டுமாயின் வழிபாட்டை மேற்கொள்ள வேண்டுமெனச் சம்பந்தர் கூறுகிறார். 16ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்து பக்தி நெறியில் நின்ற அவருக்கு இறைவழிபாடு பற்றி ஒரு தெளிவு இருந்தது. இத் தெளிவு அவரது பிறப்புச் சூழலாலும் வளர்ப்பு நெறியாலும் ஏற்பட்டது. சிறுவயதிலேயே திருக்கோயில் வழிபாட்டுப் பயிற்சியைப் பெற்றிருந்தார். செந்தமிழ் அறிவும் பெற்றிருந்தார். வேதப்பயிற்சியும் சடங்குகளின் விளக்கமும் அவரது பக்தியனுபவத்தை மேலும் வளர்த்தன. இதனால் சம்பந்தருடைய பாடல்களில் ஒரு தனித்துவம் வந்து சேர்ந்தது என்றால் அது மிகையாகாது.

நாள்தோறும் இறைவழிபாட்டை முறையாகச் செய்வோரது பக்தி நிலையை அவர் கண்டிருக்கிறார். அந்த வழிபாட்டில் மிக முக்கியமான நடைமுறைகளைத் தமது பாடலிலே குறிப்பிட்டுள்ளார். தூபமும், தீபமும் காட்டி தொழுபவர்க்கு அருள் செய்யும் இறைவனைப் போற்றிப் பாடுகிறார். பழைய இலக்கியமான பரிபாடலில் வரும் வழிபாட்டு நடைமுறையிலும் தூபம், தீபம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்திலும் இம் முறைமை குறிப்பிடப்படுகிறது. பிராமணர் அல்லாதரும் இறைவழிபாட்டைச் செய்யும் போது தூப, தீபம் காட்டி வழிபடும் மரபு ஒன்று தோன்றி இன்றுவரை நிலைபெற்றுள்ளது.

தூபம் என்பது புகையாகும். நறுமணப்புகையைச் சொரிந்து வழிபடும் போது வழிபாட்டுச் சூழல் தூய்மை பெறுகின்றது. தெய்வத் திருவுருவங்களுக்குத் திருமஞ்சனம் செய்து பின்னர் அகிற்புகையால் ஆராதனை நடைபெறும். அதன் பின்னர் தீப ஆராதனை நடைபெறும். தீபம் என்பது ஒளியைக் குறிக்கும். ஒளியிலே இறையுருவைக் காணும் போது அழகு நிலை தோன்றுகிறது. தீபத்திலே பல்வேறு வடிவினதாகத் தீபங்கள் உண்டு. அவற்றை ஏந்தி ஆராதனை செய்யும்போது ஏற்படும் பரவசம் பக்தியின் வெளிப்பாடாகும். இது ஒரு அற்புத அநுபவமாகும். இவ்வாறு நியமமாக வழிபடுவோருக்கு இறையருள் எளிதில் கிடைக்குமெனச் சம்பந்தர் கூறுகிறார். பூவும் புகையும் நீரும் சொரிந்து வழிபடும் போது பலியாக விளைபொருட்களையும் வைத்து வழிபடும் மரபு தோன்றியது. இதனை மடையிடல் என்றும் கூறுவர். பூமடை, காய்மடை என விளைபொருளின் வேறுபாட்டிற்கேற்பப் பெயர் சூட்டப்பட்டது. பின்னர் நறுந்தேனும் சேர்க்கப்பட்டது. இயற்கையாகக் கிடைக்கும் விளைபொருட்களை இறைவனுக்கு முதலில் மடையிட்ட பின்னரே மக்கள் பயன்படுத்தும் பண்பாடு ஒன்றும் தோற்றம் பெறலாயிற்று. எனவே கோயில் வழிபாடு இயற்கையோடு நெருங்கிப்பிணையலாயிற்று. இயற்கை வளம் நிறைந்த இடங்களிலேயே கோயில்கள் அமைக்கப்பட்டன. விளைபொருள் மடையோடு இறைவன் அருட்கொடையை நினைந்து நாவினால் நவின்று ஏத்தும் நிலையும் தோன்றியது. இப்போற்றுதலே தேவாரப்பாடல்களாக பக்தியனுபவம் கூறும் பாசுரங்களாகப் பரவின. சம்பந்தர் பாடல்களில் இயற்கை பற்றிய செய்திகள் அதிகமாக இருக்கும். எமது வாழ்நாள் முழுவதும் வழிபாட்டால் நலம் பெறலாம் என்பதை அப்பால் உணர்த்துகிறது.

"பூவும் நீரும் பலியுஞ்சுமந்து புகலூரரையே
நாவினாலே நவின்றேத்தலோவார் செவித்துளைகளால்
யாவுங்கேளாரவன் பெருமையல்லால் அடியார்கள்தாம்
ஒவுநாளும் உணர்வொழிந்த நாள் என்று உளக்கொள்ளவே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## திருந்துமாகளிற்று இள மருப்பொடு

நீர் வளம் இயற்கையின் கொடையில் மிக உன்னதமானது. நீரின்றேல் உலகத்து வாழும் உயிரினங்கள் எல்லாமே இயக்கமின்றித் துன்பப்படும். வள்ளுவப் பெருந்தகையும் 'நீர் இன்று அமையாது உலகு' என்றார். இறைவன் பெருங்கருணையைப் பாடிய நாயன்மாரும் தமது பாடல்களில் நீரின் சிறப்பைப்பற்றிப் பாடியுள்ளனர். சம்பந்தப் பெருமான் பாடல்களில் நீர்வளம் மிகச் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சீர்காழி சம்பந்தரின் பிறப்பிடமாகும். அந்தநகரத்திற்குக் 'கொச்சைவயம்' என்ற சிறப்பான பெயரும் உண்டு. அங்கு வீற்றிருக்கும் இறைவனைப் பாடவந்த சம்பந்தர் அங்கு பாயும் கோட்டாற்றின் சிறப்பை விரிவாகவே பாடியுள்ளார்.

சம்பந்தரது இளமை இயற்கையின் அழகைச்சுவைப்பதில் நாட்டம் கொண்டிருந்தது. அதனால் அங்கு பலவளங்களோடு பாய்ந்தோடிவரும் கோட்டாற்றைச் சிறந்த சொற்சித்திரங்களாகப் பாடியுள்ளார். பாடலில் புனையப்பட்ட காட்சி கைதேர்ந்த ஓவியன் தீட்டியவண்ணச்சித்திரங்கள்போல அமைந்துள்ளன. ஆற்றின் நீர்வளம் அது உந்திவரும் விளைபொருட்களால் விளக்கப்பட்டுள்ளது. காட்டினூடாகப் பாய்ந்துவரும் கோட்டாறு சம்பந்தரின் சொற்களில் எம்மனக் கண்ணிலே வந்து தோற்றுகிறது. மலையின் விளைபொருட்கள் ஆற்றின் ஓட்டத்தோடு கலந்து உருண்டு வருகின்றன. அவற்றைப் பாடலடிகளில் சம்பந்தர் தொகுத்துக்கூறியுள்ளார். சிறந்த ஆண்யானையின் கொம்பு, திரண்ட அழகான சந்தனக்கட்டைகள், குருந்தமலர், குரவமலர் குடசம், மயிற்பீலி என்பவற்றைச் சுமந்து கொண்டு கோட்டாறு பாய்ந்து வருகிறது. வயல்களூடே நடந்து வருகிறது. நீண்ட அந்த ஆற்றின் வளம் வெறும் நீர்வளமாக மட்டும் அமையாமல் விலையுயர்ந்த மலைவிளை பொருட்களையும் கொண்டதாயுள்ளது.

கரைபுரண்டுவரும் நீரோட்டத்தின் இயற்கையழகு இத்தகைய விளைபொருட்களைச் சுமந்து வருவதால் புதியதோர் அழகுக் கோலத்தைப்பூண்டு வருகிறது. சம்பந்தருடைய பார்வையின் தன்மை ஆற்றின் போக்கால் பரவசப்பட்டு நிற்கிறது. திருத்தலத்தை வழிபட வந்தவர் கோட்டாற்றின் அழகிலே ஈடுபட்டுநிற்கிறார். பார்வையைப்படர விடுகிறார். நீரோட்டத்தின் வண்ணமும் வடிவும் அவர் உள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றன. அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விடலாமென மனம் எண்ணுகிறது. இறைவன் வழிபாட்டுக்கு இயற்கையே வழிகாட்டி நிற்கிறது. தனக்குக்கிடைத்த அழகுக் கோலம் இறையருளால் கிடைக்கப் பெற்றதைக் கோட்டாறு உணர்த்தி நிற்கிறது. கோயில் வழி பாட்டுக்குச் செல்வோர் கோயிற் சூழலையும் பார்வையிட வேண்டும் எனச் சம்பந்தர் விரும்புகிறார்.

அவருடைய உள்ளம் தூய்மையாக இருக்கிறது. இளமைப் பருவத்துக் குழப்பம் எதுவும் அவர் மனதில் இடம்பெற்றிருக்க வில்லை. கோயிலின் புறச்சூழலின் அழகில் மனம் ஒன்றி நிற்கிறார். தான்காணும் அழகுக்கோலத்தை வழிபாட்டுக்குவரும் அனைவரும் காணவேண்டும் என்று ஆசைப்படுகிறார். தனது தமிழ்மொழிப் புலமையை அதற்குப் பயன்படுத்துகிறார். இயற்கையழகில் மனம் ஒன்றியிருந்ததால் சொற்கள் மடை திறந்த வெள்ளம்போலக் கரைபுரண்டு வரப்பாடல் பாடுகிறார். கற்பனையன்றி நேரடிக் காட்சியின்பத்தைக் கண்ணாரைக் கண்டு பாடுகிறார். அவர் பாடல் கொச்சை வயம் தல வழிபாட்டிற்கு எம்மையும் அழைக்கிறது.

"திருந்துமா களிற்றிள மருப்பொடு திரண்மணிச் சந்தமுந்திக்
குருந்துமா குரவமிங் குடசமும் பீலியுஞ் சுமந்துகொண்டு
நிரந்துமா வயல்புகு நிடுகோட் டாறுசூழ் கொச்சைமேவிப்
பொருந்தினார் திருந்தடி போற்றிவாழ் நெஞ்சமே புகலதாமே.

## ஏலமார் இலவமொடு இனமலர்த்தொகுதி எங்கும் நுந்தி

எம்மை நாமே நல்வழிப்படுத்தும் முறை ஒன்றை மெய்யடியார்கள் கூறிச்சென்றுள்ளனர். எமது நெஞ்சத்தை முன்னிலைப்படுத்தி அறிவுரை செய்யமுடியும். கல்வியால்பெற்ற அறிவும்,இறை பற்றிய சிந்தனையும் இதற்குத் துணையாக நிற்கும். நாயன்மார் தமது பாடல்களிலே இத்தகைய வழிபாட்டைச் செய்துள்ளனர். தவறு செய்தவர் தம்மைத் தாமே திருத்திக் கொள்ள முடியும். சுந்தரருடைய வாழ்வியல் அனுபவம் இத்தகையதே. பரவையாருக்குக் கூறிய உறுதிமொழியை மறந்தமை அவர் செய்த பெரிய தவறாகும். அந்தத் தவறு நேர்வதற்குக் காரணம் இறைவனை மறந்தமையேஎனச்சுந்தரர் நன்கு உணர்ந்துகொண்டார். எனவே, தன் நெஞ்சத்தை வழிப்படுத்த முனைகிறார். திருக்கோயிலுக்குச் சென்று இறைவழிபாட்டிலே ஈடுபடும்படி நெஞ்சத்திற்கு அறிவுரை செய்கிறார். அதனால்இறைவன் உறையும் திருக்கோயிலின் சூழல் பற்றி எடுத்துரைத்து, அந்த அழகிலே முதலில் நெஞ்சத்தை ஈடுபட வைக்கிறார்.

கோட்டாற்றங்கரையின் அருகில் அமைந்திருக்கும் அழகிய திருத்தலம் கொச்சைவயம். இயற்கையின் அழகு கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ள தலம். ஆற்றின் ஓட்டத்தால் மேலும் அழகுபெற்றுப்பொலிகிறது. ஆற்றங்கரையிலே நின்று பார்க்கும்போது காணும் காட்சிகள் நெஞ்சத்தைக் குளிர்விக்கும் தன்மை கொண்டவை. இறைவனின் அற்புதமான படைப்பின் திறத்தைப் பறைசாற்றி நிற்பன. ஏலம், இலவம் பல்வேறு இனத்து மலர்கள் என இயற்கையின் கொடைகளை ஆற்றுநீர் சுமந்து ஓடி வருகிறது. அழகிய சிறிய மிளகொடு பழுத்த கனிகளையும், கொன்றை மலர்களையும் உந்தி வருகிறது. வயல்களிடையே ஆற்றுநீர் புகுந்து பரவி நகர்ந்து வருகிறது. இந்த ஆற்றின் பெருகிய ஓட்டத்தின் அழகு இயற்கையின் ஓர் இனிய கோலம், இக்கோலம் காண்பவர்நெஞ்சத்தைக் கொள்ளைகொள்ளும்.

சுந்தரர் நெஞ்சத்தை இந்தக் காட்சிகளைக் காணும்படி எடுத்துக்கூறும் பாங்கு ஓர் உல்லாசப்பயணியை ஆற்றுப்படுத்துவது போல உள்ளது. இயற்கையை ஊன்றிக் கவனிக்கும் பயிற்சியை எல்லோருக்கும் ஊட்ட விரும்புகிறார். வளமான சூழலில் அமைந்த திருக்கோயிலின் சுற்றுப்புற அழகைக் காண எல்லோரையும் அவர் அழைப்பதுபோலப் பாடல்களைப் பாடியுள்ளார். இத்தகைய அழகான சூழலிலே குடிகொண்டு அருள் புரியும் இறைவன் கோலத்திலும் அழகைக்காண்பதற்கு வழிகாட்டுகிறார். 'கறைக்கண்டம்' இறைவனின் பவளம் போன்ற மேனிக்கு அழகூட்டி நிற்பதைக் குறிப்பாய் எடுத்துரைக்கின்றார். திருத்தலத்திலே சிவன் விரும்பியுறைவதாகப்பாடியுள்ளார். 'நீலமார் கண்டனை நினை மட நெஞ்சமே' எனத்தனது நெஞ்சத்திற்குக் கூறுகிறார். இங்கு அவர் தனது நெஞ்சத்தை மடநெஞ்சமே என விளிப்பது கவனிக்கத்தக்கது. இறைவனை மறந்து உலக இன்பங்களிலே நெஞ்சம் ஈடுபட்டதை நினைத்துப் பார்க்கிறார். அத்தகைய உலக இன்பங்களைப்பற்றி இனிமேல் நினைத்துப்பார்க்காமல் நீலகண்டனையே நினைத்துவாழ வேண்டும் என நெஞ்சிற்கு எடுத்துரைக்கின்றார்.

இறைவன் நினைப்பால் தவறு செய்தமையால் அச்சத்தோடு வாழ்பவர் அச்சம் தீரும் என்பதே சுந்தரருடைய நம்பிக்கையாகும். இது அவருடைய சொந்த வாழ்வியல் அனுபவம். எனவே, அதனைப்பாடலிலே எல்லோருக்கும் கூறுகிறார்.

"ஏலமார் இலவமோடு இனமலர்த்தொகுதி எங்கும் நுந்தி
கோலமா மிளகொடு கொழுங்கனி கொன்றையுங் கொண்டுகோட்டாறு
ஆலியா வயல்புகு மணிதரு கொச்சையே நச்சிமேவும்
நீலம்ஆர் கண்டனை நினைமட நெஞ்சமே யஞ்சல்நீயே'

## பொன்னும் மணியும் கொழித்து எறி புனற்கரைகள்

பழவினைகளால் இப்பிறப்பில் எல்லையற்ற துன்பத்தை அனுபவிக்க நேரிடும் என்ற நம்பிக்கை சைவசமயத்தவரிடையே இன்று நிலவுகிறது. இந்தப் பழவினையென்பது முற்பிறப்புகளில் செய்யப்பட்ட வினையென்றும் கருதப்படுகிறது. நாயன்மார் பலர் இப்பழவினைபற்றிப்பல பாடல்களிலே குறிப்பிட்டுள்ளனர். இவ்வினை முன்னைவினை என்றும் அழைக்கப்பட்டது. முன்னைவினையை ஒழிக்கத்தெய்வ வழிபாடே அருமருந்தாகும். இறைவன் திருநாமத்தை இடைவிடாது சொல்வதும், திருத்தலங் களுக்குச் சென்று இறைவனை வணங்குவதும் இறைவழிபாட்டில் முக்கியம்பெற்ற செயற்பாடுகளாகும்.

சுந்தரர் வாழ்வியலிற் பழவினை என்னும் விடயம் சென்ற பிறப்பில் செய்த வினையாகக் குறிப்பிடப்படவில்லை. இப்பிறப்பிலேயே முதலில் செய்ததீவினையும் "முன்னைநோய்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வினை என்பது செயற்பாடாகும். தீய செயற்பாடுகள் நோய் போல எம்மை வந்து தாக்கும். அதிலும் தெரிந்துசெய்யும் செயற்பாடுகள் நோய்போலப் பீடித்துத் துன்பத்தைத்தரவல்லன. இந்த நோயின் பிடியிலிருந்து விடுபடும் வழியைச்சுந்தரர் கண்டறிந்தார். திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவதன்மூலம் நோய் தீரும் என்பதை அனுபவம் மூலம் அறிந்தவர். கண் இழந்து மீண்டும் கண்பெற, வழிபாடே அவருக்குப் பெரிதும் உதவியது. பெண்ணாசையால் கண்ணிழந் தவர் சுந்தரர். கண்ணை இழப்பது என்பது ஒரு கொடுமையான நோயாகும். அதிலும் இடையிலே கண்பார்வையை இழந்தால் அந்தத் துன்பம் தாங்க முடியாதது. அந்த இழப்பையே இறைவழிபாட்டால் நீக்கிய சுந்தரர் பாடலில் அந்த நம்பிக்கை வெகு ஆழமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. திருக்கொச்சை வயம் தலத்தை வழிபடச் சென்றபோது அவருக்குத் தான் அனுபவித்த முன்னைநோய் நினைவுக்கு வருகிறது.

கோட்டாற்றைக் கண்களாற் கண்டபோது அது நினைவுக்கு வருகிறது. பொன்னும் மாமணிகளையும் சேர்த்துக் கரையெங்கும் நுரைபரவ ஓடிவரும் ஆற்றிலே பெண்கள் நீராடிக் கொண்டிருக்கின்றனர். "கன்னிமார் முலை நலங்கவர வந்தேறும் கோட்டாறு" என்ற அவருடைய பாடலடி அவர் மனநிலையைத் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கும் நிலையைக் காணமுடிகிறது. இளமையின் உந்தலால் தவறு செய்த அவருக்குத் தன் முன்னை நோய் நினைவில் வந்து நிறைகிறது. உடனே இறைவியோடு உடனுறையும் இறைவன் கோலத்தை நினைந்து பாடுகிறார். கொச்சைவயம் திருத்தலத்திலே மேவிய இறைவனை அவன் அருள் செய்யும் நிலையை எல்லோர் நெஞ்சிலும் பதிய வைக்க எண்ணுகிறார். 'முன்னைய நோய் இனிமேல் தொடராது' என்று நெஞ்சத்திற்கு நம்பிக்கையூட்டுகிறார். வழிபாடு தன்னைத்தானே சீர்மியம் செய்யும் ஆற்றலைத் தரும். இனிமேல் அஞ்சவேண்டிய தில்லை என நெஞ்சத்தை ஆறுதற்படுத்துகிறார். இறையருளை இளமையிலே உணரும் சுந்தரரது மனஉறுதி உலகத்து வாழ் இளைஞர்களையெல்லாம் வழிப்படுத்தும் சீர்மியப்பணியாக உள்ளது. செய்த பிழையை மீண்டும் செய்யக்கூடுமோ என அஞ்சும் இளமையை நல்வழிப்படுத்தும் சுந்தரரது பணி தனித்துவமானது. செல்வச்சிறப்பும், இளமையின் எழுச்சியும் தவறிழைக்கத் தூண்டக்கூடும். எனவே, முன்னேற்பாடாக நெஞ்சத்தை நல் வழிப்படுத்துவதே நலம்தரும்.

"பொன்னும் மணியும் கொழித்துஎறி புனற்கரைகள் வாய்நுரைகள் உந்திக்
கன்னிமா முலைநலங்கவர வந்தேறு கோட்டாறு சூழ
மன்னினார் மாதொடும் மருவிடம் கொச்சையே மருவிநாளும்
முன்னைநோய் தொடருமாறில்லைக் காண்நெஞ்சமே அஞ்சல் நீயே"

# பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து

எமக்குச் சொந்தம் என நாம் கொண்டாடும் மனிதர் பலர் இருப்பர். ஆனால், இச்சொந்தம் நிரந்தரமல்ல என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் நிலையான உறவொன்று எமக்குத்தேவை. அந்த உறவு யாரென்பதை மெய்யடியார் பலர் உணர்த்திப் போயுள்ளனர். இறைவனே எமக்கு என்றும் நிரந்தரமான உறவாக இருப்பவர். சம்பந்தர் இறைவனைத் தாயும் தந்தையுமாக எண்ணி வழிபட்டு வாழ்ந்தவர். சுந்தரர் இறைவனை அன்னையாக நினைந்து வழிபட்டவர். தாம் கண்ட உறவை மற்றவர்களும் காணவேண்டும் என்ற பெருவிருப்பு மெய்யடியார்களிடம் இருந்தது. அதனால் இறைவன் திருவுருவத்தை எல்லோரும் கண்டு வழிபட்டு வாழ வழிகாட்டியுள்ளனர்.

சுந்தரர் பாடல் சொற்சித்திரம்போலச் சிவனின் அழகிய தோற்றத்தைக் காட்டிநிற்கிறது. இறைவனை நேரே கண்ட போது இறைவன் தோற்றம் மனதிலே ஆழப்பதிந்துவிட்டது. தான் கண்ட திருக்கோலத்தை உலகத்து மக்களும் காணவேண்டும் என்ற நோக்கம் சுந்தரரிடம் இருந்ததைப் பாடல்கள் நன்கு உணர்த்தி நிற்கின்றன. திருமழபாடியில் வீற்றிருக்கும் சிவனின் திருக்கோலத்தைப் பத்துப்பாடல்களிற் பாடியுள்ளார். அவர் காட்டும் அழகுக் கோலம் படிப்பவர் மனதைப் பரவசப்படுத்தும். சொல்லால் வரைந்துள்ள இறைவன் திருக்கோலத்தில் திருமேனியழகே அவரைப் பெரிதும் கவர்ந்துள்ளது. பொன்னார்ந்த மேனியிலே புலித்தோலை அரையிலே அணிந்திருக்கும் அழகிய கோலம் கண்ணை நிறைவிக்கிறது. மின்னல் போன்ற சிவந்த சடையிலே கொன்றைமலர் மிளிர்கின்றது. நிறங்களின் இணைப்பு புதிய அழகாகத்தெரிகிறது. திருமேனி வண்ணத்தோடு அணிந்திருக்கும் ஆடையின் வண்ணமும் மலரின்வண்ணமும் இணைந்த அழகு சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. நிலையாகக் கோயிலிலே உறைகின்ற அழகிய இறைவனைச் சுந்தரர் அன்னை யாகக் காண்கிறார். மழபாடியில் உள்ள மாணிக்கமாக ஒளிகாலும் திருவுருவத்திலே அன்னையின் அன்பே தெரிகிறது. உறவுகளில் எல்லாம் சிறந்த உறவு அன்னையே. அதுவே நாம் அறியும் முதல் உறவு. இறுதிவரை நினைந்து வாழும் உறவு. சுந்தரர் அன்னையாம் இறைவனை நினைத்தாலே போதும் வேறுநினைப்புத் தேவை யில்லை எனக் கூறுகிறார். இன்பத்திலும் துன்பத்திலும் அன்னையின் நினைப்பே துணையாக நிற்பது அதனையே சுந்தரரும் வலியுறுத்துகிறார்.

சுந்தரர் பாடல்களிலே இறைவனை வருணிக்கும் பாங்கு அவரது தமிழ்ப்புலமையைக் காட்டி நிற்கிறது. ஆர்தல்என அவர் பயன்படுத்தியுள்ள சொல்; கூறவந்த கருத்தைத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கிறது. மனம் நிறைவாகச் செயற்படும் நிலையை இச் சொல் காட்டிநிற்கிறது. பொன்னும் மின்னும் ஒளிகாலும் தன்மையில் ஒன்றுபட்டவை. நாம் பார்க்கும்போது பளிச்சென்று தோன்றும் தன்மையுடையவை. அரையிலே அணியும் புலித்தோலை அசைத்து என்று குறிப்பிடுகிறார். அரையிலே அணியும் ஆடை கவனமாக, இறுக்கமாக அணியப்படவேண்டும் என்பதை இச்சொல் விளக்கி நிற்கிறது. அன்னையென்று இறைவனையே என்றும் நினைத்து வாழ்வதே சிறந்தது என்கிறார் சுந்தரர்.

"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே"

## பண்டே நின் அடியேன் அடியாரடிகட்கெல்லாம்

மனித நிலையில் மறதி என்பது எல்லோரையும் பீடிக்கும் தன்மையது. ஒரு செயற்பாட்டைத் தொடர்ந்து செய்யும் நிலையிலும்கூடச் சிலவேளை அதைச் செய்ய மறந்து விடுவதுண்டு. சுந்தரர் இத்தகைய நிலைக்கு ஆளானவர். இறைவனுடைய தொண்டைத் தொடராமல் உலக வாழ்க்கையிலே புலனைச் செலுத்தியவர். இறையடியார்களையெல்லாம் இறைவனாகக் கருதிப்பணிசெய்ய வேண்டும் என எண்ணியவர். திருக்கோயில் களைத் தரிசனம் செய்யும் வழக்கத்தை அவர் மேற்கொண்டபோது திருவாலம்பொழில் என்னும் திருத்தலத்திற்குச் சென்று வழிபட்ட பின்னர் அன்றிரவு அத்தலத்திலேயே தங்கினார். அன்றிரவு சுந்தரர் நித்திரை செய்யும் போது சுவாமி அவர் கனவிலே தோன்றினார். "மழ பாடிக்கு வருவதற்கு நீ மறந்து விட்டாயோ" என்று சொல்லியருளினார். சுந்தரர் விழித்தெழுந்து தன் மறதியை இறைவன் தீர்த்தமையை நன்கு உணர்ந்துகொண்டார். உடனே காவிரி நதியைக் கடந்து திருமழபாடிக்குச் சென்று இறைவனை வணங்கிப் "பொன்னார் மேனியனே" என்னும் தேவாரப் பதிகத்தைப் பாடினார்.

இப்பதிகத்தின் எல்லாப் பாடல்களின் நிறைவிலும் இனியாரை நினைக்கேனே என்று பாடியுள்ளார். மழபாடிக்குச் செல்ல மறந்ததை நினைவுகூர எல்லாப்பாடல்களிலும் இத்தொடரை அமைத்துள்ளார். தன்னுடைய பிழையைத் தானே எடுத்துக்கூறுகிறார். முன்னைய காலங்களில் அடியார் அடியார்கட்கெல்லாம் தொண்டுபூண்டு வந்ததையும் பின்னர் அப்பணியை மறந்து விட்டதையும் பாடல்களிலே குறிப்பிட்டுள் ளார். தெய்வப்பணியைத் தொடராமல் இழிந்த வாழ்க்கையான இல்லறவாழ்க்கை வாழ்ந்ததையெண்ணித் தன்னைத் தானே நொந்து கொள்கிறார். துரிசறுத்தேன் என அவர் குறிப்பிடுவது நோக்குதற்குரியது. "துரிசு" என்பது குற்றம் எனப் பொருள் தரும் சொல்லாகும். திருத்தலத்தின் சூழலழகையும் பாடலில் வருணித்துள்ளார். வண்டுகள் நிறைந்த பூம்பொழில்கள் சூழ்ந்த திருமழபாடித் தலம் அல்லற் பட்டு வருந்தும் அடியார்க்கெல்லாம் ஆறுதல் தரும் தலமாகும். அங்கு உறையும் தெய்வத்தை மாணிக்கமே என அழைக்கின்றார். இறைவனின் பெருமையை மதிப்பிட முடியாது. தனது குற்றங்களையெல்லாம் பொறுத் தருளும் இறைவன் கருணையை எல்லோரும் அறிய வேண்டும் என்பதே சுந்தருடைய விருப்பாகும். இறைவன் திருக்கோலத்தைப் பலவாறு கண்டுபாடியுள்ளார். பண்ணாய் நின்ற தமிழே என இறைவனைப் போற்றுகின்றார். இறையருளினாலே தன்னால் செந்தமிழ்ப்பாடல்களைப் பாடமுடிந்தது என்பதை அவர் நன்குணர்ந்திருந்தார். இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பட்ட போது "பித்தா பிறைசூடி பெருமானே" என விளித்துப்பாடிய சுந்தரர் இறையருளால் தான் விரும்பியவற்றையெல்லாம் பெறும் மெய்யடியாராக வளர்ச்சிபெற்றபோது இறைவனை விளிப்பதிலும் வெகு விநயமாக இருக்கின்றார். அன்னையே, எனக்குரிய ஆளே, அம்மானே, அம்மா, அண்டா, அண்ணா, எந்தாய், ஐயா, அறிவே எனப் பல்வேறு தொடர்பு நிலைகளாக இறைவனைக் காணும் சுந்தரரது பக்திவளர்ச்சிநிலைபெற்றிருப்பதை இதனால் நன்கு உணரமுடிகிறது.

"பண்டே நின்அடியேன் அடியாரடி யார்கட்கெல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில் மழபாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## கண்ணாய்ஏழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்

உறவு என்பது மனித வாழ்வியலில் ஓர் உன்னதமான தொடர்பாகும். ஒரு மனிதன் தனித்தவன் அல்ல என்பதை உணர்த்துவதும் அதுவே. எம்மை உறவுகளோடு பிணைத்து வாழும் போது உள்ளம் களிப்படைகிறது. உடல் நலமடைகிறது. எமது செயற்பாடுகளில் செம்மை உண்டாகிறது. ஆனால், இத்தகைய உறவுகளைப் பிரிய நேர்ந்தால் மனம் பெரிதும் துன்பப்படுகிறது. சோர்வுற்று வாழ்க்கையே வெறுக்கிறது. உள்ளம் உடைந்துபோக, உடல் நலம் கெட, செயற்பாடுகள் செம்மை குன்ற வாழ்க்கையே சீர்குலைந்து விடுகிறது. இவ்வாறு வாழ்வு சீர்குலையச் சமூகக்கட்டுக்கோப்பும் தளர்வடைகிறது. மனிதனின் மேம்பட்ட அறிவான பகுத்தறிவும் பயனற்றுப் போகிறது. உலகத்து நடப்புகள் எல்லாம் இயக்கமற்றுப்போகும். ஓர் அவலநிலை உருவாக இடமுண்டாகிவிடும். எனவே, அந்நிலை உருவாகாமல் தடுக்க எமது முன்னோர் நல்லதொரு வழியைச் சமைத்து வைத்துள்ளனர். அதுவே பக்திநெறி என்னும் புதிய வழியாகும். எமக்கெல்லாம் ஒரு நிலையான உறவாக இறைவன் எப்போதும் எம்முடன் இருக்கிறார் என்ற ஒரு நினைப்போடு வாழும் முறைமையைப் பயிற்றிச் சென்றுள்ளனர்.

இறைவனை நாம் விரும்பும் மனித உறவு நிலையிலே காணும் மனப்பக்குவத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். நாயன்மார்களின் வாழ்வியலில் இத்தகைய மனப் பயிற்சியை நாம் காண்பதற்கு இன்று அவர்கள் பாடிய பாடல்கள் சான்றாயுள்ளன. சுந்தரரது பாடல் ஒன்று இத்தகைய உறவு நிலையை உணரவைக்கிறது. இறைவனின் அருள் திறத்தை நன்குணர்ந்த சுந்தரர்; அதனை எல்லோரும் அறியவேண்டும் என எண்ணினார். தம்முடைய திருக்கடைக் கண்ணின் நோக்கினாலே ஏழு உலகத்தையும் காக்கும் ஆற்றல் படைத்த இறைவனை நாம் விரும்பும் உறவிலே காணமுடியும் எனக் காட்டுகிறார். பாடலின் பண்ணாக இறைவன் இருப்பதை எடுத்துக்கூறுகிறார். பண்ணைப்பாடும் தமிழாய் அவனே இருப்பதையும் உணர்த்து கிறார். உணர்வை வெளிப்படுத்த ஒருமொழி இன்றியமையா காதது. எனவே தமிழால் இறைவனிடம் எம் உணர்வுகளை வெளிப்படுத்தி வழிபட்டுப் பயன்பெறலாம் என்பதைத் தமது படலிலே மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

உறவு நிலையில் இறைவனைக் காண்பதற்கு அவன் உறையும் திருத்தலத்திற்குச் செல்லவேண்டும். சுந்தரர் பாடல் இறைவன் திருத்தலத்திற்கு எம்மை அழைத்துச் செல்கிறது. உள்ளே செல்வதற்கு முன்னே புறச்சூழலைச் சுட்டிக் காட்டுகிறது. மண்ணிலே வளமான பகுதியில் பூம்பொழில்கள் நிறைந்திருக்கும் அழகான இயற்கைச் சூழல். திருமழபாடி என்னும் திருத்தலம் வெம்மையற்ற தண்மையான இயற்கைச் சூழல். அந்த அழகான இயற்கைச் சூழலிலே மாணிக்கம்போல ஒளி வீசிக்கொண்டு இறைவன் திருத்தோற்றம் எழுந்தருளி இருக்கின்றது. நவரத்தினங் களிலே சிறந்த மாணிக்கத்தைச் சுந்தரர் திருமழபாடியிலே காண்கிறார். அவருடைய மனத்திலே இறைவன் தோற்றம் ஒரு புதிய உருவாகத் தெரிகிறது. உடன் பிறப்பின் உருவமாய்ச் சுந்தரர் இறைவனைக் காண்கிறார். அதனால் இறைவன் திருவுருவைக் கண்டவுடன் "அண்ணா" என்றழைத்து வணங்குகிறார். உடன்பிறப்பு என்று ஒருவர் எமக்கிருப்பது ஒரு பலம் ஆகும். எனவே, சுந்தரரும் "அண்ணா" நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே எனப் பாடியுள்ளார். அப்பாடல் எம்மையும் இறைவனை எமது உடன்பிறப்பாய் நினைத்து வணங்கி வாழ்வதற்கு வழி காட்டுகிறது

"கண்ணாய் ஏழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணாய் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லா இனியாரை நினைக்கேனே"

வலம்புரி - 12-02-10

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடை

வாழ்க்கையில் மனிதன் எப்போதும் அச்சத்தை எதிர் கொள்கிறான். அவனுடைய மனதிலே தன்னைக் காப்பாற்ற யாராவது முன்வரமாட்டார்களா என்ற எதிர்பார்ப்பு இருந்து கொண்டே இருக்கும். எதைக்கண்டாலும் அஞ்சுகிற நிலை மனிதனின் மனவளர்ச்சியை பெரிதும் பாதித்துவிடும். எனவே அவ்வாறு அல்லற்படுவோரைக் காப்பாற்றப் பல முயற்சிகள் நடைபெறுகின்றன. சீர்மியப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய முயற்சியை எமது சமய குரவர்களும் மேற்கொண்டுள்ளனர்.

தனக்கு யாரும் துணை இல்லையே என மனம் புழுங்குபவரைத்தேற்றுவதற்கு வழிபாடு சிறந்தது. எல்லோருக்கும் என்றும் துணையாய் நிற்கின்ற இறைவன் பற்றிய நம்பிக்கையை எல்லோருக்கும் ஊட்டவேண்டும். பல்வேறு இன்னல்களை அனுபவித்த திருஞானசம்பந்தர்; மனத்திற் குடிகொள்ளும் அச்சத்தைப்போக்க சிறந்தவழி ஒன்றைக் காட்டியுள்ளார்.

தனது வாழ்நாளிற் பிற சமய வயப்பட்டு நின்றதனால் மக்கள் பெரும் துன்பத்தை எதிர்கொள்ளவேண்டி வரும் என அஞ்சினார். தனக்குவரும் துன்பங்களையெல்லாம் நீக்கவல்ல இறைவனைச் சரண் புகுதலே அச்சம் போக்கும் அரியவழி எனக் கண்டார். திருவானைக்காவிலே உறையும் அண்ணலை அடைக்கலம் பகுந்து அச்சத்தை அகற்றும் மனப்பக்குவம் பெறலாம்எனக் கூறுகிறார்.

இறைவனிடம் அடைக்கலமாக எம்மைக்கொடுத்து விட்டால் எத்தகைய காவலும் எமக்குத்தேவையில்லை. இத்தகைய இறை நம்பிக்கையை நாம் உள்ளத்திலே நிறைவாகக் கொண்டிருப்பின் நாம் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. திருஞானசம்பந்தர் பாடிய திருவானைக்காப்பதிகத்தின் முதற்பாடலே இவ்வாறு எமக்கு ஒரு சிறந்தவழியைக் காட்டுகிறது. அத்திருத்தலத்திலே வீற்றிருந்து அருள்புரியும் இறைவனே "ஆனைக்காவில் அண்ணல்" எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அவனுடைய திருத் தோற்றத்தை நாம் காண்பதற்காகச் சொற்சித்திரமாக வரைந்து காட்டியுள்ளார். முதல் பாடலில் முதலிரு அடிகளும் அண்ணலை கண் முன்னே காட்டுகின்றன. வானத்துச் சோலையிலே பூத்திருக்கும் வெண்ணிறமான ஒளிவீசும் நிறை நிலவை அதன் துண்டப்பிறையை சடையிலே சூடிய தோற்றம். சிவந்த சடையிலே வெண்மையான துண்டப்பிறை சூடியிருப்பது அழகு நிறைந்த அற்புதமான காட்சியாகும். பிறை தருசடை, பிறை நிலாவிய சடை, பிறைகொள் சடை, பிறைக்கணிச்சடை பிறையாருஞ்சடை, பிறையுருசடை எனப் பலத் தொடர்கள் இக் காட்சியை ஏனைய பாடல்களிலே காட்டியுள்ளன. சடையின் அழகோடு தனது இடப்பாகத்தே இனிய மொழியுடைய தேவியைப் பாகமாக கொண்டிருப்பவன் காட்சி தனித்துவமானது. தேவியைப் பாகமாகக் கொண்டவரை அபயமாக நினைத்து வாழும் பக்தி நெறியை திருநாவுக்கரசர் எமக்குத் தந்துள்ளார். ஒரு திருத்தலத்தின் சிறப்பை எல்லோரும் அறிய வேண்டும் என்ற நல்லுறவு நாவுக்கரசருக்கு இருந்தது. திருவானைக் காவல் தலத்தை வணங்குவதால் ஏதும் ஒன்றும் அச்சம் ஏற்படாது எனக் கூறுகிறார்.

நாம் அச்சத்தை எதிர்கொள்வதற்கு நாம் செய்யும் குற்றங்களே காரணமாகும். ஆனால், இறைவழிபாடு எமக்குக் குற்றம் செய்யும் குணத்தை அகற்றி; எல்லோருக்கும் நல்லது செய்யும் நல்ல குணப்பண்பைத் தரவல்லது. எனவே, எல்லோரும் மனப்பயம் அற்று வாழ; சம்பந்தரது பாடலைப்; படிக்கவேண்டும்.

"வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவி லின்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவி லண்ணலை யபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதுமேத மில்லையே"

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

## கூருமாலை நண்பகற் கூடி வல்ல தொண்டர்கள்

ஒரு நாளில் நாம் செய்யவேண்டிய நல்ல காரியம் வழிபாடாகும். நாளின் தொடக்கத்திலும், முடிவிலும் வழிபாடு செய்வது நல்லது. எமது முதற்சிந்தனை இறை சிந்தனையாக இருந்தால் மனம் தெளிவோடிருக்கும். எமது செயற்பாடுகளில் சீர்மை இருக்கும். இதனை நன்குணர்ந்த நமது முன்னோர் வழிபாட்டிற்கென நேரத்தைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். "காலையும் மாலையும் கடவுளை வணங்கு" என எல்லோரையும் வழிப்படுத்தியுள்ளனர்.

வழிபாடு செய்யும் வேளையைச் சம்பந்தர் தனது பதிகத்திலே குறிப்பிட்டுள்ளார். திருக்கோயிலுக்கு மாலையிலும், நண்பகலிலும் வழிபாடு செய்வதற்குச் செல்லும் அடியவர்களின் நிலையைப் பாடலிலே காட்டியுள்ளார். அடியார்கள் இறைவனுடைய பேரையும் ஊரையும் செல்வச்சிறப்பையும் பற்றிப் பேசும் காட்சி அவருடைய கண்களிலே பட்டது. அவ்வாறு பேசுபவர்களை "வல்லதொண்டர்கள்" எனப் பெயரிட்டு அழைத்துள்ளார். நில உலகத்துத்தொண்டர்கள் மட்டுமன்றி விண்ணுலகத்தவரும் கைதொழும் இறைவன் பெருமையை எல்லோருக்கும் எடுத்துரைக்கின்றார். "பாரும் விண்ணும் கை தொழ" வீற்றிருக்கும் திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கும் அவருடைய எண்ணத்திலே வழிபாடு பற்றிய தெளிவை மக்களுக்கு நன்குணர்த்த வேண்டும் என்ற இலக்கு இருந்தது. கோயில் கோயிலாகச் சென்று மக்கள் கூட்டத்தை வழிபாடு செய்யத்தூண்டுகிறார். "கைதொழுதல்" என்பது வேறு கதி எனக்கில்லை என்ற உணர்வோடு கைகளைத் தலைமேல் வைத்து இறைவனை வணங்குதல். இதனைத் திருநாவுக்கரசர் மேலும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

"தொழுது அகம் குழைய மேவித் தோட்டிமையுடைய தொண்டர்" தொழுவார் துயர் தீர்ப்பவன் இறைவன். விண்ணோர்களே தமக்கு இடுக்கண் ஏற்பட்ட போதெல்லாம் எமக்கு நீயே கதியென வழிபட்ட தேவர்களின் பண்பை மக்களுக்குக் கூறுகின்றார். இந்த உலகத்தவரும் விண்ணுலகத்தவரும் வழிபட்டுப் பயன்பெறும் இறைவன் பெருமையை எல்லோரும் அறியவேண்டுமெனச் சம்பந்தர் பாடிய பாடல்கள் இன்றுவரை நிலைத்திருப்பதற்கு இதுவே காரணமாகும். இறைவன் தோற்றத் திலே அவன் சடையிலே தாங்கியுள்ள கங்கையைப் பற்றிப் பல குறிப்புகள் உள. கங்கைசேர்ச டை, கங்கைதங்கியசடை, கங்கை நீர் சடை, கங்கைபொங்கு சடை, கங்கையார்சடை, கங்கைவார் சடை, கங்கையோர்வார் சடை எனவரும் குறிப்புக்கள் இதற்குச் சான்றாக உள்ளன. பாயுங்கங்கை தாங்கிய செஞ்சடை திருவானைக் காவில் வீற்றிருக்கும் இறவைனின் தோற்றம் புதிய பொலிவுடன் தோன்ற வழிசெய்துள்ளது. நீர்வளம் மக்கள் வாழ்வியலுக்கு மிகவும் இன்றியமைாதது. நீரின்றியமையாது உலகு என வள்ளுவரும் கூறியுள்ளார். திருவானைக்கா தலம் சேர்ந்து வழிபாடு செய்யும் போது நீர்வளம் பற்றிய சிந்தனை ஏற்படும்.

அடியார்கள் பெருமையாய்ப் பேசும் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருவானைக்காத்தலம் ஒரு சிறந்த வழிபாட்டுத் தலமாக அமைந்துள்ளது. அங்கு நேரே சென்று வழிபட முடியாதவர் சம்பந்தருடைய பாடலைப் படிக்கும்போது அந்தத் திருத் தலத்திற்குச் செல்லவேண்டும் என்ற ஆவல் ஏற்படும்.

"கூருமாலை நண்பகற் கூடி வல்ல தொண்டர்கள்
பேரும் ஊரும் செல்வமும் பேசநின்ற பெற்றியான்
பாரும் விண்ணும் கைதொழப் பாயுங்கங்கை செஞ்சடை
ஆர நீரொ டேந்தி னானைக்காவு சேர்மினே"

## எத்தாயர் எத் தந்தை எச் சுற்றத்தார்

பக்தி என்பது ஓர் அற்புதமான அனுபவமாகும். இவ்வுணர்வு இரு வகையால் ஏற்படும். ஒன்று: வழிபாட்டுப் பயிற்சியால் ஏற்படுவது. மற்றையது: தானாகவே ஏற்படுவது. பக்தி வயப்பட்டவரது செயற்பாடுகள் செம்மையாக இருக்கும். பதற்றமின்றி இருப்பவர் வித்து முளைப்பதுபோல மெல்லக் காரியங்களைச் செய்து பெரும் பயனை அடைவர். நாயன்மார்களில் நாவுக்கரசர் தனது பக்தியுணர்வை வெளிப்படுத்தும் பாங்கு தனித்துவமானது. உலக வாழ்க்கையின் நிலையை எடுத்துக்காட்டித் தன் பக்தியுணர்வையும் அவர் சிறப்பாகத் தமது பாடல்களிலே வெளிப்படுத்தியுள்ளார்.

சொந்தம், பந்தம் என்ற இருவேறுநிலைகளில் உலக வாழ்க்கையிலே எம்மோடு தொடர்புகள் கொண்டவர்களுடைய தன்மைபற்றித்திருத்தாண்டகப் பாடல்களிலே தெளிவாக விளக்கியுள்ளார். எந்தத் தாயர், எந்தத் தந்தையர், எந்தச் சுற்றத்தார் எல்லோருமே எம்மோடு எமக்குச் சும்மாடுபோல மேவி இருப்பவரேயாம். பொதி சமக்கின்ற வேளையில் தலையைப் பொதியின் பாரம் அழுத்தாமல் இருக்க, சும்மாட்டை முதலிலே தலையிலே வைத்துப் பின்னர் அதன் மேல் பாரமான பொதியை வைப்பர். சும்மாடு தலைக்கும் பொதிக்குமிடையே ஒரு தற்காலிகப் பாதுகாப்பாகப்பொதிசுமக்கும் வரையில் இருக்கும். பொதி சுமக்கும் பணி முடியச் சும்மாடும் தேவையற்ற பொருளாகி விடும். அதுபோலவே; சுற்றத்தவரும் உறவினரும் தேவைமுடிய எம்மைப் பிரிந்துவிடும் இயல்புடையவராவர். அதுமட்டுமன்றி; நாம் இறந்துவிட்டால் வந்து உதவமாட்டார்கள். சிறு விறகாகலே தீயை மூட்டிவிட்டுச் சென்றுவிடுவர்.

எனவே, உலக வாழ்க்கைக்கு அப்பாலும் எம் நிலையைப் பேணவல்ல ஒருவரை நாம் தேடவேண்டும். அவரே ஒப்பற்ற இறைவனாவார். சித்தாய வேடமணிந்தாலும் எம்மை என்றும் காத்து நிற்பவர் அவரே. இறப்புக்குப் பின்னர் இறைவன் பாதத்திலே நாம் இளைப்பாறலாம். ஏனெனில், பிறரைத் துன்ப நிலையிலே காப்பாற்றும் அருட்சிந்தை கொண்டவனே இறைவனாவான். அவனை வணங்கி வாழ்வதால் இறப்பிற்குப் பின்னரும் நாம் இன்பமாக இருக்கலாம். பிறர் பொருட்டாக உயிரைமாய்க்கும் கொடிய நஞ்சையே உண்டு கண்டம் கறுத்தவன் இறைவன். எல்லோரையும் என்றும் காத்து அருள்பவனும் அவனேயாம்.

நாவுக்கரசர் பிறமதம் சார்ந்து நின்று மீண்டும் சைவமசயத்தைச் சார்ந்தவர். அதனால் அவருடைய மனத்திலே ஒரு வித தயக்கம் எப்போதுமிருந்தது. பக்தியுடையவர்க்கு அருள் செய்யும் இறைவன் தன்னை என்ன செய்வானோ என மனித நிலையில் எண்ணி இரங்குகிறார். வல்ல கண்டங் கொண்டாய் நான் அடியேன் என்ன செய்கேன் என இறைவனிடமே கேட்கிறார். தன்னை முற்றுமாக ஒப்புக்கொடுக்கும் பக்தி நிலை இதுவேயாகும். இறைவனை அத்தா என்றழைத்துத் தன்னிலையைக் கூறும் நாவுக்கரசரின் பயபக்தி அவருடைய பாடலிலே நன்கு வெளிப்பட்டு நிற்கிறது.

"எத்தாயர் எத் தந்தையர் எச் சுற்றத்தார்
எம்மோடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறு விறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தா உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டங்கொண்டு அடியேன் என்செய்கேனே"

## துன்பம் இன்றித் துயர் இன்றி

மனித வாழ்க்கையில் துன்பமின்றி இருக்க என்ன வழி? என்பது இன்று எல்லோருடைய தேடலுமாகும். சுக துக்கம், சூழல் சக்கரம் என்பதை நன்கு எல்லோரும் உணரும் நிலை இன்று இல்லை. எனவே எமக்குத் துன்பம் வரும்போது அதை எதிர்கொள்ள ஒரு மனப் பக்குவம் தேவை. ஆன்றோர் வாக்கினைச் செவிமடுப்பதால் வழி கிடைக்கும் என மனத்திடமும் இப்போது எவரிடமும் இல்லை. எமது சமயப் பெரியார் இத்தகைய துன்ப நிலையை எதிர்கொள்ள வழி கூறியுள்ளனர். அதனைத் தாம் பாடிய பாடல்களிலே பதிவுசெய்தும் வைத்துள்ளனர். திருநாவுக்கரசு நாயனார் நீண்டகாலம் இவ்வுலகிலே வாழ்ந்தவர். பல்வேறு துன்பங்களை அனுபவித்தவர். சுடச்சுட ஒளிரும் பொன்போல அவர் அனுபவித்த துன்பங்களின்மூலமாக மனித வாழ்வியலை நன்கு உணர்ந்து கொண்டவர். அவர் அனுபவம் எல்லோருக்கும் பயனுள்ளதாக உள்ளது.

எமது மனத்தைத் திருகும் உணர்வுகளை முதலிலே கட்டுப்பாடு செய்யும் பயிற்சியை மேற்கொள்ளவேண்டும். செம்மை செய்யவேண்டும். துன்பமில்லாமல் இன்பமாக வாழவேண்டுமாயின் இறைவனிடம் எம்மை ஒப்புவிக்க வேண்டும். இரவும், பகலும் இறைவனை ஏத்திவழிபட வேண்டும். எமது நாவினாலே நறுமலச் சேவடி பற்றி ஓயாது பேசவேண்டும். உள்ளத்திலே இறை பற்றிய சிந்தனையை நிறைத்துக்கொள்ள வேண்டும். உள்ளத்திலே வஞ்சமின்றி எப்போதும் இறைவழிபாடு செய்ய வேண்டும்.

எல்லாவற்றையும் மறந்து இறைவா நீயே சரணம் என அடைக்கலமாகி வாழும் வாழ்க்கையே துன்பமில்லாத வாழ்வாகும். உடலை வருத்தும் நோயும் பிணியும் துன்பந்தருபவை அவற்றிலிருந்து விடுபடவேண்டின்; இறைவா எனக்கைதொழுது நிற்கவேண்டும். பஞ்சபூதங்களின் ஆற்றலால் நாம் துயரம் அடைகின்றோம். அவற்றின் ஆற்றல் கண்டு அஞ்சுகின்றோம். படைகள்போல எம்மைத்தாக்கவரும் பஞ்சபூதங்களையும் வெல்லும் ஞானவீரம் எமக்குத் தேவை. எதிர்த்துநின்று அவற்றிற்குப் பணியாமல் இறைசிந்தனையோடு தொழிற்படும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இறைவனிடம் நேசமாகி அவனையே எப்போதும் நினைந்து வாழவேண்டும். நமது சுற்றத்தவரிடம் வைத்துள்ள பற்றுக்களைத் துறக்கும் பயிற்சி தேவை. எம்மை விட்டு விலகப்போகும் சுற்றங்களையும், உறவையும் நிலையானது என நினைத்து வாழும் வாழ்க்கையை மாற்றிப் பக்தி செய்து வாழும் பயிற்சியே இன்றும் என்றும் எமக்குத் தேவை. உள்ளத்திலே இறைவனையே இருத்தி ஏனைய நினைப்புக்களைப் புறந்தள்ளிவிட்டால் துயரம் இல்லை. மனிதநிலையான இழப்பைத் தள்ளி விட்டால் துயரம் இல்லை. மனித நிலையான இழப்புகளை நினைந்து துயரடைய வேண்டியதில்லை. உள்ளத்திலே இறை சிந்தனையை நினைத்துமட்டும் வாழ்வதுஎன்பது எல்லோருக்கும் கைகூடாது. இறைவன் புகழைப் பாடிப் பரவவேண்டும். இறையடியார்கள் எல்லோரும் தமது உள்ளத்திலே இறைவன் கோலத்தையும், அருட் குணங்களையும் பற்றி நினைந்து அதனைப் பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளனர். தேவாரங்கள் என இன்று எமக்குக் கிடைக்கும் பாடல்கள் எல்லாம் இத்தகைய வெளிப்பாடே. அப்பாடல்களைப் படிக்கும்போது எமது மனமும் ஒரு பயிற்சியைப் பெறுகிறது.

"துன்பம் இன்றித் துயர் இன்றி என்றும் நீர்
இன்பம் வேண்டின் இராப்பகல் ஏத்துமின்
என் பொன் ஈசன் என்று உள்குவார்க்கு
அன்பனாயிடும் ஆனைக்கா அண்ணலே"

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

## ஊனாகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப்

பக்தியின் வசப்படுதல் என்பது ஓர் அற்புதமான அநுபவமாகும். இந்த அநுபவம் தானாகவே எம்மிடம் வந்து சேரும் போது எம்முடைய மனமும், உடலும் பக்குவப்பட்டிருப்பதை நாமே அறிந்துகொள்வோம். எம்மையறியாமலே பக்தியுணர்வை நாம் அடையும்போது இறைவன் கருணையை நாம் நன்கு உணர்ந்து கொள்வோம். திருநாவுக்கரசர் இந்த அற்புதமான உணர்வுக்கு ஆட்பட்டதை ஒரு பாடலிலே நன்கு எடுத்துரைத்துள்ளார். உடம்பிலும் உயிரிலும் இறைவன்பற்றிய உணர்வுவந்து செறிந்த வகையை நினைந்து வியந்து பாடுகிறார்.

உலகத்திலேயுள்ள எல்லாமே இறைவனே என்ற நம்பிக்கை அவரது உள்ளத்திலே ஏற்படுவதற்கு இந்த பக்திவயப்பட்ட உணர்வு நிலையே தான் காரணம் எனக் கூறுகிறார். ஊனாகி, உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிற அனைத்துமாகி நின்ற இறைவனை நன்கு உணர்ந்து கொள்கிறார். உடம்பையும், உயிரையும், உணர்வையும் பிற எல்லாவற்றையும் பகுத்தறியும் ஆற்றல் வெறும் கல்வியால் மட்டும் ஏற்படாது. ஞானத்தால் மட்டுமே இத்தகைய பகுத்தறியும் ஆற்றலைப் பெற முடியும். உடம்பும், உயிரும் வேறுபட்டவை. உடம்பு அழியும் தன்மையானது. உயிருக்கு அழிவில்லை. அது பல்வேறு உடம்புகளிலே புகுந்து நின்று வெளியேறும் தன்மை கொண்டது. இந்த உண்மையைப் பலர் உலக வாழ்வியலில் அறிந்து கொள்வதில்லை. சிலர் இயல்பாகவே இத்தகைய அறிவு நிலையை அடைந்து விடுவர். பலர் இந்த அறிவு நிலையை அடையாமல் துன்பப்படுகின்றனர். திருநாவுக்கரசர் இத்தகையதொரு அநுபவத்தைப் பெற்றவர். சைவ சமயத்தைப் பிறப்புச் சமயமாகக் கொண்டிருந்தபோதும், வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களால் சைவ வாழ்வியலை விட்டுச் சமணவாழ்வியலுக்குச் சென்றவர். ஆனால் அங்கும் துயரத்தை எதிர்கொள்ள நேர்ந்தபோது மீண்டும் சைவ சமயத்திற்குத் திரும்பியவர். இந்த இருவேறுபட்ட சமய வாழ்வியல் அவருக்கு இறைவன் பற்றிய சிந்தனைத் தெளிவை ஏற்படுத்தியது. அதனால் பெற்ற அநுபவத்தை வருமாறு கூறுகிறார்.

"நான் ஏதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவுந் தீயனவும் காட்டா நின்றாய்

இத்தகைய ஒரு பக்திநிலையை அவர் அடைவதற்கு இறையருளே துணை நின்றது. நல்லனவற்றையும் தீயவற்றையும் எமக்கு இறைவனே அறிவிப்பான் என்ற தெளிவான கருத்தொன்றை அப்பர் தனது வாழ்வியல் மூலமாக நன்கு உணர்ந்து கொண்டமையை இப்பாடலடிகளில் பதிவு செய்துள்ளார். பழைய புறநானூற்றுப் பாடல் ஒன்று "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்று பதிவு செய்துள்ளது. ஆனால் நாவுக்கரசர் பாடல் அதனை அநுபவரீதியாக விளக்கியுள்ளது. உள்வந்து என்ற தொடர் இறையுணர்வு உள்ளத்துள் புகுந்து எப்படி ஆற்றுப்படுத்தும் என்பதை விளக்கி நிற்கிறது. இந்த ஞானநிலையை நாமும்பெற வழிகாட்டி நிற்கிறது. இறைவன் கோலம்தான் மனத்துள்ளே புகுந்து வழிப்படுத்துவதாக நாவுக்கரசர் பாடியுள்ளார். இறைவன் திருமுடிக்கோலமும் திருவடிக் கோலமும் அவருடைய உள்ளத்திலே புகுந்து பக்திவயப்படுத்திய நிலையை நாமும் உணரமுடிகிறது. அந்த உணர்வை நாமும் பெறுவதற்கு நல்ல வழிகாட்டியாய் உள்ளது.

"ஊனாகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப்பிற வனைத்தும் நீயாய் நின்றாய்
நான்ஏதும் அறியாமே என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்
தேனாரும் கொன்றையனே நின்றியூராய் திருவானைக் காவில் உறை சிவனே ஞானம்
ஆனாய்உன் பொற்பாதம் அடையப் பெற்றால் அல்ல கண்டங்
கொண்டடியேன் என் செய் கேனே.."

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

# வானத்து உயர் தண்மதிதோய் சடைமேல் மத்த மலர் சூடித்

வழிபாடு செய்வதற்கு ஓர் உருவம் தேவை. மனத்துள்ளே இறையுருவத்தை நினைத்து வழிபடும் மனப்பக்குவம் எல்லோருக்கும் கிடையாது. எனவே, அவர்களுக்கு ஓர் உருவம் தேவை. அந்த இறையுருவங்களைக் கோவில்களிலே இருத்தி வழிபாடு செய்யும் மரபு பலகாலமாகத் தொடர்ந்து வருகிறது. இறையடியார்களில் முதன்முதலில் இறைவனுக்கு உருஅமைத்தவர் காரைக்காலம்மையாராகும். அவர் இயற்கையின் கோலத்திலே இறைவனைக் கண்டு பாடியுள்ளார். அவ்வாறு அவர் பாடுவதற்குப் புராண இதிகாசங்களிற் கூறப்பட்ட செய்திகளே அடிப்படையாக இருந்துள்ளன.

திருஞானசம்பந்தருடைய பாடல்களில் இறைவன் கோலச் சிறப்பு விரிவாகப் பாடப்பட்டுள்ளது. பெரிய புராணம் சம்பந்தருடைய வாழ்க்கையைப் பாடியுள்ளது. மூன்று வயதிலேயே இறைவன் கோலம் கண்டு பாடிய செய்தி பெரியபுராணத்தில் சேக்கிழரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. "பித்தா பிறைசூடி" எனச் சுந்தரரும் இறைவன் திருக்கோலத்தைத் தனது முதற் பாடலிலே பாடியுள்ளார். சமயகுரவர்களில் பாடல்களிலே சிவனின் திருக்கோலம் மிக அற்புதமாகச் சொற்சித்திரங்களாகத் தீட்டப் பட்டுள்ளது. சம்பந்தர் வயதில் இளையவராகையால் அவருடைய பாடல்களிலே திருக்கோலம் முதலிரு அடிகளிலே விளக்கப்பட் டிருக்கும். இறைவன் கோலத்தைப் பாடும்போது திருமுடியிலிருந்து வருணித்துப்பாடும் பண்பு அவருடைய பாடல்களிலே மலிந்துள்ளது. அவர் வரைகின்ற சொற்சித்திரம் அவருடைய பாடல்களிலே மலிந்துள்ளது. அது அவருடைய மொழிப்புலமை யையும் அழகுணர்வையும் நன்கு பறைசாற்றி நிற்கின்றது. இறைவன் திருமுடிக் கோலத்தை நாம் நேரிற் காண்பது போன்ற ஓர் உணர்வைப் பாவடிகள் நன்கு உணர்த்தி நிற்கின்றன. சிவனின் முடியில் சூடப்பெற்ற துண்டப் பிறையைப் பற்றிச் சொல்ல வந்த சம்பந்தர் "வானத்துயர் தண்மதிதோய் சடை" எனக் குறிப்பிடுகிறார். வானத்தில் உயரத்தில் இருக்கும் குளிர்மையான பிறையைச் சூடிய சடையை எமது மனக்கண்ணில் காணவைக்கிறார். "தோய்சடை" என்ற தொடர் பிறை சூடப்பெற்ற முறைமையை நன்கு விளக்கி நிற்கிறது. பிறையோடு சடையிலே மத்தமலரையும் சூடிய காட்சியையும் காட்டுகிறார்.

திருச்சடையின் அழகுக் கோலத்திற்கு அப்பால் அவர் காட்டும் அழகு இறைவியின் கோல அழகாகும். மான்விழியாள் ஒரு பாகமாக வீற்றிருப்பதைக் காட்டுகிறார். இறைவியின் திருக்கடைக்கண் பார்வையால் ஆட்கொள்ளப்பட்ட உணர்வு அவர் பாடலில் துல்லியமாகத் தெரிகிறது. இளமைப் பருவத்தி னராய சம்பந்தருக்கு இறைவியின் திருக்கண்களின் தோற்றம் உள்ளத்தைப் பரவசப்படுத்துகின்றது. ஆனால் அதில் அவர் ஆழ்ந்து போய்விடவில்லை. இறைவனோடு ஒரு பாகமாக வீற்றிருக்கும் அற்புதக் காட்சியிலே ஆழ்ந்து போய்விடுகிறார். இறைவியின் தேனொத்த மென்மொழி பற்றிப்பாடுகிறார். பெண்களின் மென் மொழியைக் கேட்ட சம்பந்தர் அதற்கு மூலகாரணமான தேவியின் அருள்மொழி பற்றிய நினைவில் தோய்ந்துவிடுகிறார். அடுத்து அவருக்கு இறைவன் ஆடும் திருநடனக் கோலம் நினைவுக்கு வருகிறது. காட்டிலே கையில் எரியை வைத்து நடமாடும் அழகுக் கோலம் பற்றிக் காரைக்காலம்மையாரும் பாடியுள்ளார். சிவனின் திருநடனக் கோலத்தின் அழகு சம்பந்தருடைய உள்ளத்திலே புத்துணர்வை ஏற்படுத்துகிறது. திருவீங்கோய் மலையிலே இக்காட்சியைக் காண வைக்கிறார்.

"வானத்து உயர் தண்மதிதோய் சடைமேல்
தேன் ஒத்தன மென்மொழி மான் விழியாள் தேவிபாகமாகக்
கானத்து இரவில் எரி கொண்டாடும் கடவுள் உலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சாரல் ஈங்கோய் மலையாரே"

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

## செந்தமிழ்திறம் வல்லிரோ செங்கண் அரவம் உன்கையிலாடவே

தோழமை என்பது எல்லோருக்கும் இன்றியமையாதது. இன்பத்தையும், துன்பத்தையும் பகிர்ந்து கொள்வதற்கும் ஒரு தோழமை தேவை. ஒத்தவயதுடையவர் தோழமையுடன் பழகுவது இயல்பாகும். ஆனால், சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனோடு தோழமை பூண்டு பாடல்கள் பாடியதைப் பார்க்கும்போது சற்று வேறுபட்ட நிலையாக இருப்பதை உணரலாம். பாடல்களில் சுந்தரருடைய மனநிலை இறைவனோடு மிக நெருக்கமான தோழமையுடன் இருந்ததை உணர்த்துகிறது.

இறைவனும் அடியாரும் இப்படி இருக்க முடியுமா என்ற ஐயம் தோன்றும் வகையில் சுந்தரர் பாடியுள்ளார். இறைவன் தோற்றத்தையும், அருட்குணங்களையும் பற்றிக் கேள்விகள் கேட்பதாகப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. மண்டையோடு கொண்டு ஊரெல்லாந்திரிந்துஏன்ன செய்கிறீர்? நீரொரு பித்தரோ? என்று துணிந்து கேள்விகளைக் கேட்கிறார். அவரது பாடல் உரையாடல் அமைப்பில் இறைவனோடு அச்சம் கூச்சம் இன்றி உரையாடுவது போலுள்ளது. அவருடைய கேள்விகளுள் எல்லாம் உச்சமான கேள்வியாகச் செந்தமிழ்த்திறம் வல்லிரோ? என்னும் கேள்வி அமைந்துள்ளது. உலகத்திலுள்ள எல்லாவற்றையும் படைத்துக்காக்கும் பரம்பொருளின் செந்தமிழறிவைப் பற்றி ஐயம் கொண்டவராகச் சுந்தரர் காணப்படுகிறார்.

கையிலே பாம்பைத் தாங்கியிருப்பதால் பலிதர மாட்டோம் என இறைவனுக்குச் சுந்தரர் கூறுவது தோழமையுணர்வு காரணமாகவேயாகும். பல கேள்விகளைக் கேட்டபோதும் இறைவன் திருத்தலச் சிறப்பைப் பாடுவதற்குச் சுந்தரர் மறக்கவில்லை. இளமைப் பருவத்தராக இருந்தமையால் இயற்கைக் காட்சிகளையும் இரசிப்பதில் ஆர்வமுடையவராகச் சுந்தரரர் விளங்குகிறார். அதனால் சம்பந்தரைப்போலவே கோயிற் சூழலைப் பாடல்களில் பதிவு செய்துள்ளார். குளிர்மையான பசுமையான சோலைகளடர்ந்த திருப்பைஞ்சீலி என்னும் திருத்தலம் பற்றிப்பாடும் போது இயற்கையழகிலே ஆழ்ந்து போய்ப்பாடுகிறார். அங்குள்ள சோலைகளிலே கந்தம் நாறுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அழகிய தோற்றமுடைய சுந்தரருக்கு நறுமணத் திரவியங்களிலும் அதீத விருப்பம் இருந்தது. இறைவனிடம் ஒரு சமயம் "கந்தமுதல் ஆடையாபரணம் பண்டாரத்தே எனக்குப் பணித்தருளவேண்டும்" எனவும் விண்ணப்பம் செய்துள்ளார்.

அடுத்து இறைவனுடைய மேனியழகிலே வசப்பட்டு ஒரு கேள்வி கேட்கிறார். "அந்தி வானமுமேனியோ சொல்லும் ஆரணீய விடங்கரே" என்னும் அடி இதனை நன்கு உணர்த்துகின்றது. சிவனின் திருமேனியழகில் வசப்பட்டு நின்றோர் பலர். ஒவ்வொருவரும் தமது கற்பனை ஆற்றலுக்கு ஏற்ற வகையில் மேனியை உவமித்துப்பாடியுள்ளனர். அப்பர் "பவளம் போல் மேனி" என்று குறிப்பிட்டுள்ளார். மணிவாசகர் "செந்தாமரைக் காடனையமேனி" எனப் பாடியுள்ளார். காரைக்காலம்மையார் "காலையே போன்றிலங்கும் மேனி" எனப் பரவசப்பட்டுப் பாடியுள்ளார். எனவே, இறைவனின் மேனியழகு எல்லோரையும் கவர்வது மட்டுமன்றி அவரவர் இரசனைக்கேற்ப மாறுபட்ட வண்ணமாக இருப்பதையும் உணரமுடிகிறது. சுந்தருடைய இப்பாடல் இறைவன் கோலத்தின் வண்ணத்தையும், வடிவையும் எம்கண்முன்னே கொணர்ந்து நிறுத்துகிறது.

"செந்தமிழ்த்திறம் வல்லிரோ செங்கண் அரவம் உன்கையி லாடவே
வந்துநிற்கும் இதென்கொலோபலி மாற்றமாட்டோ மிடகிலோம்
பைந்தண்மாமலர் உந்துசோலைகள் கந்த நாறுபைஞ்ஞலியீர்
அந்தி வானமும் மேனியோசொல்லும் ஆரணீய விடங்கரே"

## நிரைகழல் அரவம் சிலம்பொலியலம்பும் நிமலர் நீறணி திருமேனி

இறைவன் மீது அன்பு பூண்ட அடியார்கள் தமது அநுபவத்தைப் பாடல்களிலே பதிவுசெய்து வைத்துள்ளனர். திருஞானசம்பந்தர் பல்வேறு திருத்தலங்களுக்கும் சென்று அங்கு வீற்றிருக்கும் இறைவனையும் இறைவியையும் பற்றிய தனது அநுபவத்தைப் பாடல்களிலே சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். தமிழகத்துக்கு வெளியே இலங்கையிலுள்ள இருதலங்களையும் பாடியுள்ளார். அப்பாடல்களில் பதிவுசெய்யப்பட்ட பக்தி அனுபவம் தனித்துவமானது. வழிபாடு செய்யும் அடியவரை சம்பந்தர் ஆற்றுப்படுத்தும் முறைமையால் அவரது தொண்டுப்பணி புலனாகின்றது.

திருக்கோயில் பற்றி அறியவிரும்புகின்றவர்களுக்கு அவர் தருகின்ற தகவல்கள் பயனுள்ளவை சம்பந்தர் இலங்கைக்கு வந்த நேரில் திருக்கோணச்சரத்தை தரிசித்தது பற்றிய குறிப்பு எதுவுமில்லை. எனினும், பாடல்களில் கூறப்பட்ட விடயங்கள் மிகவும் பொருந்துவதாக உள்ளன. முதலிலே கோயிலில் வீற்றிருக்கும் இறைவன் தோற்றத்தைப் பாடியுள்ளார். திருவடி களிலே கட்டப்பட்ட வீரக்கழலும், இடையிலே சுற்றியுள்ள அரவமும் வாமபாகத்து உமையம்மையின் திருவடிச் சிலம்பும் ஒலித்துக்கொண்டிருக்கும் ஓசை காதில் கேட்கிறது. நிர்மலமான வருடைய நீறணிந்த திருமேனி பார்வையிற்படுகிறது. அவருடைய பாகத்திலே மலைமகள் அமர்ந்திருக்கும் காட்சியைக் காட்டுகிறார். இருவருமாக இணைந்திருக்கும் தோற்றம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அடுத்து சம்பந்தர் காட்டும் காட்சி கோயிற்புறச் சூழலாகும். கடற்கரையில் அமைந்த கோயில் என்பதால் தோற்றப் பொலிவும் சிறப்பாகத் தெரிகிறது. கடற்கரைச் சூழலில் சந்தனமரங் களும், அகிற்கட்டைகளம் நிறைந்து கிடக்கின்றன. அவற்றைவிடப் பல்வேறு விதமான மணிகளும் அளவின்றிக் காணப்படுகின்றன.

இந்த இயற்கை வளங்கள் மலிந்த காட்சியோடு ஒலிக்கின்ற கடல் பற்றியும் காட்சிப்படுத்தியுள்ளார். புரண்டு வரும் கடல் அலைகளுடன் முத்துக்களும் சேர்ந்து வருகின்றன. இக்காட்சியை நித்திலம் கொழிக்கும் எனப் பாடலிலே குறிப்பிட்டுள்ளார். கொழித்தல் என்ற சொல் யாழ்ப்பாணத் தமிழ் பேச்சு வழக்கில் இன்றும் பயன்படுத்தப்படுகிறது. கலந்த கிடக்கும் தானிய வகைகளை வேறுபடுத்துவதற்குச் சுளகிலே போட்டுக் கொழித்து எடுப்பதாகக் கூறுவர். அதுபோல திருக்கோணமலைக் கடற்கரை யில் கடலில் இருந்து எழுந்துவரும் அலைகள் ஏனையபொருட் களோடு முத்துக்களைக் கொழித்துத்தரையில் பரவச் செய்துள் ளன. இயற்கைச் செல்வவளம் பெற்ற கோயிலின் புறச் சூழலைப் பாடும் சம்பந்தர் இலங்கைத் தீவின் விளைபொருட் சிறப்பையும் உட்பொதிந்துள்ளார். கோயிலை அண்மித்த கடற்கரைப் பிரதேசம் கற்பாறைகள் கொண்டது அதன்மீது அலைகள் வந்து மோதும் போது பேரொலி செய்கிறது. இக்காட்சியைக் குரை கடலோதம் என வர்ணித்துள்ளார். வழிபாட்டுத் தலங்களின் புறச்சூழல் இயற்கையழகோடு பொலிவதை எல்லோரும் சென்று காண வேண்டும் என்பதே சம்பந்தரது விருப்பம் என்பதையும் பாடல் நன்கு உணர்த்துகின்றது. தமிழகத்தில் இருந்து கடல் கடந்து வந்து திருக்கோணேஸ்வரத்தை வழிபடவேண்டும் என்ற ஆவலை எல்லோருக்கும் சம்பந்தர் ஊட்டியுள்ளார்.

"நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பு நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் கார் அகிற் பிளவும் அளப்பெரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமா மலை அமர்ந் தாரே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## கடிதென வந்த கரிதனை யுரித்து அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என எம் முன்னோர் கூறிச் சென்றுள்ளனர். கோயில் ஓர் ஊரில் இருப்பது அவ்வூருக்கே ஒரு புதுப்பொலிவைத் தரும். மக்கள் குடியிருப்புகள் கோயிலைச் சுற்றியிருப்பது நன்று. ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடும் இடமாகக் கோயில் விளங்கியது. சம்பந்தர் திருக்கோணேஸ்வரத் தலத்தைப்பற்றிப் பாடியபோது கோயிலைச் சுற்றியுள்ள குடியிருப்புகள் பற்றியும் தவறாது குறிப்பிட்டுள்ளார். கோணேசர் எழுந்தருளி இருக்கின்ற தலத்திற்கு ஓர் அடையாளமாக நெருக்கமான மக்கள் குடியிருப்பு இன்றும் காணப்படுகின்றது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால்; சம்பந்தரது மனக்கண்ணிற் கோயிலைச் சுற்றிருந்த குடியிருப்புகள் தென்பட்டுள்ளன.

சம்பந்தர் பாடிய திருக்கோணேஸ்வரப் பதிகத்தின் அமைப்பும், கோயிற் சூழல் பற்றிய அவருடைய பதிவுகளின் தனித்துவத்தைக் காட்டி நிற்கின்றது. பாடலில் முதலிரு அடிகளும் கோணசர் பற்றிய செய்திகளைத் தரும். ஏனைய பாடல் அடிகள் கோயிற் சூழல் பற்றிய குறிப்புகளைத் தருவனவாக அமைந்துள்ளன. இறைவனின் அற்புதங்கள் பற்றிய செய்திகள் எல்லாப் பாடல்களிலும் காணப்படுகின்றன. இறைவியின் தோற்றமும் எல்லாப் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளது.

விரைவாக வந்த மதயானையை அடக்கி; அதன் தோலைப் போர்வையாக மேனியிலே தரித்த இறைவனைச் சம்பந்தர் காண்கிறார். அவருக்கு அருகே வீற்றிருக்கும் அம்மையின் திருக்கோலம் சம்பந்தரை மெய்மறக்க வைக்கின்றது. அம்மையின் நடையையும்; திருக்கரம், திருநுதல் என்பவற்றையும் பாடுகிறார். "பிடியன நடையாள்" என அம்மையின் நடையைக் குறிப்பிடுகின்றார். பெண் யானையின் நடையைக் கண்டவர் அம்மையின் நடையையும் அறிந்துகொள்வர் என்பதே சம்பந்தரது எண்ணமாகும். அதேபோல அம்மையின் திருக்கரங்களைப் பற்றிக் கூறும்போது "பெய்வளை மடந்தை" எனக்குறிப்பிட்டுள்ளார். நிறைய வளையல்களை அணிந்த தேவி, என்றும் இளமையான தோற்றத்துடன் விளங்குபவள். 'மடந்தை' என்றால் இளமைப் பருவம் என்று பொருள். தேவியின் திருத்தோற்றம் சம்பந்தர் பார்வையில் படுகின்றபோது திருநுதலைக் காண்கிறார். பிறை போன்ற நெற்றி என அதன் அழகை வியந்து பாடியுள்ளார். திருகோணமலையிலே இறைவனோடு இணைந்திருக்கும் இறைவியின் கோல அழகு எல்லோரும் பார்த்துப் பரவசப் படவேண்டியது என்பதையும் சம்பந்தர் பாடலடிகள் விளக்கி நிற்கின்றன.

கோயிலின் கடற்கரைச் சூழல் சம்பந்தர் பார்வையில் புதிய அழகுடன் தோன்றுகிறது. கடலோசை காதிலே வந்து விழுகின்றபோது கதறும் ஒலியாகக் கேட்கிறது. "கொடிதெனக் கதறும் குரைகடல்" என அந்த ஓசையைச் சம்பந்தர் பாடலிலே குறிப்பிட்டுள்ளார். "குரை" என்ற சொல் தொடர்ந்து ஒலித்தல் எனப் பொருள் தருவது. "கதறுதல்" என்பது பேரொலி செய்வது. கோணமலைக் கடலின் தொடர்ந்த பேரொலி எல்லோரையும் கவர்வது. முத்துக்களைச் சுமந்துவரும் அலைகளையும் எமக்குக் காட்டுகிறார். செல்வவளம் மிக்க இக்கடற்கரைப் பிரதேசத்தில் குடிமனை மிகவும் நெருக்கமாக அமைந்திருக்கிறது. இறைவனுடைய திருக்கோயில் அருகில் வதியும் பேறுபெற்ற மக்கள் அவர்கள் என சம்பந்தர் அவர்களை எமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார்.

"கடிதென வந்த கரிதன யுரித்து அவ்வுரி மேனிமேற்போர்ப்பர்

பிடியன நடையாள் பெய்வளை மடந்தை பிறைநுதல் அவளொடும் உடனாய்க்

கொடிதெனக் கதறும் குரை கடல் சூழ்ந்து கொள்ள முன் நித்தலம் சுமந்து

குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை அமர்ந்தாரே"

## பனித்திளம் திங்கள் பைந்தலை நாகம் படர்சடை

பக்தி வசப்பட்டோர் இறைவனது தோற்றத்தைப் புறக்கண்களாலே காண்பதற்குப் பெரிதும் விரும்புவர். நாயன்மார்களுடைய பாடல்களில் இறைவன் திருக்கோலம் சிறப்பாகச் சொற்சித்திரங்களாக வரையப்பட்டுள்ளது. இளம் வயதினராய சம்பந்தருடைய பாடல்களில் இறைவனின் கோலமும், அருட்செயல்களும் விரிவாகப் பாடப்பட்டுள்ளன. அவற்றைப் படிக்கும்போது மனக்கண்களிலே அகக்காட்சிகளை காண முடியும். திருக்கோயிலை வழிபடச் செல்வோர் உள்ளத்திலே பரவசம் ஏற்படும் வகையில் சம்பந்தர் குறிப்புக்களைத் தந்துள்ளார். அவரது இறையனுபவமும், மெய்யுணர்வும் சொற்களிலே நன்கு வெளிப்பட்டுள்ளன. சொற்கள் காட்டும் காட்சி ஒரு நேரடி அனுபவம்போல அமைந்துள்ளது. இறைவனைச் சம்பந்தர் தனது கண்களால் நேரே பார்த்துப் பரவசமாகியதை சொற்களால் வெளிப்படுத்தியுள்ளார். ஒருவர் தமது கண்களால் கண்ட அருட்காட்சியைப் பிறருக்கும் காட்ட வேண்டும் என எண்ணினால் அதைக் கண்டவாறே பக்தி அனுபவத்துடன், எடுத்துரைக்க வேண்டும். அந்த உரை கேட்பவரையும் அந்த காட்சி அனுபவத்தைப் பெறவைக்கும். இப்பண்பு சம்பந்தர் பாடல்களிலே பரவலாக உள்ளது.

இறைவனது திருமுடியின் தோற்றம் அவர் பாடலில் வெளிப்படுத்தப்படும் பாங்கு மிகச் சிறப்பானது. தலையிலே சூடியுள்ள திங்களையும், நாகத்தையும்பற்றிக் குறிப்பிடும்போது அவற்றை நேரில் கண்டவாறு கூறுகிறார். சம்பந்தரது பக்தி அனுபவம் அத்தகையது. தலையிலே சூடியுள்ள திங்களின் தோற்றத்தைப் பனித்திளம் திங்கள் என்று குறிப்பிடுகிறார். குளிர்மையான இளம் பிறையை நாம் பல முறை கண்டிருக்கிறோம். ஆனால், அது இயற்கையான காட்சியாகவே எமது கண்களில் தெரிகிறது. சம்பந்தர் காட்டும் காட்சி தெய்விகமானது. இறைவன் திருமுடியைக்காணும் பக்தி பரவசத்தைத் தருவது. பைந்தலை நாகத்தைப் படர்சடையிலே வைத்திருக்கும் காட்சி நாம் நேரடியாகக் காணமுடியாது. ஆனால் சம்பந்தரது சொற்சித்திரத்தில் அக்காட்சியை நேரே காணமுடியும். இறைவியின் தோற்றத்தையும் மிக அண்மையான கோலத்திலே காட்டியுள்ளார். கனிந்த இளமையான பவளம் போலச் சிவந்த வாயினையுடைய காரிகையாகக் காண வைக்கிறார். இந்த வர்ணனை சம்பந்தரது இளமை நிலையின் வெளிப்பாடு போல தோன்றினும் குழந்தை ஒன்று தான் கண்டகாட்சியை அவ்வாறே கூறுவதுபோல அமைந்துள்ளது. அர்த்தநாரீஸ்வர வடிவில் இறைவன் காட்சியாக இருப்பதைச் சம்பந்தர் காட்டியுள்ளார்.

திரிபுரம் எரித்த அற்புதம் பற்றிய குறிப்பையும் பாடலில் இணைத்துள்ளார். இறைவன் பேராற்றல் எவராலும் உணரப்பட வேண்டியது. புராண, இதிகாசங்களிலே கூறப்பட்ட இறைவனுடைய அற்புதங்களை தமது காலத்து மக்களும் அறிய வேண்டும் என்ற நோக்குடனேயே சம்பந்தர் இவ் அற்புதச் செய்திகளை பாடலிலே இணைத்துள்ளார். பேராற்றல் படைத்த இறைவன் திருக்கோலத்தை ஒலிக்கின்ற கடற்கரையிலே அமைந்துள்ள திருக்கோணேஸ்வரத் தலத்திலே கண்டு வழிபடலாம். பக்தி வயப்பட்ட காட்சிகளை அங்கு காணலாம் என சம்பந்தர் பாடலால் அறிவுறுத்துகிறார்.

"பனித்திளம் திங்கள் பைந்தலை நாகம் படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளம் துவர்வாய்க் காரிகை பாக மாகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித்தழல் நாகம் தாங்கிய மேருவெஞ்சிலையாக
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த கோணமாலை யமர்ந்தாரே".

## பழித்திளங் கங்கை சடையிடை வைத்து

வாழ்க்கையில் எதிர்கொள்ளும் துன்பங்களைத் தீர்ப்பதற்கு வழிபாடே என்றும் உதவியாக இருக்கும். சைவ நாயன்மார்கள் பாடல்கள் இக் கருத்தையே பெரிதும் வலியுறுத்துகின்றன. துன்பம் இவ்வுலகத்தவர்களுக்கு மட்டுமன்றித் தேவ உலகத்தவர்க்கும் நேரிடும். அவ்வேளையில் தேவர்களும் துன்பத்திலிருந்து விடுபட முழுமுதற் கடவுளான சிவனையே வழிபடுவர். இதனைச் சம்பந்தர் தனது பாடலிலே விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். முன்னொரு காலத்தில் மன்மதன் சிவன் பார்வையால் எரிய நேர்ந்தது. அதனைப் பொறுக்க முடியாத மன்மதனின் மனைவியாகிய ரதி; சிவனை வேண்டி மீண்டும் மன்மதன் சுயரூபம் பெறச் செய்தாள். ஒருவர் தனக்காக அன்றிப் பிறருக்காக வேண்டுதல் செய்யும் போது இறைவன் அதனை உடனடியாக நிறைவேற்றுவான என்ற கருத்தும் இப்பாடல் மூலமாகப் பெறப்படுகிறது.

இப்பாடலில் இறைவனுடைய திருப்பாதம் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. 'விமலனார் கமலனார் பாதர்' என்ற தொடர் மலமற்றவரான சிவனின் திருப்பாதம் பற்றிக் குறிப்பிடுகிறது. தாமரை மலர்போன்ற செம்மையான திருப்பாதங்களை எம் கண்முன்னே காட்டுகிறது. மலர் போன்ற தோற்றம் மட்டுமன்றி நறுமணமும், அதனால் ஏற்படும் பரவசநிலையும், பாடலால் பெறப்படும் பக்திநிலையான அனுபவமாகும். இறைவன் தோற்றத்தை முழுமையாகக் காணும் அனுபவம் பாடலைப் படிக்கும்போது கிடைக்கிறது.

திருகோணேஸ்வரத் திருத்தலம் அமைந்திருக்கும் கடற்கரைச் சூழல்பற்றிப் பாடலின் பின்னைய அடிகள் குறிப்பிடுகின்றன. 'தெழித்து முன் அரற்றும் செழுங்கடல்' எனக் கடல்பற்றிய குறிப்பு அமைந்துள்ளது. இங்கு கடலில் ஒலிப்பை 'அரற்றும்' என்னும் சொல்லால் வேறுபடுத்திக் காட்டுகிறார். 'அரற்றுதல்' என்பது மெல்லிய ஓசையைக் குறிக்கும் சொல்லாகும். நீர் நிறைந்த ஆழமான கடல் என்பதால், ஓசை மெல்லியதாக உள்ளது. இத்தகைய கடலில் விளையும் தரளம், செம்பொன், இப்பிஎன்பவற்றை ஏற்றவாறு திரைகள் கரைக்கு கொணர்ந்து சேர்க்கின்றன. கடல் விளைபொருட்கள் ஒரு பிரதேசத்தின் செல்வச் செழிப்புக்கு காரணமாயமையும். மேற்குறிப்பிட்ட விளைபொருட்கள் வணிக நிலையில் மிகவும் முக்கியமானவை யாகும். இலங்கைத் தீவின் வணிகச் சிறப்பையும் இத் தொடர் விளக்கி நிற்கிறது. கடற்றிரைகள் இவ்விளைபொருட் களைக் கரையில் கொணர்ந்து சேர்க்கின்றன. அப்பொருட்களின் பெருக்கம் அங்கு வாழும் மக்களின் செல்வச் செழிப்புக்குக் காரணமாவதையே சம்பந்தர் பாடலடிகள் சுட்டி நிற்கின்றன. திருக்கோயிலின் அமைவிடம் செல்வம் கொழிக்கும் பிரதேசம் என்பதை எல்லோரும் அறியக் கூறுகிறார்.

திருகோணமலைத் திருத்தலத்தின் அமைவிடத்தைப் பற்றிய சம்பந்தரது குறிப்புக்கள் மிகவும் முக்கியமானவை. குன்றிலே அமைந்திருக்கும் திருக்கோயிலின் புறச்சூழல் கடற்கரைப் பிரதேசமாக அமைந்திருப்பது தனிச்சிறப்பாக உள்ளது. மலையிலே அமைந்திருக்கும் கோயில் கடலாற் சூழப்பட்டுள்ளது. கடற்கரையின் அழகு நிறைந்த தோற்றத்தைப் பாடவேண்டும் என்ற எண்ணம் சம்பந்தருக்கு ஏற்படக் காரணம் அவர் பாடிய ஏனைய தலங்களைவிடக் கோணேஸ்வரத்தின் அமைவிடம் தனித்துவமாக இருந்தமையே எனலாம்.

"பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப் பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றும் செழுங்கடற் றரளம் செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையி டைச் சேர்க்கும் கோணமா மலைஅமர்ந் தாரே."

## தாயினும் நல்ல தலைவர் என்று அடியார்

நாம் வணங்கும் தெய்வத்தின் சிறப்புக்களைத் தேவாரப் பாடல்கள் மிகச் சிறப்பாக எடுத்துக்கூறுகின்றன. பாடல்களைப் பாடிய நாயன்மார் தமது இறையனுபவத்தைப் பக்திப் பரவசத்தோடு பாடியுள்ளனர். வழிபாடு என்பது ஒரு செயற்பாடாக இருந்தபோதும் அது மனத்தை ஒரு நிலைப்படுத்த வல்லது. வழிபடுவதற்கு எமக்கு ஒரு தோற்றம் அல்லது உருவம் தேவை. ஐம்புலன்களால் அலைபாயும் மனத்தை ஓரிடத்திலே குவியச் செய்வதற்கு இறைவழிபாடு ஆற்றுப்படுத்துகிறது. திருக்கோயில் களிலே எழுந்தருளியிருக்கும் இறைவனுடைய கோலத்தையும் குணத்தையும், விளக்கும் தேவாரப் பாடல்கள் எமது பக்தியனுபவத்தை வளர்ப்பவை. பாடல்களிலே கூறப்பட்ட விடயங்கள் எம்மனதை நிறைவுசெய்யும் தன்மையன.

இந்தவகையில் சம்பந்தரது பாடலொன்றில் இறைவனைப் பற்றிக் கூறும் விடயங்கள் தனித்துவமானவை. இறைவனை நன்குணர்ந்த அடியார்கள் அவனைத் தாயினும் நல்ல தலைவரெனப் புகழ்கின்றனர். உலகத்து உறவு நிலைகளில் தாய் என்னும் உறவே தலை சிறந்ததாகும். ஆனால் இறைவனோடு நாம் கொள்ளும் தொடர்பானது இதைவிட மேலானது. இறைவன் தன் அடியார்களின் வாயிலும், மனத்திலும் மருவி என்றும் அகலாதிருப்பவர். தாய் தனது குழந்தை வளர்ந்து பெரியவனாகும் வரையிற்றான் நெருங்கியிருப்பாள். ஆனால் இறைவனோ எமது வாழ்நாள் முழுமையும் எம்மோடிருப்பான். அவன் எம்மை விட்டு அகலாமல் நெருங்கியிருப்பதை நாம் ஒரு போதும் உணர்வதில்லை. அதனால் இறைவனைப் பற்றியே எப்போதும் மெய்யடியார்கள் பேசிக் கொண்டிருப்பர்.

நோயுற்ற நிலையில் இருப்போரையும், பிணியின் வயப்பட்டோரையும் பாதுகாக்கும் இறையருளை எல்லோரும் உணர்வதில்லை. நோய் என்பது உடலை வருத்தும் துன்பமாகும். அது மருந்தினால் குணப்படுத்தக்கூடியது. பிணி என்பது இறக்கும் வரை ஒருவருடைய உடலைப் பிணித்திருக்கும் துன்பமாகும். அதனை மருந்தினால் குணமாக்குவது கடினம். ஆனால், இறையருளால் பிணி நீங்கிவிடும். தன்னுடைய அடியவர்களின் உடல் துன்பங்களையும், உள்ளத்து அல்லல்களையும் இறைவன் நீக்கி விடுவான். மேலும் மக்களுக்கு நுட்பமான நூலறிவைத் தருபவரும் அவரே. கோணமாமலையிலே எழுந்தருளியிருக்கும் இறைவனைச் சம்பந்தர் காண்பல வேடர் எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். பல்வேறு வேடங்களிலே அடியவர்களுக்குக் காட்சிதரும் தன்மை இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய அருட்சிறப்புடைய இறைவன் எழுந் தருளியிருக்கும் திருகோணமலைத் திருத்தலம் இந்த உலகத்தி லேயே மிக அழகான தலமாக விளங்குவதையும் சம்பந்தர் பாடல் எடுத்துக்காட்டுகிறது. கோயில், சுனை, கடல் என்ற மூன்றும் ஒன்றாய் இணைந்திருப்பதுவே இச் சிறப்பாகும். மலையிலே இருந்து ஒழுகும் நீர்சுனை கோயிலின் தீர்த்தமாக விளங்குகிறது. அதன் பெயர் தற்போது பாவநாசம் என வழங்கப்படுகிறது. கடல் நீரால் சூழப்பட்டிருக்கும் கோயிலில் மலைச்சுனை தனித்துவமாக இருப்பதைக் காணமுடிகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று அம்சங்களும் சிறப்பாக அமைந்திருப்பதைச் சம்பந்தர் பாடல் பதிவு செய்துள்ளது. அவரது காலத்திற் கோயிலின் பெருமை கடல் கடந்து அறியப்பட்டுள்ளது.

"தாயினும் நல்ல தலைவர்என்று அடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினுத் மனந்தும் மருவிநின்று அகலா மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமா மலைஅமர்ந் தாரே"

## வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

### பரிந்து நன் மனத்தால் வழிபடும் மாணி

மரண பயம் எல்லோருக்கும் உண்டு. உலகத்திலே பிறப்பது எல்லாம் இறப்பது உறுதி. எனினும் வாழ்நாளின் முடிவை எண்ணிப் பயப்படுவது பொதுவான இயல்பாக உள்ளது. இறைவழிபாடுதான் மரண பயத்தைப் போக்கவல்லது. இறைவனுடைய பாதங்களைச் சேர்வதே மனிதனுடைய வாழ்நாளின் இலக்காக இருக்க வேண்டுமெனச் சைவ நாயன்மார்கள் தமது தேவாரப் பாடல்களிலே வலியுறுத்தியுள்ளனர். சம்பந்தர் இக்கருத்தினை மார்க்கண்டேயருடைய வரலாற்றின் மூலம் ஒரு பாடலிலே எடுத்துக்காட்டியுள்ளார். சிவனையே எந்நேரமும் வழிபடும் மெய்யடியாரான மார்க்கண்டேயருக்கு வாழ்நாட் காலம் பதினாறு வயதாக இருந்தது. எனவே, பதினாறு வயதின் நிறைவில் கூற்றுவன் அவர் உயிரைக் கவரச் சென்றான். அவ்வேளையிலே மார்க்கண்டேயர் சிவபூசையிலே ஈடுபட்டிருந்தார். கூற்றுவன் அவருடைய சிவபூசையைக் கருத்திற் கொள்ளவில்லை. தன்னுடைய உயிர் கவரும் கடமையை நிறைவேற்றுவதிலேயே கருத்தாக இருந்தான்.

சிவவழிபாடு செய்கின்ற மார்க்கண்டேயரைப் பாசக் கயிற்றால் பிணித்தான். சூலத்தினாலே குத்தி அவர் உயிரைக் கவர முயன்ற வேளையில் மார்க்கண்டேயர் தாம் பூசை செய்த சிவலிங்கத்தை இறுகத் தழுவிக் கொண்டார். சிவன் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டுத் தமது காலினால் உதைத்து யமனைத் தடுத்தார். கூற்றுவனும் சிவனை வணங்கி மார்க்கண்டேயரை விட்டுச் சென்றான். இந் நிகழ்வு இறைவன் தன்னை முழுமையாக நம்பியவரை ஒருபோதும் கைவிடமாட்டான் என்பதை நன்கு உணர்த்திற்று. இப்பண்பினைச் சம்பந்தர் பாடலிலே சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். எல்லோருக்குமே அருள் செய்கின்ற செம்மையான குணமுடைய இறைவனை நம்மையாளுடையார் எனக் குறிப்பிடுகின்றார். அவருடைய அருள் எமக்கு என்றும் உண்டு என்ற எண்ணம் கோயில் வழிபாட்டால் ஏற்படும்.

திருகோணமலைத் தலத்தின் தனிச்சிறப்புக்கு இயற்கைச் சூழல் காரணமாவதை பாடலில் இரு அடிகளிலே சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். கோயிலைச் சூழ உள்ள பூஞ்சோலை பற்றிய விரிவான செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பல்வேறு விதமான மலர்ச்செடிகள் அங்கு விரவிக் கிடக்கின்றன. மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, வண்செருந்தி, செண்பகம், குருந்து, முல்லை போன்ற பல பூக்களின் பெயர்கள் பாடலில் கூறப்பட்டுள்ளன. செடிகளும் கொடிகளும் மரங்களும் நெருங்கியிருக்கின்றன. கோயிற் சூழலில் மலர்த்தோட்டம் இன்றியமையாதது. அர்ச்சனைக்கு வேண்டிய மலர்களை அங்கிருந்தே பெறலாம். இயற்கைவளமான மலைத்தாவரங்களும், கடற்றாவரங்களும் ஒரு சேர இருப்பது கோயிற் சூழலுக்குத் தனித்துவத்தைக் கொடுக்கிறது. பல்வேறு வண்ணமலர்கள் இணைந்திருப்பது சூழலுக்குப் புதிய அழகைத் தருகிறது. அக்காலத்திலே பயன்படுத்தப்பட்ட மலர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் பாடல் உதவி செய்கிறது. இக்காலத்தில் மலர்ப் பண்பாடு சிதைவுற்று வருகிறது. இயற்கையான மணமுள்ள மலர்களைக் கைவிட்டுச் செயற்கையான மலர்களைப் பயன்படுத்தும் பண்பாடு முனைப்புப் பெற்று வருகிறது. எனவே சம்பந்தருடைய மலர்கள் பற்றிய அடிகள் பண்டைய பண்பாட்டுப் பதிவாகவும் அமைந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

"பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல் வரும் கூற்றை
திரிந்திடா வண்ணம் உதைத்து அவற்கு அருளும்
செம்மையார் நம்மை ஆளுடையார்
விரிந்தயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை
வண்செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே"

## விருதுகுன்றமா மேருவில் நாணரவா

ஈழ நாட்டில் உள்ள சிறப்பான திருத்தலங்களில் திருக் கேதீஸ்வரமும் மிகச் சிறப்பானது. இத்தலச் சிறப்பைத் திருஞான சம்பந்தரும், சுந்தரமூர்த்தியும் பாடியுள்ளனர். இப் பாடல்கள் திருக்கேதீஸ்வரத்தலத்தின் அக்காலத்துச் சிறப்பான நிலையை விளக்கியுள்ளன. அவற்றை இன்று படிக்கும்போது பக்தி உணர்வு மேலோங்கி இருப்பதைக் காணலாம். அவ்வுணர்வு தமிழ் மொழியாற்றலால் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கோயிலில் வீற்றிருக்கும் அருட்செயல்கள் பாடல்களிலே குறிப்பிடப்படுவதன்மூலம் திருத்தலச் சிறப்பு விளக்கப் பட்டுள்ளது. தலத்திலே அருள் நிறைந்திருப்பது அங்குள்ள இறைவனின் கருணையாலாகும். இறைவன் முப்புரங்களையும் எரித்தமை பற்றிய செய்தி பாடலில் இணைந்துள்ளது. சம்பந்தருடைய செந்தமிழ் புலமையால் இச் செய்தி சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாமேரு மலையை வில்லாகவும் அரவை நாணாகவும் கொண்டு, தீயை அம்பாக்கித் திரிபுரங்களை எரித்த செயல் பற்றியே சம்பந்தர் வியந்து பாடியுள்ளார். "அனல் எரி அம்பாக" என்ற தொடர் அவருடைய செந்தமிழ் புலமைக்கு எடுதுதுக்காட்டாக உள்ளது. "அனல்" என்ற சொல் நெருப்பின் ஆகக்கூடிய வெம்மையைச் சுட்டி நிற்பது. "எரி" என்ற சொல் நெருப்பின் தொடக்க நிலையை சுட்டி நிற்பது. காரைக்கால் அம்மையார் சிவன் கைகளிலே "அழல்" ஏந்தி ஆடுவதாகக் குறிப்பிட்டுள்ளார். "அழல்" என்பது நெருப்பின் வண்ணத்தைக் குறிப்பதாகும். இங்கு சம்பந்தருடைய பாடல் அடியில் சிவனின் சீற்றம் புலப்படுகிறது. அனல்போல வெம்மையான நிலையில் உக்கிரமாக நடைபெற்ற போரிலே சிவனுடைய அம்புகளும் வெம்மையாகச் சென்று விரைவாகத் திரிபுரத்தை எரித்து விடுகின்றன. முப்புரங்களையும் அழிக்கும் ஆற்றல் கொண்ட அம்புகளாக நெருப்புப் பயன்பட்டதைச் சம்பந்தர் காட்சிப்படுத்தி யுள்ளார்.

புராணக் கதைகளிலே கூறப்பட்ட விடயங்களை அடியார்கள் மனக்கண்களால் காண்பதற்கு ஏற்ற சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்துவதில் சம்பந்தர் தனித்துவ மான திறமை பெற்றவராய் உள்ளார். இத்தகைய ஆற்றல் படைத்த இறைவன் "பற்றி நின்றுறை பதி' என; திருக்கேதீஸ்வர திருத் தலத்தைக் குறிப்பிட்டுள்ளார். மிக விருப்பத்தோடு இத்தலத்திலே எந்நாளும் இறைவன் இங்கு எழுந்தருளி யிருக்கின்றான்.

"பதி" என்ற சொல் சிறந்த இருப்பிடம் எனப் பொருள் தரும். அத்தகைய திருக்கேதீஸ்வரத்தின் புறச் சூழலைப் பற்றிப் பாடும்போது ஒரு சிறப்பான தொடர் சம்பந்தருடைய உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்திக் காட்டி நிற்கிறது. "எந்நாளும் கருதுகின்ற ஊர்" என்ற தொடர் சம்பந்தர் ஒவ்வொரு நாளும் இத்தலத்தைப் பற்றி நினைத்திருப்பதைக் காட்டுகிறது. ஒலிக்கின்ற கடற்கரையிலே நிறைந்த மணமுள்ள பூஞ்சோலைகள் சூழ்ந்த மாதோட்டம் என்னும் நகரிலே இத்தலம் அமைந்துள்ளது. இத் தலத்திற்குச் சென்று வழிபடுவதால் ஏற்படும் பயனையும் சம்பந்தர் பாடலிலே கூறியுள்ளார். இத்தலத்திலே வீற்றிருக்கும் இறை வனிடம் சென்று அடைக்கலம் எனத் தொழுதால் எம்மைப் பற்றித் தொடருகின்ற கொடிய வினைகள் எல்லாம் எம்மைவிட்டு உடனடி யாக அகன்றுவிடும். அது மட்டுமன்றி மேலும் கொடிய வினைகள் எம்மை வந்து பற்றிக்கொள்ளவும் மாட்டா. "கைதொழக் கடு வினையடையாவே" என்ற தொடர் இக்கருத்தை நன்கு வலியுறுத்தி நிற்கின்றது.

"விருதுகுன்றுமா மேருவில் நாணரவா அனல் எரியம்பாகப்
பொருதுமூவெயில் செற்றவன் பற்றி நின்று உறைபதி எந்நாளும்
கருது கின்ற ஊர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை அடையாவே"

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## பாடல் வீணையர் பலபல சரிதையர்

மனிதன் தான் வழிபடுவதற்கென வழிபாட்டுத் தலங்களை ஒரு குறிப்பிட்ட இடத்திலே அமைத்தபோது அவை திருக்கோயில் களெனச் சிறப்பான பெயரால் அழைக்கப்பட்டன. மன்னனுடைய ஆட்சிக் காலத்திலே அவர்கள் தங்குமிடங்கள் கோயில்கள் என அழைக்கப்பட்டதால் இறை உருவங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்ட இடங்கள் திருக்கோயில்கள் எனத் தனித்துவமான சிறப்புப் பெயரைப் பெற்றன. தேவாரப் பாடல்கள் திருக்கோயில்களின் வரலாற்றைப் பதிவுசெய்த ஆவணங்களாக இன்று விளங்குகின்றன. நாயன்மார்கள் தாம் வாழ்ந்த காலத்தில் வழிபட்ட தலங்களைப் பற்றிப் பாடல்கள் பாடியமைக்கு இம்முயற்சியும் ஒரு காரணமாகலாம்.

இலங்கையில் மாதோட்டம் என்னும் பதியில் அமைந்திருந்த திருக்கேதீஸ்வரம்; நாயன்மார் காலத்தில் நன்கு அறியப்பட்ட வழிபாட்டுத் திருத்தலமாக இருந்துள்ளது. கோயிலின் சிறப்புத் தமிழகத்தில் பரவியிருந்திருக்க வேண்டும். அங்கு நடைபெற்ற வழிபாட்டு நடைமுறைகள் பாடல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. இசையும் நடனமும் நிவேதனம் செய்யப்பட்டுள்ளன. பாடல் வீணையர் பலபல சரிதையர் என்ற தொடர் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற இரு செயற்பாடுகளைக் குறிப்பிடுகிறது. இசை இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படுகிறது. வீணை என்னும் இசைக் கருவியின் பயன்பாடு சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வீணை இலங்கையை ஆண்ட இராவணனுடைய கொடியாகவும் இருந்ததைப் புராண வரலாறு கூறுகிறது. சம்பந்தர் பாடல்களைப் பாடும்போது யாழ் இசைக் கருவியாகப் பயன்பட்டதையும் அறியமுடிகிறது. ஆனால், இலங்கையில் வீணை என்னும் இசைக்கருவி வழிபாட்டுத் தலத்திலே பயன்படுத்தப்பட்டதைச் சம்பந்தர் பாடலிலே பதிவு செய்துள்ளார். மணிவாசகருடைய பாடலிலும் வழிபாட்டுத் தலத்திலே வீணை இசைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டமைக்குச் சான்று உண்டு.

இன்னும் ஒரு புதிய செயற்பாடும் திருக்கேதீஸ்வரத்திலே நடைமுறையில் இருந்ததைச் சம்பந்தர் பாடல் குறிப்பிடுகின்றது. பலபல சரிதையர் என்ற தொடரால் திருக்கோயிலிலே புராண, இதிகாசக் கதைகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் செயற்பாடு நடைபெற்றதை அறியமுடிகிறது. இதுவே பிற்காலத்தில் பிரசங்கம் என அழைக்கப்பட்டுள்ளது. நாவலர் கிறிஸ்தவ சமயம் செல்வாக்குச் செலுத்தியபோது, இப்பிரசங்கமரபை மீண்டும் புத்துயிர் பெறச் செய்தார். சம்பந்தர் திருக்கேதீஸ்வரத்தலத்தைப் பற்றிப் பாடிய காலத்தில் பிறசமயச் செல்வாக்குப் பெரிதும் இருந்துள்ளது. அதனால் இலங்கையிலும் சைவசமயத்தின் எழுச்சிக்கான செயற்பாடுகள் நடந்துள்ளன. மக்களின் மனதிலே இறைவன் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தப் புராண, இதிகாசக் கதைகளை மக்களுக்குக் கூறவேண்டியிருந்தது. இயற்கையாக எழில் ஆழ்ந்த மாதோட்ட நன்னகரிலே அமைந்திருந்த திருக்கேதீஸ்வரத் தலம் மக்கள் எல்லோரும் வழிபடச் செல்லும் சிறப்புப்பெற்ற தலமாக இருந்துள்ளது. அதனை இன்றும் பாடல்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

"பாடல் வீணையர் பலபல சரிதையர் எருதுகைத்து அருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்சு உண்டுஇருள் கண்டத்தர்
ஈட மாவது இருட்கடற் கரையினில் எழில் திகழ் மாதோட்டம்
கேடிலாதகே தீச்சரம் கைதொழக் கெடுமிடர் வினைதானே"

## பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர்

திருக்கோயில்களில் திருக்கேதீஸ்வரம் கேடிலாத கேதீஸ்வரம் எனச் சம்பந்தப் பெருமானால் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள இறைவனின் தோற்றம் அற்புதமானது. அவரைப் பற்றி நன்கு அறியாத அடியவருக்குச் சம்பந்தர் அறிமுகம் செய்து வைப்பதாக ஒருபாடல் அமைந்துள்ளது. முதலாவதாக: இறைவன் பெண்ணொரு பாகனாக இருப்பதைக் காட்டுகிறார். உமையம்மையோடு சேர்ந்த அர்த்தநாரீஸ்வர வடிவத்தை வேறு கடவுளர்களிலே காணமுடியாது. பாதி ஆணாகவும் பாதி பெண்ணாகவும், அமைந்த வடிவமே அர்த்தநாரீஸ்வர வடிவம் எனப்படும். இதேவடிவம் சங்கர நாராயண மூர்த்தத்திலும் உள்ளது. ஆனால் அவ்வடிவத்தில் சிவன் பாதியாகவும், மகாவிஷ்ணு பாதியாகவும் அமைந்துள்ளனர்.

எனவே, சிறப்பாகப் பெண்ணை ஒரு பாகத்திலே கொண்டமைந்த தோற்றம் வியப்பானதாக உள்ளது. துண்டப் பிறை தவழ்கின்ற செஞ்சடை கொண்ட தோற்றம் புதிய அழகைத் தருகிறது. சிலம்புகள் ஒலிசெய்ய வெண்ணிறச் சுண்ணமணிந்து சிவன் ஆடுகின்ற கோலம் மெய்மறந்து பார்க்கத் தூண்டுகிறது. அவருடைய திருநடனத்திற்கு ஏற்பப் பாடலும் இணைந்துள்ளது. இறைவனே இசையாய் இருக்கும் கோலம் பக்தியுணர்வைத் தூண்டி மெய்சிலிர்க்க வைக்கும் தன்மையது. சிவனுடைய பிறிதொரு குணவியல்பையும் சம்பந்தர் பாடலிலே சுட்டியுள்ளார். வீடுகள் தோறும் சென்று பலியேற்கும் தொழிலில் இறைவன் மிக்க இச்சையுடையவர். பிச்சாடன மூர்த்தியாகச் சிவன் பிச்சையேற்கும் வழிபாட்டு நடைமுறை இன்றும் உள்ளது. இத்தகைய பெருமை பெற்ற அண்ணல் எழுந்தருளியிருக்கின்ற கேதீஸ்வரத்தை வழிபட்டால் எல்லாப் பொல்லா வினைகளும் மாய்ந்துபோகும்.

மாதோட்டம் ஏனைய இடங்களைவிடப் பெருமைபெற்ற இடமாக உயர்தரு மாதோட்டம் என அழைக்கப்பட்டுள்ளது. கோயில் அமைந்திருப்பதால் ஊர் சிறப்புப் பெற்றுள்ளது. திருக்கேதீஸ்வரம் சம்பந்தர் பாடல்களிலே விதந்து பேசப்படுகிறது. மக்கள் இத்திருக்கோயில் பற்றி அறிந்து அங்கு சென்று வழிபாடு செய்யவேண்டும். அதற்காக அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் அருட்கோலத்தையும் அருட்குணங்களையும் சம்பந்தர் விளக்கமாகப் படம்பிடித்துக் காட்டுவதுபோலப் பாடல்களைப் பாடியுள்ளார். சம்பந்தர் பக்தி அனுபவம் ஏனைய நாயன்மார்களது அனுபவத்தைவிட வேறுபட்டது. மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோதே இறைவனையும் இறைவியையும் நேரில் தரிசிக்கும் பேறு பெற்றவர். அதனால் இறைவன் திருக்கோல அழகைத் தமது மனத்திலே நிலையாக நிறுத்திக் கொண்டவர்.

எந்தத் திருத்தலத்திற்குச் சென்றாலும் அங்குள்ள இறைவனின் திருக்கோல அழகிலே ஒன்றிவிடும் பண்புடையவர். அதனால், சம்பந்தருடைய திருத்தலங்கள் பற்றிய பதிகங்களிலே இறைவன் கோலச் சிறப்புப்பற்றிய குறிப்புகள் அதிகமாக இடம் பெற்றருக்கும். அருட்செயல்களோடு கூடிய தோற்றப் பொலிவு தனித்துவமாகக் கூறப்பட்டிருக்கும். இப்பாடலில் வருகின்ற சுண்ணமாதரித் தாடுவார் என்ற தொடர் சிவனுடைய திருநடனக் கோலத்தையும் வண்ணத்தையும் எம் கண்முன்னே கொணர்ந்து நிறுத்துகின்றது.

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர் அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித்து ஆடுவர் பாடுவர் அகம்தொறும் இடும் பிச்சைக்கு
உண்ண லாவதோர் இச்சையின் உழல்பவர் உயர்தரு மாதோட்டத்து
அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு அருவினை அடையாவே.

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

## பொடிகொள் மேனியர் புலி அதள் அரையினர்

நாள்தோறும் திருக்கோயில் வழிபாடு செய்வது நலம் தரும். எமது சைவ சமயம்; கோயில் வழிபாட்டு நடைமுறைகளை நெடுங்காலமாகப் பேணி வருவதற்கும் இதுவே காரணமாகும். சைவத் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ள தேவாரப் பாடல்கள் கோயிற் சிறப்புப் பற்றியே பாடியுள்ளன. கோயிலில் வழிபாடு செய்யும்போது, அங்கே எழுந்தருளியுள்ள இறைவனுடைய கோலத்தைப் பார்த்து பக்திப் பரவசப் படுதல் இயல்பாகும். திருக்கேதீஸ்வரத்திலே அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இறைவனுடைய தோற்றத்தைச் சம்பந்தரது பாடல் அழகாகக் காட்டியுள்ளது. பொடிகொள் மேனியர் என இறைவனுடைய திருமேனியழகு கூறப்பட்டுள்ளது. வெண்மையான திருநீற்றுப் பொடியணிந்த மேனியழகே சம்பந்தருக்கு முதலில் தென்படுகிறது. 'சுடலைப் பொடி' பூசிய திருமேனியை மூன்றாம் வயதிலேயே சம்பந்தர் கண்ணாரக் கண்டு வியந்து பாடியவர். அதே திருக் கோலத்தினைத் திருக்கேதீஸ்வரத்திலும் காண்கிறார். அப்பரும் சிவனுடைய நீறணிந்த அழகுக் கோலத்தை 'பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்' என்று பாடியுள்ளார்.

அடுத்துச் சிவன் அரையிலே அணிந்திருக்கும் ஆடை பற்றிய குறிப்பு அமைந்துள்ளது. 'புலி அதள் அரையினர்' என்ற தொடர் அரையிலே புலித் தோலாடை அணிந்திருக்கும் தோற்றத்தைக் காட்டுகிறது. கரங்களிலே ஒரு கரத்தில் விரிந்த நிலையிலே மூவிலை வடிவுடைய வேலைத் தாங்கி நிற்கிறார். மேலும், திருமேனியில் முப்புரி நூலையும் அணிந்திருக்கின்றார். இத்தகைய திருக்கோலத்தைக் காணும்போது இறைவனின் எல்லையில்லா அழகு எல்லோர் மனதையும் கவரும். வழிபடச் செல்வோர் மனமும் உடலும் வழிபாட்டில் ஒன்றிணையும்.

இதனையும் சம்பந்தரது பாடல்கள் விளக்கியுள்ளன. பக்திக் கோலம் என்பது செயற்கையானது அல்ல. மனம் பொறிவழிகளிற் செல்லாது இறைசிந்தனையிலே ஒன்றி நிற்கும்போது இறைவனுடைய திருக்கோலம் ஒரு பரவச நிலையை ஏற்படுத்தும். மேலும், இறைவனையே எண்ணியவராய் தமது தலையை நிலத்திலே படும்படி வைத்து வணங்க வல்லவர்மேல் மொய்த்திருக்கும் வினைகள் எல்லாம் ஓடிப்போய்விடும். தலை நிலத்திலே படும்படி வணங்குவதற்கு இரண்டுவகையான வணக்க முறைகள் உள்ளன. ஒன்று ஆண்களுக்குரிய அட்டாங்க நமஸ்காரம். இதில் தலை உட்பட எட்டு அங்கங்கள் நிலத்திலே படும்படி வணங்கவேண்டும். மற்றது பெண்களுக்குரிய பஞ்சாங்க நமஸ்காரம். தலை உட்பட ஐந்து அங்கங்கள் நிலத்தில் படும்படி வணங்க வேண்டும். இவ்வணக்க முறைகள் தற்போது இளந் தலைமுறையினரால் செயற்படுத்தப்படுவதில்லை. தலையை நிலத்திலே படும்படி வைத்து வழிபடுவதற்கு கூச்சப்படுகின்றனர். ஒருவர் தன்னுடைய முடியைச் சாய்த்து வணங்க வல்லவராயின் வினையிலிருந்து விடுபடுவார் எனச் சம்பந்தர் கூறியுள்ளார். இறைவனுடைய திருவடியைப் பற்றியே எந்நேரமும் எண்ணி யிருப்பவர் பக்திவயப்பட்டவராவர். திருக்கேதீஸ்வரத்தில் வீற்றிருக்கும் இறைவனைப் பேணவேண்டும். இறைநம்பிக்கை யென்பது உள்ளத்திலே குடிகொள்ளவேண்டும். கடல் மறித்திருக்கும் மாதோட்டத்திலே அமைந்திருக்கும் திருக்கேதீஸ் வரத்தைச் சென்று எல்லோரும் வழிபட்டுப் பயன்பெற வேண்டும் என்பதே திருஞான சம்பந்தரது நோக்கமாக இருந்துள்ளது என்பதைப் பாடலும் நன்கு புலப்படுத்தி நிற்கிறது.

"பொடிகொள் மேனியர் புலிஅதள் அரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர் மறிகடல் மாதோட்டம்
அடிகள் ஆதரித் திருந்தகே தீஸ்வரம் பரிந்தசிந் தையராகி
மடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே'

## நல்லராற்றவும் ஞானம் நன்குடையர்

பக்திநிலையை அடைந்தவரை ஞானம் பெற்றவரென்று குறிப்பிடுவர். நூல்கள் பலவற்றைப் படிப்பதால் எம்முடைய அறிவு மேலும்மேலும் வளரும். அந்த அறிவுக்கும் ஞானத்திற்கும் வேறுபாடு உண்டு. ஞானமென்று கற்றபடி ஒழுகுவது. மிகவும் கடினமானது.

சம்பந்தர் வாழ்வியலில்தான் அறிந்த மெய்யறிவு வழிநின்று இறை நம்பிக்கையை இடைவிடாது பற்றியிருந்தவர். பல்வேறு துன்பங்களையும், இடர்களையும் எதிர்கொண்டபோதும் எல்லாவற்றையும் இறைநம்பிக்கையால் வென்றவர். எனவே, அவரது பாடல்களில் தளராத இறை நம்பிக்கை எப்போதும் இணைந்திருக்கும். புதிய திருத்தலங்களைப் பற்றிப் பாடுகின்ற போது இவ்வுணர்வைத் தம்மைப்போல எல்லோரும் பெற வேண்டும் என எண்ணியுள்ளார்.

ஞானநிலையை அடைந்தவர்க்கு இறையருள் மிகவும் எளிதாகக் கிட்டும். அவர்களுக்கு இறைவன் அருளை என்றும் கொடுப்பான். இறைவனது இன்னொரு குணஇயல்பையும் சம்பந்தர் பாடல் ஒன்றிலே விளக்கியுள்ளார். உலகத்திலே உள்ளவர் பிறப்பும் இறப்பும் உள்ளவர். ஆனால், இறைவனோ பிறப்பு இல்லாதவர். அநாதியானவர். உலக வாழ்க்கையில் உள்ள துன்பங்களெல்லாம் பிறப்பினாலும் இறப்பினாலும் ஏற்படு கின்றன. எனவே, அவற்றிலிருந்து விடுபட வேண்டுமாயின் இறை வழி பாட்டில் ஈடுபட வேண்டும்.

இறைவன் தன்னை நினைந்து வழிபடுவோருக்கு அருள் செய்வான். சம்பந்தர் போன்ற சைவநாயன்மார்கள் யாவரும் இறைவன் பற்றிய சிந்தனையை மக்கள் மனதிலே நிலைநிறுத்தத் தொண்டு புரிந்தவர்கள். கோயில்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று கோயில் வழிபாட்டின் நன்மையை மக்களுக்கு எடுத்துக்கூறியவர்கள். இசையோடு இணைந்த தேவாரப்பாடல் களை இயற்றிப் பாடி மக்களை இறை வழிபாட்டில் ஈடுபடச் செய்தவர்கள். மாதோட்ட நன்னகரிலே அமைந்திருந்த திருக் கேதீஸ்வரத் திருத்தலத்தின் மகிமையைச் சம்பந்தர் பாடியதனால் அத்தலத்தின் பெருமையை இன்றுவரை எல்லோரும் அறியக் கூடியதாக உள்ளது. சம்பந்தர் காலத்திற்கு முன்னரேயே இத்தலம் சிறந்த வழிபாட்டுத் தலமாக இருந்திருக்கவேண்டும்.

ஏனெனில், சம்பந்தருடைய பாடலில் வரும் 'எல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம்' என்ற தொடர் இதனை நன்கு விளக்கி நிற்கிறது. திருக்கேதீஸ்வரத்தின் பெருமை கடல் கடந்து பரவி இருந்ததையும் இத்தொடர் புலப்படுத்துகிறது. இத்தகைய புகழ்பெற்ற அருள் நிறைந்த திருத்தலத்தினை எவ்வாறு வழிபட வேண்டும் எனவும் சம்பந்தர் அடியார்களை ஆற்றுப்படுத்தி யுள்ளார். 'இராப்பகல் நினைந்தேத்தி அல்லல் ஆசறுத்து' என வரும் தொடரால் இது நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது. இரவும் பகலும் எந்நேரமும் திருக்கேதீச்சரத்தானை நினைந்து மனதார வழிபாடு செய்தால் எம்முடைய அல்லல்கள் எல்லாம் தீர்ந்து போய்விடும். இறைவனுடைய திருவடிகளைத் தொழும் செயற்பாடு தொடர்ந்து நடைபெறவேண்டும். இறைவன்மீது அன்பு பூண்டவர்க்கே இச் செயற்பாட்டைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் ஆற்றலும் கைகூடும். அவர்களே இறை அடியார்கள் என்னும் தகுதிப்பாட் டைப் பெறுவர். இடைவிடாது துன்பத்தை எதிர்கொள்ளும் மனித வாழ்வியலிற் கோவில் வழிபாடும் தொடர்ந்து செய்யப்பட வேண்டுமென்பதே சம்பந்தரது வழிகாட்டலாகும்.

நல்லராற்றவும் ஞானம்நன் குடையர்தம் மடைந்தவர்க் கருளீய
வல்லார் பார்மிசை வான்பிறப்பு இறப்புஇலர் மலிகடல் மாதோட்டத்து
எல்லையில்புகழ் எந்தைகே தீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத்து அரனடி இணைதொழும் அன்பராம் அடியாரே.

வலம்புரி - 25-06-10

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

# பேழைவார்சடைப் பெருந்திரு மகள்தனை

தமிழ்மொழியின் சிறப்பை அம்மொழியிலேயே தோன்றிய இலக்கியங்கள் நன்கு விளக்கி நிற்கின்றன. பக்தி இலக்கியங்கள் மொழியின் சிறப்பை மட்டுமன்றி மனத்தை பரவசப்படுத்தும் இசையுடனும் இணைந்திருக்கின்றன. இதனால் பக்தியின் மொழி தமிழ் என்ற சிறப்பையும், தமிழ்மொழி பெற்றுள்ளது. தேவாரப்பாடல்களில் இப்பண்பினை நன்கு காண முடிகிறது. மொழிவளத்தாற் செய்திகள் துலக்கமாகவுள்ளன. இறைவனுடைய தோற்றத்தைக் காட்சிப்படுத்திக் காட்டுவதில் தமிழ்ச்சொற்களும், சொற்றொடர்களும் சிறப்பாகப் பயன்படுத் தப்பட்டுள்ளன. குறிப்பாக, ஞானசம்பந்தரது பாடல்களில் செந் தமிழின் பயன்பாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. அதனால் சம்பந்தர் "நற்றமிழ் ஞானசம்பந்தர்" என்று அழைக்கப்பட்டார். ஞான சம்பந்தருடைய செந்தமிழ்ப் புலமை மூன்று திருமுறைப்பாடல் களிலும் விரிவாகவுள்ளது. பக்தியுணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டிச் சம்பந்தர் தென்னகத்திலுள்ள கோவில்களை எல்லாம் வலம் வந்து பல தேவாரப் பதிகங்களைப் பாடினார். திருத்தோணிபுரத்திலே மூன்றாம் வயதிலே தொடங்கிய அவரு டைய பாமாலை பாடும்பணி இலங்கையில் மாதோட்டத் திலமைந்துள்ள பழைய திருத்தலமான திருக்கேதீஸ்வரம் உட்பட நடைபெற்றுள்ளது. அவ்வாறு பாடும்போது கோயிலின் தனித் துவத்தைப் பாடுவதற்குப் பல உத்திகளைச் சம்பந்தர் கையாண் டுள்ளார். கோயிலின் இறைவன் தோற்றப்பொலிவு, அருட் செயல்கள், கோயிற் சூழலமைவு என்று மூன்று அம்சங்கள் அவருடைய பதிகத்திலே கட்டமைப்புச் செய்யப்பட்டிருக்கும்.

இறைவனுடைய தோற்றப் பொலிவிலே சிவனும் உமையும் ஒன்றாய் இணைந்திருக்கும் அற்புதமான திருக்கோலக் காட்சியைப் பெரும்பான்மையான பாடல்களிலே பரவசநிலையில் நின்று சம்பந்தர் பாடியுள்ளதைக் காணலாம். பெண்ணோடு பொருந்தியிருக்கும் சிவனின் கோலம் பல்வேறு வகையில் பாடப்பட்டுள்ளது. அக்கோலத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர் பயன்படுத்தும் தமிழ்மொழி நடை தனித்துவமானது. உமையைப்பற்றிக் குறிப்பிடும்போது "பேழைவார் சடைப் பெருந்திருமகள் "எனக் குறிப்பிட்டுள்ளார். உமையம்மையின் கூந்தல் பற்றிய தனது உணர்வினைப் பொருத்தமான சொற்களால் குறிப்பிட்டுள்ளார். அவருடைய பார்வையில் கூந்தல் மிக அழகாகத் தோன்றுகிறது. நீண்ட, சுருண்ட கருங்கூந்தல் அவருடைய மனத்திலே என்றும் நிறைந்திருப்பது; திருமுலைப் பாலூட்டிய போது கண்ட கூந்தல் அவர் மனத்திலே எல்லாத் தலங்களிலும் இருக்கின்ற இறைவியைக் காண்கின்றபோதெல்லாம் வெளிப்படும் தோற்றம். அதனையே திருக்கேதீஸ்வரத்தில் உறைகின்ற கௌரியம்மையின் தோற்றமாகக் காண்கிறார். பெருந்திருமகளாகக் கௌரியம்மை கேதீஸ்வரர் பாகத்திலே பொருந்தியிருக்கும் காட்சி உள்ளத்தைக் குளிரவைப்பது.

இதைவிடக் கோயிலின் வெளிப்புறச் சூழல் இயற்கை வளத்தைப் பறைசாற்றி நிற்கிறது. வாழைமரங்கள் நெருங்கி வளர்ந்திருக்கும் பொழில்களிலே மந்திரக் குரங்குகள் களிப்புடன் வாழ்கின்றன. அன்னையின் அருகாமையில் எவ்விதக் குறையு மின்றிப் பெண்குரங்குகளிருப்பதைப் பாடல் சுட்டிக்காட்டுகிறது.

"பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கையற் கண்ணிபா லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப்பணிந்தநீள் மார்பர்கே தீச்சரம் பிரியாரே"

## தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு முட்டாதிறைஞ்சேன்

நாம் இந்த உலகத்தில் ஏன் பிறந்தோம் என வருந்துகின்றவேளைகளும் உண்டு. அவ்வாறு மனம் சோரும்போது அந்த மனத்தை ஆறுதல்படுத்த வேண்டியுள்ளது. இறை வழிபாட்டிலே ஈடுபட்டுத் தமது வாழ்வில் அமைதி பெற்ற இறையடியார்கள் பலர். அவர்களில் மணிவாசகரது வாழ்க்கையனுபவம் எல்லோருக்கும் மன அமைதியைத் தர வல்லது. ஏனெனில் அவர் வாழ்க்கைய நன்கு அநுபவித்தவர். மந்திரியாக செல்வச் சிறப்போடு வாழ்ந்தவர். பின்னர் இறையருளை உணர்ந்தவர். அவ்வாறு உணர்ந்தபோது தன் மனநிலையைப் பலவாறு பாடல்களில் பதிவு செய்துள்ளார். தன்னுடைய வாழ்க்கையில் செய்யத் தவறியவற்றைப் பற்றி மீள எண்ணிப் பார்க்கிறார்.

கடந்த கால வாழ்க்கையை நோக்கும்போது இறைவனைப் பற்றிய சிந்தனை அற்றிருந்ததை எடுத்துரைக்கின்றார். நான் ஒருபோதும் தவசிகளைப்போலத்தவம் செய்ததில்லை. குளிர்மையான மலர்களைக் கொணர்ந்து இறைவன் திருவடிகளிலே சார்த்தி வணங்கவும் இல்லை. வீணாகப் பிறந்து இதுவரை வளர்ந்துள்ளேன். கொடிய செயற்பாடுகளே செய்து வந்துள்ளேன். அதனால், இறையடியான என்ற அன்புநிலையை எய்தும் பேற்றை அடையவில்லை. எனவே, நீயே என்னை அன்புடன் உன்திருவடிகளில் ஏற்றுக்கொள்ளவேண்டும். 'என்னை உன்னுடைய அடியவனாக ஏற்றுக்கொள்வாய்' என மணிவாசகர் கேட்பது மனித குலத்தவர் அனைவருக்குமே ஏற்ற வேண்டுகோளாக அமைந்துள்ளது.

மனதை அமைதிப்படுத்த மணிவாசகர் கூறும்வழி மிகவும் எளிமையானது. குளிர்மையான மலர்களை இறைவனுடைய திருவடிகளில் சேர்க்கின்ற ஒரு நடைமுறைதான் அது. இறையுருவத்திற்கு நாம் செலுத்துகின்ற எளிமையான காணிக்கை. குழம்பியிருக்கும் மனதை நெறிப்படுத்த வேண்டுமாயின் அதற்கு ஏதாவது பயிற்சி அளிக்கவேண்டும். அந்தப் பயிற்சியை வழங்குவதற்கு மலர்களை நாளும் தேடுவதும் அதைச் சேகரிப்பதும் நன்று. அதிலும் குளிர்மையான மலர்களைத் தேடுவதாயின் அதிகாலை எழுந்திருக்கவேண்டும். பனியின் சிலிர்ப்போடு அலர்ந்து குளிர்மையாக இருக்கும் மலர்களைக் கொய்ய வேண்டும். அந்த மலர்கள் இறைவனுக்காகச் சேகரிப்படுகின்றன என்ற உணர்வு நமது மனத்தில் உறைந்துள்ள சுயநலத்தை ஒழித்துவிடும். மேலும், நாளாந்தம் இப்பணியைச் செய்யும் போது அதில் ஒரு ஆர்வம் உண்டாகிறது. அந்த ஆர்வம் உள்ளத்திலே புதியதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது. இப்பணி தவம் செய்வதைக் காட்டிலும் சிறந்தது. நாளாந்தக் கடமைகளோடு மனத்தையும் ஒரு நிலைப்படுத்தும் இப்பயிற்சி இறைவன் பற்றிய நினைப்பையும் தருகிறது.

உலக வாழ்க்கையில் தேவையற்ற செயற்பாடுகளைச் செய்து மன உழற்சி அடைவதைவிட; இறை உணர்வோடு வாழ்வதற்காக ஒரு பயிற்சியைச் செய்வதே நல்லது. மணிவாசகர் தான் விட்ட பிழையைப் பிறரும் விடாதிருக்கப் பாடலிலே வழிகாட்டியுள்ளார்.

'தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு முட்டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன் உனக்கன்பருள்ளாம்
சிவமே பெறும் திருவெய்திற்றிலேன் நின்திருவடிக்காம்
பவமே யருளு கண்டாய் அடியேற் கெம்பரம்பரனே".

## பரந்து பல்லாய் மலரிட்டு முட்டாதடியே யிறைஞ்சி

நாம் கேட்பதைத் தருவதற்கு ஒருவர் இருக்கிறார் என்பது வாழ்க்கையில் மிகுந்த நம்பிக்கையை ஊட்டும். மனிதருள் அவ்வாறு ஒருவர் இருப்பது அருமை. அதனால் இறைவனே எமக்கு எல்லாவற்றையும் தருபவர் என்ற நம்பிக்கையை நமது மனத்திலே வளர்த்துக்கொள்ள வேண்டும். அந்த நம்பிக்கையோடு வாழ்ந்த இறையடியார்கள் பலர் முன்னே இருந்துள்ளனர். அல்லும் பகலும் இறை சிந்தனையோடு வாழ்ந்து அமைதியாக இறைவனடியைச் சேர்ந்துள்ளார்கள். இறையன்பர் எனப் பெயர்பெற்ற அவர்களுடைய செயற்பாடுகளில்; மலரிட்டு இறைவழிபாடு செய்வதும் ஒன்றாக இருந்ததை அவர்கள் பாடிய பாடல்களால் அறியமுடிகிறது.

மலரிட்டு இறைவனை வழிபட்டால், கேட்பது எல்லாவற்றையும் இறைவன் தருவான் என்பது அவர்கள் வாழ்வியலனுபவம். மலரிடுதல் என்பது ஒரு கலையாகவே இன்று வளர்ந்துவிட்டது. பல்வேறு வகையான மலர்களை இயற்கை எமக்குத் தருகிறது. ஆனால் அவை எல்லாவற்றையும் இறைவன் தாளில் வைத்து வணங்குவதில்லை. நறுநாற்றமுள்ள தூய்மையான மலர்களையே தெரிந்து எடுத்து வழிபாட்டிற்குப் பயன்படுத்து கிறோம். அத்தகைய தூய்மையான, மலர்களைத் தெரிந்தெடுப்ப தில்லை. 'பரந்து பல்வாய் மலரிட்டு' எனவரும் மணிவாசகருடைய தொடர் ஒன்று இந் நடைமுறையைத் தெளிவாக விளக்கியுள்ளது. ஆய்தல் என்பது பல்வேறு மலர்களிடையே சிறப்பாகச் சில மலர்களைத் தெரிவு செய்வது. நிறம், மணம், நேரம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இறைவழிபாட்டிற்குரிய மலர்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

அவ்வாறு முழுமனதோடு மலரிட்டு இடைவிடாது தொடர்ந்து வழிபட்டு வந்தால் நாம் கேட்பவற்றையெல்லாம் இறைவன் எமக்குத் தருவான். இத்தகைய அன்பர்களுடைய உள்ளத்திலே மறைந்து நிற்காதவன் இறைவன். ஏனையோருடைய உள்ளத்திலே இறைவன்பற்றிய உணர்வு மறைந்தேயிருக்கும். இங்கு இறைவன்பற்றிய உணர்வு எல்லோரிடமும் உண்டு என்ற கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உலக இன்பங்களிலே உணர்வு மீதூரப் பெறும்போது, இறைவன்பற்றிய நினைப்பு மறைந்துவிடும். அது வெளிப்படாது மறைந்தே இருக்கும். ஆனால், இறைவனை நாளாந்தம் மலரிட்டு இறைஞ்சி வாழ்வோருடைய உள்ளத்திலே இறைவன் பற்றிய நினைப்பு எப்போதுமே நிறைந்திருக்கும். அதனால் தான் இறைவனை மணிவாசகர் 'அன்பருள்ளம் கரந்து நில்லாக் கள்வன்' என்று குறிப்பிடுகிறார். ஒருவரை நினைத்து வாழ்வதற்கு எமக்கு அவருடைய உருவம் தேவை. உருவத்தோடு அவர் பற்றிய அறிவும் தேவை. இறைவன் நினைப்பிற்கும் அத்தகைய ஒரு நிலைப்பாடு இன்றியமையாதது. மணிவாசகர் இறைவனுடைய வரிந்துகட்டப்பட்ட கழல்களையுடைய திருவடி யையே நினைப்பிற்கொள்ள விரும்புகிறார். அவர் பாடிய சிவ புராணத்தில் இறைவனுடைய தாள், கழல், அடி என்ப வற்றையே போற்றிப் பாடியுள்ளார். இறைவனுடைய திருவடிகளையே நினைத்து வாழும் அன்பே நிரந்தரமாகத் தனக்கு வேண்டும் என்று பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

"பரந்துபல் ஆய்மலர் இட்டுமுட் டாதடி யேஇறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெற லாம்என்னும் அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை யேத்த முழுமையே.

## நாடகத்தாலுன்னடியார்போல் நடித்து

இறைவழிபாட்டில் நடிப்புத் தன்மையோடு ஈடுபடுவோரும் உளர். அவர்களை இனங்காண்பது மிகக் கடினம். அவர்களாகவே அதை வெளிப்படுத்தவும் மாட்டார்கள். ஆனால், மணிவாசகர்தான் அவ்வாறு இருந்ததைப் பாடலிலே பாடியுள்ளார். பாண்டிய மன்னனின் அமைச்சராக இருந்து 'தென்னவன் பிரமராயன்' என்ற சிறப்புப் பட்டம் பெற்று, உலக வாழ்க்கையின் எல்லா இன்பங்களையும் அனுபவித்தவர். அரசன் கட்டளைப்படி குதிரை வாங்குவதற்காகப் பணத்துடனும், பரிவாரத்துடனும் திருப்பெருந்துறை சென்றவர்; அங்கிருந்த சிவயோகியாரைக் கண்டவுடனேயே எல்லாவற்றையும் மறந்து விடுகிறார். அச்சிவயோகியாரின் திருநோக்கம், பரிசம், திருவாக்கு ஆகியவற்றால் இறை சிந்தனை வயப்படுகிறார். குதிரை வாங்கவென மன்னன் கொடுத்த பணத்தைக்கொண்டு சிவயோகியார் கேட்டுக் கொண்டதற்கு இணங்கிக் கோயில் கட்டுவதிலே செலவிடுகின்றார்.

இந்த மாற்றத்தை மணிவாசகர் நடிப்பு என்று கூறுகிறார். இதுவரை வாழ்ந்த வாழ்க்கையைவிட்டு இறைவனுக்கு அடியவனாக மாறி நிற்கும் தன்னுடைய செயற்பாட்டிலே அவருக்கு நம்பிக்கையில்லை. மனவுறுதி தளர்ந்து மீண்டும் மாறி விடுவோமா என்ற மனக்கலக்கம் அவரிடமிருந்தது. தன்னுடைய வழிபாட்டுச் செயற்பாடுகள் யாவும் நடிப்பு என்று கூறுகிறார். அடியார்போல நான் நாடகமாடி முத்திப்பேற்றையடைய விரும்புகிறேன் எனத் தன் நிலையை எடுத்துரைக்கின்றார். எனவே, இத்தகைய நடிப்பு நிலையை விட்டு இறைவன்மீது இடையறாத அன்பு செலுத்த அருளுமாறு வேண்டுகிறார்.

மணிவாசகர் இறைவனிடம் தன்னுடைய உண்மையான நிலையை எடுத்துக்கூறுவது அவருடைய கரவற்ற உள்ளத்தைக் காட்டுகிறது. மந்திரியாக வாழ்ந்த போது இறைசிந்தனையற்றிருந்ததை ஒப்புக்கொள்கிறார். உலக வாழ்க்கையில் இருப்போருக்கு ஒரு போலியான பக்தி வாழ்க்கை நடத்தும் நிலையும் ஏற்படலாம். குறுகிய வாழ்நாட்போதில் அனுபவிக்கும் இன்பமே பெரிதாய்த் தோன்றும். ஆனால், அது ஒரு நடிப்பான வாழ்க்கை என மணிவாசகர் கண்டார். தன்னையே அதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டுகிறார். அதனால் தன் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு இறைபக்தி செய்யப்பார்க்கிறார். இறைவனையே அதை அருளும்படி வேண்டுகிறார். உள்ளார்ந்த நிலையில் உள்ளத்திலே வேறு சிந்தனையின்றி இறையன்பு ஒன்றையே வேண்டிநிற்கும் நிலையைத் தரும்படி கேட்கிறார். அவன் அருளாலே அவன் தாள் வணங்கமுடியும் என்பதே மணிவாசகர்கருடைய தெளிவான கருத்தாகும். போலியான பக்திக் கோலத்தால் பயன் எதுவுமில்லை. நெற்றிநிறைய விபூதியும், நெஞ்சு நிறைய வஞ்சக நினைவுமாய் வாழ்பவர் இறைபக்தியை உணரமாட்டார். மெய்யடியார்போல் நடித்து இறைவனை உணரமுடியாது. உள்ளத்தால் உள்ளே உருகிநிற்பவரே பக்திநிலையடைந்தவராவர். உலக இன்பங்களை அனுபவிக்கும் நிலையில் இறைவனை உணரமுடியாது. சிறந்த செல்வப்பேறு இறைபற்றிய சிந்தனையை மறைத்துவிடும். எனவே, அதனைத் துறந்து இறையருளை உண்மை நிலையில் நின்று தேட வேண்டும்.

"நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே."

## வருந்துவன் நின் மலர்ப்பாதமவை காண்பான்

கிடைத்த ஒன்றை இழந்துவிடாமல் இருப்பதற்கும் நாம் பெருமுயற்சிகள் செய்யவேண்டி வரும். உலக வாழ்வியலில் கிடைத்திருக்கும் நல்ல பதவியை நிலையாகப் பெறுவதற்காகப் பலர் பாடுபடுவதை நாம் நேரில் கண்டுள்ளோம். சிலவேளை நாமே அத்தகைய முயற்சிகளைச் செய்துள்ளோம். இறைவழிபாட்டிலும் நாம் ஏதோ ஓர் எதிர்பார்ப்போடு இறைவனை நாளும் வணங்கும் போது அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாவிட்டால் அதைப்பற்றிப் பலவாறு சிந்தித்துப் பார்ப்பது எம்முடைய இயல்பாகவுள்ளது.

சிவனருள்பற்றிய உணர்வு கைவரப் பெற்றபோது மணிவாசகரும் இத்தகைய சிந்தனைக்கு ஆளாகிறார். தான் பெற்ற இறைஉணர்வை இழந்து விடுவேனோ என்ற ஐயம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் இறைவனிடம் தன்னிலையை விளக்க முற்படுகிறார். இறைவன் முதலில் தந்த திருக்காட்சியைக் காண்பதற்குத் தான் அருகதையற்றவனாகி விடுவேனோ என நினைந்து மனம் வருந்துகிறார். 'நாயடியேன்' எனத் தன்னைக் குறிப்பிடுகிறார். பிறந்தது முதலே சிவனடியானாக வாழ்வு நடத்தாமல் இடையிலே அடியானாக வந்த தன்னை ஒரு இழிந்தவனாகவே கருதிச் செயற்படுகிறார். அவரது உள்ளத்திலே ஏனைய சிவனடியார்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்க்கும் ஒருநிலை ஏற்பட்டுள்ளது. தனக்கும் அவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை வெளிப்படையாகவே குறிப்பிடுகிறார்.

அவர் குறிப்பிடும் செயற்பாடுகள் இரண்டாகும். ஒன்று நல்ல மலர்களைப் புனைந்து இறைவனை வணங்காமை. மற்றது இறைவன் நாமங்களை நாத்தழும்பு ஏறும்படி ஏத்திப் பாடாமை. முதன் மந்திரியாக இருந்தமையால் அவரால் இத்தகைய வழிபாட்டு நடைமுறைகளைப் பின்பற்ற முடியவில்லை. திருப்பெருந்துறைக்கு வந்தபின்னர்தான்; சில வழிபாட்டு நடைமுறைகளை நாள்தோறும் தான் செய்யவில்லை என்பதை அவர் நேரடியாக அறிந்து கொண்டார். 'இருந்து நலமலர்புனையேன்' என்று அவர் குறிப்பிடும் நடைமுறை கவனிக்கத்தகுந்தது. மலர்களை இறைவனுக்கு மாலையாக்கிச் சூட்டும் நடைமுறையையே அவர் குறிப்பிட்டுள்ளார். இந் நடைமுறை இன்றுவரை வழக்கிலுள்ளது. பல்வேறு நல்லின மலர்களை ஆய்ந்தெடுத்து, கவின்நிறைந்த புனைவாக்கி இறைவனுக்குச் சூட்டும்போது மனம் பரவசப்படுகிறது. இறையுருவின் அழகுக் கோலம் கண்டு கண்களிக்கும். மெய்சிலிர்க்கும். நா இறைவன் திருக்கோலக் காட்சியைப்பாடி ஏத்தும். எனவே உடலையும் உள்ளத்தையும் ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடாக விளங்கும் மலர்ப்புனைவு பண்டுதொட்டே வழிபாட்டு நடைமுறைகளில் இணைந்துள்ளது. இன்று இறைவழிபாட்டு நடைமுறைகளில் செயற்கை மலர்ப்புனைவுகள் இடம் பெறத் தொடங்கியுள்ளன. மணிவாசகரைப் போல நலமலார்புனையாமைக்காக நாமும் வருந்த வேண்டி நேரிடும். இயற்கை மூலம் இறைவன் தரும் கொடையாக மலர்கள் விளங்குகின்றன. இறையருள் வேண்டிய அடியவர் எல்லோரும் மலர்புனைந்தேத்தி வழிபாடு செய்துள்ளதை அவர்கள் பாடற்பதிவுகளால் நன்கு அறியமுடிகிறது. அதை மீண்டும் செயற்படுத்த மணிவாசகர் நினைவூட்டுகிறார்.

"வருந்துவன்நின் மலர்ப்பாத மவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவன் நற்றமியேன்மற் றென்னேநான் ஆமாறே"

## ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்

கோயில் தொண்டு செய்து வாழ்வது பற்றி நாயன்மார்களது பாடல்களிலே நிறையக் குறிப்புண்டு. திருநாவுக்கரசர் சரீரத் தொண்டு செய்து இறைவனை வாழ்நாள் முழுவதும் வழிபட்டவர். ஆனால், மணிவாசகரோ சரீரத் தொண்டு செய்யாதவர். அதனால் தனக்கு இறையருள் கிடையாது என மனம் வருந்துகிறார். இறையருளைப் பெறுவதற்கு அடியார்கள் மேற்கொள்ளும் நடைமுறைகளை வரிசைப்படுத்தி பாடலிலே கூறுவதன்மூலம் தன்னை இறைவன் அறியட்டும் என்று எண்ணுகிறார்.

அவருடைய பாடல் ஒன்று இதனைத் தெளிவாகக் காட்டுகிறது. இறைவன் திருவடியைப்பற்றி நினைந்து வழிபடுவதற்கு எல்லோராலும் முடியாது. சில வழிபாட்டு நடைமுறைகள் மூலம் மனதைப் பக்குவப்படுத்த வேண்டும். எனவே, அதற்காகச் சில கோயில் தொண்டுகள் உள்ளன. அவற்றை நாள்தாறும் செய்து வந்தால் அதன்மூலம் இடைவிடாத சிந்தனையை மனதில் ஏற்படுத்திக் கொள்ளலாம். பூமாலை புனைந்து ஏத்திப்பாடுதல், புகழ்ந்துரைத்தல், திருக்கோயில் மெழுகல், கூட்டுதல் என்பவற்றைச் செய்வதன்மூலம் கோயில் வழிபாட்டில் ஈடுபாடு ஏற்படும். இறைவன் உறையும் திருக்கோயில் சூழல் தூய்மையாக இருக்கவேண்டும். அதனால் சுற்றுப்புறத் தையும், உட்புறத்தையும் துப்புரவு செய்வதை மெய்யடியார்கள் மிகுந்த விருப்போடு செய்வார்கள். தற்காலத்தில் இப்பணியைத் தொண்டுப் பணியாகச் செய்பவர் மிகக்குறைவு. குறிப்பாகத் திருக்கோயிலின் வெளிப்புறத்தைத் துப்பரவு செய்வதற்குப் பின்னிற்கின்றனர்.

திருக்கோயிலின் சுற்றுபுறத்தைத் தூய்மை செய்வதை ஒரு தூய்மையான ஒரு தொண்டுப் பணியாகச் செய்து "உழவாரப் படையாளி" என்ற பட்டத்தை திருநாவுக்கரசர் பெற்றிருந்தார். மணிவாசகரும் தான் அத்தகைய தொண்டுப் பணியிலே ஈடுபடாமையைக் கூறியுள்ளார். பாண்டி நாட்டின் முதன் மந்திரியாக இருந்தவர் இத்தகைய பணிகளைச் செய்யும் வாய்ப்புப் பெற வழியில்லை. அறிவு நிலையில் இப்பணிகள் மிக எளிமையானவையாகக் கருதப்பட்டன. ஆனால், இறைவன் நினைப்பைத் தரவல்ல நற்பணிகளென அதை மணிவாசகர் நன்கு உணர்ந்துள்ளமையால் தான் அவற்றைச் செய்யவில்லையே என மனம் நோகிறார்.

இறைவன் உறையும் கோயிலை மணிவாசகர் "திருக் கோயில்" என்று குறிப்பிட்டுள்ளார். இறைவனைக் "கோமான்" என அழைக்கிறார். அவர் பாண்டிய மன்னனையே கோமான் என எண்ணி நீண்டகாலம் வாழ்ந்தவர். இப்போது அந்த மன்னனுக்கும் மேலான இறைவனைப் பற்றி அறிந்த பின்னர் இறைவனையே கோமான் என அழைக்கிறார். இறைபணியைச் செய்யாமல் இருந்தமையால் இறந்து விட வேண்டும் என்று விரும்புகிறார். இறைவனுடைய திருவடிகளை நினைத்தாலே உள்ளங்குழைய வேண்டும். அன்பு மீதூரப்பெற்று நெஞ்சம் உருக வேண்டும். இத்தகைய ஒரு பக்தி நிலைக்குத் தான் ஆளாகாமையால் இறப்பதற்கு விரும்புகிறார். மனிதப் பிறவியெடுத்தவர் அனைவரும் இறைவன்மீது பக்தி கொண்டு வாழவேண்டும் என்பதே அவருடைய கருத்தாகும்.

"ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே"

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

# சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறைகீழும்

நாயன்மார்களின் தேவாரங்களில் இறைவனுடைய திருவுருவக் காட்சி சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. அக்காட்சிகள் சொற்சித்திரங்களாகப் பாடல்களிலே வரையப்பட்டுள்ளன. சுந்தரமூர்த்திநாயனார் சுந்தரவேடங்கள் பூண்பதில் மிகுந்த விருப்புக்கொண்டவர். அதனால், இறைவனுடைய திருக்கோல அழகையும் பக்திச் சுவையோடு பாடியுள்ளார். இலங்கையில் உள்ள திருக்கேதீஸ்வரத் திருத்தலத்திலே வீற்றிருக்கும் இறைவனைப் பாடிய பாடல்கள் இதற்குச் சான்றாக உள்ளன. அப்பாடல்களில் அமைந்த தொடர்கள் இறைவன் திருமேனியழகை நேரிற் காணும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் தன்மை வாய்ந்தவை.

சுந்தரர் பார்வையில் முதலில் இறைவன் திருநெற்றி தெரிகிறது. 'சுடுவார் பொடிநீறு' என்ற தொடர் இறைவன் திருநெற்றியிலுள்ள நீறு பற்றிக் குறிப்பிடுகிறது. இறைவன் உறையுமிடம் சுடுகாடு எனக் காரைக்காலம்மையார் தமது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்திலே பாடியுள்ளார். இறந்த மனிதருடைய உடல்களைச் சுடுகாட்டிலே தீமூட்டி எரிக்கும் வழக்கம் இருந்துள்ளது. இரண்டாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்த சங்கத்தமிழ் இலக்கியங்களிலேயே இவ்வழக்கம் இருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. நீறான பொடியை இறைவன் நெற்றியிலே அணிந்திருக்கிறான். மூன்று குறியாக அது அணியப்பட்டுள்ளது. இன்றும் சிவனை வழிபடுவோர் நெற்றியிலே திருநீறு அணியும் வழக்கம் உள்ளது.

அடுத்து இறைவனுடைய தலையிலே ஒருபக்கத்திற் பிறையின் தோற்றம் தெரிகிறது. இதனைச் சுந்தரர் நல்லதுண்டப் பிறை என காட்சிப்படுத்தியுள்ளார். மூன்றாம் பிறையே முதலில் எம் கண்களுக்குத் தோன்றுவது. அதனைக் கண்டவுடன் சிவனையே கண்டது போலக் கருதி வழிபடும் வழக்கமும் இன்றுவரை எம்மிடையே நிலவுகிறது. சுந்தரர் பாடலிலே காட்டும் இறைவன் திருமுடியிலே சூடப்பெற்றுள்ள துண்டப்பிறையை வழிபடும் மரபைச் சங்கப்பாடல்களும் பதிவுசெய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இறைவன் ஆடைபற்றிய குறிப்பு அடுத்துப் பாடலில் அமைந்துள்ளது. 'கடமார் களியானை உரி அணிந்த' என்ற தொடர் இதனைத் தெளிவாக விளக்கி நிற்கிறது. மதநீர் சொரியும் மகிழ்வான யானையின் தோலைப் போர்வையாக இறைவன் அணிந்திருக்கின்றான். அவனுடைய கண்டத்திலே நீலநிறமான கறை தென்படுகிறது. பவளம்போன்ற மேனியில் நீலநிறம் கழுத்தில் மட்டும் இருப்பதால் அது 'கறை'யெனப்பட்டது. இத்தகைய திருமேனிச் சிறப்புடன் இறைவன் இறைவியுடன் திருக்கேதீஸ் வரத்திலே இனிதாய் அமர்ந்திருக்கம் திருக்கோலத்தைச் சுந்தரர் பாடலிலே கவினுறக் காட்சிப்படுத்தியுள்ளார்.

"சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப் பிறைகீழுங்
கடமார்களி யானை உரி அணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமா யுறை கின்றான்றிருக் கேதீச்சரத் தானே"

## அங்கம் மொழி அன்னாரவர் அமரர் தொழுதேத்த

திருக்கோயில் வழிபாடு என்னும் நடைமுறை மனதைப் பண்படுத்தும் ஒரு செயற்பாடாகும். சுயநலமான போக்கினை விடுத்துப் பரநலமான செயற்பாட்டிற்கு இது இட்டுச் செல்லும் மெய்யடியார் பலர் கோயில் வழிபாட்டால் மனப்பக்குவம் பெற்றுள்ளனர். அத்தகைய அடியார்கள் தமது அனுபவத்தைப் பிறருக்கும் எடுத்துக்கூற விரும்பியுள்ளனர். அதற்கென அவர்கள் பயன்படுத்திய எடுத்துரைப்பு முறைமையே தேவாரத்திருப்பதிகங்கள் ஆகும். பக்தி பரவச நிலையிலே திருக்கோயில்களின் சிறப்பையும், அங்கு உறையும் இறைவன் திருஅருட்கோலங்களையும் பாடல்களிலே வெளிப்படுத்தியுள்ளனர். அப்பாடல்களிலே சொல்லப்பட்ட செய்திகள் எம்மையும் பரவச நிலைக்கு இட்டுச்செல்வனவாக உள்ளன.

மாதோட்டம் எனப் பெயர்பெற்ற நல்ல நகரிலே அமைந்திருக்கும் திருக்கேதீஸ்வரம் என்னும் அற்புதமான திருக்கோயில்; சுந்தரர் அத்தலம் பற்றிப் பாடியுள்ள பதிகம்; மிகவும் பரவச நிலையை ஊட்டும் சொற்கோலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கடற்கரையில் அமைந்துள்ள திருக்கோயிலின் சூழலைப் பற்றிச் சொல்லும்போது சுந்தரர் 'வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்' எனக் குறிப்பிட்டுள்ளார். வங்கம் என்னும் சொல் கடல்வழியாகப் பொருட்களை ஏற்றிச்செல்லும் ஒரு போக்குவரத்து ஊர்தியாகும். இச்சொல் இன்று மருவி வத்தை எனப்பயன்படுத்தப்படுகிறது. பல்வேறு இடங்களிலிருந்து பொருட்கள் கொண்டுவரப்படும் ஒருதுறைமுகமாக மாதோட்டம் விளங்கியதைச் சுந்தரர் ஆவணப்படுத்தியுள்ளார். மலிதல் என்ற சொல் பெருக்கத்தைக் குறிப்பதாகும்.

வழிபாட்டு நிலையில் திருக்கேதீச்சரம் பற்றிய சிறப்பான குறிப்பு ஒன்றையும் சுந்தரர் சுட்டியுள்ளார். அங்கம்மொழி அன்னாரவர் என்ற தொடர் உடல்மொழி பற்றிய குறிப்பாகவுள்ளது. மனத்து உணர்வுகளைச் சொற்களால் வெளிப்படுத்தாமல் உடல் உறுப்புகளால் வெளிப்படுத்தும் நிலை ஒன்றுண்டு. இது பற்றி நாவுக்கரசரும் குறிப்பிட்டுள்ளார். வழிபாட்டு நிலையில் பயன்படும் உடல் மொழியைப் பக்திநிலையில் நிற்பவரே உணரமுடியும். திருக்கேதீஸ்வரம் தேவராலும் வழிபட்டுப் பெருமைப்படுத்தப்பட்டதையும் சுந்தரர் எடுத்துக் கூறியுள்ளார்.

திருக்கோயிலில் வீற்றிருந்து அருள் செய்கின்ற இறைவனுடைய திருக்கோலம் இரண்டு அடிகளில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. பங்கம் செய்த பிறை சூடினான் என்ற தொடர் இறைவன் திருமுடியிலே சூடியுள்ள பிறை பற்றிய குறிப்பாகும். அது பற்றி அவர் கூறும்போது பங்கம் செய்த பிறை என்று கூறியுள்ளார். முழுநிலவைப் பங்கம் செய்த தோற்றத்தை நினைவுபடுத்துகிறார். சிவன் திருமுடியிலே அணிந்துள்ள துண்டப்பிறை முழுநிலவிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட துண்டம் எனக் காட்சிப்படுத்துகிறார். பிறையோடு இறைவன் இடுப்பிலே சிவந்த கண்களையுடைய பாம்பை அணிந்திருப்பதையும் குறிப்பிட்டுள்ளார். சிவனின் சிறப்பான தோற்றத்தை நாமும் மனக்கண்ணில் காணவைத்துள்ளார்.

"அங்கம் மொழி அன்னாரவர் அமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பங்கம்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே"

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

## கரிய கறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணான்

பக்தி என்பது ஒரு பேராற்றலாகும. ஐம்புலன்களையும் ஒடுக்கி மனதை ஒரு நிலைப்படுத்தும் போது தெளிவுநிலை உண்டாகும். இந்நிலையை எல்லோராலும் அடைய முடியாது. மெய்யடியார்கள் பலர் இந்நிலையை அடைய முயன்றதைப் பற்றிப் பாடல்களிலே குறிப்பிட்டுள்ளனர். பக்தி என்றொரு பரவச நிலை பற்றிப்பாரதியும் தன் அனுபவத்தைப் பாடியுள்ளான். நாயன் மார்களது பாடல்களில் இறைவன் திருக்கோலம் பக்திப்பரவ சத்துடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சுந்தரர் பாடல்களில் இக்காட்சிப் புனைவு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இறைவன் திருக்கோலத்தைச் சித்திரம் வரைவது போல அவர் புனைந் துள்ளார்.

இரு தோற்றங்களை ஒரு பாடலடியிலே காட்டும் திறன் நோக்குதற்குரியது. 'கரிய கறைக்கண்டன்' என்ற தொடர் இறைவனுடைய கண்டத்தின் திருக்கோலத்தை எமக்குக் காட்டுகிறது. கறை என்பது தூய்மையான ஓர் இடத்தில் அத்தூய்மையைக் குலைக்கும் நிலையில் ஒரு நிறம் சேர்ந்திருப்ப தாகும். சிவனுடைய மேனி பொன்னையொத்த நிறமுடையது எனச் சுந்தரர் குறிப்பிட்டள்ளார். அந்த நிறம் மேனி முழுவதும் படர்ந் துள்ளது. ஆனால் கண்டத்திலே மட்டும் ஒரு கரிய கறை ஏற்பட் டுள்ளது. பாற்கடலிலே வந்த கொடிய விடத்தைக் கண்டத்திலே அடக்கியமையால் அது அப்படியே கறைபடிந்த இடமாகி விட்டது. இதனையே சுந்தரர் கரிய கறை எனக்காட்டுகிறார். அடுத்து இறைவனுடைய நெற்றிக்கண் பற்றிய குறிப்பு நல்ல கண்மேலொரு கண்ணான் என வந்துள்ளது. இறைவனுடைய இரண்டு அருட் கண்களுக்கு மேலேயொரு சிறப்பாற்றல் கொண்ட கண் அமைந்துள்ளது. இரண்டு கண்களுக்கு மேலாகப் புருவமத்தியில் அக்கண் நெற்றிக்கண்ணாக அமைந்துள்ளது. இதனால் இறைவனுக்கு முக்கண்ணன் என்ற சிறப்பான பெயரும் வழங்கப்பட்டுள்ளது. தீமையை அழிக்கும் திறன்கொண்ட அனல்வழியாகவும் இக்கண் குறிப்பிடப் பட்டுள்ளது. இறைவியின் கண் கனல்விழி எனத் தேவாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாதோட்டத்தைக் காட்சிப்படுத்தும்போது வரிய சிறைவண்டு யாழ் செயும் மாதோட்டம் என்று வருணித்துள்ளார். அழகான வரிகள் பொருந்திய சிறகுகளையுடைய வண்டுகள் இனிமையாக ஒலிப்பதை யாழ் செய்தல் எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். வண்டின் ஒலிப்பில் ஒரு தனித்துவம் உண்டு. அதனை வடமொழியில் ரீங்காரம் என்பர். சுந்தரர் அவ் வொலிப்பை யாழின் ஓசையெனக் கூறியுள்ளார். ஒலிப்பின் இனிமையும் இயைபும் துல்லியமாக உணரப்பட்டுள்ளன. திருக்கோயிலின் அமைதியான சூழலை இக்குறிப்புத் தெளிவாய்ப் புலப்படுத்துகிறது. நன்னகர் என்ற சொல் மாதோட்ட நகரச் சிறப்பை உணர்த்தி நிற்கிறது. பாலாவித் தீர்த்தத்தின் சிறப்பை அதன் பரப்பளவு கொண்டு விளக்கியுள்ளார். 'பரியதிரை எறியா வருபாலாவி' என்ற தொடரில் பெரிய திரைகள் பலாவியின் நீர்ப் பெருக்கத்தைக் காட்டுகின்றன. பாலாவி என்பது ஒரு கடற்கழிமுக நீர்ப்பரப்பாகும். மாதோட்டத்தில் கடல்வாணிபம் நடை பெற்றுள்ளது. அதனால் துறைமுக நகராக அறியப்பட்டிருந்தது. அந்த வளமான இடத்தில் மறைவல்லான் வீற்றிருப்பதைச் சுந்தரர் காட்சிப்படுத்தியுள்ளார்.

"கரிய கறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ் செயும் மாதோட்டநன்னகருட்
பரியதிரை எறியாவரு பாலாவியின் கரைமேற்
றெரியும் மறை வல்லான்றிருக் கேதீச்சத்தானே

## அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித்தருளி

அடியார்களின் நோய் தீர்ப்பதில் திருக்கோயிலின் பங்கு அளப்பரியது. அடியார்கள் பலர் தேவாரங்களில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அப்பர் சூலை நோய் வாய்ப்பட்ட போது இறைவழிப்பாட்டால் நோய் நீக்கம் பெற்றார். சுந்தரர் கண்பார்வை இழந்தபோது சிவனை வணங்கிப் பார்வை பெற்றார். அவர்களுடைய வாழ்க்கையில் பெற்ற அனுபவத்தைப் பாடியது மட்டுமன்றிப் பிறரும் நோயுற்றால் திருக்கோயில் வழிபாடு செய்து நோய்நீக்கம் பெற வழிகாட்டினார்கள். சுந்தரர் திருக்கேதீஸ்வரம் பற்றிப்பாடும்போது நோய் நீக்கியருளும் சிறப்பையும் குறிப்பிட்டுள்ளார். சிவன் திருநாமங்களில் வைத்தியநாதன் என்ற சிறப்பான நாமமும் உண்டு.

நோய் மனிதனுடைய உடலைப் பற்றி வருத்துவது. உணவு, காலநிலை வழிப்பயணம் தொற்றுநிலை என்பவற்றால் ஏற்படுவது. முற்காலங்களில் தீராத நோயால் துன்பப்படுவோர் திருக்கோயில் களிலே சென்று தங்கியிருந்து நாளும் பொழுதும் இறைவனை வழிபட்டு நோயை ஆற்றும் நிலை இருந்துள்ளது. திருக்கோயில் தீர்த்தங்களிலே நாள்தோறும் தொடர்ந்து நீராடி வழிபட்டால் நோய் விரைவாக நீங்கும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது. திருக்கேதீஸ்வரத்திலுள்ள பாலாவித்தீர்த்தம் இத்தகைய சிறப்பு வாய்ந்தது. இதனையே சுந்தரர் தமது பாடலில் 'அங்கத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருளி' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கம் என்ற சொல் உடலின் உறுப்பைக் குறிக்கின்றது. தன்னுடைய உறுப்பான கண்ணின் பார்வையை இழந்ததும் பின்னர் மீள இறைவனை வழிபட்டுப்பார்வை கிடைக்கப் பெற்றதும் சுந்தரர் பெற்ற அநுபவங்கள். நோயையும், நோய் நீக்கத்தையும் அவர் நன்குணர்ந்தவர். 'ஒழித்தருளி' என்ற தொடர் இறையன்பு நிலையை நன்கு விளக்கி நிற்கிறது. தனது அடியார்கள் துன்பப்படுவதை இறைவன் விரும்புவதில்லை. உடனடியாகவே தனது அருளினால் அடியார் துன்பத்தை எல்லாம் ஒழித்தருளுவான். மீண்டும் நோய் வராமல் என்றென்றும் உடல் நலத்தோடிருக்க அருள் செய்வான்.

இறைவனுடைய திருக்கோலங்களில் அர்த்தநாரீஸ்வர வடிவம் மிகவும் அற்புதமானது. சுந்தரர் இக்கோலத்தை விளக்கும்போது பங்கம் செய்த மடவாளொடு என்று குறிப்பிடு கிறார் தன்னுடைய உடலிலே சரி பாதிப்பகுதியை இறைவி இறைவன் உடலோடு இணைத்துக் கொண்டிருக்கும் அற்புதமான கோலம்இத்தொடர் மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக்கோலம் வேறெந்த வழிபாட்டு மரபிலும் சுட்டப்பட வில்லை. ஆணும், பெண்ணும் சரிபாதியாகத் தோற்றத்தில் இணைந் திருப்பது என்பது ஒரு சிறப்பான கருத்தின் வெளிப்பாடா கவும் உள்ளது. உலக வாழ்வில் கருத்திலும் செயற் பாட்டிலும் ஆணும், பெண்ணுமாய் ஒன்றிணையும் நிலையே சிறந்தது. குடும்ப ஒற்றுமைக்கு இப்பண்பு மிகவும் இன்றியமையாதது. அதிலும் சிறப்பாக ஒருவனும், ஒருத்தியுமாக இணைந்த இல்லறமே மேலானது. இரண்டு மனைவியரை விரும்பிய சுந்தரருக்கு இறைவனின் அர்த்தநாரீஸ்வரக்கோலம் தன்குறையைச் சுட்டுவதாக வும் தெரிகிறது.

இப்பாடலில் கோயிற்சூழலில் உள்ள தெங்கம் பொழில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதோட்டம் கடல்சார் நிலமாகையால் அந்நிலத்தில் தென்னை மரங்கள் நன்கு செழித்து வளர்ந்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித்தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரிற்
பங்கம் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேற்
தெங்கம் பொழில் சூழ்ந்திருக்கேதீச்சரத் தானே.

## வெய்யவினை யாயஅடி யார்மேலொழித் தருளி

நல்வினை, தீவினை என இரு வகைப்பட்ட வினைகள் இப்போதும் பேசப்படுகின்றன. இச்சொற்கள் சுருங்கிய நிலையில் நன்மை, தீமை எனவும் வழங்கப்படுகின்றன. நல்வினையென்பது நன்மையான செயற்பாடுகளையும் தீவினையென்பது தீமையான செயற்பாடுகளையும் குறித்தது. இவ்விரு செயற்பாடுகளுக்கும் பலாபலன் உண்டென்று நம்பப்படுகிறது. இக்கருத்து நாயன்மார் களுடைய பாடல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. தீவினையை வெய்ய வினை என்றும் குறிப்பிட்டுள்ளார். மிகவும் துன்பமான வினை என்று பொருள்படும். இவ்வினையால் துன்புறுவோர் இறைவழிபாட்டால் அத்துன்பத்தை நீக்கலாம். இறைவனுடைய அருளினால் கொடிய வினைகள் அடியாரை அணுகமாட்டாது.

சுந்தரரது வாழ்வில் சில துன்பங்களை எதிர்கொள்வதற்கு அவரது தீமையான செயற்பாடே காரணமாக இருந்ததை அவரே நன்கு உணர்ந்துள்ளார். திருக்கேதீஸ்வரத்தலத்தைப் பற்றிப் பாடும் போது இதனைக் குறிப்பிட்டுள்ளார். இத்திருத்தலம் அடியார் வினை தீர்க்கும் அருட்தலமாகச் சுந்தரர் காலத்தில் அறியப் பட்டுள்ளது. தலத்தின் அமைவிடம் சிறப்பானது. 'வையம்மலி கின்ற கடல் மாதோட்ட நன்னகர்' என்ற பாடலடி இதனை நன்கு விளக்கியுள்ளது. வையகம் என்ற சொல் பரந்த உலகைக் குறிக்கின்றது. பூமியின் நிலப் பரப்பு கடலாற் சூழப்பட்டுள்ளது. உலகெங்கும் பரந்திருக்கும் கடல்நீர்மாதோட்ட நன்னகரையும் சூழ்ந்திருக்கின்றது. மலி என்ற சொல் கடல்நீர் பற்றிய சிறப்பான குறிப்பு ஒன்றை உணர்த்துகிறது. கடற்கரையிலே நின்று பார்த்தால் அக்கரையைக் காணமுடியாது. நீர் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் பரந்திருக்கும். இத்தகைய ஒரு பரப்பளவால் நிறைந்த நீர்வளத்தையே மலி என்ற சொல் விளக்கி நிற்கிறது.

இயற்கையான நீர்வளம் மிக்கசூழலில் மாதோட்டம் கடற்கரை நகரமாக இருப்பதால் நன்னகர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மக்கள் உடல் நலத்தோடு வாழ்வதற்குரிய நகரமாக விளங்குகிறது. கோயிலில் உறையும் இறைவன் இறைவியோடு வீற்றிருக்கும் காட்சியில் இறைவியின் திருக்கோலம் முதலில் சுந்தரர் பார்வையில் சிறப்பாகத் தெரிகிறது. பையேரிடை மடவாள் என இறைவியின் கோலத்தைச் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். இறைவியின் கோவம் இளமையாக இருக்கிறது. அவளுடைய சிற்றிடையின் அழகு கண்டு சுந்தரர் பரவசப்படுகிறார். அதே வேளையில் இறைவனுடைய சடாமுடியையும் நோக்குகிறார். செய்ய சடை முடியான் என்ற தொடர் இறைவன் திருச்சடையின் அழகைக் குறிப்பிடுகிறது. சிவந்த சடையைத் தூக்கி மேலே சுற்றியிருக்கும் பாங்கு தனித்துவமான அழகைக் குறிக்கிறது. செம்மையான திருச்சடையின் கோலம் வீற்றிருக்கும் நிலையில் மிகத் தெளிவாகத் தெரிகிறது. இறைவியின் வீற்றிருக்கும் கோலத்தில் இடையழகைக் கண்ட பரவசப்பட்ட சுந்தரர் அருகே வீற்றிருக்கும் இறைவனு டைய திருச்சடையின் வண்ணத்தால் கவரப்படுகிறார். செம்மை யான வண்ணம் கண்ணைக்கவரும் தன்மையது. எல்லோருடைய சடையும் கருமையாக இருக்கும். முதுமையில் வெண்மை நிறம் பெயரும். ஆனால் இறைவன் திருச்சடையோ என்றும் செம்மை யான வண்ணத்திற் பொலிவாகத் தோன்றுகிறது. திருக்கேதீஸ்வரத் தலத்திலே இந்த அழகான திருக்கோலம் காணச் சுந்தரர் பாடல் எம்மை அழைக்கிறது.

வெய்யவினை யாயஅடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்ட நன் னகரி
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேற்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே.

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி

ஊனமடைதல் என்பது மனித வாழ்க்கையில் பெரும் அவலத்தைத் தருவதாகும். பிறவிகளிலே உயர்ந்தது மானிடப் பிறவி. அதிலும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என ஔவையார் கூறியுள்ளார். சிலர் பிறக்கும்போதே சில உடலுறுப்புகளில் ஊனத்தோடு பிறக்கின்றனர். அவ்வாறு பிறந்த பலர் இன்றைய மருத்துவ வசதிகளால் அவ்வூனம் நீங்கப் பெறுகின்றனர். அன்று நவீன மருத்துவ வசதிகளற்ற காலத்தில் பலர் உடல் ஊனத்தோடு வாழ்நாள் முழுவதுமே துன்பப்பட்டனர். சிலருக்குப் பிறந்த பின்னர் ஏற்படுகின்ற நோய்களாலும் ஊனம் ஏற்படுகின்றது. செவிப்புலன், கட்புலன், வாய்மொழி என்பவற்றை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கட்புலனை இடையிலே இழந்த அனுபவம் சுந்தரருக்கு உண்டு. அதனை அவர் பல பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் உடல் ஊனம் தரும் நோய்களை நீக்கும் ஆற்றல் பெற்றவன். திருக்கோயில் வழிபாடு நோய் நீக்கும் மருந்தாகும். சிவன் கோயிலில் வழங்கப்படும் திருநீறு நோய்தீர்க்கும் அருமருந்தாகும். சம்பந்தர் மந்திரமாவது நீறு எனச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அப்பருடைய சூலைநோயையும் கூன் பாண்டியனுடைய வெப்புநோயையும் திருநீறே போக்கியது. இன்றும் கோயில்களிலே வழங்கப்படும் பிரசாதம் மருந்து என்று குறிப்பிடப்படுகின்றது. திருக்கேதீஸ்வரத்தில் உறையும் இறைவனும் ஊனமுற்ற அடியார்க்கு அருள் செய்வான் எனச் சுந்தரர் பாடியுள்ளார்.

மாதோட்டம் நகரைச் சுற்றியுள்ள கடல் பரந்திருப்பது சுந்தரர் பார்வையிற் பரவசத்தை ஏற்படுத்துகிறது. வானத்துறு மலியுங்கடல் என்ற தொடர் இதனை விளக்கியுள்ளது. இயற்கையான மழைநீரால் கடலில் நீர்வளம் ஏற்படுகின்றது. அதே நீர்வளம் மீண்டும் ஆவியாகி மேலே சென்று மழை முகில்களாகிப் பொழிகிறது. எனவே இயற்கை வளத்தில் கடலின் பங்களிப்பு பெரியது. பெய்கின்ற மழை நீரையெல்லாம் தன்னகத்தே கொண்டு நீர்வளம் நல்கும் தெய்வமாகவும் கடல் போற்றப்படுகிறது.

திருக்கேதீச்சரத்திலே அருள் பாலிக்கும் இறைவியைச் சுந்தரர் 'பானத்துறும் மொழியாள்' எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அம்மையின் திருவாய் மொழி அமிர்தம்போல மிகவும் இனிமையானது. உலகத்து மக்கள் எல்லோருக்கும் தாய்மொழியே முதலில் செவிமடுக்கும் மொழியாகும். ஒரு குழந்தைக்கு பேச்சுப் பயிற்சியை முதலில் தாயே வழங்குகிறாள். அதனாலே குழந்தைபேசும் மொழி தாய் மொழி என உலகெங்குமே தனித்துவமாகச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இறைவி எல்லோருக்குமே தாயாக இருப்பவள். அவளுடைய மொழி எல்லோருக்குமே அமுதம் போன்றது. இத்தகைய பெருந்தேவியுடன் வீற்றிருக்கும் இறைவனுடைய திருக்கோல அழகிலே ஒரு சிறப்பான அணிகலனைப் பற்றிச் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். 'ஏனத்து எயிறணிந்தான்' என்னும் தொடர் இதற்குச் சான்றாக உள்ளது. பன்றியின் கூரான பற்களைக் கோர்த்த மாலையை இறைவன் அணிந்திருக்கிறான். அணிகலன்களின் அமைப்புப் பற்றிய சிறப்பானதொரு குறிப்பாகச் சுந்தரர் இதனைக் கூறி இறைவன் திருக்கோலத்தை நாமும் காண வைக்கிறார்.

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரிற்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத்தானே.

## வெள்ளி நற்சிந்தனை
### பக்தியின் மொழி தமிழ்

## அட்டனழ காகவரை தன்மேலர வார்த்து

இறைவனுடைய கோல அழகை நாயன்மார்கள் பாடல்களில் விரிவாக எடுத்துக்காட்டியுள்ளனர். சொற்சித்திரங் களாக அமைந்த அப்பாடல்கள் நாயன்மார்களின் செந்தமிழ்ப் புலமைத் திறனக்கும் புனைவுத் திறனக்கும் சான்றாக உள்ளன. பாடல்களைப் படிக்கும்போது இறைவனின் அருள்பொலியும் திருக்கோலக் காட்சி எமது மனக்கண்ணிலே துல்லியமாகத் தெரிகிறது. தேவாரங்களில் இயற்கை அழகும் இறைவன் கோல அழகும் இணைந்துள்ளமை இன்னொரு தனிச்சிறப்பாகும். திருக்கோயிற் சூழல் அழகும் இறைவன் திருக்கோல அழகும் சுந்தரருடைய பாடல்களில் சிறப்பாக இணைந்துள்ளன.

இறைவனைப் பற்றிக்குறிப்பிடும்போது சுந்தரர் 'அட்டன்' எனக் சிறப்பாகக் கூறியுள்ளார். 'அட்டன்' என்பது எட்டுத்திக்கு களையும் ஆள்பவன் எனப் பொருள்தரும். எம்மைச் சுற்றியுள்ள திசைகளை முதலில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான் காகப் பகுத்துள்ளனர். மேலும் இவை வடகிழக்கு, தென் கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு என நான்காகப் பகுக்கப்பட் டுள்ளன. இதன் மூலம் 'அட்டன்' என்ற சொல் உலகின் எல்லாப் பகுதிகளையும் ஆள்பவன் என்ற பரந்த பொருளைத்தருகிறது. இறைவன் தன்னடைய அரையிலே அழகாகப் பாம்பைச் சுற்றி அணிந்திருக்கின்றான். 'அழகாக வரைதன்மேலரவார்த்து' என்ற தொடர் இதனை விளக்கி நிற்கிறது.

அடுத்து இறைவியின் திருக்கோலம் பற்றிக் குறிப்பிடும் போது 'பட்ட வரிநுதலாள்' எனக் குறிப்பிட்டுள்ளார். அழகான நெற்றியிலே ஒரு நெற்றிப்பட்டம் வரிந்து கட்டப்பட்டுள்ளது. பெண்களின் தலையணிகலன்களில் நெற்றிப்பட்டம் முக்கிய மானது. கூந்தல் முகத்திலே வந்து படியாமல் நெற்றிப்பட்டம் கட்டும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது. தற்காலத்தில் திருமணம், நடனம் போன்ற சிறப்பு நடைமுறைகளில் நெற்றிப்பட்டம் அணியும் வழக்கம் உள்ளது. இறைவியோடு எல்லோரையும் பாதுகாக்கின்ற பெரியவனான இறைவன் உடனமர்ந்திருக்கும் காட்சியில் மேற்குறிப்பிட்ட அணிகலன் அலங்காரத்தைச் சுந்தரர் குறிப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளார். இறைவனுடைய அணிகலன் இயற்கையோடிணைந்துள்ளது. இறைவியின் அணிகலன் கலைநுட்பத்தோடு பொலிந்திருக்கிறது. அத்துடன் சுந்தரர் அணிகலன்கள் அணியப்படும் புனைதிறனையும் இப்பாடலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறைவன் எல்லோரையும் ஆள்பவன் என்பதையும் 'நமையாள்வான்' என்ற சொற்றொடரால் குறிப்பிட்டுள்ளார். எட்டுத்திக்குகளையும் பேணுகின்ற பொறுப்பையுடைய சிட்டனே அங்கு வாழும் உயிரினங்களையும் பேணி ஆள்கின்றவானவான்.

மாதோட்டத்தின் இயற்கை அழகையும் தனித்துவமாக இந்தப்பாடல் விளக்கியுள்ளது. 'மட்டுண்டு வண்டாலும் பொழில் மாதோட்டம்' என்ற தொடர் மாதோட்டத்தின் அழகைத் தெளிவாகக் காட்டியுள்ளது. தேனை நிறைய உண்ட வண் டினங்களின் மகிழ்வான ஒலிப்புச் சூழவுள்ள பூம்பொழில்களில் தனிக்கவர்ச்சியாக உள்ளது. திருக்கோயிலை வழிபடவருகின்ற மக்களது செவியில் இம்மகிழ்வான வண்டுகளின் ரீங்காரம் கேட்பது மகிழ்ச்சியைத் தரும்.

"அட்டனழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரிற்
பட்டவரி நுதலாளொடு பாலாவின் கரைமேற்
சிட்டன்நமை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே"

## மூவரென இருவரென முக்கணுடை மூர்த்தி

புராண இதிகாசங்களில் கூறப்பட்ட இறைவன் பற்றிய கதைகளைத் தேவாரங்களில் நாயன்மார் பொருத்தமுற இணைத்துள்ளனர். சிறப்பாகச் சிவனது தோற்றம்; அருட்செயல் என்பன பற்றிய குறிப்புகள் தேவாரங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. சிவன் மும்மூர்த்திகளின் ஒன்றான வடிவாகவும் கருதப்படுவதால் அதுபற்றிய குறிப்புகள் நிறைய இடம் பெற்றுள்ளன. திருமால், பிரமன், உருத்திரன் என்ற மும்மூர்த்திகளும் சிவனே. அதேபோல் அர்த்தநாரீஸ்வரவடிவத்தில் சிவனும், உமையும் சேர்ந்திருப்பதால் சிவன், இருவர் எனவும் கருதப்படுகின்றான். மூன்று கண்ணையுடைய மூர்த்தியாகவும் வணங்கப்படுகின்றான். மும்மூர்த்தி, முக்கண்ணன் என்பன சிவனின் சிறப்புப் பெயர்களாக உள்ளன.

திருக்கேதீஸ்வரத்திலே வீற்றிருந்து அருள் செய்யும் சிவனைச் சுந்தரர் 'மூவரென இருவரென முக்கணுடைய மூர்த்தி' எனக் காட்சிப்படுத்திக் காட்டுகிறார். அந்த இறைவன் பாவம் வினைகளை அறுத்து அருள் புரிபவன். மனிதர் வாழ்நாளிலே செய்கின்ற பாவவினைகளையெல்லாம் உடனுக்குடன் அழித்து விடுகின்ற தன்மையுடையவன். பாலாவியென்னும் தீர்த்தக் கரையிலே அமைந்த திருக்கேதீஸ்வரத்திலே எழுந்தருளியிருக்கின்றான்.

மாதோட்டம் என்னும் நன்னகரிலே திருக்கேதீஸ்வரம் அமைந்திருக்கின்றது. கோயிலின் சூழல் பற்றிச் சுந்தரர் சிறப்பான குறிப்பு ஒன்றையும் கூறியுள்ளார். 'மாவின் கனிதூங்கும் பொழில் மாதோட்ட நன்னகர்' என்ற அடி கோயிற் சூழலில் உள்ள மாமரங்கள் நிறைந்த பொழில்களைக் காட்சிப்படுத்திக் காட்டுகிறது. அச்சூழல் மருதநிலமும், நெய்தல் நிலமும் மயங்குகின்ற நிலப்பிரதேசத்தில் மாதோட்டம் உள்ளது. 'மாதோட்டம்' என்ற சொல் பெரிய தோட்டம் எனப் பொருள்தரும். 'தோட்டம்' என்பது பண்படுத்தப்பட்ட நிலத்தைக் குறிக்கும். மருதநிலம் விளைபொருள் நிலமாகும். மாமரங்கள் நிறைந்த பிரதேசத்தையும் மாந்தோட்டம் என அழைக்கம் வழக்கம் உண்டு. மாவின் கனி தூங்கும் பொழில் என்பது மாஞ்சோலை நிறைந்த பிரதேசத்தையே குறித்து நிற்கிறது. மருதநிலத்தின் கருப்பொருளாகவும் மாமரம் இலக்கிய உரையாசிரியர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளில் மாமரம் பல்வேறு நிலையான பயன்பாட்டை உடையது. மாவிலையும் மாம்பழமும் வழிபாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. நீர்க்கரகம், தோரணம் என்பவற்றிற்கு மாவிலை பயன்படுகிறது. மாம்பழம் முக்கனி நிலையில் மடைப்பொருள்களில் ஒன்றாக அமைந்துள்ளது 'பஞ்சாமிர்தம்' என்னும் அபிடேகக் கலவையில் மாம்பழமும் இடம் பெற்றுள்ளது. இதனால் திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலில் மாமரத் தோட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம். நிலத்தன்மையும் நீர்வளமும் மாம்பழச் செய்கைக்கு மிக வாய்ப்பாக இருந்திருக்கலாம். 'பொழில்' என்ற சொல் மரங்கள் அடர்ந்திருக்கும் இடமாகும். பூம்பொழில் என்ற சொல் பலபாடல்களிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கோவிலைச் சூழவுள்ள பிரதேசத்தில் பூம்பொழில்களுடன் பழமரத்தோட்டங்களும் அமைக்கும் நடைமுறை இன்றும் உள்ளது. சுந்தரருடைய பாடல் மாதோட்ட நகரின் வளத்தை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது.

"மூவரென இருவரென முக்கணுடை மூர்த்தி
மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை ஆள்வான்றிருக்கேதீச்சரத்தானே.

# வெள்ளி நற்சிந்தனை
## பக்தியின் மொழி தமிழ்

## சொற்றுணை வேதியன் சோதி வானவன்

நம்பிக்கை என்பது மனித மனங்களுக்கு வலுவூட்டும் ஒரு பயிற்சியாகும். வாழ்க்கையின் ஓட்டத்தில் நாம் எதிர்கொள்ளும் சவால்களை வென்றெடுக்க நம்பிக்கை என்னும் உணர்வே உதவுகிறது. ஆனால் இந்த நம்பிக்கை என்னும் உணர்வை வளர்த்துக் கொள்வதற்கு என்ன வழி என்ற கேள்வி பலரிடையே உண்டு. மனித உளவளம் பற்றிய ஆய்வாளர்கள் இது பற்றிய கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். எம்முன்னோர் தாம் வாழ்ந்த காலத்தில் வழிபாட்டினூடாக நம்பிக்கை என்னும் உணர்வைப் பெற்றனர். நாயன்மார்கள் தமது வாழ்வியலில் இறைவன் பற்றிய நம்பிக்கையையே துணையாகக் கொண்டனர்.

வாழ்க்கையிற் பல இடர்களை எதிர்கொண்ட நாவுக்கரசர் இறைவன் நாமத்தையே உச்சரித்து அவற்றை வென்ற அனுபவ முடையவர். அவர் பாடியுள்ள நமச்சிவாயத் திருப்பதிகம் இதற்குச் சான்றாக உள்ளது. அப்பதிகத்திலுள்ள பாடல்கள் இன்று நாம் நம்பிக்கைபற்றித் தேடுகின்ற விளக்கங்களைத் தந்துள்ளன.

இறைவனுடைய திருநாமத்தைச் சொல்லுவதால் பெறும் நன்மைகளை முதலில் நாம் அறியக்கூறுகிறார். சொல்லுக்குத் துணையாக இருக்கும் வேதியன் என்று இறைவனைக் குறிப்பிட்டுள்ளார். நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு எமது வாய்ப்பேச்சும் ஒரு காரணமாகும். 'யாரால் கேடு! வாயால் கேடு' என்ற மரபுத் தொடரும் இதனை நன்கு விளக்கி நிற்கிறது. எனவே நாம் பேசும் போது இறைவன் நமக்குத் துணையாக இருக்கிறான் என்ற நம்பிக்கையோடு பேசவேண்டும். இறைவன் வடிவத்தைச் 'சோதி வானவன்' என நாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார். வானத்திலே தோன்றுகின்ற ஒளிரும் சோதியாக அவர் இறைவனைக் காண்கிறார். அடுத்து இறைவனுடைய திருவுருவத்தை நினைக்க வழி கூறுகிறார்.

பொன்போன்ற இறைவனுடைய அழகிய திருவடிகளை மனத்திலே நினைத்துக் கைகளைத் தலைமேல் வைத்து வணங்க வேண்டும். நாம் ஒன்றை மனத்தில் இருத்தி வழிபடும் போது தான் அலைபாயும் மனத்தைக் கட்டுப்படுத்தலாம். புறச்சிந்தனைகளால் அலைபாயும் மனத்தை ஒரு நிலைப்படுத்த ஒரு குறியீடு தேவை. அதுவே இறைவன் திருக்கழலாகும். இங்கு அப்பர் உருவத்திருமேனி வழிபாட்டின் தொடர்ச்சியை நன்கு உணர்த்தியுள்ளார். இறைவனை நாம் வழிபடும்போது எமது பார்வை முதலில் பாதங்களிலே படர வேண்டும். பின்னர் படிப்படியாக மேல் நோக்கிச் சென்று திருமுடியில் படவேண்டும். இதனைப் 'பதாதிகேசம்' என்ற சொற்றொடரும் குறிப்பிடுகின்றது. மனிதரைக் காணும்போது 'உச்சி முதல் உள்ளங்கால்வரை' பார்க்கும் மரபு உண்டு. ஆனால் இறைவனுடைய வழிபட்டில் திருவடிகளை முதலில் வணங்கிய பின்னரே வழிபாட்டைத் தொடர வேண்டும். திருவடிகளை ஒரு மனத்துடன் வழிபட்டால் எத்தகைய பெருந்துன்பத்தையும் வென்று விடலாம். நாவுக்கரசர் அனுபவப்பட்டவர். மன்னன் அவரைக் கல்லோடு கட்டிக் கடலிலே போட்ட போதும் அவர் கலங்கவில்லை. தனக்கு நல்ல துணையாக இறைவனுடைய திருவடிகளையே கொண்டிருந்தார். நம்பிக்கையோடு வழிபாடு செய்தார். அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை. கடலில் கட்டிப் போட்ட போதும் எந்தவிதமான துன்பமுமின்றிக் கரைசேர்ந்தார். அந்த நம்பிக்கையை எல்லோரும் பெறப்பாடிய பாடல் இதுவாகும்.

" சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே"

## பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை

அருமையான பொருள்கள் பல உலகிலே உள்ளன. அவற்றைப் பற்றி அறிவதற்கு எல்லோருமே விரும்புவர். இயற்கையின் ஆற்றலால் பல அரிய படைப்புகள் தோன்றியுள்ளன. அதே போலச் செயற்கையாகவும் சில அருமையான கண்டுபிடிப்புகள் உள்ளன, பண்டைய தமிழர் வாழவியலில் அரிய விடயங்களாகக் கருதப்பட்டவற்றை இலக்கியப் பதிவுகள் காட்டுகின்றன, குறிப்பாகப் பக்தி இலக்கியங்களிலே மனித வாழ்வியல் நடைமுறைகளில் உள்ள அரியவிடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. வழிபாடு இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையது. திருக்கோயில் நடைமுறைகளில் மனித வாழ்வியலுடன் தொடர்புடைய விடயங்களை நாயன்மார் தமது பாடல்களிலே சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

நாயன்மார்கள் நால்வரில் வயதில் முதிர்ந்தவர் அப்பர். அவருடைய வாழ்வியல் அனுபவம் சாதாரண மக்களுடைய வாழ்வியலோடு பெரிதும் ஒற்றுமையுடையது. எனவே, அவருடைய பாடல்களில் கூறப்பட்ட விடயங்களை மீண்டும் சிந்திப்பது பயனுடைத்து. ஒரு பாடலில் நான்கு அரிய விடயங்களை உள்ளடக்கி கூறும் பண்புடைய பக்திநிலை நாவுக்கரசருடையது. திருக்கோவில் வழிபாட்டில் தனது வாழ்நாளைக் கழிப்பதில் பெருமகிழ்வு கொண்ட நாவுக்கரசர் பாடல்களில் மனித உணர்வுநிலை சிறப்பாகப் புலப்படுகிறது. நாளாந்தம் கோவில் வழிபாட்டில் ஈடுபட்ட அவருடைய சிந்தனையில் ஒரு தெளிவு இருந்தது. வழிபாட்டு நடைமுறைகளின் போது பயன்படுத்தும் பொருட்கள் அரியன என்று குறிப்பிடுகிறார்.

பூக்களில் அரியது என்ற சிறப்பைப் பெறுவது'பொங்கு தாமரை' என அப்பர் குறிப்பிடுகிறார். தாமரை நீருக்கு மேலாக மலர்ந்திருக்கும் அழகுக் கோலத்தைப் 'பொங்கு தாமரை' என்று இயற்கைத் தோற்றமாக மனக்கண்ணிலே காண வைத்துள்ளார். பசுவுக்குச் சிறப்புத் தருவது இறைவன் திருமுழுக்குக்கு பயன்படும் பஞ்சகௌவ்வியங்களைத் தருவது. பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் புனிதமான பொருட்களாகக் கொள்ளப் படுபவை அவை. அரசனுக்குச் சிறப்புத் தருவது செங்கோலாட்சி செய்வது. அப்பருடைய பார்வையில் இயற்கையும் ஏனைய உயிரினங்களும் இறைவனுடன் தொடர்புபட்டிருப்பது மிகத் துல்லியமாகத் தெரிகிறது. திருக்கோவில் வழிபாட்டில் இயற்கையும் ஏனைய உயிர்களும் நன்கு தொடர்புற்றிருப்பதைப் பாடலிலே விளக்கியுள்ளார். இவற்றைப் போல எம்முடை நாவும் சிறப்படைய வேண்டுமானால் 'நமசிவாய' என்ற திருநாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். வழிபாட்டு நிலையில் வழிபாட்டு நடைமுறைகளைச் செய்வதற்கு பயன்படும் பொருட்கள் சிறப்புப் பெற்றிருப்பது போல மனிதனுடைய நாவும் சிறப்பு பெற நாவுக்கரசர் வழிகாட்டுகிறார். மருள் நீக்கியார் என இயற்கைபெயர் பெற்றவர். சமண சமயத்தைச் சார்ந்தமையால் தருமசேனர் எனப் பெயர் பெற்றார். ஆனால், மீண்டும் சைவசமயத்திற்கு வந்த போது பக்திபாமாலைகள் பாடியமையால் நாவுக்கரசர் எனச் சிறப்பான பெயரைப் பெற்றார். 'நமசிவாய' என இறைவன் திருநாமத்தைச் சொல்லித் தனது நாவைப் பண்படுத்தி நாவுக்கரசர் ஆனார். இறைவன் புகழ்பாடும் பணியில் 'நமசிவாய' என்ற பெயரை உச்சரிப்பதே முதற்பணியாக இருக்க வேண்டுமென அவர் விரும்பியதை பாடல் தெளிவாகக் காட்டுகிறது.

'பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமசிவாயவே.

வலம்புரி - 22-10-10

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

## விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்

எமது கண்முன்னே தோன்றுவனவற்றையெல்லாம் உண்மையானவை என்று கொள்வதற்கில்லை. இறைவன் படைப்பில் உள்ள எல்லாவற்றையும் இன்று விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யும் போக்குத் தோன்றியுள்ளது. பக்தி நிலையில் நின்று எல்லாம் இறைவன் செயல் ஏற்கும் நிலை மாற்றமடைந்துள்ளது. விஞ்ஞான அறிவு கொண்டு மெய்ஞ்ஞானத்தை ஆய்வு செய்யும் போக்கும் தோன்றியுள்ளது. ஆனால் நாயன்மார்களின் வாழ்வியலனுபவம் பக்தி எனும் உணர்வு நிலையின் உச்சத்தில் இறைவன் பற்றிய அனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளது. எண்பது வயதுவரை வாழ்ந்த அப்பர் தனது பக்தி அனுபவத்தைப் பாடும் போது அவரது மெய்ஞ்ஞானத்தையும் உணரமுடிகிறது.

இந்த அனுபவத்தை ஒரு செயற்பாட்டின் மூலம் அப்பர் தனது பாடலிலே விளக்கியுள்ளார். வானை முட்டும் அளவிற்கு அடுக்கப்பட்ட விறகு. அந்த விறகின் வெவ்விய சிவந்த நெருப்பினின்றும் வெளிப்படுகின்றதை உண்ண உள்ளே புகுந்தால் ஒன்றும் இல்லையாம். இதனை உண்மையென உணரும் மெய்யறிவு தேவை. இதேபோல இந்த உலகிலே பண்ணுகின்ற பாவங்களை யெல்லாம் கிட்ட நின்று அறுக்கும் வல்லமையுடையது இறைவன் நாமமாகிய நமச்சிவாயவே என்று அப்பர் விளக்கியுள்ளார். இது அவரது வாழ்வில் அவர் பெற்ற அனுபவம். உண்மையான சைவ வாழ்வியலை விட்டுச் சமண சமய வாழ்வியலிலே பலகாலம் அவர் ஈடுபட்டிருந்தார். அவர் செய்த பாவச் செயல் அது. ஆனால் அப்பாவச் செயலின் விளைவால் அவர் மேலும் துன்பம் அனுபவியாமல் காப்பாற்றியது இறைவன் திருநாமமாகிய நமச்சிவாயவே என்கிறார். அப்பர் இந்த அனுபவத்தை 'நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே' என்று குறிப்பிட்டுள்ளார். 'நண்ணுதல்' என்பது அருகாமையைக் குறிக்கும். எம்மோடு என்றும் அருகில் இருக்கும் இறையருளை நாம் உணர்வதற்கு 'நமச்சிவாய' என்ற நாமத்தை உச்சரிக்க வேண்டும். அதன் மீது அசையாத நம்பிக்கை கொள்ளவேண்டும். 'உலகிலே பயின்ற பாவம்' என அப்பர் நாம் செய்கின்ற பாவங்களைக் குறிப்பிட்டுள்ளார். பயிலுதல்' என்பது தொடர்ச்சியாகச் செய்தல் எனப் பொருள் தருவது. சில விடயங்கள் பாவமானவை என்று நாம் உணர்ந்தி ருக்கும் நிலையிலும் அவற்றை மீட்டும் மீட்டும் செய்வது தவிர்க்க முடியாததாக உள்ளது. எடுத்துக் காட்டாகக் கூறின் பொய்பேசுவது ஒரு பாவமான செயற்பாடு என்பதை நன்குணர்ந்த போதும் அதையே பேசும் இயல்பு மனிதருக்குண்டு. இத்தகைய மெய்யறி வற்ற நிலையைப் போக்குவதற்கு நமச்சிவாய என்ற நாமத்தை நாம் மறவாதிருக்க வேண்டும்.

உலக வாழ்க்கையில் ஒன்றி நிற்போருக்கு இறைவன் பற்றிய சிந்தனையை ஏற்படுத்துவதற்குச் சில பயிற்சிகள் தேவை. அப்பர் சைவசமயம் பற்றிய தெளிவைப் புறச் சமயத்திலிருந்த போது நோயுற்ற போது உணர்ந்து கொண்டார். சமணர்கள் அவரைக் கைவிட்ட போதுதான் தான் பண்ணிய பாவச் செயலை நன்குணர்ந்த கொண்டார். இறைவன் தன்னை அத்துன்பத்திலிருந்து காப்பாற்றியதைத் தெளிவாகக் கண்டார். அவருடைய கோயில் தொண்டுப் பணிசெய்யும் போதெல்லாம்'நமசிவாய' என்ற திரு நாமத்தை உச்சரித்தபடியே செய்தார். இறைவனை மறவாதிருக்க அதுவே ஏற்ற வழியெனக் கண்டு எமக்கும் உணர்த்தியுள்ளார்.

"விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணி நின் றறுப்பது நமச்சி வாயவே

## வெந்த நீறருங் கலம் விரதிகட் கெலாம்

சமயம் ஒரு வாழ்வியலாக இருப்பதால் அந்த வாழ்வியலின் நாளாந்த நடைமுறைகள் மனிதனைப் பண்படுத்துவனவாக உள்ளன. சைவ சமயம் திருக்கோயிலை ஒரு பயிற்சிக் களமாகக் கொண்டது. அப்பயிற்சியில் சில சைவ சமயத்தவர்களை அடையாளம் காட்டும் நடைமுறைகளாக அமைந்துள்ளன. 'வெந்தநீறு அருங்கலம்' என்று நாவுக்கரசர் ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார். வெந்தநீறு வெண்ணீறு எனவும் விபூதி எனவும் அழைக்கப்படுகிறது. இறைவனும் திருமேனியில் வெண்ணீறு அணிந்திருப்பதாக நாவுக்கரசர் பாடியுள்ளார். 'பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு' என்று குறிப்பிட்டுள்ளார். இறைவனுடைய பவளம் போன்ற திருமேனியில் பால் போன்ற வெண்ணீறு கவின் நிறைந்ததாகத் தோற்றுகிறது.

சம்பந்தர் பாடல்களில் நீறு என்று சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. நோயைத் தீர்க்கும் மருந்தாகச் சம்பந்தர் நீற்றைக் குறிப்பிடுகின்றார். ஆனால் அப்பர் வெண்ணீற்றை விரதிகளுக்கு அருங்கலம் எனக் கூறியுள்ளார். விரதிகள் என்பது சைவசமயத்தவர்களின் சிறப்பான வழிபாட்டு நடைமுறைகளாகும். இந்தநடைமுறையில் மனிதரின் உணவுப் பழக்கங்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. மனம் பொறி வழிச் செல்வதற்கு நா முக்கிய காரணமாகும். எனவே நாவடக்கம் பேணுவதற்காக உணவைக்கட்டுப்படுத்தும் பயிற்சி ஒன்று வழிபாட்டு நடைமுறையுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. திருக்குறளில் விரதம் பற்றிய கருத்துண்டு. அதற்கு உரை எழுதிய பரிமேலழகர் விரதமாவது மனம் பொறிவழிகளில் செல்லாதிருக்கும் பொருட்டு உணவைச் சுருக்கியேனும் விடுத்தேனும் இருப்பது என விளக்கம் கூறியுள்ளார்.

எனவே அப்பர் கூறும் விரதிகள் வெண்ணீறு அணிவதால் அவர்களுக்கு அது பெருஞ்சிறப்பைத் தருவது என்று கூறுவர். அது அவர்கள் சமய வாழ்வியலில் ஈடுபட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி யுள்ளது. இதேபோன்று அந்தணர்களுக்கு அருமறையான ஆறங் கமே அரிய சிறப்பைத் தருவது. இறைவன் திருமுடியிலே திகழும் திங்களுக்கு நீண்ட சடாமுடி சிறப்பைத் தருகிறது. இறைவன் திருக்கோலத்திலே திங்கள் தனித்துவமானது. வழிபடும் அடியார் களாகிய எமக்கு அரிய சிறப்பாக இருப்பது நமச்சிவாயவே.

வெண்ணீறு அணிவது தோற்றத்தைச் சிறப்பாகக் காட்டும். அந்தணர் ஆறங்கமான வேதம் ஓதுவதால் சிறப்புப் பெறுவர். சாதாரண பொதுமக்களுக்கு நமச்சிவாய என்று ஒலிப்பதே பெருஞ்சிறப்பைத் தரும். வழிபாட்டு நடைமுறைகள் தமக்குரிய சிறப்புடன் விளங்குவதை அப்பர் பாடலொன்று சிறப்பாகத் தொகுத்துக் காட்டியுள்ளது, வெண்ணீறணிந்தவர்களைக் காண் பவர் அவர்களை உடனே அடையாளம் காண்பர். இறைவனுடைய திருமுடியிலே விளங்கும் திங்களையும் வணங்குவர். உருவ வணக்கம் விரதிகளுக்கு இன்றியமையாதது என்ற கருத்தை இப்பாடலில் அப்பர் விளக்கியுள்ளார்.

வெந்த நீறருங் கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழும் நீண்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சிவாயவே

## இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும்

'இடுக்கண் வருங்கால் நகுக' என்பது வள்ளுவர் வாய்மொழி. மனித வாழ்க்கையில் தொடர்ந்து பெருந்துன்பங்கள் வருவதே இடுக்கண் எனப்பட்டது. அவ்வாறு தொடர்ந்து துன்பங்கள் வரும்போது சிரிக்கவேண்டும் என வள்ளுவர் கூறுவது நடைமுறையில் சாத்தியப்படுமா என்ற கேள்வியும் எம்மிடையே உண்டு. பக்திநிலை நின்ற நாயன்மார்களில் வாழ்க்கையில் தொடர்ந்து பெருந்துன்பங்களை எதிர்கொண்டவர் திருநாவுக் கரசராகும். அவருடைய பாடலில் அந்த அநுபவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மனித நிலையில் தொடர்ந்து துன்பங்களை எதிர்கொள்ளும் போது எவரையும் இரந்து கேட்டு அத்துன்ப நிலையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற நிலையைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். அதற்குரிய நல்லவழி ஒன்றை அப்பர் காட்டு கிறார்.

இறைவழிபாடு பற்றிய முழுமையான நம்பிக்கையால் எல்லாத்துன்பங்களையும் வெல்ல முடியும். இதற்கு ஒரு சம்பவத்தையும் குறிப்பிட்டுக் காட்டுகிறார். இராவணன் தனது உடல் ஆற்றல் மீது பெருநம்பிக்கை கொண்ட கைலாயமலையை தூக்க முயன்றான். அப்போது இறைவன் தன்னுடைய காற்பெரு விரலால் மலையை அழுத்தினான். கீழே இருந்த இராவணன் நெரிபட்டு வருந்தினான். அந்த வருத்தத்தைப் போக்க இறைவனைப் பணிந்து பாடினான். அவனுக்கு இறைவன் அருள் செய்து அத்துன்பத்தை நீக்கியருளினான்.

இந்தக் கதையை நினைவுபடுத்தும் அப்பர் இத்தகைய துன்பம் ஏற்படும்போது நடுக்கமுறும் மனத்தை ஆற்றுவதற்குரிய வழியையும் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இறைவனை நினைப்ப தற்கு ஓர் உருவம் தேவை. ஒரு நாமம் தேவை. மனிதர்களுடைய பெயரை நினைத்தவுடன் அவருடைய உருவத்தோற்றம் நினைவுக்கு வரும். இந்தக் குண இயல்பால் இறைவன் பெயரைச் சொன்னால் இறைவனுடைய தோற்றம் நினைவில் வரும். எனவே எத்தகைய துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும் நமச்சிவாய என்ற இறைவன் நாமத்தைச் சொல்ல வேண்டும். அந்த ஒலிப்பு எமது மனநடுக்கத்தைக் கெடுக்கும் வல்லமையுடையது.

இன்றைய மனித வாழ்வியலில் துன்பந்தீர்க்கும் வழிகள் எனப் பல உளவியல் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அவற்றைப் பலர் பல வழிகளில் பயிற்றிய போதும் மனித வாழ்வியலில் இன்னமும் சீர்மை ஏற்பட வில்லை. எனவே புதிய வழியொன்றைத் தேடுகின்ற நிலையில் அப்பர் கூறுகின்ற வழி அநுபவப்பட்ட வழியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய எளிதான வழியாக உள்ளது. சமய வாழ்க்கையில் ஈடுபாடு அற்று வழிபாட்டு நடைமுறைகளைக் கைவிட்டு நிற்கின்ற இன்றைய சமூகத் தலைவர் பல புதிய சமய நம்பிக்கைகளையும் கடைப்பிடிக்கத் தொடங்கி யுள்ளனர். இவர்களுடைய வாழ்வியலும் அப்பருடைய வாழ்வி யலைப் போலவே தொடர்ந்து துன்பம் நிறைந்த வாழ்வியலாக இருந்தமையால் அதிலிருந்து உடனடியாக விடுபட வேண்டிப் புதிய சமய ஆற்றுகைகளைப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். அவர்களுடையகுழப்ப நிலையைப் போக்குவதற்கு அப்பர் காட்டும் எளிமையான வழிபாட்டு நடைமுறை உதவி செய்யும். மக்கள் மனதிலே படிந்து கிடக்கும் துன்ப நினைவுகளைப் போக்க வும் சோகச் சுமைகளை அகற்றவும் அப்பருடைய பாடல் வழிகாட்டுகிறது.

இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற்பி ராயினென்று வினவுவோமல்லோம்
அடுக்கற் கீழ்க் கிடக்கினும் அருளினால் முற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே

## சாதலும் பிறத்தலும் தவிர்த் தென்னை வகுத்து

வழிபாட்டிடடங்களைப் பற்றிய செய்திகள் தேவாரங் களிலே மிகச் சிறப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சைவநாயன் மார்கள் தாம் வழிபட்ட திருத்தலங்களை நன்கு காட்சிப்படுத் தியுள்ளனர். குறிப்பாகச் சம்பந்தரும் சுந்தரரும் வயதில் இளையவர்களாக இருந்தமையால் திருக்கோயிற் சூழலைக் கண்டு மனம் கவரப்பட்டதை அவர்களுடைய பாடல்களில் தெளிவாகக் காணமுடிகிறது. இயற்கையழகில் ஈடுபட்ட நிலையால் திருக்கோயிலிலே குடிகொண்ட இறைவன் தோற்றத்தையும் கூர்ந்து நோக்கிய காட்சிகளைப் பாடல்களிலே சொற்சித்திரங்களாக அமைத்துள்ளனர்.

இறைவனைப் பற்றிய தமது உள்ளக்கிடக்கையைச் செந்தமிழ்ப் பாட்டாய்ப் பாடிய சுந்தரரது பாடல் அவருடைய பக்தியைத் தெளிவாய் உணர்த்தி நிற்கிறது. 'இறப்பையும் பிறப்பையும் தவிர்த்து என்னை வகுத்தவன். தன்னுடைய அருளை எனக்குத் தந்தவன். அவனே என் தலைவன்' எனச் சுந்தரர் பாடியுள்ளார். உலக வாழ்க்கையில் நாம் நேரில் காணும் பிறப்பையும் இறப்பையும் பற்றிய ஒரு தெளிவான கருத்தை அவர் இங்கு குறிப்பிட்டுள்ளார். பிறப்பும் இறப்பும் எம் கையில் இல்லை. எல்லாம் அவனுடைய வகுப்பின் படியே நடக்கிறது. இதனால் இறைவன் எல்லோருக்கும் தலைவனாக விளங்குகின்றான்.

இத்தகைய பேராற்றல் படைத்த இறைவனைச் சுந்தரர் கண்டதைச் சொற்களில் காட்சிப்படுத்துகிறார். இறைவன் இறைவியுடன் இணைந்திருக்கும் தோற்றத்தை முதலில் காட்டுகிறார். மலைமாதை மதித்துத் தன் பக்கலில் கொண்டமைந்த மணியென இறைவனைப் புகழ்கிறார். பெண்மையைத் தனக்குச் சமமாக மதிக்கும் ஆண்மையை இத்தோற்றத்தினூடே விளக்கியுள்ளார். 'மாதினை மதித்து அங்கொர் பால் கொண்ட மணி' என இறைவனைப் போற்றுகிறார். இதேவேளை கங்கையைத் தலையில் வைத்திருக்கும் நிலையையும் காட்டுகிறார். 'வருபுனல் சடையிடை வைத்த எம்மான்' என்ற சுந்தரர் கூற்று மாதினை மதிக்கும் மாண்பை மேலும் சுட்டி நிற்கிறது. இருபெண்ணோடு வாழ ஆசைப்பட்ட சுந்தரது மனதில் இறைவன் தோற்றத்தில் கங்கை பாய்ந்து வரும் புனலாகவே தோற்றுகிறது.

குற்றமற்ற இறைவன் குணத்தைப் பற்றி அடுத்துக் கூற விழையும் சுந்தரர் 'என்மனத்துக்கு ஒரு இரும்புண்ட நீர்' என் இறைவன் அருளை விளக்குகிறார். பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டத்தின் மீது ஊற்றப்படும் குளிர்மையான நீர் உடனடியாக நெருப்பின் வெம்மையுடன் கலந்து விடுவது போலப் பக்திக் கனல் கொண்ட தனது மனமும் இறைவனருளை உணர்ந்து கொண்ட தைப் புலப்படுத்தியுள்ளார். காதிலே வெண்குழை அணிந்த இறைவனுடைய தோற்றத்தைத் தனது மனத்தில் இருத்திக் கொள்கிறார்.

சம்பந்தர் இறைவனுடையதோடு உடைய செவியைப் பாடலிலே சிறப்பாகக் குறிப்பிட்டது போல காதில் வெண்குழைய னாகச் சுந்தரர் இறைவனைக் காட்டுகிறார். கடல் சூழ்ந்த கழுமலர் வளநகரில் கோயில் கொண்ட இறைவனுடைய அன்பை நினைந்து வியந்து பாடுகிறார்.

சாதலும் பிறத்தலும் தவிர்த் தென்னைவகுத்துத்
தன்னருள் தந்த என்தலைவன் மலையின்
மாதினை மதித்து அங்கொர் பால் கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்த எம்மானை
ஏதிலென் மனத்துக்கொரு இரும்புண்ட நீரை
எண்வகை யொருவனை எங்கள் பிரானை
காதில் வெண்குழையனைக் கடல் கொளமிதந்த
கழுமலவளநகர்க் கண்டு கொண்டேனே,

## மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்

இறைவன் மீது நம்பிக்கை ஏற்படும் நிலையே பக்தி நிலையாகும். நாயன்மாரும் அடியாரும் இத்தகைய நிலையில் நின்றமைக்குப் பல பக்திப் பாடல்கள் சான்றாக உள்ளன. அப்பாடல்களை இன்று கருத்தூன்றிப் படிக்கும் போது இதனை நன்குணர முடிகிறது. சிறப்பாகச் சுந்தரர் பாடிய தேவாரங்களில் உலக வாழ்வியலில் பக்தியின் முனைப்பு எவ்வாறமையும் என்பது நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது. இம்மையில் பெற்ற வாழ்வியலனுபவம் மறுமை பற்றிய சிந்தனையையும் தூண்டுகிறது. அதனைச் சுந்தரர் பாடலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

'மறுமைக்கு மற்றொரு துணையினிக் காணேன்' என்ற அவருடைய கூற்று இம்மைக்கும் மறுமைக்கும் இறைவனே துணை என்பதை உணர்த்தி நிற்கிறது. தான் மறுமைபற்றி வருந்தியதையும் வெளிப்படையாகக் கூறுகிறார். 'மறவா வரம் பெற்றேன்' என்ற தன்னம்பிக்கையையும் பாடலிலே சுட்டியுள்ளார். முன்னர் இறைவனைத் தான் மறந்திருந்ததை எண்ணிப் பின்னர் இறைவன் நினைப்புடன் வாழும் வாழ்வைப் பற்றிப் பேசுகிறார்.

மனிதன் இறை சிந்தனையற்று உலகியலில் ஆழ்ந்து விடுவதும் உண்டு. ஆனால் திருக்கோயில் வழிபாடு இறைவன் பற்றிய சிந்தனையை நல்கும். மனிதன் தன்னைச் சுற்றியிருக்கும் சுற்றத்தைத் துணையென்று கருதுவதால் பயனில்லை. இது சுந்தரருடைய வாழ்வியலனுபவம். பெற்றதாய், தந்தையரோடு அவர் வாழவில்லை. அரச வாழ்வியலில் வாழ வேண்டியவரானார். இரு மனைவியரோடு வாழும் நிலையையும் பெற்றார். அதற்கு இறைவன் துணையையும் நாடிப் பெற்றார். அதனால் இறைவனையே துணையென்று தொழுது வாழ்ந்தார். தான் பெற்ற அனுபவத்தை எல்லோரும் அறியப் பாடலில் எடுத்தியம்பியுள்ளார். முத்தியையும் ஞானத்தையும் வானவர் அறியாத நிலையில் பற்பல நெறிகளூடே தான் அறிந்து கொண்ட பக்தி நிலையைப் பற்றியும் பாடலிற் குறிப்பிட்டுள்ளார். கற்பனை வடிவிலே தான் அறிந்திருந்த கடவுளை தான் அடியவனாகிக் கழுமல வளநகரிலே கண்டு கொண்டதாகக் கூறுகிறார்.

சுந்தர வேடங்கள் பூண்ட உலகியல் வாழ்வின் இன்பங்களையெல்லாம் நுகர்ந்திருந்த சுந்தருக்குத் திருக்கோயில் வழிபாடு ஒரு புதிய சிந்தனையைத் தந்தது. உலகியல் நிலையில் அனுபவிக்க எண்ணியவற்றையெல்லாம் புறந்தள்ளி விட்டுப் புதியதொரு உணர்வுடன் செயற்பட வைத்தது. இந்த அனுபவம் அவரை ஒரு தெளிவான சிந்தனையில் இட்டு சென்றது. எல்லோரும் கற்பனை செய்து கூறிய இறைவனின் அருள் நிறைந்த திருக்கோலத்தைக் கோயிலில் கண்ட போது அவர்பெற்ற உணர்வு தெளிவான அறிவைத் தந்தது. 'கற்பனை கற்பித்த கடவுளை அடியேன் கழுமல வளநகர்க் கண்டு கொண்டேன்' என்ற பாடலடி சுந்தரரில் ஏற்பட்ட மாற்றத்தைச் சுட்டி நிற்கிறது. மற்றவரது அனுபவம் காட்டிய கோலத்தைத் தான் நேரிலே கண்ட போது பக்திவயப்பட்டதைச் சுந்தரர் செந்தமிழால் பாடியுள்ளார். அவரது பக்தியுணர்வு எம்முடைய உள்ளத்திலும் ஊற்றெடுக்கும்.

"மற்றொரு துணையினி மறுமைக் குங்காணேன்
வருந்தலுற்றேன் மறவாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமும் துணையென்று கருதேன்
துணையென்று நான் தொழப்பட்ட வொண்சுடரை
முத்தியு ஞானமும் வானவரறியா
முறைமுறை பலபல நெறிகளும் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளையடியேன்
கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே."

## திருத்தினை நகருறை சேந்தனப்பனென்

இறைவனை உணர்வது எல்லோருக்கும் கைகூடாது. மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றையும் ஒருமுகப்படுத்தினால் இறைவன் அருளை உணரலாம். நாம் செய்யும்நல்வினையையும் தீவினையையும் பகுத்தறியும் மனப்பக்குவம் ஏற்படும் போது இறைவனைப் பற்றிய எண்ணம் தெளிவடையும். தீவினைகளை அறுக்க வல்ல இறைவன் திருவருள் புரிவான். ஆனால் நாம் இறைவனைப் பற்றி ஆழமாக எண்ணுவதில்லை. நினைப்பது மில்லை. எமக்கு ஏற்பட்ட வாழ்வியலனுபவத்தில் இறையருள் துணை நின்றதை மீள நினைப்பதில்லை. பிறருக்கு இறையருள் கிடைத்த நிலைகளை எண்ணிப் பார்ப்பதில்லை. எல்லாம் எம்முடைய ஆற்றலக்கு உட்பட்ட செயற்பாடுகளென எண்ணி இறுமாந்திருக்கின்றோம்.

இந்த நிலை உலகியலில் பொதுவானதே. எனினும் இந்த எண்ணம் களையப்பட வேண்டும். இறைவன் பற்றிய நினைவோடு வாழ வேண்டும். சுந்தரருடைய வாழ்வியலனுபவம் இதனை எமக்கு நன்கு உணர்த்தி நிற்கிறது. சுந்தரர் வாழ்வில் இன்பத்தையே பெரிதும் விரும்பியவர். இருமனைவியரோடு வாழ்ந்தவர். அதனால் துன்பங்களையும் அநுபவித்தவர். அவருடைய வாழ்க்கையனுபவம் இறைவன் பற்றிய எண்ணத்தை வலுப்படுத்தியது. துன்பங்களி லிருந்து விடுபட இறைவனை நினைப்பதே சிறந்தது என்ற நிலைக்கு ஆற்றுப்படுத்தியது.

கழுமல வளநகரில் இறைவனைக் கண்ட போது அவர் உண்மையை உணர்ந்து கொண்டார். தான் செய்த தீவினைகளை அறுக்க வல்லவன் இறைவனே என்பதை அறிந்து கொண்டார். தன்னுடைய அனுபவத்தைப் பாடலிலே பதிவு செய்துள்ளார். இறைவனைத் தவிர வேறு எவருடைய நினைவும் அவருக்கு ஏற்படவில்லை. அத்தகைய இவ்வளவு காலம் வாழ்ந்த, வாழ்க்கையின் நிலை பயனற்றது என்பது தெரிகிறது. அதை வெளிப்படையாகவே கூறுகிறார். கனவு வாழ்க்கையிலிருந்து தான் விழித்துக் கொண்டதாகக் கூறுகிறார். மனத்திலே இருந்த திருநடனம் செய்யும் திருக்கோலத்து இறைவனைத் திருக்கழுமலத் திருக்கோயிலில் நேரிலே கண்ட போது மெய்யறிவு பெறுகிறார். நான் மெய்யுணர்வு பெற்றதை உணர்வு பெற்றேன். உய்யும் காரணந்தன்னால் எனப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். தான் முன்னர் காணாது விட்டிருந்ததையும் நன்கு உணர்ந்துள்ளார். இத்தகைய உணர்வு நிலை மாற்றம் திருக்கோயில் வழிபாட்டினால் ஏற்படும். சிறுவயதிலிருந்து எமக்குப் பயிற்றப்படும் வழிபாட்டு நடைமுறைகளைப் பற்றி நாம் ஆழமாக எண்ணிப் பார்ப்பதில்லை. அறிவார்ந்த நிலையில் அதுபற்றி அறிய முற்படுவதில்லை. இதனைச் சுந்தரர் தனது வாழ்வியலனுபவத்ினூடாக எடுத்து விளக்கியுள்ளார். இறைவனை மட்டுமே தான் காண்பதை 'ஒருத் தனையல்லது இங்கு யாரையும் உணரேன்' என்ற தொடர் மூலம் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். அவருடைய உள்ளத்தில் முன் னைய வாழ்வியலின் பயனற்ற தன்மை நன்கு உணரப்பட்ட தைப் பாடல் நன்கு உணர்த்தி நிற்கிறது.

"திருத்தினை நகருறை சேந்தனப்பனென்
செய்வினையறுத்திடுஞ் செம்பொனையம் பொன்
ஒருத்தனையல்ல திங்காரையுமுணரே
னுணர்வு பெற்றேனுய்யுங் காரணந்தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி
விழித்தெங்குங் காணமாட்டாது விட்டிருந்தேன்
கருத்தனை நிருத்தனை செய் காலனை வேலைக்
கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே."

# மழைக் கரும்பும் மலர்க் கொன்றையினானை

திருக்கோவில் வழிபாடு மனித மனங்களைப் பண்படுத்தும் பயிற்சிக் களமாக அமைந்துள்ளது. இறைவன் மக்கள் குறைகளைக் கேட்கும் கோனாக அங்கு உறைகிறான். அரசு என்னும் அமைப்பு உருவானபோது அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றவன் அரசன் எனப்பட்டான். மக்களைப் பராமரிப்பவன் கோ எனப்பட்டான். அவனிருக்கும் இடம் கோயில் எனப்பட்டது. இறைவன் எல்லோருக்கும் தலைவன். இறை வழிபாடு எமது பிறவிப் பிணியை நீக்குவது. உலகத்தின் துன்பங்களையெல்லாம் வெல்வதற்கு இறைவழிபாடே சிறந்த செயற்பாடாகும்.

நாயன்மார்களில் சுந்தரர் 18 வயது வரைதான் இவ்வுலகில் வாழ்ந்தார். சாதாரண பொதுவாழ்வையும் சிறப்பான அரச வாழ்வையும் அனுபவித்தவர். ஆனால், பல அல்லல்களை அனுபவித்தவர். இறைவனை வழிபட்டு அவற்றையெல்லாம் வென்றவர். அவருடைய உள்ளத்தில் திருக்கோயிலில் குடி கொண்ட இறைவன் திருக்கோலம் பதிந்தபோது பக்தியுணர்வும் தோன்றியது. இறைவனை உள்ளத்திலே வளைத்துக் கொண்டமையால் அவனை மறவாத மனம் பெற்றதாக அவர் பாடலில் குறிப்பிட்டுள்ளார். அதனால்தான் பிறவியைத் தொடராத பெருமையான நிலை பெற்றதாகக் கூறுகின்றார்.

அழகைச் சுவைக்கும் இளமைப் பருவத்தில் சுந்தரர் இறைவன் திருக்கோலத்தால் கவரப்பட்டார். கொன்றையணிந்த இறைவன் கவின் கண்டு மனம் மயங்கினார். குழையணிந்தவனைக் கரிய கண்டனைக் கண்டபோது கவிதை பாடத் தொடங்கி விட்டார். "பாடுகின்றேன்! கூடவும் வல்லேன்" என்ற அவருடைய திடமான கூற்று அவரது பக்தியனுபவத்தை நன்கு பறைசாற்றி நிற்கிறது. கோயிலின் புறச்சூழல் கண்டு உள்ளே சென்றதையும் அவர் சுட்டத் தவறவில்லை. கழைக்கரும்பும் கதலிப்பல சோலையும் கண்ட கழுமலவளநகருட் புகுந்த சுந்தரருக்கு இறைவனுடைய தோற்றம் மேலும் உள்ளே செல்லத் தூண்டியது. இளமை நிலையால் அழகை நாடும் உள்ளத்திலே திருக்கோலம் ஒரு மாற்றத்தைக் கொணர்ந்தது.

இந்த மனிதப் பிறவியில் துய்க்க வேண்டிய இன்பங்களைப் பற்றியே சுந்தரர் இதுவரை நினைத்து வாழ்ந்தார். கழுமலவளநகரில் அவர் பெற்ற காட்சி இன்பம் நிலையான இன்ப வாழ்வை உணர்த்தியது. இறைவனை ஒரு போதும் மறவாத கோலக் காட்சியால் மனம் தெளிவு பெற்றது. அதனால் இனிமேல் உலக இன்பங்களை நாடிச் செல்லும் மனித மனம் தேவையற்றதாகிவிடப் பக்திப் பரவசம் பெற்றார். தான் பெற்ற இறையின்பத்தை வேறு யார் பெறுகிற்பார் என வியந்து பாடுகிறார். இறைவன் திருக்கோல அழகைப் பாடிப் பரவினால் அவன் பாதங்களில் சேரலாம் எனற் நம்பிக்கையும் எடுத்துரைக்கின்றார். சுந்தர வேடங்களைப் புனைவதில் பெருவிருப்பம் கொண்ட சுந்தரது இளமனம் இறையழகில் ஒன்றியது. அந்த அற்புதமான பக்தியனுபவத்தை எல்லா இளமையும் உணர வேண்டிப் பாடுகிறார்.

"மழைக் கரும்பும் மலர்க்கொன்றை யினானை
வளைக்கலுற்றேன் மறவா மனம் பெற்றேன்
பிழைத்தொரு காலினிப் போய்ப் பிறவாமைப்
பெருமை பெற்றேன் பெற்றதார் பெறுகிற்பார்
குழைக் கருங் கண்டனைக் கண்டு கொள்வானே
பாடுகின்றேன் சென்று கூடவும் வல்லேன்
கழைக்கரும்புங்கதலிப்பல சோலைக்
கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே"

## குண்டலங்குழை திகழ்காதனே

நாம் கண்ணாரக் கண்ட காட்சியை இன்னொருவருக்குக் கூறுவதென்பது ஒரு சிறப்பான மொழியாற்றலாகும். அதிலும் உரைநடையிலன்றிக் கவிதைமொழியிற் சொல்வதற்குச் சிறப்பான மொழிப்புலமை தேவை. இத்தகைய மொழிப்புலமை சுந்தர மூர்த்திநாயனாரிடம் இருந்தது. இறைவனது கோல அழகைக் கண்டபோது அதை எல்லோரும் காணும் வண்ணம் சொல்லோவிய மாகத் தீட்டியுள்ளார். அவருடைய மொழி பக்திமொழியாக வெளிப்பட்டுள்ளது.

இறைவனுடைய திருக்கோல அழகை அவர் காட்சிப் படுத்தும் முறைமை அவருடைய கவின் சுவையைக் காட்டி நிற்கிறது. மூன்று வகையான அழகுக் கோலத்தினை ஒரு பாடலிலே காட்டுகிறார். சிவனுடைய திருக்காது, திருக்கை, திருமுடி என்பவற்றைக் காட்சிப்படுத்திக் காட்டுகிறார். 'குண்டலம் குழை திகழ்காதனே' என்று முதலில் அறிமுகம் செய்கிறார். குண்டலம் என்பது நீண்டு தொங்கும் காதணி. அதோடு பொருத்தமுற ஒரு குழையும் காணப்படுகிறது. இரண்டு காதுகளிலும் வேறுபட்ட அணிகலன்கள். ஒருகாதில் குண்டலம், மறுகாலத்தில் குழை. இது இறைவனின் அர்த்த நாரீஸ்வர வடிவத்தைக் காட்டி நிற்கிறது.

ஆனால் திருக்கையிலே கொடுமழுவாட்படையைத் தாங்கிய சிறப்பான அழகுவேறொரு திருக்கோல அழகைக் காட்டி நிற்கிறது. அடுத்து வண்டுகள் மொய்க்கும் அன்றலர்ந்த கொன்றை மலர்களைச் சூடிய சடைமுடியின் அழகைக் காட்டுகின்றார். இம்மூன்று அழகுத் தோற்றங்களையும் வாய்வெருவித் தொழுகிறார். துன்பம் மீதூரப் பெற்ற போது இறைவனை நினைந்து வாய்புலம்பும் சுந்தரர் தனது நிலையைப் பாடலிலே அழகாய் எடுத்துரைத்தார். தன்னுடைய விதிப்பயனால் பண்டைய பண்பற்ற வாழ்வியலை விடுத்து மனத்து அவசங்களையெல்லாம் நீக்கிப் பசுபதியின் இருப்பிடத்தையே வினவி வாழ்ந்த அந்தப் பழைய காலத்தை நினைவிற் கொணர்ந்து பாடுகிறார்.

பலநாட்கள் கடந்த பின்னர் கழுமல வளநகருக்கு வந்தபோது அப்பதி சம்பந்தர் திருவவதாரம் செய்த திருப்பதி யாதலால் அதன் உள்ளே மிதிக்கக் கூடாதென எண்ணுகிறார். அப்பதியின் புறஎல்லையில் நின்று வழிபடுகிறார். அப்போது சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்தருளுகிறார். அந்த நிலையில் சுந்தரருடைய பக்தி அனுபவம் ஒரு பதிகமாக அமைந்துள்ளது. திருக்கோயிலின் உள்ளே செல்லாமல் எப்படி இறையழகைச்சுந்தரர் விரிவாகப் பாடினார் எனப் பலர் ஐயுறலாம். ஆனால் ஐம்புலன்களையும் ஒரு நிலைப்படுத்தி இறைவனைப் பற்றிய எண்ணத்தினை மனதிலே நிறுத்திக் கொண்டால் இது முற்றிலும் சாத்தியமாகும். இந்த முறையனுபவத்தை எல்லோரும் பெறவேண்டுமென்ற சுந்தரர் விருப்பம் பாடலில் வெளிப்பட்டு நிற்கிறது.

"குண்டலங்குழை திகழ்காதனே யென்றுங்
கொடுமழுவாட்படைக் குழகனே யென்றும்
வண்டலம்பும் மலர்க்கொன்றைய னென்றும்
வாய்வெருவித் தொழுதேன் விதியாலே
பண்டை நம் பல மனமுங் களைந்தொன்றாய்ப்
பசுபதி பதி வினவிப் பல நாளுங்
கண்டலங் கழிக்கரையோதம் வந்துலவுங்
கழுமலவளநகர்க் கண்டு கொண்டேனே."

## வரும் பெரும் வல்வினை யென்றிருந்தெண்ணி

வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு எல்லாம் நாம் முற்பிறவியிலே செய்த துன்பங்கள்தான் காரணம் என்ற நம்பிக்கை எம்மிடையே நிலவுகிறது. அந்த வினையை அழிப்பதற்கு இறைவழிபாடுதான் சிறந்ததென்பர். துன்பத்திலிருந்து எம்மை யாராவது வந்து விடுவிக்கவேண்டும் என எதிர்பார்த்துக் காத்திருப்பதில் எவ்வித பயனும் இல்லை. அப்படியானால் என்ன வழிஎன்று கேட்கும் மனிதர்களுக்குச் சுந்தரர் வழிகாட்டுகிறார்.

தன்னுடைய மனக்கவலைகளைத் தானே தீர்ப்பதற்கும் ஒரு வழியுண்டு. வினையே வலியது என்ற கருத்தை மாற்றியவர் சுந்தரர். முயற்சி எதையும் செய்யாது துன்பந் தீரவில்லையே என அழுது புலம்பும் மனிதமனத்தை நெறிப்படுத்துவதற்கு இறைவன் பற்றிய சிந்தனையே ஏற்றது. சுந்தரர் இறைவனை மறவாத மனம் பெற்றபோது நடந்த மாற்றத்தை ஒரு பாடலிலே தெளிவாகக் கூறியுள்ளார். இறைவனை மனத்தால் விரும்பித் தொழும்போது உடல் குளிர்ந்தது. உள்ளமும் தெளிவு பெற்றது. நீயே அடைக்கலம் என முழுமனதோடு வழிபடும்போது எல்லாத் துன்பங்களும் இறையருளால் நீங்கிவிடும் நிலை வந்தது.

துன்பந் தீர்க்கும் இறைவனைச் செந்தமிழால் விளக்கும் சுந்தரரது பக்தியனுபவம் இயற்கையின்பங்களோடு தொடர்பு கொண்டதாக உள்ளது. அரும்பாக, அலராக, அமுதாக, தேனாக அவருடைய நினைப்பிலே இறைவன் தோன்றினான். தந்தையாக வந்த அறநெறியாளனைப் பிறவியின் வேரறுக்கும் கரும்பாகக் காண்கிறார். இயற்கையில் அவர் பார்வையில் படுகின்ற இன்பந்தருவனவெல்லாம் இறையுருவாகவே தெரிகின்றன. எங்கும் பரவியிருக்கும் இறையாற்றல் சுந்தரரை மெய்சிலிர்க்க வைக்கிறது.

திருக்கழுமலத்தின் இயற்கை வனப்பு சுந்தரரது இறை உணர்வின் ஊற்றுக்கலாக அமைந்தது. "பெருஞ் செந்நெல் நெருங்கிய கழனிகள் நிறைந்த கழுமலம்" செழிப்பான சூழலாக இருந்தது. மருத நிலவளம் பெற்றிலிருந்தது. 'கழனி' என்ற சொல் நீரது வளத்தையும் நிலத்து வளத்தையும் சுட்டி நிற்கிறது. நெற்பயிரது கதிர்வரைக்கும் நீர் நிற்கும் வயலே 'கழனி' எனப்படும். நீர்வளத்தால் நெல்விளைவு பெருகும்.

'நீருயர நெல்லுயரும்' என்பர். விளைநிலம் கொண்ட வளநகரில் உறையும் இறைவனை வழிபட்டால் துன்பம் எவரையும் அணுகாது. இயற்கையாக இறைவனே தோன்றுவது மனிதனது ஊனக் கண்களுக்குத் தெரிவதில்லை. வேண்டுதல் செய்யும் சுந்தரர் தன் மனம் பண்பட்ட நிலையால் இறைவனைத் தூய தமிழ் மொழியால் பாடுகிறார். உறவு நிலையிலே இறைவனைப் பாவனை செய்து பல அடியார்கள் பாடியுள்ளனர். ஆனால் சுந்தரர் இயற்கை வளத்தையே இறைவனாகக் காண்கிறார். அவருடைய இளமைப் பருவமும் இதற்கு ஒரு காரணமாகும். எனவே, அவருடைய நோக்கத்தைப் பாடலைப் படிக்கின்ற அனைவரும் பெற வேண்டும்.

"வரும் பெரும் வல்வினை யென்றிருந்தெண்ணி
வருந்தலுற்றேன் மறவா மனம் பெற்றேன்
விரும்பியென் மனத்திடை மெய்குளிர்ப்பெய்தி
வேண்டி நின்றேன் தொழுதேன் விதியாலே
அரும்பினை யலரினை யமுதினைத் தேனை
யையனை யறவ னென் பிறவி வேரறுக்கும்
கரும்பினைப் பெருஞ் செந்நெல் நெருங்கிய கழனிக்
கழுமல வளநகர்க்கண்டு கொண்டேன்"

## மடையில் வாளை பாய மாதரார்

'நீரின்றி அமையாது உலகு' என வள்ளுவர் கூறியுள்ளார். உலகில் வாழும் அனைத்து உயர்களும் நீரை உட்கொள்கின்றன. நீர் நிலைகள் உள்ள இடங்களில் மக்கள் தம் வாழ்வியலை அமைத்துக் கொண்டனர். ஐம்பூதங்களில் ஒன்றான நீர் வழிபடும் பேராற்றலாகவும் அமைந்தது. வழிபாட்டிடங்களான திருக்கோயில்களின் அருகிலே இயற்கையான நீர்நிலைகள் இருந்தன. தேவாரங்களில் நீர்நிலைகள் பற்றிய குறிப்புகள் அதிகமாக உண்டு.

சம்பந்தரது பாடல்களில் நீர்நிலை பற்றிய காட்சிப் புனைவு பெரும்பான்மையாக உள்ளது. தமது பாடல்களில் இயற்கைப் புனைவை ஓர் அமைப்பாகக் கொண்டிருந்த சம்பந்தர் நீர்நிலை பற்றிய காட்சிகளையும் இணைத்துள்ளார். திருக்கோயிலின் அமைப்பு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புடையது. தமிழர் வழிபாட்டில் நீர் பல்வேறு நிலைகளில் தொடர்புற்றிருந் தமையால் அது பற்றிய குறிப்புகளும் பாடல்களில் ஆவணப்படுத் தப்பட்டுள்ளன. திருக்கோலக்கா என்னும் திருத்தலம் பற்றிப் பாடும் சம்பந்தர் அங்குள்ள நீர்வளத்தை வெகு அழகாகப் பாடியுள்ளார். நீரோடையிலே வாளை மீன்கள் துள்ளிப் பாய்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் பாய்ச்சல் மகிழ்ச்சியான வாழ்க்கையைக் காட்டுகிறது. அருகில் இருக்கும் பொய்கையில் மாதர்கள் நீரைக்குடைந்து நீராடும் காட்சியைக் காண்கிறார். பெண்கள் அக்காலத்தில் பொதுநீர் நிலைகளில் நீராடும் வழக்கமிருந்துள்ளது. இதனை ஆண்டாளும் மணிவாசகரும் முறையே திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களில் பதிவு செய்துளர். திருக்கோயில் அருகிலுள்ள பொய்கையிலே நீராடிய பின் இறைவனையும் வழிபட்டுச் செல்லும் நடைமுறை இருந்துளது.

எனவே திருக்கோலக்காவில் உறையும் சிவனது அழகிய திருக்கோலத்தைச் சம்பந்தர் அடுத்துக் காட்சிப்படுத்திக் காட்டுகிறார். நீண்ட சடை, அதில் சூடியிருக்கும் துண்டப்பிறை, உடல் முழுவதும் சாம்பற்பூச்சு, கீழே அரையில் கோவண ஆடை. இந்த உருவம் என்கொலோ? எனச் சம்பந்தர் அதிசயத்துக் கேட்பதாகப் பாடல் அமைந்துள்ளது. 'சாம்பற்பூச்சு' என்ற தொடர் இறைவன் திருவுருவத்தில் நீறு அணிந்திருக்கும் கவினை நன்கு விளக்கி நிற்கிறது. தற்காலத் தமிழ்மொழி நடையிலும் பூசிப் புணர்த்திச் செல்லும் நடைமுறை வழக்கமாக இருப்பது சுட்டப்படுகிறது. சம்பந்தர் கண்களில் கண்ட இறைவன் கோலம் அவரது பார்வையின் தன்மையாகப் பாடலில் வெளிப்பட்டுள்ள தெனலாம். திருமுடியிலிருந்து அவருடைய பார்வை தொடங்கி அரையில் அணிந்திருக்கும் ஆடை வரை சென்றுள்ளது. உள்ளத்திலே கள்ளம் இல்லாத குழந்தைப் பருவத்தினராய சம்பந்தரது பார்வை இறைவன் திருக்கோலம் கண்டு வியப்படை கிறது. அந்த வியப்புணர்வே பாடலாக வெளிவருகிறது.

"மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங் கீழ்
உடையும் கொண்ட வுருவமென் கொலோ!"

இளவயதினரான சம்பந்தருடைய கேள்வி இன்றும் இளவயதினரி டையே நிலவுகிறது. இறைவன் திருக்கோல அழகைக் கண்டு வழிபடும் மனநிலை பலருக்கில்லை. மனத்தைப் பக்குவப்படுத்தி வழிபட ஒரு பயிற்றுநிலை இன்று தேவையாக உள்ளது.

## நிழலார் சோலை நீல வண்டினம்

நிழல் தரும் நெடுமரங்கள் மனிதனுக்குக் குளிர்நிழல் தந்து உதவும். பண்டைக்காலத்தில் ஆல், அரசு, வேம்பு போன்ற பெரிய மரங்களின் கீழே மக்கள் கூடி மகிழ்ந்தனர். அம்மரங்களின் பெருநிழல் வெம்மையின் கொடுமையை அகற்றி மக்கள் உடல்நலம் பெற வாய்ப்பளித்தன. எனவே இத்தகைய மரங்களை நாட்டி நிழலார் சோலைகளை அமைக்கும் பணியும் நடைபெற்றது. இச்சோலைகள் வழிபாட்டிடங்களாக மாறின. திருக்கோயில் அமைப்புத் தோன்றுவதற்கு முன்னர் பெருமரங்களில் ஆற்றல் மிக்க தெய்வம் உறைவதாக நம்பப்பட்டது. ஆலமலர்கடவுள், பராரைத்தெய்வம் போன்ற சொற்றொடர்கள் பழந்தமிழிலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமை இதற்குச் சான்றாகவுள்ளது.

திருக்கோயில்களில் அமைந்துள்ள தலவிருட்சம் இந்நடைமுறையின் பண்டைய வழிபாட்டுமுறைமையின் தொடர்ச்சியை விளக்கி நிற்கிறது. கோயிலைச் சூழச்சோலை போலப் பெருமரங்கள் நாட்டப்பெறும் வழக்கமும் இருந்துள்ளது. நாயன்மார்களுடைய பாடல்களில் குளிர்சோலை பற்றிய குறிப்புகள் பல உள. சம்பந்தர் சிறப்பு இரண்டு அடிகளில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'நிழலார் சோலை' என்ற தொடர்சோலையின் அடர்த்தியை விளக்குகிறது. உயர்ந்த மரங்கள் ஓங்கி வளர்ந்து நெருங்கி நிற்பதால் வானம் தெரியவில்லை. மரங்களின் நிழல் வானத்தை மறைத்து நிற்கிறது. பசுமையும் குளிர்மையும் நிறைந்த அச்சோலையிலே நீலவண்டினங்கள் வாழுகின்றன. அவற்றின் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது. அதனால் வண்டினங்கள் ரீங்காரம் செய்கின்றன. அந்த ஒலிப்பு சூழலிருந்து வெளிவரும் பண்ணொலியாக வந்து காதை நிறைக்கிறது. கண்ணுக்கும் காதுக்கும் இன்பம் தரும் குளிர்சோலை திருக்கோலக்கா என்னும் திருத்தலத்தைச் சூழ்ந்திருக்கிறது.

அமைதியும் நிழலும் பண்ணொலியும் உள்ள சூழலிலே இறைவன் கோயில் கொண்டுள்ளான். அவனுடைய கால்களைச் சம்பந்தர் பார்க்கிறார். வீரக்கழல் கண்ணுக்குத் தெரிகிறது. இடது பாதம் தூக்கிய நிலையில் ஆடவல்லான் நிற்கும் கோலம் நீலவண்டின் பண் ஒலி கேட்டே இறைவன் ஆடல் செய்வது போலிருக்கிறது. மிக மகிழ்வாக நின்றாடும் இறைவன் பாதங்களைக் கைகளால் பற்றித் தொழுது வணங்கினால் துயரமில்லை. பற்றுக்கோடாக இருக்கும் இறைவனை வழிபட ஆற்றும் சந்மபந்தர் வயதில் மிகவும் இளையவர். ஆனால் இளமைவழிச் செல்லாமல் இறைவழி நிற்கிறார். நிழலார் சோலையில் வாழுகின்ற நீலவண்டினங்கள் போல பண்ணுடைய பாடல்களைப் பாடி நிற்கிறார். திருக்கோலக்காவின் இயற்கை எழிலும் இறைவன் திருக்கோல அழகும் சம்பந்தர் உள்ளத்தைப் பக்தி நிலைக்கு இட்டுச் செல்கின்றன. அவரது வாயில் செந்தமிழ்ச் சொற்கள் வந்து நடமாடத் தொடங்குகின்றன. எதுவும் கண்ணில் தெரியவில்லை. துன்பமில்லாத நிலைபெறப் பாடியபடி நிற்கிறார்.

"நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக்காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கற் றுயரமில்லையே"



இறைவனைக் கண்ணால் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது இயல்பு. ஆனால் இவ்வெண்ணம் நிறைவேறுமா என்ற ஏக்கமே பலரிடமும் குடிகொண்டுள்ளது.

வயதில் முதியவரான அப்பர் இறைவன் தோற்றத்தைக் கண்டு மகிழ வேண்டும் என்ற பெருவிருப்போடு சென்று கொண்டிருக்கிறார். அவர் திருவையாறு திருத்தலத்திற்கு அருகே வருகின்றபோது கண்ணாரக் கண்ட காட்சிகளைப் பாடல்களாகப் பாடியுள்ளார்.

பல அடியார்கள் திருவையாறு தலத்திற்குச் சென்று கொண்டிருக் கிறார்கள். அவர்களுடைய பக்திக்கோலம் அப்பரைப் பரவசப்படுத்து கிறது. சிவனின் திருக்கோல அழகைப்பற்றி அவர்கள் பாடிக்கொண்டு செல்கிறார்கள். இறைவன் திருத்தலையிலே சூடியிருக்கின்ற துண்டப் பிறையும், கண்ணியும் காட்டும் கோல அழகுதான் முதலில் மனக்கண்ணிற்படுகிறது. அந்த அழகுக் கோலமுடையானை மலையத்துவசன் மகளான பார்வதி தேவியோடும் பரவிப்பாடும் அடியார் கூட்டத்தைக்கண்ட அப்பர் தன்னை மறந்து அவர்கள் போகும் திசையையே பார்க்கிறார்.

ISBN 955-989253-3

Harikanan, Jaffna.